# ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருடைய
# சரித்திரமும் உபதேசங்களும்.

ஆனந்தயோகினி பத்திராதிபர்

நா. முனிசாமி முதலியார் அவர்களால்

வெளியிடப்பட்டது.

1920.

ரிஜிஸ்டர் செய்தது] [விலை ரூ. 1 8

1-2 பாரங்கள் ஆனந்தபோதினி அச்சுக்கூடத்திலும்

3-முதல் 23 பாரங்கள் வரையில் பத்மநாப விலாசம் அச்சுக்கூடத்திலும் அச்சியற்றப்பட்டன.

1453



ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸ [illegible]

நூல் நிலையம்,
சென்னை-600090.

பூவுலகெங்கும் புண்ணிய பூமியெனச் சிறந்து விளங்கும் பொன்னாடாகிய இந்நன்னாட்டில் பிறந்து வளர்ந்து பிரஹ்மானுபூதிச் செல்வராய், அவதார புருஷராய், ஆத்மஞான தீரராய், பட்டப்பகல் போல் பரந்த ஞான வொளிவீசி, பாரிலுள்ளோர் அனைவரும் கண்டு பிரமிக்கும்படியாய் எழுத்தின்றிப் படிப்பின்றியிருந்தும் இன்ப நிலை யெய்தி எல்லோருக்கும் அதனை யெடுத்தெடுத்துக் கொடுத்து, வித்தியா சிரேஷ்டரான ஸ்ரீவிவேகானந்தர் மூலமாக உலகு முழுதுக்கும் உபகரித்தருளிய ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருடைய ஜீவித சரித்திரத்தையும், அவருடைய அமிருத வசனங்களையும் தமிழில் எழுதிக்கொடுக்கும் படியான பாக்கியம் எனக்குக் கிடைத்தது பற்றி நான் அடைகின்ற ஆனந்தத்துக்கு ஓர் அளவேயில்லை. மகாத்மாக்களைப்பற்றி சதா பேசுவதினாலும் எழுதுவதினாலும் சிந்திப்பதினாலும் மனிதன் மகாத்ம நிலையை அடைவான் என்பது உண்மையாம். இதனால், நான் அவ்வுயர் நிலையை அடைதற்கு உரித்தானவனல்ல னேனாலும், என்னிடம் படிந்து கிடந்துள்ள அழுக்குக்களில் ஆயிரத்தில் ஒரு பங்கேனும் நீங்கலாம் என்றுள்ள எண்ணமே நான் இப்புத்தகத்தை எழுதுவதற்குத் தூண்டியது. ஸ்ரீராம கிருஷ்ண விஜயம் என்ற பெயருடன் பிரஹ்ம ஸ்ரீ மகேச குமாரசர்மா அவர்கள் முன்னமேயே ஒரு புத்தகம் எழுதியுள்ளார்களாயினும், அப் புத்தகம் மீண்டும் இது காறும் அச்சிடப்படாமையால், இப்பொழுது கிடைக்காது போகவே, அக்குறையை நிவிர்த்தி செய்யவேண்டுமென்பதே நான் இதை எழுதுவதற்கு இரண்டாவது காரணமாம். இதற்கெல்லாம், ஆதிகாரணம் எனது தேச ஜனங்களுக்கு நான் எப்பொழுதும் பணிவிடை செய்துகொண்டிருக்கவேண்டுமென்று நான் கொண்டுள்ள விரதமேயாம். தமிழ்ப்பாஷையினர் எனது இச்சிறு பணிவிடையைப் பெரிதெனக் கொண்டு ஏற்றுக்கொள்ளுமாறு அவர்களை நான் மிகவும் வேண்டுகிறேன்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபாசித்து வந்த சாட்சாத் சச்சிதாநந்த சொரூபிணி, சர்வலோக மஹேச்வரி, ஜகதாம்பாளுடைய சகுண வடிவத்திலே ராம ராகவும், கிருஷ்ணராகவும், கடைசியில் ராம கிருஷ்ணராகவும் அவதரித்து, பொய்யாமிப்பூவுலகை பூ! வென்று ஊதிவிட்டு நிர்க்குணத்தன்மையும் கடந்து எல்லாமாய் அல்லவுமாய் "ஏகமேவாத் விதீய" மாய், பின்னமுமாய், அபின்னமுமாய், பின்னாபின்னமுமாய் உள்ள பிரஹ்மவஸ்துவினுடைய வித்தியா சக்தி அவித்தியாசக்தி என்னும் இருபாதார விந்தங்களிலே இந்நூலைச் சமர்ப்பிக்கின்றேன்.

திருமயிலை, சென்னை.
19—9—12 } சுப்பரமணிய சிவம்,

---

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரின் மனைவியார் சிறுவயதில் அவருக்கு விவாகம் செய்யப்பட்டார்கள். அவர் அதன்பின் பிரம்மஞானத்தைப்பெற பரமஹம்ச சந்நியாசம் பெற்றபடியால் அந்தம்மாள் அவரைக் காணக்கூடவில்லை நெடுநாட்களுக்குப்பின் அவர் துறவடைந்து கல்கத்தாவிற்குவந்திருந்தபோது அந்தம்மாள் அவரைக்கண்டுசேவித்து நின்றார்கள். ஸ்ரீராமகிருஷ்ணர் "நான் யாவற்றையும் பராசக்திவடிவமாகக் காண்கிறேன். உன்னையும் அவ்வாறே கருதுகிறேன்" என்றனர் அதன்மேல் அவ்வம்மையார் "சுவாமி! தங்களிடமுள்ள பல சீடரில் அடியாளும் ஒருவளாய்த் தங்களுக்கு ஊழியம் செய்து வருகிறேன்" என்றனர். சுவாமி அதற்குத் தடைசெய்யவில்லையாதலின், அம்மையார் அவ்வாறே பணிவிடைசெய்திருந்து, 1913-ஆ ஸ்ரீராமகிருஷ்ணபரமஹம்ஸர் பரிபூரணதசை யடைந்தபின் இராமேச்சுர யாத்திரை சென்றபோது சென்னைக்கு வந்திருந்தார்கள். அவ்வம்மையார் சிலதினங்களுக்குமுன் பரமன்பதமடைந்தார்கள். இந்நூல் அச்சியற்றப்பட்டபின் இச்சங்கதி கிடைத்ததால் ஈண்டு வெளியிடப்பட்டது.

1920ஆ ஜூலை௴ நா. முனிசாமி முதலியார்.

ஓம்.

ஸ்ரீராம கிருஷ்ணாயநம:

# ஸ்ரீராமகிருஷ்ண பரம ஹம்சருடைய

# சரித்திரமும் உபதேசங்களும்.

"எப்பொழுது தர்மம் குன்றி அதர்மம் அபிவிருத்தியாகின்றதோ, அப்பொழுது தர்மத்தை ஸ்தாபிப்பதற்காகவும் அதர்மத்தை யழிப்பதற்காகவும் நான் அவதரிக்கின்றேன்" என்று ஸ்ரீகிருஷ்ணபகவான் பகவத்கீதையில் கூறியுள்ளார். இம்மொழியை உண்மைப்படுத்தும்பொருட்டும், இவ்வவனியிலே பிறந்திறக்கும் ஜீவராசிகளைக் கடைத்தேற்றுவிக்கும் பொருட்டும் பகவான் அடிக்கடி அவதரிக்கின்றார் என்பது உண்மையே. இன்னும், காலதேசவர்த்தமானங்கட்கேற்ப, ஈசுவராம்சம் குறைந்தும் பெருகியும் அவதார புருஷர்கள் உண்டாவதுண்டு. உலகிலே எல்லாத்தேசங்களிலும் அவதார புருஷர்கள் உண்டாகலாமாயினும், ஆங்காங்கு சிற்சிலர் உண்டாயிருக்கின்றனரென்பது உண்மையே யாயினும், ஐந்து கண்டங்களிலும் ஆசியா கண்டமே அவதார புருஷர்களுடைய அடிச் சுவடுகளால் நிறையப்பெற்று என்றும் பரிசுத்தமாய் எண்ணிலா ஜீவ

ராசிகட்கு இன்பானுபூதி யளிப்பதாய், மனிதனுக்கு ஊனக்கண்ணைத் தவிர, ஞானக்கண் ஒன்று வேறு உண்டு என்று எப்பொழுதும் இடைவிடாமல் பறையடிப்பதாய், மனிதன் தன்னுடைய உண்மை நிலையை அறிதற்கு அநுகூலமான சகல சௌகரியங்களையும் சாதனங்களையும் அளிப்பதாய், நித்திய ஒளிபெற்றுத் திகழ்கின்றது என்பது உலக சரித்திரம் ஆய்ந்தறிந்த ஒவ்வொருவருக்கும் தெரிந்த விஷயமாம். உலகிலே முதன்மை பெற்றுக் கோடிக்கணக்கான சீடர்களை யுடைத்தாகி விளங்குகின்ற மதங்களை ஆதியில் ஸ்தாபித்தவர்கள் ஆசியாகண்டத்தவர்களே.

இன்னும் சிறந்து விளங்குவது இந்தியாதேசம். பூமியானது கோ (பசு) ரூபமாக நமது சாஸ்திரங்களிலே வர்ணிக்கப்பட்டிருக்கிறது. பூமியைப் பசுவாக உருவகப்படுத்தினால், பசுவினுடைய பால்கறக்கும் மடிபோன்றது இந்தியாதேசம். ஜீவகோடிகளுடைய தாகத்தைச் சாந்திசெய்து, ஜனனமரண வெப்பத்தைப் போக்கி, ஆரோக்கியத்தையும் ஆநந்தத்தையும் அளித்து, அப்படியே அகண்ட சச்சிதாநந்த சாட்சாத்கார வநுபூதியில் அமர்த்திவைக்க வல்ல ஞானாமிருதத்தை அளவு சங்கியை இல்லாமல் ஆறுப்பெருக்கெடுத் தோடும்படி சுரந்துகொண் டிருப்பது இவ்விந்தியாதேசம். பூவுலகிலே புண்ணிய பூமியெனப் பெயர் பெற்றது இதுவே யாகும். தேவேந்திரப் பட்டத்தையும் திரணீகரித்து, திரிமூர்த்திகளையும் இலட்சியம் செய்யாது

தானேதானுகி, தானென்பது மற்று, அப்படியோ இப்படியோ எப்படியோவென ஒன்றுமே யில்லாமல் ஒன்ருகவே விளங்குகின்ற பிரஹ்மாநுபூதியுற்ற எண்ணற்றமகான்கள் அன்று போலவே இன்றும் வசித்துக்கொண் டிருப்பது இவ்விந்தியா தேசத்திலேயே யாகும். நாம் எல்லோரும் மகரிஷிகளின் பரம்பரையில் வந்தவர்கள். நமதுபூமி ஞானபூமி; ஆதலால் நமதுபூமியிலே தர்மம்குன்றி அதர்மம் பெருகத்தொடங்கி விட்டால், ஞானசூர்யன் அஞ்ஞான மேகங்களாலே சூழப்பட்டு விட்டால், அச்சமயத்தில் அவதார புருஷர்கள் சற்றும் அவதரிக்கத் தாமதிக்கிறதேயில்லை. எக்காலங்களில்ஜடநாகரிகம் ஓங்கி, ஸ்தூலபலம் அதிகாரம் செய்யஆரம்பித்து, மானிடர்களின் மனத்திலே மாம்ச இச்சையானது புகுந்து அரசுசெலுத்த ஆரம்பித்திருக்கின்றதோ, அக்காலங்களிலெல்லாம் அவதார புருஷர்கள் உண்டாகிச் சத்தாமாத்திரமாயுள்ள சாட் சாத் சைதந்நிய வஸ்துவினுடைய மகிமையையும் மேன்மையையும் நிலைநிறுத்தி முடிமன்னர்களும் தங்கட் கடிபணியச்செய்து "நீங்கள் மூவுலகும் அரசுசெய்யும் முடிமன்னர்களாயினும்முடிவிலொருபிடிசாம்பராய்ப் போவது திண்ணம்" என்று பிரபஞ்சத்தினுடைய மித்தையார்(கானல்நீர்போன்ற பொய்த்தோற்றமாகிய) தன்மையைப் பெரும் பேரிகையினுல் முழக்கி, சமஸ்த ஜீவகோடிகட்கும் சாந்தபதவியை அளித்து, நமது பாரத வர்ஷத்தின் கௌரவத்தைக் காப்பாற்றியிருக்கிருர்கள். நமது புராண இதிகாசக் கதைகளை யெல்

லாம் தவிர்த்துவிட்டு, தற்கால சரித்திர ஆராய்ச்சிக் குட்பட்ட காலத்திலுண்டான அவதார புருஷர்களைப் பற்றிக் கவனித்தால், பிராமணர்களுடைய வைதிகக் கொடுமை மிகுந்து இதரஜாதியார் தவித்துக்கொண்டிருந்த காலத்திலே, ஸ்ரீகௌதமபுத்தர் அவதரித்துப் பிராமணக் கொடுமையை வேரோடு பிடுங்கி யெறிந்து சர்வஜாதி சமத்துவத்தைப் போதித்தார். இதனால், அகங்காரத்தினாலே யுண்டாகின்ற உயர்வு, தாழ்வு என்றபேதம் போய்விட்டதாயினும், சகுணோபாசனையும் அதனுடன்கூடவே ஒழிந்துவிட்டது. ஈசுவரனுக்கு நாமத்தையும் ரூபத்தையும் கற்பித்து, அவரை அந்நாம ரூபங்களுக்குள்ளே கட்டுப்படுத்தி பூஜிக்க ஆரம்பிக்கும்பொழுது, பூஜாரிகள் என்று ஒரு வகுப்பார் ஏற்படுவது எல்லாத் தேசங்களிலும் வழக்கம் தான். அவ்வகுப்பார், "நாம்எப்பொழுதும் ஈஸ்வரனைப் பூஜித்துக் கொண்டிருக்கின்றோம், ஈஸ்வரனுடைய கிருபை நம்மீது தான் பரிபூரணமாக விழுந்திருக்கிறது, மற்ற ஜனங்கள் நமக்குத்தாழ்ந்தவர்களே" என்று பலவாகக்கருதி தங்கள் அகங்காரப் பெருமையினாலும் ஆணவபுத்தியினாலும் மற்றவர்களை அடக்கியாள முயற்சிக்கின்ற பொழுது, கள்ளங்கபடற்றுவெறும் விசுவாசத்தையும் நம்பிக்கையையுமே ஆதாரமாகக் கொண்ட ஜனங்கள் பலரும் பயபக்தி மிகுந்து அப்பூஜாரிகளின் கீழ் அடங்கி நடப்பார்கள் என்பதில் என்ன சந்தேகம்? அப்படியே நமது இந்தியா தேசத்திலும் பிராமண வகுப்பார் மற்ற வகுப்பார்களை அடக்கியாண்டுவந்

தது நின்றுவிட்ட போதிலும், புத்தருடைய சர்வசமத்துவ உபதேசத்தினாலே ஈஸ்வரனுக்கு உருக்கொடுத்து உபாசனைசெய்வது நின்றுவிட்டது. பின்னர், சில காலத்திற்குள் ஞானவொளி மிகுந்து நமது பாரததேசத்திலே எல்லோருக்கும் சுதந்திரமும் ஆநந்தமும் உண்டாகித் தேசம் ஜொலித்தது. ஆனால் வரவர, வர்ணாச்சிரமதர்மக் கட்டுப்பாடுகள் ஒழிந்துவிட்டன வாதலாலே ஜாதி சங்கரம் உண்டாகி, மிலேச்ச ஆசாரங்கள் பெருகி என்றும் குன்றா இந்தியப் பெருமைக்கு இழிவு நேரிட்டுவிடுமோ வென்று எல்லோரும் பயந்துகொண் டிருந்த காலத்திலே, ஸ்ரீ சங்கரர், ஸ்ரீ இராமாநுஜர், ஸ்ரீ மாத்துவர் முதலியோர் அவதரித்தனர். பின்னர் மகம்மதியர்களுடைய அரசாட்சியிலே, சைதந்நியர் ராமதாசர், துளசிதாசர் முதலிய மகான்கள் அவதரித்தார்கள். இன்னும் எத்தனையோ எண்ணற்ற மகாத்மாக்களுண்டு. அவர்களின் பெயர்களை நாம் இங்கு எடுத்து எழுதாமல் விட்டதற்குக்காரணம், எழுத எழுத எத்தனை ஏடுகள் எழுதினும் முடிவுபெறாதாகையால், இங்கு இடம்போதாதென்பதேயாம். இவ் வவதார புருஷர்களுடைய ஒளி இந்தியா தேசத்துக்குள் மாத்திரமன்று, உலகுமுழுதுமே வீசியிருக்கின்றது. இப்பொழுதன்று, இந்தத் தேசத்திலே அநாதியாக இங்ஙனமே நடந்து வருகின்றது.

ஐரோப்பியர்கள் நமது தேசத்திற்குள்ளே கால் வைத்து இற்றைக்குச் சுமார் 300 வருஷங்க ளாகின்றன.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்

பிக்கும் காலத்திலே ஆங்காங்கு தப்பித்தவறியுள்ள சாதுக்கள் சிலர் உலகிலே பெருகிவருகின்ற தீமையை ஆற்றமுடியாது, அழுது அழுது கண்ணீர் சொரிந்து இரவு பகலாய் ஏக்கமுற்று ஐயையோவென்று அரற்றி, இத்தீமையை ஒழிக்கவல்லவர் எவரேனும் கிளம்பாராவென்று ஏகோபித்துத் தங்கள் மனங்களையெல்லாம் ஒருமுகப் படுத்த, அம் மனங்களின் ஒன்றுசேர்ந்த சங்கற்பமானது அக்காலத்திலேயுள்ள தீமையை ஒழிப்பதற்கேற்ற அவதார புருஷனைச் சிருஷ்டித்து விடுகின்றது.

அதேமாதிரி இப்பொழுது நமது தேசமானது அந்நியர்களுடைய ஆசாரங்கட்கும் நடையுடைபாவனைகட்கும் இடங்கொடுத்து விடவே, இதைக்கண்டு துன்புற்ற சில சாதுக்களுடைய ஆழ்ந்தமனத்தினின்றும் கொதிப்புடனே பொங்கிய சங்கற்பமானது ஒரு அவதார புருஷரை சிருஷ்டித்துவிட்டது.

வங்காள தேசத்திலே ஹூக்ளி என்ற ஒருஜில்லாவிருக்கின்றது. அந்தஜில்லாவிலே காமார்புகுர் என்று ஒரு சிறு கிராமம் உண்டு. இந்தக் கிராமத்திலுள்ள எல்லோரும் பலவிதத் தொழிலாளிகள்; இங்கு பிராஹ்மணரகம் ஒன்றுதான் உண்டு. இதிலே க்ஷுதிராம சட்டோபாத்தியாயர் என்று ஒரு விப்பிரசிரேஷ்டர் ஆரியாசாரங்களிலே அணுவளவும் பிசகாதவராய் மகாபக்தராய் இரவும் பகலும்

ஈசுவரநாமோச்சாரணம் செய்துகொண்டு காலங்கழித்து வந்தார். இவர் மிகவும் எளியவராயிருந்தும், தமது ஆசார அநுஷ்டானங்களிலும்மற்றநெறிகளிலும் இருந்து சிறிதும் பிசகமாட்டார்; மனத்தைத் தெளிவாகவும் திடமாகவும் வைத்துக்கொண்டு, ஏழ்மையிலேயே இன்பமடைந்து கொள்ளும் இயற்கை இவருக்கு உண்டு. இவர் சத்திய வாக்கினரென்றும், ஆதலால் இவருடைய வார்த்தைகட்கு உடனே பலன்கிடைக்கும்படியான பலமுண்டென்றும் அவ்வூரார் சொல்லிக்கொள்வர். ஏற்கனவே நமது தேசத்திலே பிராமணருக்கு மற்ற ஜாதியார் மரியாதை செலுத்துகின்றனர்; அதிலும், இந்தக் கிராமத்திலே இவருடைய வீடு ஒன்றுதான் பிராமணர்வீடு; ஆகையால் மரியாதை இன்னும் இரட்டிப்பு. இன்னும் க்ஷுதிராம சட்டோபாத்தியாயர் மகாபக்தராயும் வைதீக ஆசாரசீலராயும் வாக்கு சித்தி முதலிய பல சக்திகள் வாய்ந்தவராயுமிருந்ததினாலே, அவ்வூராருக்கு அவரிடத்திலே அளவற்ற பயமும் பக்தியுமுண்டு. இந்த க்ஷுதிராம சட்டோபாத்தியாயருக்கு ஏற்றமனைவியாய் சந்திரமணிதேவி யென்ற ஒரு உத்தம பத்தினி வாய்த்தாள். இம்மாது சிரோன்மணியும் தனது புருஷனுடைய வார்த்தைக்கு மறுவார்த்தை சொல்லாமல் எப்பொழுதும் புருஷனுக்குச் சாயைபோல நின்று, எக்காரியத்தையும் இலட்சியம் செய்யாமல் புருஷனிடத்திலே ஈசுவரபக்தி செலுத்திவந்தாள். இவ்விருவரும் ஏகோபித்து இல்வாழ்க்கை நடத்துகையில் அடிக்கடி

தீர்த்த ஸ்தலங்கட்கு யாத்திரை செய்வதுண்டு. ஒரு சமயத்திலே இவர்கள் **கயா** என்ற நகருக்குச்சென்று அங்குள்ள க்ஷேத்திரத்திலே எழுந்தருளியிருக்கும் கதாதர மூர்த்தியைப் பிரார்த்தனைசெய்துகொண்டு அங்குத்தங்கிய பொழுது, சாட்சாத் பகவான் க்ஷுதிராம சட்டோபாத்தியாயருடைய சொப்பனத்திலே தோன்றி "நான் உனக்குப் புத்திரனாய் ஜனிக்கின்றேன்" என்றுகூறி மறைந்தருளினார். சட்டோபாத்தியாயர் சட்டென்று விழித்துத் தாம் கண்ட கனவைத் தமது நாயகியிடத்தில் கூறவும், அவ்வம்மையார் சந்தோஷம்பொங்கி அப்படி ஒரு ஆண்மகவு இப்பொழுது உண்டாகுமாயின் அதற்கு **கயா** க்ஷேத்திர நாதனாகிய **கதாதரனுடைய** பெயரையேவைத்துவிட வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டாள்.

கனவுபலித்துவிட்டது. சந்திரமணி தேவி கருப்பம் தரித்து திங்கள்பத்தும் சென்றுவிட்டது. கி. பி. 1834-ம் வருஷம் பிப்ரவரி மீ 20-ம் தேதி சுக்கிலபட்சதுவிதியை, புதன்கிழமை தினத்திலே சொர்ணவிக்கிரகம் போன்ற ஒரு ஆண் மகவைச் சந்திரமணிதேவி பெற்றெடுத்தாள்; க்ஷுதிராம சட்டோபாத்தியாயர் அப்பொழுது அடைந்த சந்தோஷத்திற்கு அளவேயில்லை. ஒரு வீட்டிலே ஆண் குழந்தை பிறந்ததென்றாலே அனைவருக்கும் சந்தோஷம்; அதிலும் பகவானே தமக்குக் குழந்தையாக அவதரிக்கப் போவதாகக் கனவில் கூறியபடியே ஆண்மகவு பிறந்து

விட்டதினால், க்ஷுதிராம சட்டோபாத்தியாயர் ஈசுவரனே தமக்குத் துக்க நிவர்த்திசெய்து மோட்சமளிப்பதற்காகவும், தமது முன்னோர்கள் மூவேழு இருபத்தொரு தலை முறையோரையும் கரையேற்றி விடுவதற்காகவும் தமக்குப் புத்திரனாகப் பிறந்திருக்கிறாரென்று நினைத்து நினைத்து மட்டில்லாமகிழ்ச்சி கொண்டார். இவருக்குப் புத்திரனாகப்பிறந்த புருஷன் புருஷோத்தமனே யென்று இவர் அறிந்து ஆநந்தித்துக்கொண்டிருந்த போதிலும், தம் மைமாத்திரம் அன்று, தமதுமுன்னோர்களை மாத்திரமும் அன்று, எண்ணற்ற ஜீவராசிகளை ஈடேற்றிவிடுவதற்காக எம்பெருமான் இம்மானிடச் சட்டைசாத்தி யெழுந்தருளியிருக்கிறாரென்று நினைக்கவேயில்லை. இக்குழந்தைதான் தேசங்கள் தோறும் சென்று திக்குவிஜயம் செய்த மகானாகிய ஸ்ரீவிவேகாநந்த சுவாமிகளால் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரென்று எங்கும் பறைசாற்றப்பட்ட மகா புருஷராவர்.

இவர் அதிவைதீக குடும்பத்திலே பிறந்தவரென்று முன்னமே கூறியிருக்கிறோம். குழந்தைப்பருவத்திலிருந்தே இவருக்கு சாதுக்களிடத்தில் பரம வாற்சல்யமும் ஈசுவரபக்தியும் அதிகம் உண்டு. இவர் அதிபுத்திசாலியாய் மிகச் சிறு குழந்தையாயிருந்த பொழுதே,— ஆறுவயது நிரம்புவதற்குள்ளாக—ராமாயணம் பாரதம் முதலிய இதிகாசங்களைச் சிரவணம் செய்து அவற்றினுள் அடங்கிய

அதிநுட்பமான கருத்துக்களையெல்லாம் அறிந்துகொண்டாரென்பது சரித்திரத்தில் சொல்லப்படுகிறது. இவருக்கு எழுதப்படிக்கத்தெரியுமாயினும், இவருடைய படிப்பு அவ்வளவு மெச்சத்தக்கதா யிருக்கவில்லை. பட்டிக்காட்டுச்சாவடிப் பள்ளிக்கூடங்களிலே, பிள்ளைகள் ஓலைச்சுவடிகளின் மூலமாகக்கற்றுக்கொள்கின்றபடிப்பு எத்தகையதாயிருக்குமென்பதை வாசகர்களே அறிந்துகொள்வார்கள். இவருக்குச் சாதாரணமானவெறும்படிப்பில் அவ்வளவுபிரியம் கிடையாது. இயற்கையிலேயே இவர் இருதயக் கசிவுள்ளவராயிருந்தார். இவர் எங்கெல்லாம் பக்த சிரேஷ்டர்கள் பஜனைசெய்து பகவானை ஆராதிப்பார்களோ, அங்கெல்லாம் சென்று, அவர்களுடன் தாமும் கலந்து பக்திப்பிரேமையினாலே மெய்ம்மறந்து சித்திரப் பிரதிமைபோல அசைவற்று நின்றுவிடுவார். இவருக்கு வயது பதினொன்று ஆனபொழுதே, இவருக்கு ஈசுவரதரிசனம் உண்டாயிற்று.

குழந்தைகள் விளையாட்டிலே மிகுந்த பிரியமுடையவையல்லவா! விளையாடாத குழந்தை கிடையாது; அப்படித் தப்பித்தவறி, விளையாடாத குழந்தை ஏதேனும் ஒன்று இருந்தால், அது வினைப்பிண்டமாகி, ஊக்கம், உற்சாகம், குதூகலம் முதலியன இல்லாததாய், உலகுக்கு எவ்விதத்திலும் உபயோகமில்லாததாயிருக்கும். ஆனால் பிள்ளைகளின் விளையாட்டிலும் பல வித்தியாசங்களுண்டு. குழந்தைகளின் விளையாட்டிலிருந்து அவர்களுடைய முன்

ஜன்மவாசனையையும் மனப்போக்கையும் அறிந்துகொள்ளலாம். கதாதரர் சாதாரணமாகக் குழந்தைகள் போல் கோலி பந்து முதலிய அவர்களுடைய எவ்வித விளையாட்டிலும் சேராமல், எப்பொழுதும் ஈசுவரத்தியானமாகவேயிருந்து வந்தார். ஆனால் இவர் விளையாட்டேயில்லாமல், எப்பொழுதும் துக்கமுகத்தைக் காட்டிகொண்டிருக்கவில்லை. இவருக்குப் படிப்பிலே அதிகப்பிரியமில்லையென்று முன்னமேயே கூறியிருக்கிறோமல்லவா? குழந்தைகளுக்குப் படிப்பிலே பிரியமில்லாவிட்டால், விளையாட்டில்தான் பிரியமிருக்க வேண்டும், குழந்தைகளுடைய சாதாரண விளையாட்டுக்களிலும் இவர் சேர்வதில்லையென்று நாம் கூறிவிட்டோம். ஆனால்இவர் என்ன? எப்பொழுதும் கண்ணைமூடிநிஷ்டையிலேயேகாலம் கழித்துக் கொண்டிருந்தாரா? இல்லை இல்லை. எப்பொழுதும் விளையாடிக்கொண்டேதான் இருந்தார். ஆனால் என்ன விளையாட்டு? தம் வயதுக் குழந்தைகளையெல்லாம் சேர்த்துக்கொண்டு, மண்ணினால் பிரதிமைகள் செய்து அவற்றை ஈசுவரனென்று கூறி மணியடித்துப் பூஜை செய்வதாக விளையாடுவார். அவற்றுக்கு உற்சவம் செய்வதாகக்கூறி, அம் மண் பொம்மைகளைத் தமது தோழர்கள் தோள்களிலே சுமத்திக்கொண்டு தெருத் தெருவாய் வரச்செய்வார். தாம் செல்லும் பஜனைமடங்களிலே தாம் கேட்டுக் கற்றுக்கொண்ட பாடல்களையும் கீர்த்தனங்களையும் பாடி பஜனை செய்வார்; மற்றக்குழந்தைகளும் பாடும்படி செய்வார். தமது பெற்றோர் தமக்கு அருமையாகக்

வித்துவான். இவர் கல்கத்தா நகரிலே ஒரு சமஸ்கிருத பாடசாலை ஏற்படுத்தி, அப் பாஷையிலே பிரியமுள்ள சில மாணவர்கட்குப் போதித்து வந்தார். கதாதரருக்குப் பதினாறுவது வயதிலே உபநயனம் செய்விக்கப் பட்டது. உடனே அவருக்கு வித்தியாப்பியாசம் செய்விக்கும்பொருட்டு சமஸ்கிருத பண்டிதராகிய அவருடைய தமையனார் ராமகுமார சட்டோபாத்தியாயர் என்பவர் அவரைக் கல்கத்தா நகருக்கு இட்டுச் சென்று, தமது பாடசாலையிலே ஒரு மாணவனாகச் சேர்த்துக் கொண்டார். அப் பாடசாலையிலே எப்பொழுதும் பிரம்மத்தைப் பற்றியும், மாயையைப் பற்றியும், ஜீவேசுவர ஜகத்தைப் பற்றியும் பலமான வாதங்கள் பல நடந்து கொண்டே யிருந்தன. கதாதரர் சின்னாட்கள் இவற்றை யெல்லாம் கேட்டுக் கொண்டே யிருந்தார். வர வர, இவருக்குக் காது புளித்து விட்டது. இந்த வீண் வாதங்களினாலே யெல்லாம் மனிதனுக்கு உபசாந்தியுண்டாவதில்லை யென்றும், பொன்னை, மாதரை, பூமியைப் புகழை நாடி யுழல்பவர்கள் ஒருபொழுதும் பிரம்மாநுபூதி யடைய மாட்டார்களென்றும், ஆதலால் அப் பாடசாலைப் படிப்புகளும் வாதங்களும் தமக்கு வேண்டிய தில்லை யென்றும், ஆத்ம சாந்தி யடைவதற்குள்ள அநுபூதியே தமக்கு வேண்டிய தென்றும் கூறி அப்பாடசாலையை விட்டு நீங்கிவிட்டார்.

இவருடைய இன்னொரு மூத்த சகோதரர் கல்கத்தா

வுக்கு ஐந்து மைல் தூரத்திலே யுள்ள தக்ஷிணேசுவரம் என்னும் இடத்திலுள்ள ஒரு தேவிக்ஷேத்திரத்தில் பூஜகராயிருந்தார். தக்ஷிணேசுவரத்திலே கங்கைக் கரையில் கட்டப்பட்ட இந்த ஆலயமானது இராணி ரஸமணியம்மாள் என்னும் ஒரு ஸ்திரீ ரத்தினத்தினால் 1853-ம் வருஷத்தில் எத்தனையோ லட்சம் ரூபா செலவின் மேல் நிர்மாணிக்கப்பட்டது. இராணி ரஸமணி என்பவள் உயர்ந்த ஜாதியாளல்லள். இராணி என்னும்பெயர் இவளுக்கு இவளுடைய பிதாவால், ரஸமணியென்று பெயரிடப்பட்ட பொழுதே, கொடுக்கப் பட்டது. இவள் மகா உத்தம குணங்கள் வாய்ந்தவள்; தன்னுடைய ஜாதியாருக்குத் தன்னாலியன்ற மட்டும் தாராளமாக உதவி செய்து, அவர்களை மேல் நிலைமைக்குக் கொண்டுவரப் பெரிதும் முயன்றாள்; இவள் தன்னுடைய ஜாதியாரிடத்து மாத்திர மன்புகாட்டியவளன்று; ஹிந்து ஜனசமூகத்திலேயுள்ள மிக்க எளியவர்களும் மிக்க தாழ்ந்தவர்களும் இவளுடைய அன்புக்குப் பாத்திரமானார்கள். இவளுடைய ஜாதியிலேயே இவள்தான் பணக்காரி, கோடீசுவரி; ஆயினும் இவள் தன்னுடைய ஜாதி ஜனங்களை மறந்தவளல்லள். கல்கத்தாவிலுள்ள செம்படவ ஜாதியாருக்கு இவள் பெரியதோர் உபகாரம் செய்திருக்கிறாள். கல்கத்தாவிலே, கங்காநதியில் சில இடங்களில் செம்படவர்களுக்கு வரி விதிக்கப்படாமலிருப்பது இவள் அரசாங்கத்தாருடனே ஏராளமான பொருட் செலவின் மேல் வாது செய்து ஜயித்துக்கொடுத்ததினாலேயேயாம். இவள்,

சுத்தஹிந்து வாகவே யிருந்து சுத்த ஹிந்துவாகவே மரித்தாள். இவளுக்குத் தன்னுடைய மதத்தினிடத்திலும் தேசத்தினிடத்திலும் அபிமானம் மிகுதியுண்டு. இவள் கட்டியுள்ள தக்ஷிணேசுவராலயமானது பிரம்மாண்டமான தாக இருக்கின்றது. இவளுக்குக் காளிதேவியி னிடத்திலே பக்தியதிகம். இவள், தேவிக்கு பூஜாகைங்கரியங்கள் சரிவர நடக்கின்றனவா? என்று தானே நேரில் பார்த்துக் கொள்ளும் பொருட்டும், தன்னுடைய நேர் பார்வையிலேயே சகலமும் நடந்தேற வேண்டுமென்று கருதியும் அவ்வாலயத்தருகிலேயே ஒரு வீட்டில் வசித்து வந்தாள். அவ்வாலய தரிசனத்துக்கு வருகின்ற ஏழைகளும் சாதுக்களும் ஆகாரத்துக்குக் கஷ்டப் படாமலிருக்கும் பொருட்டு வேண்டிய ஏற்பாடுகள் செய்து வைத்தாள். எந்த நேரத்திலும் ஏழைகள் வந்தாலும், அவர்களுக்கு இல்லையென்று சொல்கிற வழக்கம் கிடையாது. எந்த நேரத்திலும் எந்த பக்தனும் சென்று ஈசுவரியை உபாசித்துத் திரும்பலாம். இன்னும், இவள், அக்கோவிலுக்கு ஏராளமாக வருஷ வருமானம் வரும்படி, வேண்டிய பூஸ்திதிகள் வாங்கி விட்டிருக்கிறாள்.

இவள் கட்டிய அந்த தக்ஷிணேசுவராலயத்திலேதான் நமது கதாதரருடைய மூத்த சகோதரர் பூஜகராயிருந்தார். கதாதரர் சம்ஸ்கிருத பண்டிதராகிய தமது மூத்த சகோதரருடைய பாடசாலையை விட்டு நீங்கினவுடன், அர்ச்சக

ராயிருந்த மூத்த சகோதரரிடத்துத்தான் சென்றார். அப்பொழுது தக்ஷிணேசுவராலயத்திலே கும்பாபிஷேகம் நடந்துகொண்டிருந்தது. ஆயிரக்கணக்கான பிராம்மணர்கள் பஞ்சபக்ஷ பரமான்னாதிகளுடனே போஜனம் செய்விக்கப் பட்டார்கள். கதாதரரும் தமையன் வீட்டுக்கு வந்து சேர்ந்தார். அன்று கோவிலிலே லக்ஷப்பிராம்மணபோஜனமாகையினாலே, அர்ச்சகருடையவீட்டிலே சமையல் இல்லை. கதாதரரை அவருடைய தமையனார் கோவிலிலே போஜனம் செய்யும்படி சொன்னார். அக்கோவிலுக்கு ஸ்தாபக கர்த்தாவாகிய இராணி ரஸமணியம்மாள் தாழ்ந்தஜாதி ஸ்திரீயானதால் இவளால் நிர்மிக்கப் பட்ட க்ஷேத்திரத்திலே தாம் போஜன முண்ணுதல் சாஸ்திர விரோதமென்றும், அந்த க்ஷேத்திரத்திலே தமது தமையனார் பூஜை செய்தல் தகாதென்றும் கூறிவிட்டு, அங்கிருந் தகன்று தம்மிடமிருந்த சிறிதுதுட்டைக்கொடுத்து ஏதோ ஆகாரம் வாங்கி யுண்டுவிட்டுக் கல்கத்தாவுக்குப் போய் விட்டார்.

ஆனால் சின்னாட்களுக்குள்ளே தமது தமையன்மீதுள்ள வாஞ்சையினாலே கதாதரர் மீண்டும் தக்ஷிணேசுவரம் சென்றார். அப்பொழுது அவருடைய சகோதரர் அவரைத் தம்முடனேயே இருக்கும்படி மிகவும் வேண்டிக்கொள்ள, அவரும் அதற்கிணங்கி அங்கே தங்கினார். ஆனாலும் அவர் தமது தமையன் வீட்டிலே போஜனம் செய்யாமல் தாமே சமைத்து உண்டுகொண் டிருந்தார். இப்படி யிருக்கை

யில் கதாதரருடைய சகோதரர் வியாதியடைய, தமையனுருடையவேண்டுகோளின்மேல், கதாதரர் அக்கோவிலிலே அர்ச்சகராயிருக்க இசைந்தார். இப்பொழுது அவருக்கு வயது பதினெட்டு அல்லது பத்தொன்பது இருக்கலாம். சாதாரண அர்ச்சகர்களைப் போலவே, இவர் முதலில் சின்னாட்கள்வரையில் மந்திர தந்திரங்களினாலே தேவியைப்பூஜித்துவந்தார். ஆனால் வரவர மந்திரதந்திரங்கள் இவருடைய மனத்தினின்றும் நழுவிவிட்டன. தேவியினிடத்திலே இவருக்கு அந்தரங்கபக்திவிழுந்துவிட்டது. இம்மைப்பொருள்களையும் அவற்றால் உண்டாகும் இன்பங்களையும் மறந்தார்; பாரதிதேவியினிடத்திலே பக்தி செலுத்துவதே இவருக்குப் பரமானந்தமாகப் பட்டுவிட்டது. வேறுவித எண்ணங்களையும் தொழில்களையும் மறந்தார்; இவர் பூஜிக்கும்பொழுது இவர் கண்களில் நீர் ஆறாய்ஒழுகும்; இவர் மெய்மறந்து அப்படியே பகவதியினிடத்தில் பரவசமாகி அசைவற்ற சித்திரப்பிரதிமைபோல் நின்று விடுவார். "தாயே எனக்கருள்புரிக; தமியேன்படும் துயரம் தாய் அறியாயோ? இன்று இப்பொழுதே என்முன் வருக; பசுவிழந்த கன்றைப்போல நான் பரதவிக்கின்றேன்" என்று இரவு பகலாய்ப் பிரார்த்தனை செய்வார். தேவியின் முன்னே தீபாராதனை செய்வதற்காக இவர் தீபத்தைக் கையிலெடுத்து விக்கிரகத்தின் முன்பு கொண்டு செல்வார்; அப்படியே தன்னை மறந்து விடுவார். தீபம்கையிலேயே இருந்து கொண்டிருக்கும்; இவர் அப்படியே நின்றுகொண்டிருப்

பார். பூஜைக்கு உட்காருவார்; மனமானது அந்தர்முகப் பட்டு, ஆதிசக்தி யகிலாண்டேசுவரியினிடத்திலே சென்று விடும். பகிர்முகமாகச் செய்யவேண்டிய அநுஷ்டானங்க ளெல்லாம் நின்றுவிடும். சிற்சில சமயங்களிலே அம்பிகை தமக்குப் பிரசந்நமாகாததைக் குறித்து வருந்துவார். பச் சைக்குழந்தைகள் தின்பண்டத்துக்குத் தேம்பித் தேம்பி யழுவதுபோல், வாய்விட்டு அரற்றி அழுவார். எவர் எத் தகைய சமாதானம் சொன்னபோதிலும் இவர் கேளார். இவருக்குப்பலமாகப் பைத்தியம் பிடித்துவிட்டது என்று பலரும் கருதினர்கள்; ஆனால் இரண்டொருவர் மாத்திரம் இவருடைய உண்மை யாவலை யுணர்ந்தவர்களாய், இவரை மிகுந்த மதிப்புடனும் மரியாதையுடனும் நடத்திவந்தார் கள். பையனுக்குப் பக்திபழுத்துப் பைத்தியக்காரனாய் விடு கின்றானே யென்று இவருடைய சகோதரர்கள், இவரு டைய மனமானது பேதித்து அவர் உலகவிவகாரத்திலே நிலைத்து நிற்கும்படியான உபதேசங்களைச் செய்தார்கள். ஒருவர் சம்ஸ்கிருதவித்வான்; இன்னொருவர் அக்கோவிலி லேயே அர்ச்சகர். ஆதலால் அவர்களுக்கு உபதேசிப்ப தற்கு நியாயமாகிடையாது? எத்தனையோ நியாயங்களை யெடுத்துப்போதித்தார்கள்; கிரகஸ்தாசிரம தர்மத்தின் விசேஷங்களை விளக்கிவிளக்கி யுரைத்தார்கள். ஆயினும் தாதரர் சற்றும் அசைவதாகவில்லை.

இவருக்கு எப்படியேனும் ஒரு விவகாரத்தையாவது

செய்வித்து இவருடைய மனத்தை உலகெமுகமாகத்திருப்பி விட நிச்சயித்து இவருடைய சகோதரர்கள் இவருக்குப் பெண்பார்க்கப் பிரயத்தனம் செய்தார்கள். இதையறிந்த கதாதரர் ஒருவர்பெயரைக்கூறி அவருடைய பெண் தமக்கு விவாகம் செய்விக்கப் படுவாளென்றும் ஆனல் அவள் உத்தம சிரோன்மணி யென்றும் தம்முடைய அநுஷ்டானங்கட்கு அவள்சிறிதும் பிரதிகூலமா யிருக்கமாட்டாளென்றும் இவராகவே கூறிஞராம். அதுபோலவே, ராமச்சந்திர முகோபாத்தியாயர் என்பவருடைய பெண் நமது கதாதரருக்கு விவாகம் செய்விக்கப்பட்டாள். இப் பெண்ணின்பெயர் சாரதாதேவி யாகும். இவ்விதமாக கதாதரர் விவாகம் செய்விக்கப்பட்ட பொழுதிலும், திரும்பவும் தக்ஷிணேசுவர ஆலயத்துக்கு அர்ச்சகராக வந்து சேர்ந்தார். இவருடைய சகோதரர்களும் மற்றுமுள்ள பந்துஜனங்களும் கதாதரருக்கு இனிமேல் அத்தகைய பைத்தியம் பிடிக்காதென்று நினைத்திருந்தார்கள். ஆனல் இவருடைய பக்தியானது அணுவளவும் குறையவில்லை. மெல்ல மெல்ல அதிகரித்து அந்தப்பக்தி இவரைமுன்னிலும் அதிகமாக தேவியினிடத்திலே பிணைத்துக் கட்டிவிட்டது. இவர் எப்பொழுதும் அம்பிகையையே தியானம் செய்துகொண்டு "அம்மா! பரதேவதை! ஆதிசக்தி! அருள்மாதேவி! அடியேன்முன் தோன்றுவாய்" என்று கதறிக் கதறிப் பிரார்த்திப்பார். மாலைநேரமாய்விட்டும் அம்பிகை தரிசனம்கொடுக்காததால். கதாதரருக்கு துக்கம் பொறுக்க முடியாது.

அதனால் இவர். ''ஐயோ; அநியாயமாக ஒருநாள் போய்விட்டதே; ஓ அம்பிகை, பார்வதி, பரமேசுவரி! அடியேனுக்கு அருள்புரியாயோ? மலத்திலே பிறந்து மலத்திலேயே இறக்கும் புழுக்களைப்போல நான் உலகமாயையிலே பிறந்து மாயையிலேயேமரிக்கவா?'' என, கோவென்று அழுவார். கோவில் பூஜாகைங்கர்யங்களை யறவேவிட்டுவிட்டார். இவருக்குச் சாட்சாத் இறைவியைத் தரிசிக்க வேண்டுமென்ற எண்ணத்தைத் தவிர வேறு எண்ணமே கிடையாது. பெண்டு, பிள்ளைகள், நன்செய் புன்செய்கள் முதலியவற்றைக்கட்டிக்கொண்டு அழுகிற சாதாரண மனிதருக்கு இப்பெரியோரது பக்தித் தன்மை விளங்குமா ?' பலரும் இவரைப்பைத்தியக் காரரென்று நினைத்தார்கள். சிலர் இவருக்கு ஏதோ மூளையைப் பற்றிய வியாதியென்று நினைத்தார்கள்; சிலர் அவரைப்பரிகசித்தார்கள்; சிலர்நிந்தித்தார்கள். எவர் என்னசெய்தும் அவருக்கு என்ன? ஈசுவரியைவிட்டு நீங்கிய இவருடைய பிரிவாற்றாமைத் துக்கமானது ஒழிய வேயில்லை. ஒருநாள் மாலையிலே இவர் கங்கைக்கரையிலே நின்று கொண்டு, மாதா தம்மீது மனமிரங்காமைக்காக வெயில் சகித்திடாப் புழுப்போல வெம்பித் துடித்துக் கொண்டிருந்தார். அங்கு அந்த பஞ்சவடி வனத்திலேயே ஒரு குடிசை கட்டிக்கொண்டு ஜகதம்பிகையைக் குறித்து சதா நிஷ்டையி லிருக்கவேண்டுமென்றுகருதினார். ஆனால் குடிசைகட்டுவதற் குரிய சாமக்கிரியைகளுக்கு எங்கேபோவது? இவர் எவரிடத்தும் எதையும் கேட்பதில்லை யென்று

விரதம் பூண்டிருந்தார். ஈசுவரியின் கடாட்சம் எப்படியோ! இப்படி நினைத்துக்கொண்டிருக்கும் பொழுதே ஒருபெரிய அலையானது ஒரு சிறுகுடிசை கட்டுவதற்கு வேண்டிய சாமக்கிரியைகளை யெல்லாம் கொண்டு வந்து வீசிற்று. இவர் தேவியைத்தோத்திரம் செய்துகொண்டே அவற்றையெல்லாம் சேர்த்தெடுத்து ஒரு குடிசை கட்டிக்கொண்டார். பன்னாட்கள் பட்டினிகிடந்தார்; பரதவித்தார்; பிரார்த்தனை செய்தார். இவர் ஆறுமாத காலம் வரையில் இடைவிடாமல் சமாதிநிஷ்டாபரராகவே யிருந்தார். இவருக்குச் சற்றும் பிரபஞ்சப் பிரக்ஞையே கிடையாது ; இவருக்கு பந்துவும் இவரிடத்திலே அதிவிசுவாச முள்ளவருமாகிய ஹிருதயர் என்பவர் இவருக்குத் தினமொருதரம் பலாத்காரமாக ஆகாரம் ஊட்டிவந்தார். கதாதரரிடத்திலே ஆதியிலிருந்து அதிவிசுவாச முள்ளவராக இன்னொருவர் இருந்தார். அவர்பெயர் மதுரநாதன் ஆகும். அவர் இராணி ரஸமணியம்மாளுக்கு மருகனுகவேண்டும். அவர் கதாதரருக்குப் பைத்தியமோ, வியாதியோ வென்று முதலில் சந்தேகித்துப் பெரியபெரிய வைத்தியர்களிடத்தி லெல்லாம் இவரைக்காண்பித்தார். அவர்களால் கதாதரருடைய பக்தி "நோயை" த்தீர்க்கமுடியவில்லை. கடைசியாக டக்கா நகரவாசியாகிய ஒரு வைத்தியநிபுணர் கதாதரருக்கு அவ்வாறிருப்பது பக்தி மேலீட்டதால் உண்டான பைத்தியமே யொழிய வேறு ஒன்று மில்லை யென்றும், இப்பைத்தியம் தேவிதரிசனத்தாலொழிய வேறு எதனுலும்தீராதென்றும்

கூறிவிட்டார். அப்பொழுதுதான் மதுரநாதனுக்கு இவர் மீது பக்தி மிகுந்து அவரை இவர் இஷ்டப்படி இருக்கும் படிவிட்டுவிட்டு, கோவிலில் அர்ச்சக வேலைக்கு இன்னொரு வரை நியமித்துக் கொண்டார். ஒருவர் தாம் பூஜிக்கப் போகும் தேவதையைத் தாமாகவே பாவித்து முதலில் தம் சிரசிலேயே ஒரு மலரைச் சாத்திக்கொள்ள வேண்டு மென்று நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன. இதன்படியே நமது கதாதரர் தேவியைப் பூஜிப்பதற்கு முந்தி தமது தலை யிலே ஒரு மலரைச் சாத்திக் கொண்டு தாம் சாட்சாத் ஜக தம்பிகையென்று பாவித்த மாத்திரத்திலேயே சமாதி நிஷ் டராய்த் தற்போதம் இழந்து *திரிபுடியற்று ஏகமே யேக மாய் இருந்துவிடுவார். இவர் இப்படிச் செய்வது தப்பெ ன்று கருதி, மதுரநாதர் முதலில் இதைத்தடுக்கமுயன்றார். ஆனால் ஒரு நாள் கதாதரர் தமது தலையிலே மலர் சாத்திக் கொண்டு சமாதி நிஷ்டரா யிருந்த பொழுது மதுரநாதர் பார்த்து விட்டார். அப்பொழுது கதாதரர் கதாதரராய்த் தோன்றவில்லை. இவருடையமுகத்திலே ஒரு அற்புதமான தேஜசு ஜொலித்தது; ஒரு அனல் வீசிற்று; பார்க்கப் பயங் கரமாயும் கம்பீரமாயு மிருந்தது. பார்த்தார் மதுரநாதர்; கதாதரர் சாட்சாத் பரமசிவ சொரூபமாய் விளங்குகிறார். மதுரநாதருக் குரோமம் சிலிர்த்தது. கதாதரரிடத்து பய

---

* திரிபுடி = காண்பான் 1, காணப்படு பொருள் 1, காட்சி 1, ஆக 3. இவை முறையே ஞாதுரு, ஞேயம், ஞானம் என்று கூறப்படும்.

மும் பக்தியும் பெருகிவிட்டது. அன்று முதல் கடைசி வரையில் மதுரநாதர் கதாதரருக்கு வேண்டிய சிசுருஷை கள் புரிந்து மகா பக்தராயிருந்தார்.

கதாதரருடைய மனத்தின் நிலைமை எவராலும் அறி யப்படாது. இவர் சிலசமயங்களிலே தேவியை நோக்கிச் செய்யும் பிரார்த்தனைகளிலிருந்து இவர் மனமானது இத் தன்மையதாயிருந்தது என்றுஒருவாறு அறிந்துகொள்ளக் கூடும். சிலசமயங்களிலே இவர் ஆனந்தம்பொங்கி அமிருத வசனங்கள்பேசுவார்; சிலசமயங்களிலே பச்சைக்குழந்தை போலப் பதறியழுவார்; சில சமயங்களிலே கள்ளுண்டவ னைப் போலக் களித்துக் கூத்தாடுவார்; சில சமயங்களிலே கஞ்சாவெறியனைப் போல, முன்னொன்று பின்னொன்று பேசி விழி விழியென்று விழிப்பார். இவருடைய முக மானது அந்தக்கடுந்தவத்திலே கூட ஜொலித்தது. இவ ருடைய சிரோ ரோமங்கள் தங்குதடையின்றி வளர்ந்து ஜடைபிடித்துக் கொண்டன.

இப்படி தவம்செய்துகொண் டிருக்கையில் ஒருநாள் கதாதரர் தேவியின் அநுக்கிரகம் தம்மீது இருக்கிறதா? இல்லையா வென்று சோதிக்க விரும்பினர். "அம்மா பாரதீ தேவி! பக்தஜன ரட்சகி! நித்தியகுமாரி! நீ என்மீது அருள் வைத்திருக்கின்ற யென்பது உண்மையானல், நான் உன்னி டத்துச்செலுத்தும் பக்தி வெறும்வேஷமன்றி, அது எனது

உள்ளம் கொதித்து ஓங்கியெழுகின்ற உண்மை யன்பேயா னால், நீ எனக்கு இன்று சில அற்புதங்களைக்காட்டியருளல் வேண்டும். இல்லையேல் நான் பிராணத்தியாகம் செய்து கொள்வேன். உண்மையாக உன்னை நம்பி, சர்வசங்க பரித்தி யாகம் செய்து நீயே கதியென்று நிர்மல மனத்துடனே நின்னையே நினைந்துகொண் டிருக்கும் ஒரு ஏழைப் பிராம ணன் உன்னால் மரித்தான் என்றபழி உலகுள்ளளவும் உன் னையே சாரும். இது நிச்சயம்'' என்று கதாதரர் கூறின மாத்திரத்திலே இராணிரஸமணியம்மாளுடைய புத்திரிகள் இருவர், தக்ஷிணேசுவராலயம் இங்கிருக்கின்ற தென்றே இதுவரை யறியாதவர்கள், திடீரென அங்குத் தோன்றி அவ்வாலயத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டுக் கதாதரரிருந்த விடம்வந்து இவரைநோக்கி "தேவி உனக்குப்பிரத்தியட்ச மாகி தரிசனம் கொடுத்தாள்; நீ சற்றும் கவலையுற வேண் டாம்'' என்று கூறிவிட்டுச் சென்றார்கள்.

இப்படி இவர் பன்னிரண்டு வருஷங்கள் கொடிய தவம் புரிந்தார். சில நாட்கள் இவருக்குத் தூக்கமே யுண் டாகவில்லை. இதென்ன அதிசயமாக இருக்கிறது? நித் திரையின்றி மனிதன் இருந்தால், அதுஏதோ வியாதியினா லென்று ஏற்படாதா? கதாதரர் தேவியைநோக்கி, "தாயே மகாசக்தி! எனக்கு நித்திரை பிடிக்கவில்லையே. நித்திரை யுண்டாகுமாறு அருள்புரிக'' என்று பிரார்த்தித்தலும், "ஆகாரம், நித்திரை, பயம், மைதுனம் முதலியவை மனித

சுள் உண்டாவது அருமை யல்லவா? அவள் கதாதரரைப் பார்த்த வுடனே வியாதியின்ன தென்று கண்டு கொண்டாள்; தான் கதாதரருடன் கூடவிருந்து அவருக்கு வேண்டிய வேலைகள் செய்வதாக மதுரநாதரிடம் அநுமதி பெற்றுக் கொண்டாள். கதாதரருக்குப் பைத்தியம் பிடித்திருக்கின்றதென்று கூறியவர்களிடத்தி லெல்லாம் அந்தப் பிராமணி இவருக்கு உண்டா யிருக்கிறது பைத்திய மல்ல வென்றும், பக்திப்பிரேமையே யென்றும், இவ்வித பக்திப் பிரேமையே முன்காலத்திலே கோபிகைகளுக்கும் ஸ்ரீ சைதந்யருக்கும் உண்டாயிற்று என்றும் கூறி, இதற்கு நிதர்சனமாக நமது சாஸ்திர, புராண, இதிகாசாதிகளி லிருந்தும் மேற்கோள்கள் எடுத் துரைத்தாள். பக்திப்பிரேமையின் ஆதிக்கத்தினாலேயே அந்தத் தாபஜ்வரம் இவருக்குண்டாயிற்று. ஒரு சிறு குடிசைக்குள் கட்டப்பட்ட ஒரு யானையானது அக் குடிசை தனக்குப் போதாமையினாலே அதை இடித்துத் தகர்த்து எறிவதுபோல, திவ்விய ஞானாக்கினியானது அச் சரீரத்தினுள் அடங்கி யிருக்க முடியவில்லை. அது சரீரத்தை யழித்துக் கொண்டிருந்தது. இவ்விதப் பிரேமா நோயினால் பீடிக்கப் பட்டவர்களுக்கு சாஸ்திரங்களில் விதிக்கப் பட்டிருக்கின்ற சில மூலிகைகளை அவள் இவருக்குக் கொடுத்து சொஸ்தப் படுத்தினாள். வர வர, இவருக்கு அந்தத் தாபஜ்வரம் நீங்கிற்று. இவர் திரும்பவும் சொஸ்த மடைந்த பின்னர், இவரைப் பார்க்கப் பரிதாபகரமா யிருந்தது. தமது அநுபூதியினின்றும்

தாம் நீங்கிவிட்டது பற்றி, மிக மிக வருந்தினர். சரீரம் எப்படிப் போனலென்ன? ஆத்மா ஆநந்த சொரூபமாய் விட்டது. இனிமேல் சரீரம் எப்படியானலென்ன? சரீரம் அழிந்துபோவதுதானே. அது எப்படி யழிந்தாலென்ன? ஆனல் அந்தயோகினி அவரிடத்தில் ஜகன்மாதாவினுடைய கிருபை பரிபூரணமா யிருக்கின்றதென்றும், ஜகன் மாதா எப்பொழுதும் அவருடன்கூடவேயிருக்கிருளென்றும் மற்றும் சிலவிதமாகவும் வார்த்தைகள்கூறி இவரைத் தேற்றினுள். இன்னும், தான் தேவியை உபாசனை செய்து அநுபூதி யடைந்த மார்க்கத்தையும் உபதேசித்தாள். இவ்வாறு அவள் சில வருஷங்கள் கதாதரருடன் கூடவே யிருந்து, இவர் பிரம்மாநுபூதி யடைவதற்குள்ள மார்க்கங்களை யெல்லாம் போதித்தாள்.

கதாதரர் யோக சாஸ்திரங்களிலே கூறியுள்ள மார்க்கங்களை யெல்லாம் அப்பியசித்து அவற்றிலே தேர்ந்து, பிராணனையும் மனத்தையும் அடக்கி நிச்சலனமாய், நிர்விகற்பமாய், சரீரப் பிரக்ஞையை மறந்து சாசுவத நிஷ்டையிலிருப்பதைக் கண்ட அனைவரும் ஆச்சரிய முற்ருர்கள். இவர் இவ்வாறு யோகாப்பியாசம் செய்துகொண் டிருக்கையில் ஒரு நாள் இரவில் இவருடைய வாயிலிருந்து ரத்தம் வந்தது. அதைக் கண்டு இவர் பயந்து மனம் வருந்தினர். சின்னட்களுக்கு முன் கதாதரர் தக்ஷிணேசுவரர் ஆலயத்தில் அப்பொழுது பூஜகராயிருந்த தமது பந்து ஒரு

வரை மிகவும் கடிந்து கொண்டார். அவர் திட மனம் வாய்ந்தவர். அவர் சொன்ன சொல் பலித்து விடும் அவர் கதாதரர் தம்மைக் கடிந்து கொண்டதற்குப் பதிலாகக் கோபத்தினால் "உன் வாயிலிருந்து ரத்தம் கொட்ட" என்று சபித்தார். அப்படியே கதாதரருக்கு வாயிலிருந்து ரத்தம் வந்து விட்டது ஆனால் அது தானாகவே நின்று விட்டது.

இப்பொழுது கதாதரர் நிர்விகற்ப சமாதியில் நிற்கும்படியான நிலைமை பெற்றிருந்தும அணுவுக்கு அணுவாய், மகத்துக்கு மகத்தாய் இருக்கப் பட்ட பிரம்மவஸ்துவைப் பற்றியுள்ள பேரறிவைப் பெறுதற் பொருட்டு மேன் மேலும் முயன்றார். "சீடன் குருவைத் தேடுகின்றான், குரு சீடனைத்தேடுகின்றார்" என்பது ஒரு சிருஷ்டி நீதி. கதாதரர் தமது ஞானம் பெருக வேண்டுமென்றும் அதற்கு வேண்டிய ஆசாரியர் கிடைப்பாரா? வென்றும் ஆவலுடனே ஆலோசனை செய்து கொண்டிருக்க, அங்கே யொரு மகாத்மா வந்து சேர்ந்தார். அவர் பெயர் தோதாபூரி. இப்பொழுது கதாதரர் வேதங்களிலே அந்தப்பதவியிலே இடை விடாமல் ஒருவன் இருபத்தொரு நாட்கள் இருப்பானாயின், சரீரம் நசித்து விடும்; ஆத்மாவானது நித்யாநந்தமாய் பிரம்மாநுபூதியிலே என்றென்றும் இருக்கும்" என்று எந்தப்பதவி குறிப்பிடப்படுகின்றதோ, அந்தப்பதவியையடையும் பக்குவதசையை

அடைந்துவிட்டார். தோதாபூரி யென்பவர் ஒருஊரிலே ஒருநாளைக்குமேல் ஒருபொழுதும் தங்காதவர். இவர்தாம் கதாதாருக்கு ராமகிருஷ்ணர் என்று ஞானநாமம் அளித்தவர். இப்பொழுது தோதாபூரியைக்கொண்டு நாம் கதாதாருக்கு ராமகிருஷ்ணர்என்று பெயர்கொடுத்துவிட்டோமாதலால், இனிமேல் அவரை ராமகிருஷ்ணர் என்ற பெயராலேயே அழைப்போம். இந்த தோதாபூரியை ராமகிருஷ்ணர் **நியாங்தா** என்று கூறுவர். **நியாங்தா** என்றால் திர்வாணி, பிறந்தமேனியர் என்றுபொருள். இந்த தோதாபூரி திகம்பரர்: "பிரபஞ்சம் ஒரு சொப்பனம் என்று, சொப்பனம்போல வெண்ணித்துணிந்தவன் ஞானியாவன்" என்பது உண்மையென்று அநுபவத்தில் அறியும் பொருட்டு, தோதாபூரி பூரஞ்சாரம் செய்து கொண்டிருந்தார். அவருக்கு வெயிலும்மழையும் ஒன்றே; இரவும்பகலும் ஒன்றே. ஒரு சமயத்திலே ஹநுமாரிடம் ஒருவர் சென்று "கலியுகம்பிறந்து இப்பொழுது எத்தனை வருஷங்களாயின?" என்றார். அதற்கு ஹநுமார் "கலியுகத்தையும் வருஷத்தையும் கணக்குப்பார்க்கும் வேலை எனக்கில்லை. ஈச்வரன் என்றஒருயுகத்தையே நான் அறிவேன். அந்த யுகத்திலே முன்னும் இல்லை, பின்னும் இல்லை, சென்றதுமில்லை, செல்லப்போவதுமில்லை" என்றார். ஹநுமாருடையதைப்போன்ற இத்தகைய ஞானம்வாய்ந்தவர் தோதாபூரி. ஆகாயமே அவருக்குக் கூரை; புல்லே அவர் படுக்கை; யதேச்சையாகக் கிடைப்பதே அவருக்கு ஆகாரம். அவர் பாரத தே

சத்திலுள்ள பலமூர்த்தி ஸ்தலங்களையும், ஆரண்ணியங்களையும், குகைகளையும், தீர்த்தங்களையும் தரிசித்துக்கொண்டே பூப்பிரதட்சணம் செய்துகொண்டு வந்தார். அப்பொழுது "நீ வங்காளம் செல்வாய். உனக்கு அங்கே வேலையிருக்கின்றது. உன் வருகைக்காக ஒருவர் காத்துக்கொண்டிருக்கிறார். அங்குச்சென்று அவரைஈடேற்றிவிடு" என்று அசரீரி வாக்கு உண்டாயிற்று. அந்த ஆக்ஞையின் பிரகாரம் அவர் வங்காள தேசமெல்லாம் சுற்றி, கடைசியாக தக்ஷிணேச்வரம் வந்துசேர்ந்தார். அங்கே அவர் ராமகிருஷ்ணரைக்கண்டு அவரிடத்திலே சிறிது உரையாடியவுடனே, அவர் யோகியென்று அறிந்துகொண்டு "நான் உனக்கு வேதாந்த நுட்பங்களையெல்லாம்விளக்கிவைக்கின்றேன்; நீமுக்தியெய்தும் மார்க்கத்தை உபதேசிக்கின்றேன்" என்றுகூறினார். ராமகிருஷ்ணர் எடுத்ததற்கெல்லாம் மாதாவின் ஆக்ஞையை நாடுபவர். அதனால் அவர்ஓடினார் ஏகாந்தமானஒருஇடம்நோக்கி; மூடினார்கண்களை; மூன்றேநிமிஷங்கள் கழித்துத்திரும்பி வந்து"அன்னை உத்தரவுகொடுத்துவிட்டாள். எனக்குஅநுக்கிரகித்திடுக" என்றுகூறினார். தோதாபூரி அவ்வாறேஇசைந்து அவருக்கு "ஏகமேவாத்விதீயம் பிரஹ்மம், பாவாபாவாதீதம்பிரஹ்மம், பிரபஞ்சசொரூபம் பிரஹ்மம் சொரூபாநுபவாதீதம்பிரஹ்மம்" என்றுஉபநிஷத்துக்கள்கோஷிக்கின்றஉண்மைப்பொருளாய், சத்தாமாத்திரமாய், சைதந்நியவஸ்துவாய், அநாதியாய், அநந்தமாய்,அகண்டசச்சிதாநந்தமாய் விளங்கும் அரும்பெரும்பிரஹ்மவஸ்துவைப்பற்

றியும், அதுவேதானுயிருக்கும் தத்துவஞானத்தைப்பற்றியும், இந்நிலையையடைதற்குச் செல்லவேண்டிய மார்க்கங்களையும் எடுத்துப் போதிக்கவே, ஸ்ரீராமகிருஷ்ணர் மூன்றே, நாட்களுக்குள் இரண்டற்ற ஏகாந்தநிலைமையையடைந்து நிர்விகற்பசமாதியிலே நிச்சல சமுத்திரம்போல ஆய்ந்து ஒய்ந்து ஆநந்தபதவியடைந்து, அது வென்றும் இது வென்றும் இல்லாமல், அதுவே இதுவாகி, இதுவே அதுவாகி, அதுவும் இதுவும் ஒன்றேயாகி அமர்ந்துவிட்டார். தோதாபூரி தமது மூக்கிலே கைவைத்துக்கொண்டு, "ஆ! ஆ!! நான் நாற்பதுவருஷகாலமாகக்கடுந்தவம்புரிந்து பாடுபட்டும் இன்னும் சரிவர அடையாத அந்த உத்தமமான உபசாந்திநிலைமையை இவர்மூன்றேநாட்களுக்குள் அடைந்துவிட்டாரே. இவர்மகாபுருஷர், அவதாரபுருஷர். அவனியிலுள்ளோரை ஆத்மஞானமார்க்கத்திலே திருப்புவதற்காக அவதரித்திருக்கும் புண்ணியபுருஷர்" என்று மிகமிகக் கொண்டாடி அவரை நோக்கி, "இனிமேல் நீஎனக்குசிஷ்யனல்லன்; எனக்குச் சமமாய்விட்டாய்" என்று கூறினர். ஆயினும், ராமகிருஷ்ணர்தாம் நிர்விகற்பசமாதி யடைந்துவிட்டதாக வீணேபாசாங்கு பண்ணுகிருரோ, என்னவோ வென்றுசந்தேகித்து, அவர் அப்படிச்சமாதியில் வீற்றிருக்குங்காலத்திலே, தோதாபூரி அவரையடித்துப்புரட்டிப்பல இம்சைகள்செய்தும் பார்த்தார். ராமகிருஷ்ணருக்குப் பிரபஞ்சப்பிரக்ஞையேயுண்டாகவில்லை. அவருடையமனம்தான் சகலபோகங்களையும்கடந்து சாட்சாத் ஆத்மவஸ்துவினி

டத்திலே ஐக்கியமாகிக் கரைந்து, மனமும் ஆத்மவஸ்துவும் உருண்டு திரண்டு ஒன்றேயாகி இரண்டற்றுப் போய்விட்டதே. இப்படியே ராமகிருஷ்ணர் நிர்விகற்ப சமாதியில் இருப்பார்; ஜகன்மாதாவினுடைய அருளினாலும் ஆக்ஞையினாலும் இந்த நிர்விகற்ப சமாதியில் இரண்டற்று வீற்றிருக்கும் இவரிடத்திலே கனவில் உண்டாவதுபோல சங்கற்பமாகிற இச்சை (பரேச்சை) உதித்து இரண்டு உண்டாகும். அதிலிருந்து மனமானது பிரபஞ்சமுகமாகத் திரும்பும். ஆயினும் ஆநந்தஸ்வரூபமான ஆத்மவஸ்துவினிடத்தில் சில காலமாவது ஐக்கியமாயிருந்ததினாலே, அச்செயற்கைவாசனையினால் மனமானது ஜடத்தைப் பற்றாது. உயர் நிலைகளினின்றும் கீழே யிறங்கி வந்துவிட்டாலும், திவ்விய சொரூபங்களினிடத்திலேயேதான் பற்றி நிற்கும். ராமகிருஷ்ணர் எங்கும் ஜகன்மாதாவையேதான் பார்ப்பார்; அம்பிகையின் சொரூபம்தான் அவருக்கு எங்கும் பிரத்தியட்சமாயிருந்தது.

தோதாபூரி தமது சிஷ்யராகிய ஸ்ரீராமகிருஷ்ணருக்கு சிஷ்யராகும்படி நேரிட்டுவிட்டது. தோதாபூரியானவர் எப்பொழுதும் ஒரு அக்கினிகுண்டத்தைப் பரிசுத்தமானதென்றுகருதித் தம்மிடம் வைத்துக்கொண்டிருப்பது வழக்கம். ஒருநாள் ஒருவன் அவ்வக்கினியினின்றும் தனது கஞ்சாவுக்கு நெருப்புப்பற்றவைத்துக்கொண்டு போவதைப் பார்த்து, தோதாபூரி அவன்மீது அதிகோபதீபிதரானார்.

அருகிலிருந்த ஸ்ரீராமகிருஷ்ணர் அதைப்பார்த்து தோதா பூரியைநோக்கி "ஐயா! தங்கள் அத்வைத அநுபூதி இத்தன்மையது தானோ?. 'ஏகம் ஸத்' என்ற வேதவாக்கியம் தங்களிடம் வீண்வாசாஞானம் மாத்திரமாய்த்தான் இருக்கிறதோ? பிரஹ்மவஸ்துவைத்தவிர வேறுவஸ்து உண்டோ? இவ்வக்கினியும் கஞ்சாவும் கஞ்சாபிடிப்போனும் எல்லாம் பிரஹ்மம்தானே. பேதஞானமே அஞ்ஞானமென்பதல்லவோ? அபேதஞானநுபூதிதானே ஞானமென்பது. ஞானியின்பார்வையில் வித்தியாசமுண்டோ?" என்றுபலவாறாக உயர்ந்த ஞானநுபவ மொழிகளைக் கூறவும் தோதாபூரியாருக்கு வெட்கம் உண்டாகிவிட்டது. அன்றுமுதல் அவர் கோபத்தையறவே விட்டுவிட்டார். ஆனால்தோதாபூரியார், என்ன?லேசானவரா?ராமகிருஷ்ணரைப்பார்த்துஒருகேள்விகேட்டார். அதாவது: நீ "நிர்விகற்பசமாதியையடைந்து சலசாந்தஸ்திதியிலே நிற்பதற்கு வன்மையும் அப்பியாசமும் பெற்றபின்னரும், தேவியை ஏன் 'மாதா, மாதா' என்று மாரடித்துக்கொள்கின்றாய்? சகுணோபாசனையைக் கடந்து சாட்சாத் சைதந்நியவஸ்துவாய் விளங்கும் தன்மையடைந்தும், ஏன்சகுணதேவதைகளைக்கட்டிக்கொண்டு சாகின்றாய் என்பதே" இவ்விதமாக தோதாபூரியார் கேட்கவே, ராமகிருஷ்ணர்சிறிதும் பின்வாங்காது, யோசனைசெய்யாது, சட்டென்று"உண்மைதான். சுத்தப்பிரஹ்மவஸ்துவினிடத்திலே,'நான்' என்பதுமில்லை, 'நீ' என்பதுமில்லை,ஜீவனுமில்லை,ஈச்வரனுமில்லை,தேவனுமில்லை,தேவியுமில்லை. அது

வாக்குக்கும் மனத்துக்கும் எட்டாதது. ஆகையால்பிரபஞ்சப்பிரக்ஞையற்று, ஸ்தூல, சூட்சும, காரணசரீரங்கள் அப்படியப்படியே நழுவியழிந்துவிட, ஞாதுருஞான ஞேயங்கள் நசித்து, நானே தானுகி, தானேநானுகி அகண்டமாய் ஆநந்தமாய் அமர்ந்திருக்கும் நிலைமையிலே அம்பிகையுமில்லை, அடியானுமில்லை. ஆனுல் பிரபஞ்சஞாபகம் சிறிதேனும் இருக்கும் வரையில், நான்என்ற அகங்காரம் இருக்கும்வரையில், ஊனக்கண்ணினுல் உலகைப்பார்க்கும் வரையில் அந்தபிரஹ்மவஸ்துவே ஈச்வரவடிவமாய் மனிதனுடைய மனத்துக்கு விஷயமாகும். ஆதலால்வியவகார சந்தர்ப்பத்திலே நான்தேவியை பூஜிக்கின்றேன்.'' என்றார். தோதாபூரி பிரமித்துவிட்டார். தோதாபூரிக்கு இதுவரையில் சகுணோபாசனையில் நம்பிக்கையிடையாது. ராமகிருஷ்ணர் இவ்வுபதேசம் செய்தஅன்றுமுதல் அவர் பெரிய சகுணோபாசகராகிவிட்டார். இச்சந்தர்ப்பத்திலே ராமகிருஷ்ணருக்கு எல்லாமதங்களும் இட்டுச்செல்லும் இடம் ஒன்றுதானு? என்று பார்க்கவேண்டும் என்று ஆசையுண்டாயிற்று. மற்றமதங்களை ஆராய்ந்து பார்க்கவேண்டும் என்று ஒருபேரவா உண்டாயிற்று. மகம்மதியமதத்திலே பாண்டித்தியம் பெற்ற மௌல்விகள் பலர் அவரிடம்வந்தார்கள். அவர்களின்கூற்றுப்படிக்கெல்லாம் நடந்துபார்க்கவிரும்பி, ஸ்ரீராமகிருஷ்ணர் மகம்மதியனைப்போல உடையுடுத்துக்கொண்டார்; எல்லாவிதத்திலும்மகம்மதியனைப் போலவே யொழுகினர். மகம்மதிய மதக்கொள்கைகளை அப்படியே

யநுஷ்டானத்தில் கொண்டுவந்தார். மகம்மதிய மதமானது கடைசியாகப்போய்ச்சேர்கின்ற இடம் உபநிஷத்துக்களில் உபதேசிக்கப்பட்டிருக்கின்ற இடமேயென்று அநுபவத்தில் கண்டுகொண்டார். கிறிஸ்தவப் பாதிரிமார்கள் வந்தனர். அவர்கள்கூறியபடியெல்லாம் ஒழுகிப்பார்த்தார். அம்மதம் இட்டுச் செல்லும் இடமும் அதுவேயென்று அறிந்துகொண்டார். இப்பொழுதெல்லாம் தோதாபூரி கூடவேதான் இருந்தார். ஸ்ரீராமகிருஷ்ணருடைய அத்தியாற்புதமான சக்திகளையும் அநுபவங்களையும்பார்க்கப்பார்க்க தோதாபூரியாருக்கு வியப்புமிகுந்தது. ஸ்ரீராமகிருஷ்ணரே இப்பொழுது இக்காலத்திலே மிகமிகச் சிரேஷ்டமான அவதார புருஷரென்று தோதாபூரியார் அவரை மிகக்கொண்டாடி, அவரிடம் விடைபெற்றுச் சென்றார்.

பின்னர் ஸ்ரீராமகிருஷ்ணர் நிர்விகற்பசமாதியில் உட்கார்ந்து அப்படியே ஆறுமாதகாலம்வரையில் மனமானது பகிர்முகப்படாமலே இருந்துவிட்டார். நிர்விகற்ப சமாதியென்பது சித்திப்பது மிகவும் அரிது. அதிலும் அன்னபானாதிகளைப்பற்றிச் சிந்திக்காமலே ஆறுமாதகாலம் ஸ்ரீராமகிருஷ்ணர் இருந்தது ஆச்சரியமல்லவா? இக்காலத்திலே உபகாரகுணமுள்ள ஒரு சாது ஸ்ரீராமகிருஷ்ணருடையசரீரத்துக்குப்பங்கம்வந்துவிடக்கூடாதேயென்றுபயந்து, ஒரு பெரிய தடிகொண்டு ராமகிருஷ்ணருடைய சரீரத்திலே அடித்து அவரை ஸமாதி கலைப்பித்து ஆகாரம் ஊட்டிவந்தார்

ஒரு சமயத்திலே அந்த சாது தடிகொண்டடித்தும் ராமகிருஷ்ணர் விழிக்காமையினாலே, மிகமிக வருத்தமடைந்தார். இப்படி ஆறுமாதங்கள் கழிந்தபின்னர், ராமகிருஷ்ணர் உடம்பு மிகவும் எலும்பும் தோலுமாய்விட்டது; உலர்ந்துவிட்டது; ரக்தபேதி காணத்தொடங்கிற்று. அவருடைய சமாதிநிஷ்டைகலைந்தது. பின்னர், அவர் அந்தர்முகத்திலே சதாஆநந்தமநுபவித்துக்கொண்டிருந்தபொழுதிலும், பகிர்முகத்திலே பலருடனும் பழகிக்கொண்டும்பேசிக்கொண்டுமிருந்தார்.

இப்பொழுது அவருக்கு வைஷ்ணவபக்தியை அநுஷ்டித்துப் பார்க்கவேண்டுமென்று ஆசையுண்டாயிற்று. உலகிலே எவ்விதமெல்லாம் அன்பு செலுத்தப்படுகின்றதோ, அவ்விதமெல்லாம் ஈச்வரனிடத்திலும் பக்திசெலுத்தப்படலாம். ஈச்வரனை ஒரு பிராண ஸ்நேகிதனாகக் கருதி பக்தி செலுத்தலாம். ஈச்வரனை குழந்தையாகக் கருதி பக்திசெலுத்தலாம். ஈச்வரனை பிதாவாகக் கருதி பக்தி செலுத்தலாம். மாதாவாகக் கருதி பக்திசெலுத்தலாம். ஈச்வரனை புருஷனைக் கருதி பக்தி செலுத்தலாம். இவ்வெல்லாவித பக்திகளிலும் சிறந்தது கடையிற் கூறியதேயாம். ஈச்வரனை கிருஷ்ணனென்றெண்ணி, தாம் ராதையைப்போல பெண்வேஷம் பூண்டு இரவுபகலாக அவரையே நினைந்து நினைந்து அவருடையதரிசனம்பெற்று ஆநந்தித்தார். இவர் எந்தஎந்தமதத்தினுடைய கொள்கைகளை யநுஷ்டித்துப் பின்பற்

றினரோ, அந்த அந்த மதத்தின்ஸ்தாபகர்கள் அல்லது தேவதைகள் அவருக்கு தரிசனம் கொடுத்து, தங்கள் தங்கள் மார்க்கங்களிலே சுலபமாக இட்டுச்சென்றார்கள். ஆகாசத்திலிருந்து விழும்மழைத்துளிகள் ஆங்காங்கு பல இடங்களிலும் விழுந்தாலும் எல்லாம் ஈற்றில் சமுத்திரத்தையேபோய்ச்சேர்கின்றதுபோல,எத்தகையகொள்கைகளைப்போதித்தாலும் எல்லாமதங்களும் ஈச்வரனையே போய்ச்சேர்கின்றன வென்றுள்ள உண்மையை இவர் அநுபவத்தில் கண்டறிந்தார்.

இப்பொழுது ஆங்காங்கு இருந்த சாஸ்திரக்ஞர்களும் வித்துவான்களும் ராமகிருஷ்ணரிடம்வர ஆரம்பித்தார்கள். எப்பொழுதும் ராமகிருஷ்ணருடைய ஆச்ரமத்திலேவேதாந்தவிசாரணை தப்பாமல் நடந்துகொண்டிருந்தது. கேள்விகளும் மறுமொழிகளும் வினைக்களும் எதிர்வினைக்களும் யுக்திகளும் குயுக்திகளும் எல்லாம் அங்கேவந்து சேர்ந்தன. வேதமேவாயெடுத்து விள்ளுவதுபோல, ஸ்ரீ ராமகிருஷ்ணர்உன்னதமான உண்மைகளையெல்லாம் ஓயாதுகோஷித்துக்கொண்டிருந்தார். பன்னிரண்டுவருஷகாலம்கடுந்தவம் புரிந்ததின்பலனைஸ்ரீ ராமகிருஷ்ணர் பழுத்து வித்துவான்களாகிய தேனீக்கள் பலவும் தம்மிடம் வரும்படிசெய்து கொண்டார்.

ராமகிருஷ்ணருக்கு சாரதாதேவி யென்று பெயருள்ள ஐந்துவயதுப்பெண் ஒன்றைவிவாகம்செய்துவைத்தார்கள்

என்று நாம்முன்னமேயே அறிவோம். இப்பொழுது அப்
பெண்மணிக்கு வயது பதினெட்டு ஆகிவிட்டது. வயது ஆக
ஆக, அறிவு முதிர முதிர, அவள் தன்னுடைய கணவனைப்பற்
றிப் போவார்வருவாரிடத்திலெல்லாம் விசாரிக்க ஆரம்பித்
தாள். சிலர் அவர் பைத்தியம் பிடித்திருக்கிறாரென்றும்,
வேறுசிலர் அவர் மகாஞானியாகி வேதவித்தாய் விளங்கு
கிறாரெனவும் சொன்னார்கள்: அவ்வம்மையார் தாமே நேரில்
சென்று தமது கணவனைப்பார்க்க விரும்பி 80 மைல் தூரம்
கால்நடையாக நடந்து ஸ்ரீ ராமகிருஷ்ணர் இருக்கும் இடம்
வந்து சேர்ந்தாள். அவ்வம்மையை தூரத்தில் கண்டவுட
னேயே அவர் அவளை "தாயே" என்று அழைத்து உலகி
லுள்ள ஸ்திரீகளெல்லோரும் தமக்குத் தாய்மாரேயாவரென்
றும், தம்முடன் இருப்பதற்கு அவ்வம்மை பிரியப்பட்டால்,
எத்தனையோ அன்பர்கள் வந்து இருப்பதைப்போல இருப்
பதிலே ஆட்சேபனை கிடையாதென்றுங் கூற, அவ்வம்மை
யும் உத்தம பதிவிரதா சிரோன்மணியாகையால், அவரு
டைய அநுபூதியைக்கெடுத்து அவரை அதோமுகமாக இருப்
பது அறிவீனர்களுடைய செய்கையேயாகுமென்று கருதி,
அவருடைய அநுஷ்டானங் கட்கு வேண்டிய சௌகரியங்
களைச்செய்து கொண்டு அவருக்கு சிஷ்யையாகி அவருடன்
கூடவேயிருக்கத் துணிந்து அப்படியே அங்கேயே வசித்து
வந்தார். தாம் அவருடைய 'மனைவி' யென்பதை அடியோடு
மறந்துவிட்டார். ராமகிருஷ்ணர் தமக்குக் குருமூர்த்தி யெ
ன்று திரிகரணசுத்தியாக நம்பிவிட்டார். ராமகிருஷ்ண

ரும் அவ்வம்மையை ஜகதம்பிகையைப்போலவே நினைத்து விட்டார். அவளைப்பற்றி அவர் நினைத்தபொழுதெல்லாம் "ஆ, நானென்னமனுஷ்யன்! அவள்ஜகன்மாதாவினுடைய அவதாரமேயாகும். அவள் எம்மிறைவி, ஈச்வரியேயாவள்" என்று கூறித் தம்மை மிகத் தாழ்த்திக்கொள்வார். அவர் அவளையொருபொழுதும் கடிந்துகொண்டதில்லை; அவளும் அவரை யொருபொழுதும் விட்டுப்பிரிந்ததில்லை. ஸ்திரீகளி லும் அநேகர் ராமகிருஷ்ணருக்குச் சிஷ்யைகளாயிருந்தார் கள். அவர்களும் தக்ஷிணேச்வரத்திலே வசித்த பொழுதி லும், அவர்கள் வேறிடத்திலேயே இருந்தார்கள்.

ஆயினும், ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய ஒருசிஷ்யனுக்கு ராமகிருஷ்ணருக்கும் சாரதாதேவிக்குமுள்ள சம்பந்தத்தி னிடத்திலே சந்தேகமுண்டாயிற்று. ஆகையால் அவன் இரவுகாலங்களிலே ராமகிருஷ்ணருடையநடபடிக்கைகளைக் கவனித்துக்கொண்டிருந்தான். ஒருநாள் நடுநிசியில் ஸ்ரீ சார தாதேவியார் ராமகிருஷ்ணருக்கு ஏதோபணிவிடைசெய்து கொண்டிருந்தார். அந்த சிஷ்யன் ஒளிந்துகொண்டு பார்த் தான்; பயந்துதிகிலடைந்தான். மகாத்மாவினுடைய ஜிதேந் திரியத்துவத்தைப் பரீட்சிப்பதற்கு ஒளிந்த அவன்இப்பொ ழுதுவெட்கத்தினால் தலைகுனிந்து ஒளிந்துகொள்ளவேண்டி வந்தது. அவன் ஒளிந்து பார்த்தபொழுது, ராமகிருஷ்ணர் பக்திபரவசராய்சாரதாதேவியை "அம்மையே" யென்றும், "தாயே" என்றும், "ஜகன்மாதாவே" யென்றும் அழைத்

தாக்கொண்டிருந்தார். அந்த சிஷ்யன் வெட்கி, சின்னாட்கள் வரையில் ராமகிருஷ்ணரிடம் வராமலே யிருந்தான். பின்னர் ஒருநாள் அவன் அங்குவந்தபொழுது, ராமகிருஷ்ணர் அவனைநோக்கி "நீ சந்தேகப்பட்டது நல்லதுதான்; நீ என்னைப் பரீட்சித்துத் திருப்தி யடைந்துகொள்ளாவிட்டால், என்மீது உனக்கு எப்படி நம்பிக்கை யுண்டாகும்?" என்றார். அந்த சிஷ்யனுக்கு ஆச்சரியம் உண்டாயிற்று. அவன் அதை எவருக்கும் உரைத்தவனல்லன். ராமகிருஷ்ணர் எப்படியறிந்துகொண்டார்? அவர் இப்பொழுது காலபேதத்தைக் கடந்து நித்தியத்துவம் அடைந்து திரிகாலஞானியாகிவிட்டார். அவருடைய ஸ்படிகம்போன்ற சித்தத்தினிடத்திலே இவனுடைய செய்கை தானாகவே பிரதிபலித்துவிட்டது. அதுமுதல் அவன் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடத்திலே அத்தியந்த பயமும் பக்தியுமுள்ளவனானான்.

ராமகிருஷ்ணர் சாரதாதேவிக்குப்பிரத்தியேகமாகஞானோபதேசம் செய்துதினந்தோறும் அவ்வம்மையின் மனம் தெளிவுபெற்றுத்திடப்படும்படிக்கு உபதேசம்செய்து வந்தார். அவருடைய சிஷ்யர்களெல்லோரும் அவ்வம்மையாரைத்தங்கட்கு "மாதா"வாகவேகருதிவந்தார்கள். ராமகிருஷ்ணருடைய சிஷ்யர்களுக்குஅவருடைய உபதேசமொழிகளைச்சாவகாசசமயங்களிலே சாங்கோபாங்கமாக எடுத்து அவ்வம்மையார் விளக்கிக்காட்டுவார். ஸ்திரீகளெல்லாரை

யும் மாதாவாக பாவிக்கவேண்டுமென்பதே ஸ்ரீராமகிருஷ்ணருடைய பரமோபதேசம்.

ராமகிருஷ்ணருக்கு அவ்வம்மையாரிடத்திலே மாதுர் பக்தி யதிகம் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. அவ்வம்மையாரை ராமகிருஷ்ணர் ஒருதரம் ஏதோகடிநதுசொல்ல, அவ்வம்மையார் துக்கம் பொறுக்கமாட்டாது, கண்களில் நீர் சொரிய அழுதுகொண்டே அப்புறம் சென்றுள்; அதைப்பார்த்த ராமகிருஷ்ணர் ஒரு சிஷ்யனைக் கூப்பிட்டு "ஐயோ! அந்தத் தேவியின் கண்களிலிருந்து கண்ணீர் வருமானல், என்னுடைய பக்தியும், தியானமும், ஞானமும், வைராக்கியமும் எல்லாம் காற்றுய்ப் பறந்துவிடுமே" என்றுகதறி, அவ்வம்மையாரைச் சமாதானப்படுத்திஇட்டுவரும்படி யனுப்பினர். அவ்வம்மையார், தமதுகுருவினுடைய சிஷ்யர்கள் பலருக்கும் வேண்டிய பணிவிடைகள் செய்து வந்தார்; அவர்களுடைய அனுஷ்டானங்கள் பலவும் விருத்தியடையும்பொருட்டு, வேண்டிய அனுகூலங்கள் செய்துவந்தார். அவர்களுக்கு துக்கம் நேரிட்டபொழுது தாமும் துக்கிப்பர்; அவர்கள் ஆநந்தித்தபொழுது தாமும் ஆநந்திப்பர். இவ்விதமாக அவ்வம்மையார் உண்மையிலேயே எல்லோருக்கும் மாதாவானுள்.

ராமகிருஷ்ணருக்கு யோகாப்பியாசத்தினலே அநேகசக்திகள் சித்தியாயிருந்தன. பிறருடைய மனத்தில் நிகழ்

பவைகளை யறிந்துரைத்தல், இனிமேல் நடக்கப்போகும் சங்கதிகளை யெடுத்துரைத்தல், தூரதேச சம்பவங்களைச்சட்டென்று அறிந்துசொல்லுதல், ஒருவரைப் பார்க்கும்பொழுதே அவருடைய குணம், நடத்தை முதலியவற்றைப் பற்றி அறிந்துகொள்ளுதல் முதலியன அவருக்கு உண்டு.

மதுரநாதர் இதனிடையே யாத்திரை புறப்பட்டார். அவருடன்கூட ராமகிருஷ்ணரும் சென்றார். இவர்கள் கோகுலம், பிருந்தாவனம்முதலிய புண்ணியக்ஷேத்திரங்கட்குச் சென்று, அங்குள்ள தீர்த்தங்களில்மூழ்கிச் சித்தசுத்தியடைந்தார்கள். காசிக்குச் சென்றபொழுது ராமகிருஷ்ணர் மகான் த்ரைலிங்கஸ்வாமிகளுடனே சம்பாஷித்து மகிழ்ந்தார். பிருந்தாவனத்திலே கங்கமாதா என்னும் ஒருசந்நியாசினியினுடைய பழக்கம் ஏற்பட்டது. பிருந்தாவனத்தைக் கண்டு அதைவிட்டு நீங்கிவர அவருக்குப் பிரியமேயில்லை. ஆயினும் அவருக்குத் தமது தாயைப்பற்றிய நினைப்பு லேசாக அடிக்கடி உண்டாவது சகஜமாகையால், அவர் மறுபடியும் தக்ஷிணேச்வரத்திற்கே திரும்பிவந்துவிட்டார். யாத்திரை வழியிலே வைத்தியநாதம் என்று ஒரு க்ஷேத்திரம் இருந்தது. அதற்கருகே ஒரு குக்கிராமத்தில் அக்கிராமத்து ஜனங்கள் தரித்திரத்தில் மூழ்கி வருந்துவதைக்கண்டு, ராமகிருஷ்ணர் அவர்களுடைய குறைகள் நீங்கினாலன்றி, தாம் அவ்வூரை விட்டு அகல்வதில்லையென்று மதுரநாதரிடம் கூறிவிட்டார். உடனே மதுரநாதர் அன்னவஸ்

திரம் அனைவர்க்கும் வழங்கினர். அவர்களுக்குக் கொஞ்சம் திரவியமும் கொடுக்கப்பட்டது. பின்னர் தான் ராமகிருஷ்ணர் அவ்வூரை விட்டு அகன்றார். விண்டு போட்ட பலாப்பழத்தை ஈக்கள் மொய்ப்பதுபோல, வேதமாய் விண்டுகொண்டேகிடக்கும் இந்தராமகிருஷ்ணப்பழத்தை வித்துவான்கள்வந்து மொய்த்தனர். எத்தனையோ அறிவாளிகளும் ஐச்வர்யவான்களும் தினந்தோறும் இவரிடம் வந்துபோய்க்கொண்டிருந்தும்,இவரைப்பற்றிக்கல்கத்தாவிலேஅதிகமாகத்தெரியாது.பிரஹ்மசமாஜத்து ஆசார்யரும், அப்பிரஹ்மசமாஜத்துபுதிய ஏற்பாட்டின்ஸ்தாபகரும் ஆகிய ஸ்ரீகேஸவசந்திரசேனர்ராமகிருஷ்ணரைப்பார்த்து "ராமகிருஷ்ணர் யோகீச்வரர்" எனவெளியிட்டதின்மேல் தான் கல்கத்தாநகர்வாசிகள் பலருக்கும் அவரைப்பற்றியவிஷயம் தெரியவந்தது. கேஸவச்சந்திரசேனர் பக்திபரவசராய்த்தம் மைமறந்து ஆடிப்பாடி, தமது'பல்கேரியா" என்னும் மாளிகையிலே காலங்கழித்துக்கொண்டிருந்தார். ராமகிருஷ்ணர் அவருடைய பக்திப்பெருமையைப்பற்றிக் கேள்விப்பட்டு அவரைப்பார்க்கச்சென்றார். கேஸவச்சந்திரசேனர்ராமகிருஷணரைப்பார்த்ததுதான்தாமதம்; ஒருவித ஆகருஷணசக்தியான து ராமகிருஷ்ணரிடத்தினின்றும் புறப்பட்டு கேஸவச்சந்திரசேனரிடம் சென்று அவரைராமகிருஷ்ணரிடத்திலே பக்திசெலுத்தும்படிகட்டிப்பிணைத்துவிட்டது.பிரஹ்மசமாஜத்தினர் முழுக்கிறிஸ்தவர்களல்லாவிடினும் பிரஹ்மசமாஜக்கொள்கைகள் பெரும்பாலும் கிறிஸ்தவமதத்தை

யே தழுவினவை. கேஸவச்சந்திரசேனர் ஸ்ரீராமகிருஷ்ணரிடத்திலே தினம்சென்று அவர் கூறும் அமிர்தமொழிகளைக் கேட்டுக்கேட்டு ஆநந்தபரவசராய் வீடுதிரும்பிவருவார். இந்தசிரவணத்தின் பயனாக அவர் தமது பிரஹ்மசமாஜக்கொள்கைகளிலே சிலவற்றை மாற்றி, அவற்றிலே பக்தியைப் பிரதானமாகப் புகுத்திப் பெரும்பாலும் அவை ஹிந்து மதத்தைத் தழுவினவாயிருக்கும்படி செய்யவே, பிரஹ்மசமாஜமானது இரண்டாக உடைபட்டது. முன்னிருந்தபடியேயுள்ள பிரஹ்மசமாஜம் ஒன்று; இப்பொழுது கேஸவச் சந்திரசேனரால் ஏற்படுத்தப்பட்ட புதியஏற்பாட்டுப் பிரஹ்மசமாஜம் ஒன்று. கேஸவச்சந்திரசேனருக்குராமகிருஷ்ணரிடத்திலே குருபக்தி ஏற்பட்டுவிட்டது. ராமகிருஷ்ணர் நிஷ்டையிலிருக்கும் பொழுது கேஸவச்சந்திரசேனர் அவரது திருவடிகளைத் தமது முடியிற் சாத்தி, மகிழ்வுறுவார்.

ஜனங்கள் எப்பொழுதும் கூட்டங்கூட்டமாய் ராமகிருஷ்ணரிடத்திற்கு வரத் தொடங்கிவிட்டார்கள். அல்லும் பகலும் அறுபது நாழிகையும் ஜனங்கள் அவரைச் சூழ்ந்துகொண்டிருந்தார்கள். அவரும் மேன்மேலும் உள்ளம் பூரித்து உவகை பொங்கி, தம்மிடம் வந்தவர்கள் தாராளமாக எடுத்துக்கொண்டு போகும்படி தம்மிடமிருந்த ஞானமிருதத்தை வாரி வாரி ஒய்வொழிவில்லாது கொடுத்துக் கொண்டேயிருந்தார். இவர் கர்மயோகம், பக்தியோகம், ராஜயோகம், ஞானயோகம் என்னும் சதுர்விதமார்க்கங்களையும் சமமாகவே பாவித்து, எல்லா மதங்களையும் ஒன்று

போலவே கருதி உபதேசித்து வந்ததினாலே சகலவிதமான ஜனங்களும் சகல மதஸ்தர்களும் இவரிடம் வந்தார்கள். ஒரு ஜீவனுக்காவது தாம் ஜனனமரணநிவிர்த்தி செய்யக்கூடுமாயின் அதுவே தாம் பிறவியெடுத்ததற்குப்பயனாம் என்று இவர் கூறுவார்.

ராமகிருஷ்ணர் ஹிந்துக்களாலே பூஜிக்கப்படுகின்ற தேவதைகளெல்லாவற்றிலும் பிரஹ்ம வஸ்துவையேதான் தரிசித்துவந்தார். அதுமாத்திரம் அன்று; அவர் ஆநந்தமாக மெய்ம்மறந்து அற்புதமாக மனத்தை அந்தர்முகப்படுத்தி நிஷ்டையிலிருக்கும் சமயத்திலே ஹிந்துவுக்குப் புறம்பான வேற்றுத் தேவதைகளும் கொள்கைகளும் கூட அவருக்கு உண்மையாயிருந்தன. பிரஹ்மாநுபூதி யடைவதற்கு அவர் செய்த முயற்சியிலே ஒருசமயம் அவர் தாம் கோரிய காரியம் பலிக்காததுபற்றிப் பூமியிலே கவிழ்ந்து படுத்து மண்ணைக்கடித்தார்; அவ்வுத்தம லட்சியத்தை அடையும்வரையில், அவருடைய ஆத்மா கொதித்துக் குமுறிக்கொந்தளித்துக்கொண்டிருந்தது. எவரும் அறியாதவையும் இப்படியென்று சொல்ல முடியாதவையுமான எத்தனையோ துன்ப உலகங்களைக்கடந்து அவர் அநுபூதியடைந்தார். அவரைப் போன்று கொடியதவம் செய்தவர்கள் இவ்வுலகில் கிடையவே கிடையாது. அவருக்கு அநுபவத்தில் சாத்தியமாகாத லட்சியம் என்று ஒன்று இல்லை. சாதாரண மனிதர்கள் தங்களுடைய இந்திரியங்களுக்கு ஸ்தூலவடிவத்திலே விஷய

மாகின்ற வஸ்துக்களையும் காரியங்களையும் உண்மையென்று கூறுவதுபோல, அவருக்கு மிகமிக உயர்ந்தலட்சியமும் சர்வசாதாரணமாக அநுபவசாத்தியமாயிருந்தது.

ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு இஷ்டதேவதை காளியாகும் என்று நமது வாசகர்கள் அறிந்திருக்கலாம். காளி சர்வ சம்ஹாரஸ்வரூபி; காலகாலாந்தகி; திரிலோகங்களையும்கவளீகரித்து விழுங்குகின்றதேவதேவி; எமனுருக்கொண்டுளங்கும் உலாவுகின்ற சர்வரி. மண்டையோடுகளாலாய மாலையே அவள்கழுத்தில் அணிவது; அறுபட்டுத்தெறிபட்டகைகளாலாய உடையே அவள் இடையில்அணிவது; துண்டாக வெட்டப்பட்டுரத்தஞ்சொரிகின்றசிரமே அவள்கையில்தாங்குவது. அவளுடைய நர்த்தனம் நாசநர்த்தனமே; அவள் வசிக்கும் இடம் ஸ்மசானமே. ஸ்ரீ ராமகிருஷ்ணர் இந்தக்காளியைத்தான் பூஜித்துவந்தார். ஆனால் அவர் இந்தக்காளியையே மாதாவாகவும் பூஜித்தார்; பிரஹ்மவஸ்துவாகவும் அநுபூதியில் அறிந்தார். அவர்சகுணத்தன்மையிலே காளியை அவளுடைய பயங்கரவடிவங்களிலேகண்டார்; நிர்க்குணத்தன்மையிலே, அவளையே ஆநந்தஸ்வரூபமாகக் கண்டார். அவருடைய அநுபூதியிலே சகுணக்காளி நிர்க்குணமாய் விட்டாள். ஜீவகோடிகளுடைய ஜனனமரண நியதிகளெல்லாம் காளியினுடைய கையிலேயே இருக்கின்றன; வித்யாசக்தியும் அவித்யாசக்தியும் அவளே; அவளுடைய ஆக்ஞையினுலே உலகம் வெளியேதோன்றுகிறது; அவளு

டைய ஆக்ஞையினாலே உலகம் உள்ளே ஒடுங்கி விடுகிறது. ஆயினும் அவளே ஆநந்த சொரூபி. எல்லா வஸ்துக்களிலும் ஸ்ரீராமகிருஷ்ணர் ஜகன்மாதாவையே தரிசித்தார். எல்லா ஜீவராசிகளுக்குள்ளும் அந்தரப் பூதமாக அடங்கி நிற்கும் திவ்யஜோதி அவளே யென்று அவர் கண்டுகொண்டார். ஜகன்மாதாவின் சக்தியே சிவ சக்தியாம். அவளுடைய லட்சணங்கள் கால சக்தியாயினும் சலன சக்தியாயினும், சம்ஹார சக்தியாயினும் சிவப்பிரஹ்மமாகிய நித்திய சத்தியும் அவளேயாவள். ஒரு சமயத்திலே ஸ்ரீராமகிருஷ்ணர் பல மிருகங்களும் அடைத்து வைத்திருந்த காட்சிசாலைக்குச் சென்றார். அங்கே சிங்கத்தைக்கண்டவுடனே, ஸிம்ஹவாகினியென்னும் பெயருடன் கூடிய தமது மாதாவினுடைய ஞாபகம் வந்துவிட்டது; அப்படியே சமாதியில் லயித்து நின்றுவிட்டார். தேவியினிடத்திலே அவருக்கு அவ்வளவு பக்தி. கங்காநதியை பிரஹ்மவாரியென்னும் பெயருடன் கூடிய ஜகதம்பிகையின் ஒரு வடிவமாகவே கண்டு ஆநந்திப்பார். மனிதன் மனத்தினாலும் வாக்கினாலும் விவரிக்கின்ற இப்பெரிய அண்டபிண்டங்களெல்லாம் அவருக்குலோகமாதாவாகவே தோன்றின. அவளே சரீரம், அவளே ஆத்மா. எல்லாமாகவும் எல்லாவற்றுக்கும் அதீதமாகவும் அவள் மகா சக்தியாக விளங்குகிறாள். அக்கினியும் அதன் உஷ்ணத்தன்மையும் ஒன்றாயிருப்பதுபோல, பாலும் அதன் வெளுப்பும் ஒன்றாயிருப்பதுபோல, பிரஹ்மமும் சக்தியும் ஒன்றேயாம் என்று

ஸ்ரீராமகிருஷ்ணர் கூறுவார். இப்படி இவர் கூறுவதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த சிஷ்யர் விவேகாநந்தர் ராமகிருஷ்ணருடைய இந்ததரிசனங்களெல்லாம் பொய்யென்றும்மற்றும் சிலவிதமாகவும் கூறிப்பெரும்வாதுதொடுத்திடுவார். உடனே ராமகிருஷ்ணர், கண்ணைமூடி, அந்தர்முகத்திலே தேவியை வரவழைத்துத் தரிசிப்பார்; உடனே கண்களைத்திறந்து, விவேகாநந்தரைப்பார்த்து "உன்னுடைய வாதமெல்லாம் மூடத்தனமும் அஞ்ஞானமுமேயாம் என்று எனது மாதாஎனக்குருசுப்படுத்திவிட்டாள்! எனது தாய் எனக்கு உண்மையைக்காட்டிவிட்டாள்" என்றுகூறி, தர்க்கத்தை முடித்துவிடுவார்.

தக்ஷிணேச்வரத்திலே கங்கைக்கரையிலே இவர்யோக நிஷ்டையிலிருந்த இடமானதுஒருபஞ்சவடியடியாகும். நமதுதேசத்தில் ஐந்துவிதமான விருட்சங்கள் ஒன்றுகவளர்க்கப்பெற்று மிகப்பரிசுத்தமானவையாகக் கருதப்படுகின்றன. இந்தஐந்துவிருட்சங்களும்சேர்ந்து பஞ்சவடியென்றுசொல்லப்படுகின்றன. ராமகிருஷ்ணர் நிஷ்டை யப்பியசித்த பஞ்சவடியிலே ஒருபிரமாண்டமான அரசமரம் உள்ளது. ராமகிருஷ்ணர் தமது யோக சாதனங்களை முடித்துக்கொண்ட பின்னர், அவ்வரசமரத்திலிருந்து ஒருபெரும் கிளையானது ராமகிருஷ்ணர் நிஷ்டை செய்த அதே இடத்தில் ஒடிந்து விழுந்தது. ராமகிருஷ்ணர் உட்கார்ந்திருந்த இடமானது சாதாரண சமநிலத்தினின்றும் ஒன்று, இரண்டு அடி உய



ஸ்ரீ விவேகானந்த சுவாமிகள்.

ர்ந்தது. அந்தப் பஞ்சவடி யடியிலே இன்னும் இருவர் தாம் நிஷ்டையிலிருக்க முடிந்தது. அவருள்ஒருவர் ராமகிருஷ்ணருக்கு குருவாக வந்து, பின்னர் சிஷ்யரான தோதாபூரி; இன்னொருவர், ராமகிருஷ்ணருடைய பிரதம சிஷ்யரான ஸ்வாமி விவேகாநந்தர். அந்த இடத்திலே யுட்கார்ந்து சமாதி யநுஷ்டிப்பதற்கு தோதாபூரியும் ஸ்வாமி விவேகாநந்தரும் கூட மிகவும் சிரமப்பட்டார்களென்று அறிந்தோர் சொல்லுகிறார்கள். அந்த விருக்ஷத்தினடியிலே ஒருபூதம் இருப்பதாகவும், அணுவளவேனும் அழுக்குடைய மனிதர்கள் அங்கு நிஷ்டைகூடாதபடி அது தடுத்து அவர்களைத்துரத்திவிடுவதாகவும் கூறுகிறார்கள். அப்படியேதான் தோதாபூரியும் ஸ்வாமி விவேகாநந்தரும் முதலில் அங்கே நிஷ்டைகூட முடியாமல் தவித்தார்கள்; ஏதோ ஒரு சக்தி அவர்களை யங்கிருந்து கழுத்தைப்பிடித்துத் தள்ளுவதுபோலத் தோன்றிற்று. தோதாபூரி விஷயத்திலே ராமகிருஷ்ணர் பிரவேசித்து, அந்தப் பூதத்தினுடைய சக்தி செல்லாதபடி செய்துவிட்டார். ஆனால் விவேகாநந்தருக்கு ஸ்ரீராமகிருஷ்ணர் சிறிதும் உதவிசெய்யவில்லை. அவர் தமக்குத்தாமே உதவிசெய்துகொள்ளும்படி ராமகிருஷ்ணர் அவரை விட்டுவிட்டார். விவேகாநந்தர் தம்மாலானமட்டும் மனத்தை யொருமுகப்படுத்திப் பார்த்தார்; முடியவில்லை. அவர் தம் மெதிரிலிருந்த அக்கினிக்குண்டத்திலிருந்து ஒருகொள்ளிக்கட்டையையெடுத்து ஆங்காரத்துடனே அதையோங்கிப் பூமியிலடித்தார்; உடனே மூர்ச்சையாய்விட்டார். மூர்ச்சை

தெளிந்தெழுந்திருந்தவுடன், மறுபடியும் நிஷ்டைகூட ஆரம்பித்தார். அப்பொழுது அவருக்கு மிகவும் சுலபமாயிருந்தது. பின்னர் ராமகிருஷ்ணர் இதைக்கேட்டவுடனே புன்னகைபுரிந்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணருடைய வாழ்நாட்களிலே அவருக்குச் சிஷ்யராகவும், தலைவராகவும் மேற்கூறிய விவேகாநந்தர் கிடைத்தார். இந்த விவேகாநந்தரைப்பற்றித் தனியே ஒரு சரித்திரம் எழுதினால்தான், அவருடைய மகிமை நன்கு தெரியவரும். இப்பொழுது சுருக்கமாகக் கூறுவோம்: அவர் ஆங்கிலக்கல்வி நன்றாகப் பயின்று பிரஹ்மசமாஜத்திலே சேர்ந்திருந்தார். மத ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்து, மகான்கள் என்று சொல்லப்படுபவர்களிடத்திலெல்லாம் சென்று "வீண்வாசாஞானம் வேண்டியதில்லை. தாங்கள் ஈச்வரனைநேருக்குநேராக தரிசித்திருக்கிறீர்களா?" என்று கேட்டுக்கொண்டே வந்தார். அவருடைய பந்துக்களிலேயொருவர் ஸ்ரீராமகிருஷ்ணரிடத்திலே மகாபக்தர். அவர் இவரை யொருநாள் கண்டு "மத ஆராய்ச்சிசெய்யவிரும்பி, நீ என் அங்கும் இங்கும் ஓடுகிறாய்? நீ உண்மையை அறிய விரும்பினால், தக்ஷிணேச்வரத்துக்குச் செல்வாய்; இப்பொழுது நீ அலைவதுபோல அலைந்து திரிவதினால் பயன் இல்லை" என்றார். நரேந்திரநாத தத்தர் (இதுதான் விவேகாநந்தருடைய முன்பெயர்) ஸ்ரீராமகிருஷ்ணருடைய ஆச்ரமத்துக்குச்சென்றார். ராமகிருஷ்ணர் இவரைப்பார்த்

தவுடனே நெடுநாட்பழக்கமுள்ளவர்போல சந்தோஷத்துடனே முகம்மலர்ந்து வரவேற்றார். நரேந்திர நாததத்தருக்கும்ராமகிருஷ்ணரிடத்தில் மனம்பற்றித் தன்னையறியாமலே ஒருவித ஆநந்தமுண்டாயிற்று. விவேகாநந்தர் சங்கீதத்தில் வல்லவர் ஆகையால், அவரையொருபாட்டுப்பாடும்படி அங்கிருந்தவர்கள் கேட்டுக்கொண்டார்கள். அவரும் அப்படியே வைராக்கியத்தை விசேஷித்துக்கூறும் ஒருபாட்டை அதிக உருக்கமாகப்பாடினார். ஸ்ரீராமகிருஷ்ணர் அவரைநோக்கி புளகாங்கிதராக“ஆ! எனது புத்திரா! எத்தனையோ வருஷங்களாக நான் உனதுவருகையை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறேன்” என்று கூறிவிட்டு, அங்குள்ளவர்களை நோக்கி “இவரை யாரோஎன்று நினைக்கிறீர்கள். சாட்சாத் ருத்திராம்சம் பெற்றவர். இவர் கூடிய சீக்கிரத்தில் உலகு முழுதையும் ஒரு ஆட்டுஆட்டிவைப்பார்” என்று சொல்லி உடனே சமாதியிலமிழ்த்துவிட்டார். சமாதி தெளிந்தபின்னர் ராமகிருஷ்ணர் விவேகாநந்தரை நோக்கி “ஆ! எனது புத்திரா! இத்தனை நாட்களாக நான் உனக்காகக் காத்துக் கொண்டிருக்கிறேன். உலகமனத்தினருடன் பேசிப்பேசி, என் உதடுகள் உலர்ந்துவிட்டன. இனிமேல் உன்னுடன் செய்யும் சம்பாஷணையால் நான் சுகமுறுவேன்” என்றார்.

ராமகிருஷ்ணருக்கும் விவேகாநந்தருக்கும் இடையிலிருந்த அன்பானது அதிதீவிரமானது. ராமகிருஷ்ணருக்கு தேவியினிடத்திலே எவ்வளவு ஆவல் உண்டாயிற்றோ, அவ்வளவு அன்பு விவேகாநந்தரிடத்திலும் விழுந்துவிட்ட

ஆ. விவேகாநந்தர் முதலில் ராமகிருஷ்ணரை ஒரு பைத்தியக்காரனென்றும் அவரைச்சுற்றியிருந்தவர்களையும் பைத்தியக்காரர்களென்றும் நினைத்தார். ஆயினும் ராமகிருஷ்ணருடைய சந்நிதானத்திலே விவேகாநந்தருக்கு என்றுமில்லாத ஒருவித இன்பம் ஜனித்தது; ராமகிருஷ்ணரைச்சுற்றி எண்ணற்ற பக்தர்கள் இதே இன்பமுடையவர்களாகக் கூடியிருந்தார்கள். அவர் அடிக்கடி ஆநந்தசமாதியில் வீற்றிருப்பார்; சமாதியினின்றும் கண்விழித்து உலகமுகமாவார்; அவரைச்சுற்றிலும் ஒருவித ஆநந்தஆகாயம் பரவியிருந்தது; விவேகாநந்தருக்கே அவருடைய சந்நிதானத்தில் ஒருவித உற்சாகமுண்டாயிற்று. இவருக்கு அவரைவிட்டுப் பிரிவதென்றால், ஈச்வர சந்நிதியினின்றும் பிரிந்துபோவதுபோலிருந்தது. இவையெல்லாம் விவேகாநந்தருக்கு ஆச்சரியமாயிருந்தன.

முதன்முதலில் விவேகாநந்தர் ஸ்ரீராமகிருஷ்ணரைச் சந்தித்து விடைபெற்றுக்கொண்டபொழுது, ராமகிருஷ்ணரிடம் அவர், தாம் அடிக்கடி வந்துபோவதாக வாக்குத்தத்தம்செய்தார். அப்படியே மற்றொருநாள் விவேகாநந்தர் அங்குச்சென்றபொழுது, ராமகிருஷ்ணர் அவரை ஒருகீர்த்தனம்பாடும்படி கேட்டுக்கொண்டார். விவேகாநந்தர் மெய்ம்மறந்துபாடியபொழுது ராமகிருஷ்ணர் சுற்றியிருந்தவர்களைப்பார்த்து “அதோ பாருங்கள், அவருடைய முகத்திலே சரஸ்வதியின் ஒளிவீசுகிறது” என்றார். எல்லோரும் ஆச்சரியமடைந்தனர். பின்னர், ராமகிருஷ்ணர் விவேகாநந்தரை

நோக்கி"நீ நித்திரை போவதற்குமுன் ஒரு ஜோதியைப்பார்ப்பதுண்டா?" என்றார். விவேகாநந்தர் "ஆம்;எனதுகுழந்தைப்பருவத்திலிருந்தே ஒருஜோதி தோன்றுகிறது; நான் அதனுள்ளே நுழைந்து நித்திரைபோவதுவழக்கம்" எனலும்,ராமகிருஷ்ணர் "அதுஉண்மையே. இவர் ஒருதியானசித்தர்; இவருடைய நித்திரை ஈச்வரத்தியானம்போன்றதாம்" என்றார். விவேகாநந்தர் தம்மீதுஇத்தகையஅன்பைத்தமது சொந்தத்தாய் கூடச்செலுத்தவில்லையென்று கண்டார்.சர்வ சங்கபரித்தியாகஞ்செய்து சதாநிஷ்டாபரராயிருந்து சாட்சாத்தேவியைத்தம்வசமாக்கிக்கொண்ட அந்தக்கிழவருக்கு இந்த முரட்டுவாலிபரிடத்திலே ஏன்அவ்வளவுநேசபாசம்? ராமகிருஷ்ணருக்கே காரணந்தெரியாது; விவேகாநந்தருக்கும்தெரியாது. பாரததேசத்திலேயுள்ள பக்தசிரேஷ்டர்களும், ஞானபுருஷர்களும் ஆகிய எல்லோரும் ராமகிருஷ்ணரைதவராஜரென்று மெச்சுகிறார்கள்; கேசவச்சந்திரசேனரைப்போன்ற பிரஹ்மசமாஜத்தலைவர்கள்கூடராமகிருஷ்ணரிடம்பணிந்துநிற்கிறார்கள்;பிரபஞ்சத்தை சொப்பனம்போலவெண்ணித்துணிந்த ஞானதீரர்களும்ராமகிருஷ்ணருடைய கொடூரமான தவத்தை நினைந்து நடுங்குகிறார்கள். இப்பேர்ப்பட்ட மகிமைவாய்ந்த இந்தராமகிருஷ்ணர் விவேகாநந்தரிடத்திலே ஏன் இவ்வளவு பிரியம் வைத்தார்?

விவேகாநந்தர் மூன்றாவது தடவை தட்சிணேச்வரத்துக்குவந்தார்; வழக்கம்போல ஒருகீர்த்தனம் பாடினார். இவர்

பாடிக் கொண்டிருக்கும்பொழுதே, ராமகிருஷ்ணருடைய முகம் மாறுதலடைந்தது; ஆலோசனையி லாழ்ந்ததுபோலத் தோன்றிற்று; அவர் விவேகாநந்தரையே இமைகொட்டாது ஒரேபார்வையாகப் பார்த்தார். மற்ற சிஷ்யர்கள் பிரமித்திருந்தார்கள். ராமகிருஷ்ணர் எழுந்து விவேகாநந்தரைத்தனியே இட்டுக்கொண்டு ஒருஏகாந்தமான இடம்சென்று அவரிடத்திலே ஒரு பெரிய உண்மையை உரைத்தார். அதாவது: "உன்னிடத்திலே சிவம் இருக்கின்றது; என்னிடத்திலேசக்தியிருக்கின்றது; இவ்விரண்டும் ஒன்றேயாம்" என்றார் ராமகிருஷ்ணர். விவேகாநந்தர் ஒன்றும்சொல்லாது புன்னகை புரிந்தார். "இதுமுழுப்பைத்தியமேயன்றிவேறென்ன?" வென்றுகருதினார் விவேகாநந்தர். அவற்றைஏதோமூளைகுழம்பியுள்ள ஒருவருடைய சொற்களாகவிவேகாநந்தர் நினைத்தார். பின்னர் இருவரும் ஆச்ரமத்துக்குவந்தனர். கொஞ்சநேரம் சங்கீதமும்சம்பாஷணையும்நடந்தன. சூரியன்அஸ்தமனமாய்க்கொண்டிருந்தது. ராமகிருஷ்ணர் அந்தர் திருஷ்டியிலே மனத்தைச்செலுத்தியிருந்தவர், தமது ஆசனத்தினின்றும் எழுந்து விவேகாநந்தர் இருந்த இடத்தையடைந்து, தமது வலதுகையை விவேகாநந்தருடைய மார்பின்மீது வைத்து, தமது பாதத்தை அவருடையதோளின்மீதுவைத்தார். ஆ! ஆ! என்னஆச்சரியம்! விவேகாநந்தருக்கு அங்கிருந்தஅறை, தாழ்வாரங்கள், க்ஷேத்திரம், தோட்டம், சுற்றியிருந்தவர்களுடையமுகங்கள் ஆகியஎல்லாம் கரையத்தொடங்கிவிட்டன. சற்குருவினுடைய ஸ்பர்சமாத்திரத்தினாலே அவருடைய பி

பஞ்சப்பிரக்ஞை உருகிவிட்டது. அவர் பிரக்ஞை யற்றுவிட்டார். மறுபடியும் ராமகிருஷ்ணர் அவரைஸ்பர்சிக்கவே அவருக்குப்பிரக்ஞைவந்தது.

விவேகானந்தர் ராமகிருஷ்ணரிடத்துக்கு எப்பொழுதாவது வராமல்நின்றுவிட்டால், அவருக்குத்துக்கம்பொங்கிவிடும்; அவர் தனிமையில் உட்கார்ந்து அழுதுகொண்டேயிருப்பார். சகிக்கமுடியாத துக்கத்துடனே அவர் அழுதகண்ணும் சிந்தியழுக்குமாய் "விவேகானந்தர் என்னிடம் வருமாறு அருள்புரியவேண்டும்" என்றுதேவியைப்பிரார்த்திப்பார். எப்பொழுதாவது அவர் இம்மாதிரியழுது பிரார்த்தித்தாரானால், எப்படியோ, ஏதோ ஒரு சக்தியினால் தள்ளப்பட்டு விவேகானந்தர் அங்கேவந்துவிடுவார். ஒருசமயத்தில் விவேகானந்தர் ராமகிருஷ்ணரிடம் வந்துபோய்ச் சிலநாட்களாய்விட்டன. ராமகிருஷ்ணர் ஆள்மேல் ஆளனுப்பி அவரைக்கூட்டிவரச் சொன்னார்; ஒருதரமாவது வந்துவிட்டுப் போகும்படி தாம்மிகக்கெஞ்சிக்கேட்டுக்கொள்வதாக அவருக்குச் சொல்லியனுப்பினார். விவேகானந்தர் வந்தார். ராமகிருஷ்ணருக்கு உண்டான ஆநந்தத்துக்கு ஒரு அளவேயில்லை. க்ஷேமலாபங்கள்விசாரித்துத் தீர்ந்தபின்னர், ராமகிருஷ்ணர்விவேகானந்தரைநோக்கி "உன்னைக்காணாமல் என்மனம் துடித்துக்கொண்டிருந்ததே; தினம் ஒருதரமாவதுவந்துவிட்டுப் போகலாகாதா?" என்றார். அதற்கு விவேகானந்தர் " என்னைப்பற்றி ஏன் தாங்கள் எப்பொழுதும் நினைக்கிறீர்

கள்? பரதர் தமது அருமை மான்குட்டி யிடத்திலே அள வற்ற ஆசைவைத்து, தவத்தை மறந்துவிட்டதினுலே அடுத்த பிறப்பிலே அவர் மானுக ஜனித்தாரென்பது தங்களுக்குத் தெரியாததல்லவே '' என்ருர். ராமகிருஷ்ணர் மறு மொழி ஒன்றும் பேசவில்லை. ஆனுல் விவேகாநந்தரது மறு மொழி ராமகிருஷ்ணருக்குச் சிறிது துன்பத்தை யுண்டாக்கி விட்டது. மாலைநேர மாயிற்று. சாயரட்சை பூஜைசமயம். கோவில் மணிகள் கணகணவென்று சப்தித்தன. ஸ்ரீ ராமகிருஷ்ணர் கோவிலுக்குள்ளே நுழைந்து, தேவிக்குக் கடைசி தீபாராதனை யானபொழுது, சமாதிகூடி விட்டார். கோவிலிலே பூஜைமுடிந்தது. எங்கும் கற்பூர சாம்பிராணி தூபம் கமகமவென்று வாசனையை வீசின. பின்னர் ராமகிருஷ்ணர் பிரபஞ்சப் பிரக்ஞையடைந்து தமதுஅறைக்குச்சென்ருர்; அங்கு விவேகாநந்தரும் மற்றவர்களும் இருந்தார்கள். ராமகிருஷ்ணர் தமது ஆசனத்தில் அமர்ந்தார். எல்லோரும் அவரைச்சுற்றி யுட்கார்ந்தார்கள். பிறகு அங்கிருந்த விவேகாநந்தரைக் கூப்பிட்டு "புத்திரா! எனது மாதா என்னிடம் எல்லாம் சொல்லிவிட்டாள். ,நரேந்திரன் சிறுபையன்தானே; இன்னும் பெரியவனுகவில்லையே; நீ ஏன் அவனுடைய வார்த்தைகளை லட்சியம் பண்ணுகிருய்; அவனிடத்தில் நாராயணன் இருக்கிறதினுலே, உனக்கு அவன்மீது அதிக வாஞ்சை ஏற்பட்டிருக்கிறது' என்று எனது மாதா சொல்லிவிட்டாள். ஆகையால் நீ சொன்ன வார்த்தைகளை நான் லட்சியமே செய்யவில்லை.

அவ்வார்த்தைகள் எனக்கு விலையற்றன. நான் என்று உன்னிடம் நாராயணனைப் பார்க்காமல் நின்றுவிடுகிறேனோ, அன்று முதல் உன்முகத்தைப் பார்க்கமாட்டேன்'' என்றார் ராமகிருஷ்ணர். மற்ற சிஷ்யர்களிடத்திலும் ராமகிருஷ்ணர் நாராயணனைப் பார்த்தபொழுதிலும், விவேகாநந்தரிடத்திலே அவர் அதிகமாக, ஆத்திரம் மிகுந்து, உக்கிரத்துடனே நாராயணன் பிரகாசிப்பதைக் கண்டுகொண்டிருந்தார்.

இன்னொருமுறை ராமகிருஷ்ணர் மெய்ம்மறந்து நிஷ்டையிலிருக்கும்பொழுது, உளறுபவர்போல சில மொழிகளைப்புகன்றார். விவேகாநந்தரை நோக்கிக் கூறுவதுபோல, "நாராயணா! என்பொருட்டு நீ இச்சரீரம் எடுத்திருக்கின்றாய். இம்மானிட வடிவெடுப்பதற்கு முன்னமேயே நான் அன்னையை நோக்கி 'தாயே! நான் எப்படித்தனித்துச்செல்வேன்? பெண்ணாலும் பொன்னாலும் கறையடையாத ஒரு பரிசுத்தபக்தனை நீ எனக்கு அளிக்காவிட்டால், நான் பூமியில் எப்படி உயிர்வாழ்வேன்?' என்றுகேட்டேன். கடைசியாக நீ வந்து 'இதோ வந்துவிட்டேன்' என்று சொன்னாய்'' என்றார். ராமகிருஷ்ணர் கூறிய மொழிகளையெல்லாம் அங்குக் குழுமியவர்கள் வேதவசனங்களாகவே கருதினார்கள். அதன்மேல் ராமகிருஷ்ணர் தேவியை நோக்கி "தாயே! என்கூற்றுக்களை எதிர்த்து வாதாடவல்ல ஒருவனை எனக்கு நீ அளிக்கவேண்டும்'' என்று இரவும்பகலும் பிரார்த்தி

த்துக்கொண்டேயிருந்தார். அதற்குத்தான் விவேகாநந்தர் அனுப்பப்பட்டார்போலும்!

இன்னும், ராமகிருஷ்ணரைத் தரிசிக்க வருபவர்கள் கொண்டுவருகின்ற பழவர்க்கங்களையும் மிட்டாய் வர்க்கங்களையும் கொண்டுவந்தவர் பரிசுத்தமானவராயிருந்தால் தான் ராமகிருஷ்ணர் அவற்றை எடுத்துக்கொள்வார். அனுவளவேனும் அசுத்தமாயுள்ளவர்கள் கொண்டுவந்தால், அவற்றை ராமகிருஷ்ணர் எடுக்கவேமாட்டார்; மற்ற சிஷ்யர்களும் எடுக்கச் சம்மதிக்கமாட்டார். விவேகாநந்தர் மாத்திரம் அவற்றை எடுத்துக்கொள்ளலாம்; ஏனென்றால் அவர் காட்டு நெருப்பு.

ஒருசமயத்திலே விவேகாநந்தர் தலைவலியினாலே மிக வும்கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார்; அதனால் அவர் தக்ஷிணேச்வரத்துக்குச் சின்னாட்கள்செல்லவில்லை. சிஷ்யனைத்தேடிக்கொண்டு குருவே அவரிடம் வந்துவிட்டார். அவ்வாறு வந்து விவேகாநந்தருடைய சிரசை ராமகிருஷ்ணர் ஸ்பர்சித்தமாத்திரத்தில், அவருக்கு அந்நோவு நீங்கிவிட்டது.

விவேகாநந்தருக்கு, அவர்சந்நியாசாச்ரமம் வகிப்பதற்குமுன்னே, குடும்பக்கவலைகள் மிகுந்து, வறுமைபெருகிற்று. அவருடையதுக்கத்தைப் போக்கடிக்கும் பொருட்டு ராமகிருஷ்ணர் எத்தனையோ தடவைகளில் தேவியைப்பிரார்த்தித்திருக்கிறார். இம்மாதிரியாக ராமகிருஷ்ணருக்கும்விவேகாநந்தருக்கும் இடையில்இருந்த அற்புதமான அன்பைப்

டாக்டர். உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம் சென்னை - 600090.



பற்றி என்னவோ சொல்லலாம். ஒரு சமயத்திலே ஸ்ரீராம கிருஷ்ணர் ஏதோ ஒருபெரிய நுட்பமான வேதாந்தவிஷயத்தையெடுத்துரைத்துக்கொண்டிருந்தார். அப்பொழுது விவேகாநந்தர் அங்கு உட்காந்துகொண்டிருந்த பொழுதிலும், ராமகிருஷ்ணர் கூறுவதைக் கவனியாது, ஆலோசனை சித்தத்துடன் இருந்தார். ராமகிருஷ்ணர் அதைப்பார்த்து "அப்பா! தயவுசெய்து நான் சொல்வதைக் கவனமாகக்கேள்" என்று மிகுந்த அன்புடனே சொல்ல, விவேகாநந்தர் "தாங்கள் பேசுவதைக்கேட்க நான் இங்குவரவில்லை" என்றார். "அப்படியாயின் நீ ஏன் இங்குவந்தாய்?" என்று கேட்டார் ராமகிருஷ்ணர். "நான் தங்கள் வசம் ஆகருஷிக்கப்படுகின்றதினலே, நான் தங்களிடம் அன்பு செலுத்துகிறதினலே, நான் தங்களைப்பார்க்க வந்தேன்" என்று மறுமொழியளித்தார் விவேகாநந்தர். ஆகா! ராமகிருஷ்ணருடைய ஹிருதயத்திலே அன்புமடையுடைந்து திறந்துகொண்டது: அவர் உடனே யெழுந்தார்; விவேகாநந்தரை இறுகத்தழுவிக் கட்டிக்கொண்டார்.

கேசவர் சந்திரசேனர் எழுதியுள்ள "நவபிருந்தாவனம்" என்னும் நாடகத்தை விவேகாநந்தரும் வேறு சிலரும்சேர்ந்து நடித்தார்கள். விவேகாநந்தரிடத்திலுள்ள வாற்சல்யத்தினலே தூண்டப்பட்டவராய் ராமகிருஷ்ணர் அந்நாடகம் பார்க்கச்சென்றார். விவேகாநந்தர் யோகிவேஷந்தரித்திருந்தார்; ராமகிருஷ்ணர் அவரைக்கண்டு ஆநந்த

மகாமகோபாத்யாய, டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்

பூரிதராய், சுற்றிலும் ஜனங்கள் இருக்கிறார்களேயென்ற நினைப்பேயில்லாமல் "அப்பா! இதே வேஷத்தில் நீ இப்போது இருக்கிறபடியே என்னிடம் வரமாட்டாயா?" என்றுகூச்சலிட்டார். விவேகாநந்தரிடத்திலே ராமகிருஷ்ணர் அளவற்ற அன்புசெலுத்தினரென்பதற்கு இன்னொரு திருஷ்டாந்தம் உண்டு:

விவேகாநந்தருடைய பிதாமரித்து, அவருடையகுடும்பம் வறுமையிலாழ்ந்து மிகவும்கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தது. இதுராமகிருஷ்ணருக்குப்பொறுக்கமுடியவில்லை. விவேகாநந்தருடையநண்பரில்ஒருவராகியமிகுந்ததனவந்தர் ராமகிருஷ்ணரிடம் ஒருநாள்வரவே, அவர் அந்தத்தனவந்தரை நோக்கி "விவேகாநந்தனுடைய பிதாமரித்துவிட்டார். அவனுடைய குடும்பம் பட்டினிகிடந்து பரதவிக்கின்றது. அவனுடைய நண்பர்கள் அவனுக்கு உதவி செய்யலாகாதா?" என்றார். அந்தத்தனவந்தர் சென்றபிற்பாடு, விவேகாநந்தர் மிகுந்த வருத்தத்துடனே "என் எனது குடும்பஸ்திதியை அவனிடம் சொல்லவேண்டும்?" என்று முறுமுறுக்கவே, ராமகிருஷ்ணர் தமது சிஷ்யனுடைய குடும்பகௌரவத்திற்குப் பங்கம் உண்டாக்கிவிட்டதைப்பற்றி வருத்தப்பட்டு "நரேந்திரா! ஐயோ! நரேந்திரா! நான் உனக்காக எதுவும் செய்வேன் என்பதை நீ அறியாயோ? உனக்காக நான் வீட்டுக்கு வீடு சென்று பிச்சையெடுத்தலும் செய்வேன்" என்று கண்ணீர்விட்டுக்கதறினர். நரேந்திரருக்கு உட

னே அழுகைவந்து விட்டது; அவர் ராமகிருஷ்ணருடைய பாதங்களில் விழுந்துவிட்டார்.

இதேமாதிரி இன்னொரு சமயத்திலே விவேகாநந்தருடைய குடும்ப வறுமையை நீக்கவேண்டுமென்று ராமகிருஷ்ணர் தேவியைக்குறித்து ஸ்தோத்திரம்பண்ணினுர். பொன் என்ற சொல்லைக் கேட்டவுடனேயே நடுநடுங்குகின்ற ராமகிருஷ்ணர் விவேகாநந்தருக்கு வேண்டியபணம்கொடுக்கும்படி தேவியைப் பிரார்த்தித்தார்; அவருக்கு விவேகாநந்தரிடத்திலே அவ்வளவு பைத்தியம்! அப்பொழுது தேவிபிரசன்னமாய், "அவருடைய குடும்பத்துக்குக் குறைவு நேரிடாது; அவஸ்யமாக வேண்டியனவெல்லாம் அளிக்கப்படும்" என்றுகூறி மறைந்ததாக அவருக்குத்தோன்றிற்று.

விவேகாநந்தரிடத்திலே ராமகிருஷ்ணருக்கு இவ்வளவு அன்பு இருந்தபோதிலும், ஒழுக்கத்திலே விவேகாநந்தர் கண்டிப்பாயிருக்கவேண்டும். நியோர்களுடனே சகவாசம் செய்யலாகாது; ஒருதீயநினைப்பு விவேகாநந்தரின் உள்ளத்தினுள்ளே நுழைந்துவிட்டதென்றுல், ராமகிருஷ்ணர் உடனே கண்டுகொள்வார். தியோர்களுடனே விவேகாநந்தர் திரிந்துவிட்டு ராமகிருஷ்ணரிடம் வந்தால், விவேகாநந்தருடைய முகத்தை ராமகிருஷ்ணர் பார்க்கமாட்டார்; அவருடைய கையிலிருந்து எதையும் வாங்கியுண்ணமாட்டார். விவேகாநந்தர் தியோருடன் பழகினுரென்று எவரும் சொல்லாவிடினும், ஸ்ரீ ராமகிருஷ்ணர் அதைத் தெரிந்து கொள்வார்; அதனுல் விவேகாநந்தர் ஆகாரம் கொடுத்தால், ராம

கிருஷ்ணருடையகை அவ்வாகாரத்தை யெடுக்காது; அவர் வியாதியினால் கஷ்டமுற்றுக்கொண்டிருக்கையிலும், இப்பேர்ப்பட்ட சந்தர்ப்பத்தில் கையானது ஆகாரத்தை யெடுத்து வாயண்டை கொண்டு சென்றது; ஆனால் அவர் அதை உண்ணமுடியவில்லை. அன்பு அதிகமாக இருந்தபோதிலும், விவேகாநந்தருடைய ஒழுக்கவிஷயத்திலே அவர் அவ்வாறு மிகவும் கண்டிப்பாயிருந்தார்.

இது வரையில் ராமகிருஷ்ணருக்கு விவேகாநந்தர் மீதுள்ள அன்பின் விசேஷத்தைப்பற்றிக்கூறினோம். இனி மேல் ராமகிருஷ்ணருடைய வேறு சில குணாதிசயங்களைப் பற்றிக் கூற முயற்சிப்போம்:

பன்னிரண்டு வருஷங்கள் பாடுபட்டு ராமகிருஷ்ணர் தவசித்தியடைந்தார். பன்னிரண்டு வருஷங்கள் ராமகிருஷ்ணர் ஈசுவரியிடத்திலே மனத்தைக்கட்டி, ஏகாக்கிரநிஷ்டையடைந்தார். அப்போது "மனமானது சலனஸ்வபாவமுடையது; தன்போக்கிலேசெல்லும் தன்மையது; ஆசையே அது செல்லும் மார்க்கம். தன்போக்கிலே செல்வது தப்பு என்று தென்பட்டாலும் மனமானது அம்மாயாமார்க்கத்திலேதான்செல்கிறது. உலகிலுள்ளதுக்கத்துக்கும்அஞ்ஞானத்துக்கும் காரணமென்ன? ஆசையாகிய அக்கினியை வளர்க்கும் விறகுஎது? பந்தத்தை யுண்டாக்கும் கருவிகள் எவை? உலகிலுள்ள அந்தகாரம் எங்கிருந்து உற்பத்தியாகிறது? "என்ற இக்கேள்விகளுக்கெல்லாம் ராமகிருஷ்ணர் **"காம-காஞ்சனம்"** அதாவது 'காமமும் பொன்னுமே கார

ணம்' என்று பதிலளித்தார். இன்னும் "காம-காஞ்சனம்" என்பதைவிட காமினி-காஞ்சனம் என்பதே மேல் என்று சொன்னார். அதாவது: "பெண்ணும் பொன்னுமே காரணம்" என்றார். சிற்றின்பத்திலே யுழலவேண்டுமென்ற ஆசை, மனிதனுள் அடங்கியிருக்கும் மிருகஉணர்ச்சியைக் கிளப்பி விடுதல் ஆகிய இவைதான் உலகைத்தைக் கட்டுகின்ற பாசங்களாம். 'மனிதன் இப்பாசங்களினின்றும், தன்னை விடுவித்துக்கொள்ள முடியுமா?' என்றால், 'முடியும், முடியு' மென்று மொழிந்துள்ளார் மேலோர்.

ராமகிருஷ்ணர், காமினி-காஞ்சனசக்தியைஎப்படிஜயித்தார்? எனில், ஆண், பெண் என்ற வித்தியாசத்தை அழித்து விடுதற்காக, அவர் ஒருமார்க்கத்தை அநுபவபூர்வமாக அப்பியசிக்கஆரம்பித்தார். ஆ! தாம்ஒருஸ்திரீயென்றபுத்தியுண்டாகும் பொருட்டு, ஒருஸ்திரீயே யானார்; அதாவது: ஸ்திரீயைப்போன்று, புடவையுடுத்துக்கொண்டார். மதுரநாதருடைய குடும்பத்து ஸ்திரீகளுடனே அவர்களுள் ஒருத்தியாகக்கலந்துவசித்தார். ஸ்திரீகள் பேசுவதுபோலப்பேசக்கற்றுக்கொண்டார். ஸ்திரீகள் எல்லாரையும் மாதாவாக வேகருதினர். ஸ்திரீகளுடன்பேசும்பொழுதெல்லாம், அவர்களை "மாதா" என்றே அழைப்பார். அரைகுறை மார்க்கத்தை யவர் அநுஷ்டிப்பதேயில்லை. "ஹிருதயசுத்தமுள்ளவர்களே ஈசுவரனைத்தரிசிப்பார்கள்" என்று இயேசுசொன்ன மொழிகளே அவர் காமினி சக்தியை ஜயிக்கும் பொருட்டு இம்மார்க்கத்தை யநுஷ்டித்ததற்குக்காரணம்.

காஞ்சனத்தை அவர் எப்படி ஜயித்தாரென்பது பின் வருவதால் விளங்கும்: கங்கைக்கரையிலே இவர் ஒரு கையிலே பொன்னையும் ஒருகையிலேமண்ணையும் எடுத்துக் கொண்டு பொன்னைப்பார்த்து "ஏ பொன்னே! உலகசுகங் களிற் பலவற்றையும் உன்னால் விலைக்கு வாங்கமுடியுமாயி னும் ஈசுவரனைத் தரிசனம் செய்விக்கும்சக்திஉனக்கில்லையே; நீமண்ணினுடைய மறுரூபம்தானே. ஈசுவரனிடத்து இட் டுச் செல்லும் சக்தி உனக்கில்லாத பொழுது, உனக்கும் மண்ணுக்கும்என்னவித்தியாசம்" என்றுசொல்லிக்கொண் டே பொன்னையும் மண்ணையும் ஒன்றாகக்கலந்து, 'பொன் னே மண், மண்ணே பொன் என்று திரும்பத்திரும்ப உரைத்துக்கொண்டே இரண்டையும் கங்காப்பிரவாகத் திலே எறிந்துவிட்டு, கொடியதோர் யுத்தத்திலே கூற்ற னுக்கு அகப்படாமல் ஜயசாலியாய்த்திரும்பி வந்ததோர்வீ ரனைப்போல, நின்றுகொண்டு புன்னகைபுரிவார். அப்புன் னகையானது, அவர் கையிலிருந்த மண்ணும் பொன்னும் மாத்திரமல்ல, திரிலோகாதி பத்தியம்கூட அவருக்குத் துரும்பு போன்றதாம் என்று விளக்குவது போலிருக்கும். அவருக்கு மண்ணும் பொன்னும் மறைந்துவிட்டன. மகத் துக்கு மகத்தான மறைபொருளே மிஞ்சிநின்றது.

இவ்விரண்டுவிஷயங்களிலும் இவரைப்போல தியாகம் செய்தவர்கள் உலகில் இருப்பது அருமை. தக்ஷிணேச்வரா லயத்தையும் அதன்வரும்படியையும் இவருக்கு சமர்ப்பித்

தாவிடுவதாக மதுரநாதர் ஏற்பாடு செய்தார்; இன்னும் எத்தனையோபேர்கள் ஆயிரக்கணக்கான ரூபாய்களை அவருக்குக் கொடுப்பதாக முன்வந்தார்கள். அவற்றையெல்லாம் வாங்க அவர் மறுத்துவிட்டார். பணத்தை அவர் பெற்றுக்கொள்ளவேண்டுமென்று கட்டாயப்படுத்தப்பட்ட பொழுது அவர் பணம் கொடுக்க முன்வருபவர்களைக் கடிந்துகொண்டு "உங்கள் பணத்தை வைத்துக்கொண்டு நான்என்ன செய்வது? ஐயோ! அது எனக்கு வேண்டவேவேண்டாம். எனதுஅன்னை இத்தகையோர்களைஏன்என்னிடம்கொண்டு வந்து விடுகின்றாள்?'' என்றுகதறுவார். அவர்வியாதியால் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தபொழுது, கிரகஸ்தாச்ரமத்திலேயிருக்கும் சிலசிஷ்யர்கள்அவருக்குவேண்டியசெலவைக் கவனித்துவந்தார்கள். அவர்களுள் ஒருவர்கொஞ்சம்பணக்காரர். இவர் மற்றவர்களைப்பார்க்கிலும் அதிகப்பணம் கொடுத்திருந்தார். சந்நியாசாச்ரமசிஷ்யர்கள்தாம் செலவு செய்வது. அவர்கள் எவ்வளவுசுருக்கமாகச் செலவுசெய்து வந்தபோதிலும், கொஞ்சம் அதிகப்பணம் கொடுத்திருந்த அந்த கிரகஸ்த சிஷ்யர் அவர்களை யடிக்கடி துன்புறுத்தத் தொடங்கினர். இதெல்லாம்ஸ்ரீ ராமகிருஷ்ணருக்குமுன்னே தெரியாது; ஆனால் இப்பொழுது தெரிந்துவிட்டது. அவ்வாறு தெரியவே அவர், "சீச்சீ ! இதென்ன இடம்? இந்த இடத்தில் இனிமேல் ஒரு நிமிஷமும் இருக்கமுடியாது'' என்று கூறிக்கொண்டே விவேகாநந்தரைப் பார்த்து "நீ எங்கேனும் என்னைக் கூட்டிக்கொண்டுபோ; நான் வந்து

விடுகிறேன்; இனிமேல் ஒரு கணமும் இங்கிருக்க முடியாது'' என்று சொல்லிவிட்டுத் தம்முடைய ஒரே உடைமையாகிய கௌபீனத்தைஅங்கிருந்து எடுத்துக்கொண்டு புறப்பட்டுவிட்டார்; ஆனால்சிஷ்யர்கள் எல்லோரும் அவரைமிகவும் வேண்டிக்கொண்டு கட்டாயப்படுத்தவே, அவர் அங்கேயே நின்றார்.

ராமகிருஷ்ணருடைய சிஷ்யர்களுள் ஒருவர் ராமகிருஷ்ணருடைய ஜிதேந்திரியத்தன்மையைப்பரிசோதிக்கவிரும்பினார்; அவர் கிரகஸ்தாச்ரமத்தையனுஷ்டிக்கும் சிஷ்யர். அவர் ஒருநாள் ராமகிருஷ்ணரை ஒருவீட்டுக்குள் இட்டுச்சென்று அங்கே அவரைத்தனிமையாக விட்டுவிட்டு வெளியேவந்துவிட்டார். உடனே பாபத்தைப் பரப்புகின்ற ஸ்திரீகள், வியபசாரிகள், அவர் இருந்த இடத்துக்குள்ளே வந்து நுழைந்து காமவிகாரமான பலவித பாடல்களைப் பாடி அவரை மயக்கினார்கள். ராமகிருஷ்ணர் பார்த்து விட்டு "ஆ! தாயே! அந்தோ! என்னை எங்கேகொண்டுவந்து விட்டுவிட்டாய்'' என்று கதற ஆரம்பித்தார். அவர் போட்ட கூச்சல் அந்தவீட்டை ஒலியினாலும் எதிரொலியினாலும் நிரப்பிவிட்டது. ராமகிருஷ்ணருடைய சரீரம் பிணம்போல கடினமாய்விட்டது; அவர் சமாதியிலே கூடிவிட்டார். காட்சிமாறிவிட்டது; ஸ்திரீகள் ஆச்சரியமுற்றனர்; அவருடைய பாதங்களிலேஅடியற்றமரம்போல் விழுந்துவிட்டார்கள். பின்னர் அந்த ஸ்திரீகள் தங்களையிட்டுக்கொண்டு வந்தவ

ரைப்பார்த்து "ஐயோ! எங்களை எங்கே கொண்டுவந்துவிட்டீர்; ஒரு மகாத்மாவை என்இங்குக்கொண்டுவந்துவிட்டீர்? அவர் சுகதேவர் போன்றவர்; அவர் ஈசுவரமனுஷ்யர்; அவர் எங்களுக்குக் குழந்தைபோன்றவர்" என்று கூறினார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணர் சமாதியினின்றும் கண்விழித்துத் தமதுகரங்களைக்கொண்டு அந்த ஸ்திரீகளை ஆசீர்வதித்தார்; ஆ! அவர்கள் சமாதி நிலைமை யடைந்தார்கள்.

சிலர் ராமகிருஷ்ணருக்கு ஆகாரமாவது வேறு ஏதாவது கொண்டுவந்து கொடுத்தால், அவர் அதைத் தொடமாட்டார்; அசுத்தமானகைகளினின்றும் கொடுக்கப்படும் பொருளை அவர் தொடமாட்டார். இதுவிவேகாநந்தருக்கு ஆச்சரியமாயிருந்தது. விவேகாநந்தர் அது உண்மைதானு வென்று தாமே கண்டுபிடிக்க விரும்பினர். ஆகாரத்தையோ, வேறெதையோ கொண்டுவந்து கொடுப்பவர்களுடைய குணத்தையும் நடத்தையையும் விசாரிக்கத் தொடங்கினர். ஸ்ரீ ராமகிருஷ்ணர் செய்துவருவதெல்லாம் நியாயமேயென்று விவேகாநந்தர் கண்டுகொண்டார்.

சிஷ்யர்களுள் சிலர் ராமகிருஷ்ணருடன் கூட இருக்க விரும்பி இரவில் தங்குவது வழக்கம். சிலர் ராமகிருஷ்ணர் இருந்த அறையிலேயே படுத்து நித்திரைசெய்வார்கள்; வேறுசிலர் அந்த அறைக்குத் தென்கிழக்கே தாழ்வாரத்திலுள்ள அறையில் நித்திரை செய்வார்கள். நடுநிசி பன்னிரண்டுமணிக்கு எல்லோரும் உறங்கிக்கொண்டிருப்

பார்கள். ஸ்ரீராமகிருஷ்ணர்மாத்திரம் சமாதியிலே விழித்திருப்பார். சமாதியிலே சரீரம் அடைகின்ற சுகமானது நித்திரையினலுண்டாகும் சுகத்தைப்பார்க்கிலும் பூர்ணமானது. இரவு இரண்டுஅல்லது மூன்றுமணிக்கு அவர் பகவநாமசங்கீர்த்தனங்களைப் பாடிக்கொண்டே "விழித்துக்கொள்ளுங்கள், எழுந்திருங்கள், தியானசமயம் நெருங்கிவிட்டது" என்றுகூச்சலிடுவார். அவருடையபக்திரசமான கீர்த்தனைகள் அங்குப்படுத்திருப்பவர்களையெல்லாம் எழுப்பிவிட்டு, பக்திசமுத்திரத்திலே ஆழ்த்திவிடும். எல்லோரும் எழுந்திருந்து உஷாராய் விடுவார்கள்; சிலர் பஜனை செய்வார்கள்; சிலர்நிஷ்டையில்உட்காருவார்கள்; எங்கும் சாந்தம் சந்தோஷமாய் அமர்ந்திருக்கும்.

அவர் அடிக்கடி விவேகாநந்தரிடத்திலே "நான்சொல்கிறேனென்றகாரணத்தினலேமாத்திரம் நீஎதையும் ஒப்புக்கொள்ளக்கூடாது. நீயே ஒவ்வொன்றையும் சோதனைசெய்து பார்த்துக்கொள்ளவேண்டும். ஒப்புக்கொள்ளுவதிலாவது, நிராகரித்தலிலாவது லட்சியம்அடையப்படுகிறதில்லை; உண்மையான அநுபூதியிலேயே லட்சியம் அடையப்படுகிறது." என்று சொல்வதுண்டு. அதனல் அவர் ஒருசமயம் "ஷடாங்கம்" என்று சொல்லப்படுகின்ற சாஸ்திரங்களிலே நுழைந்துபார்; அங்கே அந்த வஸ்துவை நீகாணமுடியாது; தந்திரங்களிலும் காணமுடியாது; வேதங்களிலும் காணமுடியாது; அந்தவஸ்து தேனினுமினிய திவ்யா

மிருதம் போன்ற அன்பினிடத்திலே அதிகப்பிரேமையுள்ளது.'' என்ற கருத்துள்ள ஒரு கீதம்பாடினார். ராமகிருஷ்ணர் ஒரு பார்வையினாலோ, ஒரு மொழியினாலோ, ஒரு கீதத்தினாலோ உயர்ந்த உண்மைகளை உபதேசம் செய்யும் சமர்த்து வாய்க்கப்பெற்றவர். அவருடைய போதனை யெல்லாம் ''அநுபூதியே லட்சியம்; ஹிருதயத்துக்குள்ளே அநுபவம் உண்டாகிறபொழுது, நியாயங்களெல்லாம்நின்று விடுகின்றன: திவ்யஞானம்பிரகாசிக்கின்றது'' என்பதேயாம். ''காமினி-காஞ்சன'' ஜயமே ராமகிருஷ்ணருடைய பிரதானலட்சியம்

ஒருசமயத்திலே ''சாஸ்திரங்கள் உண்மைதானா? வேதங்கள் ஈசுவரனிடமிருந்து வெளிவந்தவைதாமா? ஈசுவரன் என்றால்என்ன?.'' என்ற கேள்விகளைப்பற்றிராமகிருஷ்ணருடைய சிஷ்யர்களுக்குள்ளே பெருந்தர்க்கம் நடந்தது கட்சிப்பிரதிகட்சிகள் ஏற்பட்டு, சத்தம் அதிகரித்தது; வாதத்திலே ஆத்திரம் பொங்கிற்று. ஸ்ரீ ராமகிருஷ்ணர் அமைதியாய் உட்கார்ந்து கேட்டுக்கொண்டிருந்தார். இப்புத்தி சாமர்த்தியக்கலக்கங்கள் அவருக்குச் சிறிதும்பிடிக்கவில்லை. அவர் தமது அருமைச்சிஷ்யர்களுடைய வாதத்திறமையைக்குறித்து அவர்களைப்பார்த்துப் புன்னகைபுரிந்தார். இப்பெரும் பேச்சுக்கள் அவருக்கு அருவருப்பாயிருந்தனவாதலால் அவர் எழுந்து நடந்தார். அக்கோவிலின் ஓரத்திலுள்ள கங்காநதியின் படிக்கட்டை நோக்கி, திடீரென்று

அவருடைய கண்கள் அக்கட்டத்தின் ஒரு புறத்தைப் பார்த்தன; பின்னர் இன்னொரு புறத்தைப் பார்த்தன; அவர் ஏதோ கண்டவர்போலச் சிரித்துக்கொண்டார். சிஷ்யர்களும் எழுந்து விட்டார்கள். தர்க்கம் முடிவைப் பெறுவிடினும் முடிவடைந்துவிட்டது. நியாயங்களெல்லாம் பேசித்தீர்க்கப்பட்டுவிட்டன; சிஷ்யர்களுக்கு வாய் வலித்துவிட்டது. அவர்கள் களைப்படைந்துவிட்டார்கள். அவர்கள் குருமூர்த்தி சென்றிருக்கும் கட்டத்துக்குச்சென்றார்கள். ஏதோ பேசப்போகிறவர்போல ராமகிருஷ்ணர் அவர்களைப் பார்த்தார். உடனே கட்டத்தின் இருபுறத்தையும் தம்கைகளினால் சுட்டிக்காட்டினார். இருபுறத்திலும் நாய்கள் இருந்தன. ஒருபுறத்திலேயிருந்த நாய்கள் ஊளையிட்டுக்குலைத்துக்கொண்டிருந்தன; இன்னொரு புறத்திலேயிருந்த நாய்கள் நதியின் அலையினால் அடித்துக்கரையிலே தள்ளப்பட்ட சில எலும்புத் துண்டுகளைக் கடித்துக்கொண்டிருந்தன. ஆ! ஆ! சற்றுமுந்தி அவர்கள் ஊளையிட்டுக்குலைத்துக்கொண்டிருந்த தர்க்கத்துக்கும் இந்நாய்களின் ஊளைக்கூச்சலுக்கும் என்ன அற்புதமான உவமை! வீண் வாதங்களிலே தலையிடாது கர்மமே கண்ணுயை உண்மை முமூட்சுக்களுக்கும் எலும்பு ருசிபார்க்கும் நாய்களுக்கும் என்னஉவமை! இவற்றைக்கண்டதும் சிஷ்யர்கள் வாய் அடங்கிவிட்டார்கள்.

சிலசமயங்களிலே, சிஷ்யர்களுக்குள் நடக்கும் சம்வாதங்களுக்குள்ளே ராமகிருஷ்ணரும் பிரவேசித்துக்கொள்

வதுண்டு. திருஷ்டாந்தமாக, ஒருதடவையிலே, விவேகாநந்தருக்கும் மற்றொருசிஷ்யருக்கும் பெரியதோர் வாதம் உண்டாயிற்று. அப்பொழுது விவேகாநந்தர் மற்றவர்குருட்டு நம்பிக்கையுள்ளவரென்றும் குருட்டுநம்பிக்கையினுல் மோட்சம் கிடைக்காதென்றும் மற்றும்சிலவற்றையுங்கூறி அவருடையகொள்கைகளைக்கண்டித்தார். இதையெல்லாம் கேட்டுக்கொண்டேயிருந்த ராமகிருஷ்ணர் குருட்டுநம்பிக்கையுள்ளசிஷ்யன் அகப்பட்டுவிழிப்பதைப்பார்த்து விவேகாநந்தரை நோக்கி "குருட்டுநம்பிக்கையென்ருல் என்ன? நம்பிக்கை முழுதுமே குருடுதானே. நம்பிக்கைக்குக் கண் உண்டா? 'குருட்டுநம்பிக்கை' என்று ஏன் சொல்லவேண்டும்? கண்ணுள்ள நம்பிக்கையென்றும் கண்ணில்லாத நம்பிக்கை யென்றும் இரண்டுவிதநம்பிக்கையுண்டா?" என்ருர். விவேகாநந்தர் அப்படியேஸ்தம்பித்துவிட்டார்.

சிலவேளைகளிலே ராமகிருஷ்ணருடைய சிஷ்யர்கள் தர்க்கித்துக்கொண் டிருக்கும் பொழுதே ராமகிருஷ்ணர் கேட்டுக்கொண்டிருப்பதுபோல் இருப்பார்; அப்படியே சமாதியில்அழுந்திவிடுவார். கொஞ்சநேரங்கழித்துத் தான் சிஷ்யர்கள் குரு, சமாதியிலிருப்பதை யறிந்துகொள்வார்கள். ராமகிருஷ்ணர் வெறும் பேச்சுக்களினுல் திருப்தியடைந்தவரல்லர். "நீ அநுபவத்தில் என்ன அறிவாய்?" என்று கேட்பதே அவருடைய பிரதமகேள்வி. கர்வத்துடனே தர்க்கம் செய்பவர்களைப்பார்த்து அவர் நகைப்பார்

விவேகாநந்தருக்குதாம்மிகுந்தபுத்திசாலியென்றகர்வம்மிக வுண்டு. எதிரியை ஏறவிடாமல் வாயடிஅடிப்பதில்அவர்வல் லவர். விவேகாநந்தர் எவருடனாவது இறுமாப்புமிகுந்து தர்க்கம்செய்துகொண்டிருந்தால், ராமகிருஷ்ணர்விவேகாநந்த ருடன் தர்க்கம்செய்பவர்மீது தமதுபாதத்தை வைப்பார்; உடனே விவேகாநந்தருடைய அறிவுமங்கஆரம்பித்துவிடும்; மற்ற சிஷ்யனுடைய அறிவு பிரகாசிக்க ஆரம்பித்துவிடும்.

ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய போதனைகளிலே மிகச் சிரேஷ்டமாக விளங்கி எல்லா ஜனங்களையும் எப்படியோ அவர் வசப்படுத்திய சக்தி எதுவென்றால், அதுஆத்மப்பிர பாவமேயாகும். அவருடைய போதனைகட்குஅவ்வளவுசக் தியளித்ததுஅவர்அநுபவபூர்வமாய் அப்பியசித்துக்காட்டி யஒழுக்கமேயாம். அவர்சகலரிடத்தும் சமரசஅன்புசெலுத் தவேண்டுமென்று போதித்து அனேக சந்தர்ப்பங்களிலே தாமே அங்ஙனம் ஒழுகிக்காட்டியிருக்கிறார். அவருடைய அநுஷ்டான ஆரம்பகாலங்களிலே ஒருசமயத்தில், அவர்ச மாதியடைந்து மெய்ம்மறந்திருந்தபொழுது, அவருடைய சரீரமானதுநெருப்பின்மீதுவிழுந்துவிட்டது; ஆயினும்அவ ருக்குப் பிரபஞ்சப்பிரக்ஞையுண்டாகவில்லை. மாம்சம் வே கின்ற நாற்றம்வீசவே, சிலர்ஓடிவந்துபார்க்க, அங்கேராம கிருஷ்ணர் அக்கினியின்மீது விழுந்து கிடந்தார். அவரு டைய பெருமையையும், மதுரநாதரும் ராணிரசமணியம் மாளும் அவரிடம் வைத்திருந்த மதிப்பையும்பற்றிப் பொ றாமைகொண்ட ஒருவன் எல்லோருக்கும் முதலில் அங்குவ

ந்துசேர்ந்தான். அவன்இதுதான் சமயமென்றுகருதி, கீழே விழுந்துகிடந்த ராமகிருஷ்ணரை அநேக தடவைகள் உதைத்து அப்படியும் இப்படியுமாகப்புரட்டினன். அவருடைய நிஷ்டை கலைந்துவிட்டது; ராமகிருஷ்ணர் அந்ததுஷ்டன் செய்த செய்கையை உணர்ந்தார். ராணி ரஸமணியம்மாளிடத்திலும், மதுரநாதரிடத்திலும் ராமகிருஷ்ணர் மேற்படி செய்கையைச் சொல்லியிருக்கலாம்; அவர்கள் அந்ததுஷ்டனைத்தக்கபடி தண்டனைசெய்திருக்கலாம். ஆனால் அந்தமகாத்மா மதுரநாதரும் ராணி ரஸமணியம்மாளும் மரித்தபின்னர்தான் இச்சங்கதியை வெளியேசொன்னார்.

ராமகிருஷ்ணர் ஜாதிவித்தியாசம் வேண்டாமென்று சொன்னதேயில்லை. ஆனால் தற்கால பிராமணர்களுடைய கொடுமை அவரிடத்திலில்லை. தாழ்ந்தவர்களென்று சொல்லப்படுகின்ற லட்சக்கணக்கானவர்களிடத்திலே அவர் மிகவும் இரக்கங்காட்டினர். பறையர்களும் செய்வதற்குக் கூசுகின்ற இழிதொழில்களைக்கூட இவர் சற்றும்அருவருப்பில்லாமல் செய்வார். தாம் பிராஹ்மணன் என்ற அகங்காரத்தைத்துறந்து மிகத்தாழ்ந்தவர்களுடன் தம்மைச் சமப்படுத்திக்கொள்வதே அவருடையலட்சியமாக இருந்தது. தமதுதலையிலே வளர்ந்து நீண்டிருந்த ரோமங்களினலே பறையர்களுடைய குடிசைகளைக்கூடச் சுத்தம்செய்து அவர் தமது அகங்காரத்தை யழித்துக்கொண்டார். அவர் அப்படிச் செய்தது பைத்தியம் என்று சிலர் சொல்லக்கூடும். ஆனல்

பிரஹ்மாநுபூதியடைவதற்குப் பிரயாசைப்படுகின்றமுமுட்சுக்கள் இதுகியாயமோ, அல்லதுவைத்தியமோவென்பதை அறிவார்கள். ராமகிருஷ்ணர் ஜாதிவித்தியாசத்தைத் தவிர்த்துக்கொண்டார். பிரபஞ்சமே அவருக்கு பிரஹ்மலோகமாய்விட்டது; அவரிடத்திலே உயர்வும் இல்லை, தாழ்வுமில்லை. எல்லாம் பிரஹ்மவஸ்துவே. ஈசுவரனைத்தரிசித்த இவருக்கு ஜாதியேது? மிகப் பிரமாண்டமான மரங்களையுமெரித்துச் சாம்பலாக்குகின்ற காட்டு நெருப்பைப்போன்றிருந்தார் அவர். அவர் ஜாதிபேதாநுஷ்டானத்தையும் வெறுக்கவில்லை; ஆனால் அவர் எங்கும் ஈசுவரியையே பார்த்தார்; அவர் ஈசுவரியேயாய்விட்டார். ஒரே சந்திரன் எங்கும் பிரகாசிப்பதுபோல, ஒரே சத்திதான் அவருக்கு எங்கும் புலப்பட்டது.

ஈசுவரதரிசனத்தையும் அநுபூதிமார்க்கங்களையும் பற்றியகேள்விகளுக்கு ராமகிருஷ்ணர் அளித்தபதில்என்னவெனில், “ ஈசுவரனை எந்தவிதத்திலாவதுபஜி; ஈசுவரன் எறும்பு ஊர்கின்ற சப்தத்தையும் கேட்கிறார்; ஈசுவரனை தரிசிப்பது காமினி-காஞ்சன ஜயத்தினாலே. ஒழுக்கமும் தரிசனமும் ஒரேநாணயத்தினுடைய இருபக்கங்களாம்” என்பவைகளாம். அவருடையபோதனையிலேயெல்லாம் உண்மைதான் பெரிதும் பாராட்டப்பட்டது. உண்மையின்றி ஒன்றுமே முடியாது; உண்மையிருந்தால் எல்லாம் முடியும். உண்மையின் ஆத்திரம் இத்தகையது என்பதைக் காட்டுவ

தற்கு அவர்ஒருகதைசொல்லுவார். அதாவது: 'ஒருபெரிய வரிடத்திலேஒருவன்வந்து, தான்ஈசுவரனைத்தரிசிக்கவிரும்புகிறதாக அடிக்கடிதொந்தரவுசெய்துவந்தான். அப்பெரியவர் அவனை ஒருநதிக்கு இட்டுச்சென்று, நதியினுள்ளிறங்கி அவனைப்பிடித்துக்கீழேதண்ணீருக்குள் அமிழ்த்தினர்; சில நிமிஷங்கள் கழித்து அவனை அப்பெரியவர் மேலேதூக்கி, "நான் உன்னைத் தண்ணீருக்குள் அமிழ்த்திய பொழுது நீ எதை மிகவும் விரும்பினாய்?" என்று கேட்டார். அவன் "சிறிது சுவாசம்" என்றான். அப்பெரியவர் "நீ எவ்வளவு ஆத்திரத்துடன் அப்பொழுதுசுவாசத்தை விரும்பினையோ, அவ்வளவு ஆத்திரத்துடன் ஈசுவரனைவிரும்பினால், ஈசுவரதரிசனம்உண்டாய்விடும்" என்றார்.' என்பதே. இக்கதையை ராமகிருஷ்ணர் அடிக்கடி சொல்வதுண்டு.

"ஈசுவரன் சகுணமா? நிர்க்குணமா? என்றால் "அவர் சகுணமாயும் இருக்கிறார்; நிர்க்குணமாயும் இருக்கிறார்; இந்த இரண்டு லட்சணங்கட்கும் அதீதமாயுமிருக்கிறார்." என்றுராமகிருஷ்ணர் கூறுவார். இன்னும் அவர் "ஈசுவரனே பற்பலஉருவங்களாம்; ஈசுவரனே தேவர்களாம்; ஈசுவரனே பிரஹ்மவஸ்து; வாக்குக்கும் மனத்துக்கும்எட்டாமல், ஈசுவரன் ஆத்மாநுபூதியிலே அப்படியேயிருக்கிறார். அவரே ஆத்மா; அவரே அகண்டவஸ்து; அவரேயநுபூதி; பக்தனுடைய பார்வையிலே அவர் எல்லாமாயிருக்கிறார். பக்தனை சந்தோஷிப்பிக்கும் பொருட்டு, ஈச்வரன் எவ்வுருவத்தை

யும் எடுத்துக்கொள்வார். அவர் அநிர்வசநீயமானவர். அவருடைய தரிசனமும் அநிர்வசநீயமே. அவர் ஒரு புஸ்தகத்தினுடைய பக்கங்களுக்குள்ளே அடைத்து வைக்கப்படமுடியாதவர். அவரிடத்திலே வாக்குசெல்லாது; அவர் அநுபூதியிலேயே அறியப்படத்தக்கவர்'' என்றும் கூறுவார். இன்னும் "விக்கிரகாராதனை நியாயமா? தப்பா?'' என்றால், இவையெல்லாம் வீண்கேள்விகளென்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறுவர். இன்னும் "ஈசுவரனைத் தரிசிப்பதற்கு அநுகூலமாகின்ற எதையும்பூஜிக்கலாம்; அவஸ்யமாகவேண்டியது பரமபக்தி யொன்றே.'' என்றும் சொல்லுவார்.

அவரிடத்திலே அதிகமாக அடுத்துப் பழகினவர்களுக்கு, அவருடன்செய்யும் சம்பாஷணைகளின் அநுபவமானது, ஆத்மா ஆத்மாவுடன்செய்யும் அநுசந்தானம் போன்றதேயாம். அவரிடம் திவ்யஜோதி எப்பொழுதும் என்றும் வியக்தமாய்க்கொண்டேயிருந்தது. ஒவ்வொருநிமிஷத்திலும் உண்மையே அங்குமௌனகோஷம்புரிந்துகொண்டிருந்தது. அடிமுதல்நுனிவரையில் அக்கோஷத்தின்கருத்தாவது: "தியாகம்செய், தியாகம்செய்'' என்பதேயாம். ஸ்ரீ ராமகிருஷ்ணர் வெளிக்கு பக்திபரவசராய்த் தோன்றிய பொழுதிலும், அவர்வெறும் பக்திமாத்திரம் உடையவராயிருக்கவில்லை. அவருடைய ஹிருதயம் எவ்வளவு பெரியதாயிருந்ததோ, அவ்வளவு பெரியதாயிருந்தது, அவருடைய மூளையும். அன்பும் அறிவும் ஒருங்கே ஒன்றுபோல அவரிடம் சேரப்பெற்றிருந்தன.

ராமகிருஷ்ணருக்கு விவேகாநந்தரிடத்திலே வாஞ்சை யதிகமென்று முன்னமேயே சொல்லியிருக்கிறோமல்லவா? அவர் விவேகாநந்தரிடத்திலே அடிக்கடி "வியாபாரிகள் வெள்ளி நாணயங்களைச் சோதித்துப்பார்த்து வாங்குவது போல, என்னையும் நீ சோதனைசெய்து கொள்; என்னை நீசோதித்துப்பார்க்கின்றவரையில், என்னைநீஒப்புக்கொள்ளக்கூடாது" என்பார். ஒருநாள்விவேகாநந்தருக்குத்தமது குருவின் உண்மையில் இவ்வளவென்று உரைத்துப் பார்க்கவேண்டுமென்று ஒரு எண்ணம் உண்டாய்விட்டது. ஒரு நாள் ராமகிருஷ்ணர் தக்ஷிணேசுவரத்தை விட்டு நீங்கிக்கல்கத்தாநகருக்குப் போயிருந்தார். விவேகாநந்தர்வந்து அவரைப்பார்த்தார்; ராமகிருஷ்ணருடைய அறையிலே அவர் இல்லை. வேறுஎவரும் அங்குஇல்லை. விவேகாநந்தர்கையிலே ஒருவெள்ளிரூபா இருந்தது. ஸ்ரீராமகிருஷ்ணருக்கு நாணயத்தைக்கண்டால் அது ஆகாது. இதைவிவேகாநந்தர் இப்பொழுது சோதனைசெய்யவிரும்பினார்; அந்தவெள்ளி ரூபாயை எடுத்து ராமகிருஷ்ணருடைய ஆசனத்தின்கீழ் வைத்துவிட்டு, பஞ்சவடியிலே தியானம்செய்வதற்குப்போய்விட்டார். ஸ்ரீராமகிருஷ்ணர் அங்கே வந்து தமது ஆசனத்தில் உட்காரச்சென்றார். ஆசனத்தருகில்சென்றதும், அவருடைய சரீரத்திலே யொருவிதமான நோவுண்டாயிற்று. அவருடைய பாதங்கள் முன்னுக்குச்செல்லாமல் பின்னுக்கு இழுத்தன. "என்னவிசேஷம் இங்கே? என்னசமாச்சாரம்?" என்று கூச்சலிட்டார் ஸ்ரீராமகிருஷ்ணர். இதற்குள் விவே

காநந்தர் அங்குவந்துவிட்டார். விவேகாநந்தருடைய ஹிருதயத்திலேபற்பலவிதமான உணர்ச்சிகள்தோன்றின; ஸ்ரீ ராமகிருஷ்ணருடையநிலைமையைப்பார்த்து அவருக்கு அன்பு ஒருபக்கம், துக்கம் ஒருபக்கம், சோதனை பலித்துவிட்டதென்னும்சந்தோஷம் ஒருபக்கம்உண்டாயின. அவ்வாசனத்தின் அருகிலாவது அடியிலாவது ஏதேனும் விஷஜந்து இருக்கின்றதோ என்று நினைத்து அங்கிருந்தவர்களில் ஒருவன் அவருடைய ஆசனத்தை யெடுத்து வேகமாக உதறினான். சட்டென்று கீழேவிழுந்தது நாணயம். "என்னஇது? என்னஇது? இங்கேஎப்படிவந்தது" என்றார் ஸ்ரீ ராமகிருஷ்ணர். விவேகாநந்தர் ஒன்றும் சொல்லாமல் வெளியே சென்றார். இது விவேகாநந்தர் செய்த வேலைதான் என்று ராமகிருஷ்ணர் அறிந்து கொண்டு, அவரிடத்திலே இன்னும் அதிக அன்பு செலுத்த ஆரம்பித்தார்.

ராமகிருஷ்ணர் ஸகஜசமாதியுடையவரா யிருந்தார். அவருக்குபிராதிபாசிக, வியவகாரிக, பாரமார்த்திகஅவஸ்தைகளென்னும் மூன்றுஅவஸ்தைகள்இல்லை. அவருடைய கர்மேந்திரியங்கள்கூட அத்வைதாநுபவத்திலே அழுந்தினவையாய் ஆச்சரியத்தன்மையுடன் விளங்கின. அவர் வியவகாரிக அவஸ்தையிலேயிருப்பது மிகவும் அசாத்தியமாயிருந்தது. பிறருக்குப்போதனைசெய்து நல்வழிகாட்டும் பொருட்டு, அவர் தம்மைத்தாமே பலவந்தப்படுத்திக்கொண்டு வியவகாரிக அவஸ்தைக்கு வருவார். கங்கையிலே யிறங்கி ஈசுவரனைநோக்கி தியானம் செய்வதற்காக இருகைகளையும்

சேர்த்துத் தண்ணீர் எடுப்பார். இருகைகளும் வேறாகத் தண்ணீர் கீழேவிழுந்துவிடும். பூஜைபண்ணுவதற்குப் புஷ்பங்களெடுப்பார். புஷ்பங்கள் தவறிக்கீழே விழுந்துவிடும். ஒருநாளுக்குள்ளேயே அவர் மகம்மதியனாய்விடுவார், கிறிஸ்தவனாய்விடுவார், வைஷ்ணவனாய்விடுவார், சைவனாய்விடுவார், சாக்தனாய்விடுவார், பொத்தனாய்விடுவார். அவரிடத்திலே "நாளைக்கு" என்பதுகிடையாது. ஒரு சமயத்திலே அவருக்கு நோயுண்டாயிருக்கிறது என்று அறிந்து ஒருவர் தினமொன்றுக்கு ஒருமாத்திரைவீதம் சாப்பிடும்படி மூன்றுநாட்களுக்கு மூன்று அபின் மாத்திரைகள் கொடுத்தார். அவர் அவற்றை வாங்கிக்கொண்டு புறப்பட்டார்; அவருக்கு மனக்குழப்பம் அதிகமாக உண்டாய்விட்டது. வழிதவறிவிட்டது. முட்களின்மீதும் புதர்களின்மீதும் நடக்கலானார். அவருக்குப் பிரக்ஞைசிறிதும் தவறவில்லை; ஆயினும் அவருடைய அவயவங்களும் பார்வையும் அவருக்குச் சுவாதீனமில்லாது போய்விட்டன. அவர் ஹிருதயரைக்கூப்பிட்டு "ஹிருதயா! என்னசங்கதி? தெரியவில்லையே! என்னைக்குவழிதவறிற்று?" என்றுகேட்டுவிட்டு யோசனை செய்தார். தமது வஸ்திரத்தின் ஒருமூலையில்தாம் முடிந்து வைத்திருந்த அந்த மூன்றுமாத்திரைகளும் ஞாபகத்திற்கு வந்தன. அப்போதவர் "ஆம், ஆம்; இதோ இந்த மாத்திரைகள் தாம்காரணம்" என்று சொல்லிக்கொண்டே, முடிப்பை யவிழ்த்து, மாத்திரைகளைத் தூரத்தில் எறிந்தார். அவருடைய பாதங்கள் வழிநோக்கி நடந்தன.

ஸ்ரீராமகிருஷ்ணருடைய சிஷ்யர்களுக்குள்ளே சிலர் ஈசுவரநாமசங்கீர்த்தனங்களைக் கேட்டமாத்திரத்திலே அப்படியே பிரக்ஞையற்று விழுந்து ஆநந்தமடைவார்கள். விவேகாநந்தருக்கு அந்த ஸ்திதி வருகிறதேயில்லை. ஒருநாள் விவேகாநந்தர் ஸ்ரீராமகிருஷ்ணரை நோக்கி, "இவர்களுக்கெல்லாம் ஈசுவரநாமோச்சாரணம் கேட்டமாத்திரத்திலே ஆநந்தபாவம் உண்டாகின்றதே; எனக்குஉண்டாகிறதில்லையே; நான் எண்ணற்றசாதனங்கள் அப்பியசித்தும்சிறிதும் பயனில்லை"யென்றுகூறிவருத்தப்பட்டார். ராமகிருஷ்ணர் அவரை நோக்கி, "புத்திரா! கவலைப்படாதே; அதனால் என்ன? ஒரு பெரிய யானையானது ஒரு சிறுகுளத்துக்குள்ளே செல்லும்பொழுது, பெரும் சப்தமும் சலனமும் உண்டாகிறது; ஆனால் அது கங்காபிரவாகத்துக்குள் சென்றால், சிறிது சலனமே யுண்டாகிறது. இந்த பக்தர்களெல்லோரும் சிறுகுளங்கள் போன்றவர்கள். திவ்ய பக்தியாகிற மகாசக்தியினுடைய ஒரு சிறுபாகம் இச்சிறு குளங்களுக்குள்ளே நுழையவே, தண்ணீர் கொந்தளிக்கிறது. நீ ஒரு பெரியநதிப்பிரவாகம்; திவ்யபக்தியான யானையானது உன்னுள் அவ்வளவு பெரிய கொந்தளிப்பை யுண்டாக்குகிறதில்லை" என்றார்.

ஒருநாள் ஸ்ரீராமகிருஷ்ணர் விவேகாநந்தரை நோக்கி அவருடைய கையைத்தமதுகையின்மீது வைக்கும்படி கூறினார். அப்படியே அவர்செய்யவே, சிலநிமிஷங்களுக்குள்ளா

கஸ்ரீ ராமகிருஷ்ணரிடமிருந்து ஏதோ ஒரு சக்தி தம்முள் நுழைவதாக உணர்ந்தார். விவேகாநந்தருக்குமயிர்க்கூச்சு உண்டாயிற்று; அங்கம்புளகித்தது; அவர் ஆவேசம் வந்தவர்போலத் தோன்றினர். மகாசக்தி தம்மீது இறங்கிவிட்டதுபோல விவேகாநந்தர் உணர்ந்தார்.

விவேகாநந்தர் தாம் ராமகிருஷ்ணரிடத்திற்கு வரஆரம்பித்த புதிதிலே, தம்முடன் சில நண்பர்களையும் இட்டுக்கொண்டுவந்து, அவர்களைசிஷ்யர்களாக ஏற்றுக்கொள்ளும்படி ராமகிருஷ்ணரை மிகவும் வேண்டினர். ராமகிருஷ்ணர் அவர்களிடத்துப் பேசக்கூடப் பிரியப்படவில்லை. விவேகாநந்தர் அவரைநோக்கி "தாங்கள்மகாத்மாவாயிருந்தால் அவர்கள் தீயோர்களேயாயினும் அவர்களுக்கு உதவிசெய்தல்வேண்டும்" என்று கூறவே, ராமகிருஷ்ணர் "புத்திரா! அவர்கள் உலக போகங்களிலே உழன்றுகொண்டிருக்கிறார்களென்று ஜகன்மாதா எனக்குக் கூறுகிறாள். அவர்களுக்கு இந்திரிய வாழ்க்கைச் சுகங்கள்வேண்டும். அவர்களுடைய ஞானகாலம் இன்னும்வரவில்லை. அவர்கள் இன்னும் வளரவேண்டும்; வளரட்டும், வளரட்டும்; அவசரமென்ன? அவசரமென்ன? அவர்கள் இன்னும் நெடுந்தூரம் செல்லவேண்டியிருக்கிறது." என்று பதிலளித்தார். இவ்வார்த்தைகள் உண்மையேயென்று நெடுநாட்களுக் கப்புறம் விவேகாநந்தருக்குத் தெரியவந்தன.

ஸ்ரீ ராமகிருஷணருக்கு பக்தியும் ஞானமும் வெவ்வேறாயிருக்கவில்லை. ஒருநாள் விவேகாநந்தர் ஆச்ரமத்தின்தா

ழ்வாரத்திலே சிலருடன் கூச்சலிட்டுத் தர்க்கம் செய்து கொண்டிருந்தார். ராமகிருஷ்ணர் உள்ளே சமாதியிலிருந்தவர் நிஷ்டைகலைந்து கண்விழித்துத்தாழ்வாரத்திற்கு வந்து "என்ன அப்பா! பேசிக்கொண் டிருக்கிறாய்?" என்றார். விவேகாநந்தர் "மனுஷ்யபுத்திக்கு மேல்பட்டவிஷயங்களைப்பேசிக்கொண்டிருக்கிறோம்" என்று பதிலளித்தார். உடனே ராமகிருஷ்ணர் புன்னகைபுரிந்து "அக்கரையில்லை; நீ என்ன பேசினாலும், பரிசுத்தமான, சுயநலமற்ற பக்தியும், பரிசுத்தமான, சுயநலமற்ற ஞானமும் ஒன்றேயென்பதை எப்பொழுதும் ஞாபகப்படுத்திக்கொள்; லட்சியம் ஒன்றே. பக்திமார்க்கம் சுகமானது, சுவையானது" என்றார். இதுதான் செய்யவேண்டுமென்று அவர் எதையும்கட்டாயப்படுத்தினதில்லை. லட்சியத்தை அவர்கள்முன் எப்பொழுதும் காண்பித்துக்கொண்டிருந்தார்; அந்த லட்சியத்தை யடைதற்குள்ள உபாயங்களையும் மார்க்கங்களையும் போதித்துவந்தார். லட்சியத்தையும்போதனையையும் பின்பற்றுவது அவர்களுடைய கடமையே. உபாயங்களை உபயோகித்துக்கொள்வது அவர்களுடையவேலை. நீ இதுதான் செய்யவேண்டும் என்று அவர்ஒருபொழுதும் கூறுவதில்லை. அவருக்குவேண்டியவெல்லாம் உண்மையும் ஆத்திரமுமே. லட்சியத்தினிடத்திலே அதிக அவாக்கொள்ளவேண்டும்; இரவும் பகலும் அதே பைத்தியமாகவேண்டும். ஒழுக்கமே ஆத்மஞானமென்று ராமகிருஷ்ணர் அடிக்கடி கூறுவார். ஆனால் இதைப்பற்றியெல்லாம் அவர்பெரும்பிரசங்கம்செய்

யமாட்டார். ஸ்ரீ ராமகிருஷ்ணருடன் இருந்தாலே, இவை தாமே தெளிவாய்விடும். அவருக்கு ஈசுவரனைத் தேடுவதே ஆநந்தநாட்டமாயிருக்கவேண்டும். குழந்தையினதுநிலைமை போன்றஉண்மையும் படாடோபமின்மையுமே ராமகிருஷ்ணருடைய லட்சணங்களாம்; பரிபூரணமான நம்பிக்கையும் பரிபூர்ணமான அன்புமே அவருடைய லட்சணங்களாம்., அறிவின்மிகுதிஉயர்வேயாயினும், ஆநந்தமிகுதியில்லையேல் அவ்வறிவுமிகுதியால் யாதுபயன்?

ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு ஒரு விசேஷ சக்தியிருந்தது. அவருடைய சிஷ்யர்கள் அழகிலும் கம்பீரத்திலும் மிகுந்தவர்களாயிருந்தார்கள். ஆயினும் அவர்கள் ஆத்மஞானிகளா யிருந்தார்கள். விவேகாநந்தருடைய பார்வையையும் நடையையும் பார்த்துப்பார்த்து அவர் கர்வம் மிகுந்து சந்தோஷப்படுவார். விவேகாநந்தரைக் கண்டவுடனேயே, ராமகிருஷ்ணர் தமக்கு சமாதிநிஷ்டை சம்பவித்துவிடுமென்று கூறுவார். மிகக்கொடியவர்களும் அவரைத்தரிசித்த மாத்திரத்திலே புண்ணியபுருஷர்களாய்விடுவார்கள். பாபிகளும் அவரிடம்வந்தார்கள். பாபத்திலும் பலத்தை அவர் நேசித்தார். பாபத்திலும் காணப்படுகின்ற பலத்தை பிரயோசனகரமான மார்க்கங்களிலே திருப்பிவிடலாமென்று அவர் நம்பினார். பாபியினிடத்திலும் பரமாத்துமா வசிக்கிறார். ராமகிருஷ்ணருடைய அன்பு அனைவருக்கும் ஆச்சரியத்தையுண்டுபண்ணிற்று. ராமகிருஷ்ணரிடத்திலே பழகிய

ஒவ்வொருவரும் ஏதேனும் ஒருவிதத்தில் மாறுதலடைந்திருப்பரென்பது நிச்சயம். ராமகிருஷ்ணருடைய பாதங்களைப்பூஜித்துவந்தவர்களுக்குள்ளே ஸ்திரீகளும் உண்டு. அவர்கள் ராமகிருஷ்ணரை குழந்தையாக பாவித்தார்கள். ராமகிருஷ்ணரிடத்திற்குவந்த ஸ்திரீகளுக்குள்ளே கம்பீரத்தோற்றத்துடனே ஒருத்திவந்துகொண்டிருந்தாள். அவளுடையபெயராவது அவளுடைய குடும்பங்களைப்பற்றிய விவரங்களாவது எவருக்கும் தெரியா. அவள் தக்ஷிணேசுவரத்துக்குவந்து ராமகிருஷ்ணருடைய அடிகளிலே பணிந்து நின்றாள். எப்படியோ அவளிடத்திலே மாதுர்சக்தி அதிகமாக விளங்குவதை ராமகிருஷ்ணர்கண்டார். அவர்அவளை ஸ்பரிசித்தார்; ஆ! ஆ! ஆச்சரியம்! அவள் ஸ்தூலதிருஷ்டியை விட்டுநீங்கி, ஆழ்ந்த சமாதியிலே அமர்ந்து விட்டாள். அவள் அந்தநிலைமையிலே வெகுநேரம் இருந்துவிட்டு, நிஷ்டை கலைந்தபொழுது ஜகன்மாதாவினுடையதிருப்பெயரைச் சொல்லிக்கொண்டே கண்விழித்தாள்.

கோபாலம்மா என்பவள் ராமகிருஷ்ணருடைய இன்னொரு சிஷ்யை. இவள் கங்கைக்கரையிலே ஒரு ஆச்சிரமம் கட்டிக்கொண்டு அநேக வருஷகாலம் வசித்துவந்தாள். இவள் பாலகிருஷ்ண உருவத்தையே லட்சியமாகக்கொண்டவள். பார்ப்பவை எல்லாம்பாலகிருஷ்ணவடிவமே யென்று இவள்கருதிவந்தாள். தக்ஷிணேசுவரத்திலேயுள்ள ராமகிருஷ்ணரைப்பற்றி இவள்கேள்விப்பட்டு, அவரைத்தரிசிப்

பதற்குப்புறப்பட்டுவந்தபொழுது, ராமகிருஷ்ணரைதூரத்திலிருந்து பார்த்தவுடனே, அங்கு ஒரு குழந்தையாகவே ராமகிருஷ்ணர் தோன்றுவதைப் பார்த்தாள். அவரை "கோபாலா, கோபாலா" என்றுஇவள்கூப்பிட ஆரம்பித்தாள். அவரும் "அம்மா" என்று இவளைக் கூப்பிடுவது வழக்கம். ஆகையால்தான் இவளுக்கு "கோபாலம்மா" என்று பெயர்வந்தது.

ராமகிருஷ்ணருடைய அமிர்தவசனங்களைக் கேட்பதற்குமகம்மதியர்களும்வந்தார்கள்; சீக்கியர்களும்கிறிஸ்தவர்களும் வந்தார்கள்; ராமபக்தர்களும் வந்தார்கள்; தேவிபக்தர்களும் வந்தார்கள். எப்படியோ எல்லோரும் அவரைத் தங்கள் தங்கள் லட்சியத்துக் கிலக்கான புருஷரென்று கருதினார்கள். எல்லோருக்கும் அவரிடத்திலிருந்த ஈசுவராம்சம் பிரகாசித்தது. ராமகிருஷ்ணரிடத்திலே தங்களுடைய லட்சியம் உருவெடுத்து வந்திருக்கிறதென்று ஒவ்வொருவரும் கண்டு கொண்டு ஆநந்தபரவசராவார்கள். வங்காளி பாஷையிலே அநேகநாடகங்களை இயற்றிப் பெயர்பெற்றவராகிய கிரீசர் என்பார் ராமகிருஷ்ணருடைய பிரியமான சிஷ்யர்களுள் ஒருவர். இவர் ஆதியிலே உலகவாழ்க்கையை இருந்தபடி யெடுத்துக்கொண்டு சிற்றின்பங்களிலே யுழன்றவர். இவர் ராமகிருஷ்ணரைப் பற்றிக் கேள்வியுற்று அவரைப்பார்க்கச்சென்றார்; அப்பொழுது ராமகிருஷ்ணர் மாகாளியைக்குறித்து ஒருகீர்த்தனம்பாடினார்; கேட்டார் கிரீ

சர்; அப்படியே பிரமித்துவிட்டார். "இவர் ஒரு தெய்வ தூதராயிருக்கவேண்டும், அல்லது ஒரு மகாத்துமாவா யிருக்கவேண்டும்" என்று கிரீசர் நினைத்தார். கிரீசர் உல கினருக்கு வெளித்தோற்றத்திலே பாபியெனக்காணப்பட் டாலும், அவருடைய ஹிருதயத்திலே நிடநம்பிக்கையும் உண்மையும்ஏராளமாயிருக்கின்றனவென்றுராமகிருஷ்ணர் கண்டுகொண்டார்; கிரீசர்மீது ராமகிருஷ்ணருக்குப் பட் சம் அதிகரித்தது. அவர்ராமகிருஷ்ணரைநோக்கி"ஸ்வாமி! நான் ரட்சைப்படுவது எப்படி?" யென்று கேட்க, ராம கிருஷ்ணர் "எனது பெயரைத்தினந்தோறும் மூன்றுதரம் சொல்லி வருவாய்" என்று ஆக்ஞாபித்தார். "நான் உல கிலே யுழலுகிறவன்; நான்மகாபாபி; தங்கள் பெயரை நான் எப்படிமூன்றுதரம் நினைக்கமுடியும்?" என்று கிரீ சர் கேட்டார். "அப்படியானால், தினந்தோறும் எனது பெயரை இரண்டுதரம் சொல்வாய்" என்றார் குரு. அது வும் முடியாதென்றார் கிரீசர். ராமகிருஷ்ணர் "அப்படி யானால், எனதுபெயரை யொருதரம் சொன்னாலேபோது" மென்றார். கிரீசர் "அதுவும் சந்தேகம்தான்" எனவே, ராமகிருஷ்ணர் "நல்லது, நீசெய்யும்காரியங்களையெல்லாம் என்னிடம் அர்ப்பணம் செய்துவிட்டு, மனச்சமாதானத் துடன்இரு. நீமோட்சமடைதற்கு நான்உத்தரவாதி" யென் றார். ராமகிருஷ்ணருடையபெயரையொருதரம்கூடச்சொல் லமுடியாதென்று கூறிய இந்தக் கிரீசர் இரவு பகலாக எத் தனையோ வருஷங்கள்எப்பொழுதும் ராமகிருஷ்ணருடைய

பெயரையே சொல்லிக்கொண்டு காலம் கழித்து வந்தார்; மரிக்கும் பொழுதும் ராமகிருஷ்ணருடைய நாமத்தை உச்சரித்துக்கொண்டேதான் மரித்தார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் மனுஷ்யனுடைய நடத்தையைபுண்ணியமென்றும் பாபமென்றும் பகுக்கவில்லை; ஆனால்பலம் என்றும் பலஹீனமென்றும் பகுத்துவிட்டார். மனிதன் ஆத்மபலமடைந்து ஞானதீரனாகி, ஜடவுலகத்துச்சாதாரண பலத்தை ஜயிக்கவேண்டும். இதுவே ஸ்ரீ ராமகிருஷ்ணர் என்றும் போதித்து வந்தது.

கீர்த்திவந்தர்கள், வைத்தியநிபுணர்கள், ஆசிரியர்கள், சட்டநிபுணர்கள், பண்டிதர்கள், மதாசாரியர்கள் ஆகிய பலரும்ராமகிருஷ்ணரிடத்துக்குவந்துகொண்டிருந்தார்கள்; ராமகிருஷ்ணருடைய பாததூளியை சிரசில் தரித்துக்கொண்டார்கள். இப்படி வெவ்வேறு இயற்கைகளையும் சமர்த்துக்களையு முடைய பலரும் இவரைச் சுற்றிக் கூடும்படி இவரிடத்திலே அவ்வளவு விசேஷசக்தி யிருந்தது. இவர் சமாதியிலே போய்விட்டால், இவருடைய சரீரத்தின்மீது ஒரு நாணயத்தைக்கொண்டு தொடுவார்கள். அந்த நிமிஷத்திலேயே இவருடைய சரீரமானதுநோவினால் நடுங்குவது போல நடுங்கும்; சரீரமெல்லாம் ஆத்மசக்தியினால் அவ்வளவு வியாபிக்கப்பட்டிருந்தது.

இன்னும் அவருக்கு தனவந்தன, தரித்திரன என்ற வித்தியாசமே கிடையாது. எவரிடத்திலும் அவர் கர்வத்

தைக்காணச் சகியார். ஒருவன், தன்னைக்கோடீஸ்வரனென்றும்ஒருபெரியஞானியென்றும் நினைத்து கர்வப்பட்டுக்கொண்டிருந்தான். ராமகிருஷ்ணர் அவனை நோக்கி "ஜனங்கள் உன்னைப் பெரியோன் என்கிறார்கள்; ஆனால் நான் உன்னை அப்படி நினைக்கமாட்டேன். நீ ஒருசிறிய மனிதன்; உன்னுடைய புத்தி மிகவும் அற்பபுத்தி" யென்று நேருக்குநேரே கூறிவிட்டார். இப்படியே இவர் பலரிடத்தும் பயமில்லாமல் நேர்மையுடன் கூறியபொழுதிலும், இவருடைய வார்த்தைகள் எவருக்கும்வருத்தமுண்டுபண்ணமாட்டா. ஸ்ரீராமகிருஷ்ணர், உலகபோகங்களில் உழல்பவர்கள் எவ்வளவு அந்தஸ்துடையவராயினும்அவர்களையும், வீண்படிப்புமாத்திரமுள்ள புத்தகப் பூச்சிகளையும் கால்தூசுக்குச் சமானமாகவே நினைத்து வந்தார்.

ஸ்ரீராமகிருஷ்ணர் ஒரு சமயத்திலே விவேகாநந்தரை நோக்கி "புத்திரா! கேட்பாய்; உலகினர் மகான்கள்மீது பலவிதமான அவதூறுகளைக் கூறுவார்கள்; ஆனால் மகான்கள், ஓடியும் குரைத்தும் தொந்திரவு செய்கின்ற நாய்களை லட்சியம் செய்யாது தெருவிலே மதோன்மத்தமாய்ச் செல்கின்ற யானைகளைப்போன்றிருக்கவேண்டும். யானை அதையெல்லாம் கவனிக்கின்றதா? ஜனங்கள் உன்னைப்பற்றிப் புறங்கூறுகிறார்களென்று வைத்துக்கொள்; அவர்களை நீ எப்படிக்கருதுவாய்? " எனவே, விவேகாநந்தர் "அப்படிப்புறங் கூறுபவர்கள் அத்தனை பெயர்களையும் அத்தனை நாய்களாக

நான் கருதவேண்டும்'' என்றார். ராமகிருஷ்ணர் "அல்ல, அல்ல; நீ அவ்வளவு தூரம் போகவேண்டாம். நீ அவர்களை லட்சியம் செய்யாதே. நீ ஒவ்வொருவரையும் நாராயணனாகக் கருதவேண்டும். ஈசுவரன் எல்லா ஜீவராசிகளிலும் வசிக்கிறார்; பற்பலவிதங்களிலே லீலைபுரிகிறார். ஒருவன் தர்மநாராயணனாயும், இன்னொருவன் அதர்மநாராயணனாயுமிருக்கலாம்.'' என்று கூறினார். இதனால் இவர் புண்ணிய புருஷர்களையும் பாபிகளையும் எங்ஙனம் கருதிவந்தாரென்பது தெளிவாகின்றது.

இன்னொருசமயத்திலே விவேகாநந்தர் ராமகிருஷ்ணருடனே பலவேறுபட்ட மதக்கொள்கைகளைப்பற்றித் தர்க்கித்துக்கொண்டிருந்தார். அப்பொழுது சிலகுப்புக்களையும் பைசாசபூஜையையும்பற்றி வெகு இழிவாகவிவேகாநந்தர்பேசிக்கண்டித்தார். ராமகிருஷ்ணர் அவரை அதிகஅன்புடனேபார்த்து "புத்திரா! ஒவ்வொரு வீட்டுக்கு புழைக்கடைக்கதவு ஒன்றுஉண்டு. ஒருவன் பிரியப்பட்டால் ஏன் அந்தவழியாக நுழைந்து வீட்டுக்குள் வரக்கூடாது? ஆனால் வாசல்வழியே சிறந்தது என்பதை நானும் ஒப்புக்கொள்கிறேன்.'' என்றார். இழிந்தவையெனக் கருதப்படுகின்ற எக்கொள்கைகளையும் ராமகிருஷ்ணர் புறக்கணிக்கவில்லையென்பது இதனால் புலப்படுகிறது. ஸ்ரீராமகிருஷ்ணர் "பாபம்'' என்னும் வார்த்தையையே வெறுத்தார். பலம், பலஹீனம் என்னும்இரண்டுபதங்களே அவருடைய வாக்குகளில்விசே

மாக வருவன. ஒருவன் தவறிவிழுந்துவிட்டான்; இதுகார ணமாக அவன்மேலேறித் துவைத்து அவனை நசுக்கிவிடுவ தா? மனிதன் பாபத்திலே பிறக்கிறான் என்னும் வாக்கியம் அவருக்கு நாராசம்போலிருக்கும். மனிதன் சில கட்டுப்பா டுகளுடனே பிறக்கிறான் என்பதை அவர் ஒப்புக்கொண் டார்; ஆனால்கட்டுப்பாடுகளை மனிதன் உதறி யெறியக் கட மைப்பட்டவன். மனிதன் ஈசுவரபுத்திரன்; ஈசுவரபாக்கிய மெல்லாம் அவனுக்குண்டு.

ஒருநாள் விவேகாநந்தர் சிலபள்ளிப்பிள்ளைகளின் துர் க்குணங்களைப்பற்றிக் கூச்சலிட்டு நிந்தித்துக்கொண்டிருந் தார். அவ்வழியே அப்பொழுதுசென்றுகொண்டிருந்த ஸ்ரீ ராமகிருஷ்ணர் “ என்னசமாச்சாரம்?” என்று அவரிட ம்கேட்டுச் சங்கதியைத் தெரிந்துகொண்டு “ இந்தவிஷயங் களைப்பற்றி ஏன்பேசுகிறாய்? ஈசுவரனைப்பற்றிப்பேசு; வே றொன்றையும்பற்றிப் பேசாதே” என்று கடிந்துகொண் டார். இதுதான் அவருடைய நித்தியமான போதனை. சில சமயங்களிலே,ஜனங்கள் அவருக்குமுன்உட்கார்ந்துகொண் டு உலக விஷயங்களைப்பற்றிப் பிரமாதமாகப் பேசும் பொழுது, அவர் “ஐயோ ! தாயே! பரதேவதை! ஏன் இவர்களை இவ்விடத்துக்குக் கொண்டுவந்தாய்? ” என்று கதறினார். ஒரு சமயத்திலே ஒரு விருத்தாப்பிய பிராமணரையும் ராணி ரஸமணி யம்மாளையும் கூட, இவர் ள் நிஷ்டையில் உட்கார்ந்தும் மனத்தை வெளிவிஷயங் க

ளிலே செலுத்திக்கொண்டிருந்தார்கள் என்று கண்டு, பலமாக அடித்துவிட்டார். அவருக்குப் பிறருடையமனத்தையறியும் சக்தி அவ்வளவு இருந்தது. ராமகிருஷ்ணர் தமது அநுபவங்களிலேயே சந்தேகிக்கப்பவர்; "ஏதாயே! இது உண்மையானல், இது என் மனோகற்பனை யல்லவென்றால், இன்னார் என்னிடம்வரட்டும்'' என்று எவரையேனும்அவர் நினைத்துக்கொள்வார்; அப்படிஅவர்நினைத்துக்கொண்டவர்கள் அன்று அங்கே வந்துவிடுவார்கள். இன்னும்அவர் தக்ஷிணேசுவராலயத்தில் தாம் பூஜித்துவந்த தேவிஉண்மையே, வெறும்கற்சிலையன்றென்று தமக்குத்தாமேரூபித்துக்கொள்ளும்பொருட்டு, கொஞ்சம் பஞ்செடுத்து அந்த விக்கிரகத்தின்நாசிக்குநேரே காட்டுவார். ஆ! அந்தப்பஞ்சுதேவியினுடைய சுவாசத்தினாலே அசைவதுபோலத்தோன்றும்; "நான் அடைந்த அநுபவம் உண்மையானல் இப்பெரிய கல்லானது பூமியிலிருந்து கிளம்பித்தவளைகுதிப்பதுபோலக் குதிக்கட்டும்'' என்று அவர்சங்கற்பித்துக்கொள்வார்; ஆ! ஆ! என்னஆச்சரியம்! நம்பமுடியாததுபோலத் தோன்றினும், அக்கல் அநேகந்தடவைகிளம்பித் தவளைகுதிப்பதுபோலக்குதிக்கும். அதனாலே அவர் எப்பொழுதும் "நான் போதிப்பனவெல்லாம் நான் கண்ணால் பார்த்தவையே'' என்று கூறிக்கொண்டிருந்தார்.

ராமகிருஷ்ணர் இன்னலட்சணங்கள் வாய்ந்தவராயிருந்தாரென்று எவராலும் சொல்லமுடியாது. ஒரு சமயத்தி

லே, இந்தபூமியே ஈசுவரனுடைய சரீரமாகவும், எல்லாபுஷ்பங்களும் இதற்கு முன்னமேயே அவருக்கு அர்ப்பிக்கப் பட்டனபோலும் ராமகிருஷ்ணருக்குத் தோன்றிவிடும். ஆகையால் அவருக்கு புஷ்பங்களெடுத்து எந்த விக்கிரகத்துக்கும் பூஜை செய்யவேண்டிய அவஸ்யமேயில்லை. சில சமயத்திலே அவர் புல்லின்மீதும் நடப்பதற்கு மறுத்துவிடுவார்; புல்லுக்கு உயிரில்லையா? அதன்மீது நடந்தால் அதற்குத் துன்பமுண்டாகாதா? இன்னொரு சமயத்திலே, வேறொருவர் பட்ட அடியினுடைய தழும்பு அவருடைய சரீரத்திலே யிருக்கும். சில சமயங்களிலே அவர் ஏழைகளைப்பற்றி நினைத்துக்கொள்வார்; அவர்களுக்கு வேண்டிய உதவி செய்யவேண்டுமென்று தமது சிஷ்யர்களிடம் கூறுவார். நினைத்த மாத்திரத்திலே நிர்விகற்ப சமாதியுற்று ஆநந்தமடைந்துகொள்வார். ஒருவர்இன்னொருவருக்கு ஒருபொருளைக் கொடுப்பதுபோல, அவரால் ஆத்மஞானத்தைக் கொடுக்க முடிந்தது. விவேகாநந்தர் தம்மிடம் வந்து 5 வருஷம் ஆனதுமுதல் ராமகிருஷ்ணர் தம்மிடமிருந்து சில சக்திகளைக் கிளப்பி வெளியே அனுப்பி விவேகாநந்தரிடத்திலே பதிப்பித்துக்கொண்டிருந்தார். அப்பொழுது ராமகிருஷ்ணருக்குத் தொண்டையிலே ஒருபுண்ணுண்டாகி, வாதைமிகக்கொடுக்கத்தொடங்கிற்று. அத்தருணத்தில் ஒருவர் அவரைப்பார்த்து "தாங்கள் பெரியயோகீசுவரரன்றோ;மனம்வைத்தால் இந்தநோவைசொஸ்தப்படுத்திக்கொள்ளமுடியாதா?" என்று கேட்டார்; அதற்கு ராமகிருஷ்

ணர் "எனதுமனத்தை மாதாவிடம் ஒப்புவித்துவிட்டேன்; மாமிசப்பிண்டமாகிய இவ்வசுத்தசரீரத்தின்மீது என்மனத்தைச்செலுத்தவேண்டும்" என்று சொன்னார்.

ராமகிருஷ்ணருக்குச் சிஷ்யனுடைய பக்குவமறிந்து சம்பாஷிக்கும் சக்தியுண்டு. பாபிகளிடம் பேசும்பொழுது அவர்களின் பாபங்களின் மூலமாகவேபேசினார். எல்லோரும் அவரிடத்துக்குச் செல்லலாம். பஞ்சமாபாதகர்களும் செல்லலாம்; பரமவியபிசாரிகளாகிய ஸ்திரீகளும் செல்லலாம். இதற்காக பாமரர்கள் அவரைப் பல்காலும்நிந்தித்தார்கள்.

வரவர ராமகிருஷ்ணருக்கு வியாதி அதிகரித்தது. அவருடைய சிஷ்யர்கள் மகாபக்தியுடனே அவருக்குப் பணிவிடை செய்துவந்தார்கள். கல்கத்தா நகரிலே பிரக்கியாதி பெற்ற மகேந்திரலால் சர்க்கார் போன்ற வைத்தியநிபுணர்கள் பலர் அவருக்குச்சிகிச்சை செய்து வந்தார்கள். ராமகிருஷ்ணர் எவருடனும் அதிகமாகப் பேசக்கூடாதென்று வைத்திய நிபுணர்கள் கண்டிப்பாகக் கூறியிருந்தும், எப்பொழுதும் அவரை இடைவிடாது சூழ்ந்துவந்த எண்ணற்ற ஜனங்களுக்கு அவர் இதோபதேசம் செய்யமுடியாமலிருக்கவில்லை. மரணத்தறுவாயிலும் போதிப்பதற்குமுன்வந்த ஸ்ரீ புத்தரைப்போல, ஆபத்துக்காலத்திலும் உபதேசித்த இயேசுவைப்போல, ராமகிருஷ்ணர் தம்முடைய வியாதி

அதிகமாய்க் கொண்டிருந்தும் அதைக்கவனியாது, எல்லோருக்கும் போதித்துவந்தார். அவர் பேசமுடியாது தவித்துக்கொண்டிருந்தும் பேசினர். வைத்தியர்கள் அவர் ஒருவார்த்தை கூடப் பேசக்கூடாதென்றும், அப்படிப்பேசினல் திடீரென்று மரணம் சம்பவித்தாலும் சம்பவிக்கலாமென்றும்சொல்லியிருந்தும், அவரைச்சுற்றிச் சூழ்ந்துகொண்ட ஜனங்களை அவர்கள் வந்தமாதிரியே அனுப்பிவிட அவருக்குப் பிரியமில்லை. நாளுக்குநாள் அவருக்கு வியாதி அதிகரித்தது; அவர் எலும்புந்தோலுமாய்விட்டார். வைத்திய நிபுணர்கள் அவர்பிழைப்பது அருமையென்று சொல்லிவிட்டார்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய தொண்டை ஒரு கடூரமான புண்ணினல் பாதிக்கப்பட்டிருந்தும், அவர் தமது இச்சாமாத்திரத்திலே சரீரத்தை மறந்துவிடும்படியான ஸ்திதியை அடைந்து, அங்குக் கூடுகின்ற எண்ணற்ற ஜனங்களுக்கு என்றும்போலபோதித்துக்கொண்டிருந்ததைக்கண்ட ஒரு வைத்திய நிபுணர் ஆச்சரியப்பட்டார். இப்பொழுதுதான் அவர் விவேகாநந்தருக்கும் இன்னும் நான்குபேர்களுக்குங் காஷாயம் கொடுத்துச் சந்நியாசம் அளித்தார்.

ராமகிருஷ்ணருடைய வியாதி அதிகரிப்பதைப்பற்றி விவேகாநந்தர் வருத்தமுற்று இரவுபகலாக உறங்கார்; எப்பொழுதும் ஈசுவரனையே தியானித்துக்கொண்டிருப்பார். தன்புறுகின்ற தமது குருமூர்த்தியின் சரீரவியாதியைசொஸ்தப்படுத்துவதற்கு ஏதேனும்தேவதை வாராதா? வென்று

பார்ப்பதற்கு சங்கற்பம் செய்துகொண்டார். மாலைநேரத்தி லே அவர் "ராமா, ராமா" என்று உரத்த சத்தத்துடனே கூவிக்கொண்டு வீட்டிலே சுற்றிக்கொண்டிருந்தார். விவே கானந்தருக்குப் பகிர்முகப்பிரக்ஞையேஇல்லை. அவர்மெய்ம் மறந்து "ராமா" என்ற சப்தத்தைத் தவிர வேறொன்றை யும் அறியாதவராய் மேன்மேலும் உரக்கக் கூவிக்கொண்டி ருந்தார். இரவு எல்லோரும் நித்திரைசெய்கிறார்கள். விவே கானந்தர்மாத்திரம் "ராம" தியானகோஷம் புரிந்துகொண் டிருந்தார். விடியற்கால சமயமாய்விட்டது; விவேகானந்தரு டைய கூச்சல் மேன்மேலும் அதிகரித்துவிட்டது. எங்கும் ஒலியும் எதிரொலியுமாய் நிறைந்தன. ராமகிருஷ்ணர் அங் கிருந்த ஒருவரைக் கூப்பிட்டு விவேகானந்தரை அழைத்து வரச்சொன்னார். ஆயினும் விவேகானந்தருடைய 'ராம'கோ ஷம் நிற்கவில்லை. அவரைப்பிடித்து இட்டுக்கொண்டு வர வேண்டிவந்தது.ராமகிருஷ்ணர் அவரைநோக்கி "புத்திரா! இதெல்லாம்செய்வதால் பயனில்லை; நீஇன்றிரவைக் கழித்த துபோல நான்பன்னிரண்டுவருஷங்கள் கழித்திருக்கிறேன். அவை சுழல்காற்றைப்போலப்போய்விட்டன. நீ ஒருஇரவு முயற்சியினால் என்னசெய்தல்கூடும்? "என்றார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு ஜீவகோடிகளுக்கு ஞானம்புக ட்டி உய்வித்தல்வேண்டும் என்று ஒருஅவா இருந்தது. சில சமயங்களிலே அவர் சமாதிநிஷ்டராகி, மனமானது உள் ளே வெகுதூரம் சென்று திரும்பவும் பகிர்முகப்படாமல்

போகுங்காலத்திலே, ராமகிருஷ்ணர் வேண்டுமென்றே ஏதேனும் ஒருசிறிய விஷயத்தைக்குறித்தாவது ஒருசங்கற்பம்செய்துகொள்வார். மனம் பகிர்முகப்பட்டு உலகுபகாரம் செய்யவேண்டுமென்று, "நான் பாயாசம் சாப்பிடுவேன்" என்று ஒரு சிறு ஆசையை உண்டுபண்ணிக்கொள்வார். பிரபஞ்சத்தினிடத்திலே மனமானது நில்லாமல் அகண்ட வஸ்துவிலே கரைந்துவிட ஆரம்பிப்பதை நினைந்து நினைந்து அம்பிகையைக்குறித்து "அம்மா தாயே! இந்த அகண்டஞானம் எனக்கு வேண்டாம்; நான் உலகுபகாரம் செய்யும்விஷயத்திலே இதுபெருந்தடையாயிருக்கின்றது." என்று ஸ்தோத்திரம் செய்வார். ஒரு சமயத்திலே ஒருவர் அவரைப்பார்த்து "பிறரை ஈசுவரனிடத்துக்குஇட்டுச்செல்லும் விஷயத்திலே தாங்கள் இவ்வளவு கவலையெடுக்கலாகாது" என்று கூறினர். ராமகிருஷ்ணர் "நான் ஒருவருக்கு உதவிசெய்யமுடியுமானல், மறுபடியும் மறுபடியும்நாயாய்க்கூடப்பிறக்க நான் தயாராயிருக்கிறேன்" என்றார்.

வியாதி அதிகரித்துவிட்டது. ஜனங்கள் நூற்றுக்கணக்காக வந்துகொண்டும் போய்க்கொண்டுமிருக்கிறார்கள். கி. பி. 1886-ம் வருஷம் ஆகஷ்டுமாசம் ஜூலைமாசக் கடைசியிலேயே ராமகிருஷ்ணருக்குப்பேசமுடியாதாய்விட்டது. அவர் மெல்லத்தான் பேசுவார்; அல்லது தாம்கூற விரும்புவனவற்றைக்குறிகளினாலே காட்டுவார். ராமகிருஷ்ணர் அடிக்கடி தமது வாலிபசிஷ்யர்களைக்கூப்பிட்டு அவர்கள்மீது

தாம்வைத்திருந்த பிரியத்தைக் குறிகளினாலே காட்டுவார். தாம் போய்விட்டபிறகு, இக்குழந்தைகள் (சிஷ்யர்கள்) என்னசெய்வார்கள்? என்று ராமகிருஷ்ணர் அடிக்கடி வருத்தமுறுவார். அதினும், ஆ! விவேகாநந்தரைவிட்டு எப்படிப்பிரிவது?

தாம் மகா சமாதியடைவதற்கு இரண்டு தினங்கட்கு முன்பு ராமகிருஷ்ணர் விவேகாநந்தரையருகிலழைத்துமற்ற சிஷ்யர்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்துவிட்டு, கடைசியாகத் தம்மால் ஆனவரையில் உரத்த சப்தத்துடன் "புத்திரா! பார்; நான் என்னுடைய இக்குழந்தைகளைஉன்வசம் ஒப்புவிக்கிறேன். அவர்களுக்குள்ளே அறிவும் சமர்த்தும் மிகுந்தவன் நீதான். ஆகையால் அவர்களை ஜாக்கிரதையாகப்பார்த்துக்கொள். அவர்களை அன்புடன் நடத்து" என்று கூறினார். இன்னொருநாள் அவர் விவேகாநந்தரிடத்திலே "விவேகாநந்தன் பிறருக்குப்போதிப்பான்" என்றுஒரு டு எழுதிக்கொடுத்தார். விவேகாநந்தர் "நான்மாட்டேன் என்றார். அப்பொழுது ராமகிருஷ்ணர் பேசுவதற்குப் பெருமுயற்சிசெய்து "நீ போதிக்கத்தான்வேண்டும்; நீபோதிக்கும்படி உனது எலும்புகளே உன்னைத் தூண்டிவிடும்" என்றார்.

ராமகிருஷ்ணர் மகாசமாதியடைவதற்கு மூன்று அல்லது நான்குதினங்களுக்கு முன்னர், ராமகிருஷ்ணர் விவேகாநந்தரைத் தனியேகூப்பிட்டு, அருகிலே உட்காரவைத்து அவருடனே விவேகாநந்தர் இனிமேல்செய்யவேண்டியவே

லைகளை சூசகமாகத்தெரிவித்தார். இப்பொழுது விவேகாநந்தர் கண்ணைமூடி நிஷ்டையடைந்தார். சிறிதுநேரம்கழித்து விவேகாநந்தர் தமது கண்களைத் திறந்துபார்க்கவே, ராமகிருஷ்ணருடைய முகம்வாடியிருக்கக்கண்டார். "சற்குருமூர்த்தி! என்றும் வாடாத தங்கள் முகம் இன்றுவாடியிருக்கக் காரணமென்ன?" வென்று விவேகாநந்தர் கேட்டதும், ராமகிருஷ்ணர் "புத்திரா! புத்திரா!! இப்பொழுது நான் ஒரு பக்கிறி, பைசாகூட இல்லாத பிச்சைக்காரன்; நான் எல்லாவற்றையும் உனக்குக் கொடுத்துவிட்டேன். உனக்கு என்னால் அளிக்கப்பட்டிருக்கின்ற இந்த சக்தியின் வேகத்தினாலே, இவ்வுலகிலே நீ பெரியபெரியகாரியங்களைச்செய்வாய்; அதன்பின் தான், நீபோகமுடியும்" என்றார். ஆ! ஆ! என்ன சிஷ்யவாற்சல்லியம்! வருஷக்கணக்காகச்சம்பாதித்த ஞான திரவியத்தையெல்லாம் ஒரே நிமிஷத்திலே ராமகிருஷ்ணர் கொடுத்துவிட்டார்.

ராமகிருஷ்ணர் மகாசமாதியடையப்போகிறார். சிஷ்யர்களும்மற்றவர்களும் துக்காக்கிராந்தர்களாய் வாடியமுகங்களுடனே சுற்றியுட்கார்ந்திருக்கிறார்கள் விவேகாநந்தர் அழுதகண்ணுஞ்சிந்தியமூக்குமாயிருக்கிறார். ஆனால் அவருடைய மனத்திலே ஒருஎண்ணம் உதித்தது. ராமகிருஷ்ணர் தாம் ஈசுவராவதாரம் என்று அடிக்கடி கூறுகிறாரே. இப்பொழுது, இந்தமரணத்தருவாயிலும், மரணவேதனைக்குட்பட்டுமாய்ந்து கொண்டிருக்கையிலும் "நான் ஈசுவராவதா

ரம்'' என்று கூறுவாரா? என்று விவேகாநந்தர் நினைத்தார். என்னதைரியம்! குருமரணத்தறுவாயிலிருக்கிருர்; அவரைச் சோதிக்கப்புகும் சிஷ்யன் எத்தகையோனயிருக்க வேண்டும்! ராமகிருஷ்ணர் தமது சக்தியை யெல்லாம் சேர்த்துக்கொண்டு எழுந்திருந்து விவேகாநந்தரைநோக்கி "ஆ! எனது புத்திரா! இன்னும் உனக்கு திடபுத்தியுண்டாகவில்லையா?. ராமனையும் கிருஷ்ணனையும் அன்று அவதரித்த அவனே இன்று ராமகிருஷ்ணனைய் அவதரித்திருக்கிருன்.'' என்ருர். மானிடவர்க்கத்துக்குப் பிரஹ்மஞானத்தை யளித்தருளிய மகாபுருஷர்கள் அனைவரும் காலத்துக்குத்தக்க பிரகாரம் பற்பலவிதங்களாக, பற்பலவடிவங்களிலே, பற்பலபெயர்களுடனே அவதரித்த ஈகவரனேயாவர். விவேகாநந்தருக்கு அழுகைவந்துவிட்டது.

1886-ம் வருஷம் ஆகஸ்டுமீ 15-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை அதிவிடியற்காலையில் ஸ்ரீ ராமகிருஷ்ணர்மகாசமாதியடைந்தார். ஓங்காரத்தை உச்சரித்துக்கொண்டே பிர்மநிர்வாணம் அடைந்தார். ஓம். சாந்திः சாந்திः சாந்திः.

ஸ்ரீ ராமகிருஷ்ணருடையசர்ரம தகிக்கப்பட்டது. அந்தச்சாம்பலை சிஷ்யர்கள் பரிசுத்தமாகப்பத்திரப்படுத்திவைத்துக்கொண்டு அவரை பிரத்தியட்சத்தில் இருப்பதாகவே பாவித்து பூஜைசெய்து வருகிருர்கள்.

ஓம்.

ஸ்ரீராமகிருஷ்ணாயநம:

# உபதேச மஞ்சரி.

—:*:—

1. அருட்பிரவாகமே ரூபமாகஉடைய ஈசுவரநாமத்தை இடைவிடாது தியானஞ்செய்வதே இக்கலிகாலத்திற்குத் தகுந்த உண்மையான மததர்மமாகும்.

2. கலியுகத்திற்கு ஏற்றது நாரதீயபக்தி (பிரேமையினாலும் நாமசங்கீர்த்தனங்களினாலும் ஈசுவரனையடையும் மார்க்கம்) என்று சொல்லப்பட்டிருக்கிறது. சாஸ்திரங்களில் மனிதனுக்கு விதிக்கப்பட்டுள்ள பற்பலகர்மங்களைச்செய்து கர்மயோகத்தை யநுஷ்டிப்பதற்கு இக்காலத்திலே சாவகாசம் கிடையாது.

3. நீ ஈசுவரனை தரிசிக்க விரும்பினால் ஹரிநாமசங்கீர்த்தனத்திலே திடமான நம்பிக்கை வைத்துக்கொள்.

4. மீன் சாப்பிடுகிறவர்கள் அந்த மீனுடைய உபயோகமற்ற தலையையும், வாலையும் விரும்புகிறதில்லை. ஆனால் அதன்சரீரத்தின் மத்தியத்திலுள்ள மிருதுவான பாகத்தையே இச்சிக்கிறார்கள். இக்காலத்திற்குதவாத விதிகளும் கொள்கைகளும் நமது சாஸ்திரங்களிலிருந்தால், நாம் அவற்றைக்களைந்து இக்காலத்திற்கேற்றவாறு செய்துகொள்ளவேண்டும்.

5. கைகளினால் தாளம்போட்டுக்கொண்டு ஹரிநாமசங்கீர்த்தனம்செய். உனக்கு ஏகாக்கிரதையுண்டாகும். ஒருமரத்தடியில் உட்கார்ந்துகொண்டு நீ கரகோஷஞ்செய்தால்மரத்தின் கிளைகளிலிருந்த பக்ஷிகளெல்லாம் பக்கங்களில் பறந்துவிடும்; அதுபோல் ஹரிநாமத்தைச் சொல்லிக்கொண்டு கரகோஷம் செய்தால் உன்மனத்திலிருந்து எல்லாத் தீய நினைப்புக்களும் பறந்துவிடும்.

6. மனிதன் இரக்கசித்தத்தில் கிறிஸ்தவனாகவும் வெளி பாவனைகளைக்கண்டிப்பாக அநுசரிப்பதில் மகம்மதியனாகவும் எல்லா ஜீவப்பிராணிகளிடத்திலும் அன்பு பூண்டொழுகுவதில் ஹிந்துவாகவும் இருக்கவேண்டும்.

7. ஒரு பெரிய குளத்திலே அநேகஸ்நான கட்டங்கள் இருக்கின்றன; எந்தக்கட்டத்தில் இறங்கினாலும் அக்குளத்தில் ஸ்நாநம் செய்யலாம். இதுதான் கட்டமென்றும் மற்றது அன்றென்றும் கூறிச்சச்சரவுசெய்துகொள்ளுதல்வீண் வேலையாகும். அதுபோலவே நித்தியாநந்த ஊற்றுக்கு இட்டுச் செல்வதற்கு அநேக கட்டங்கள் இருக்கின்றன. உலகிலுள்ள ஒவ்வொருமதமும் ஒருகட்டமாகும். இக்கட்டங்களுள் எதன்வழியாகவேனும் உண்மையானஹிருதயத்துடன் நீநேரே சென்றால், நித்தியாநந்த வாரியை நிச்சயமாக அடைவாய்.

8. குயவன்வீட்டில் சட்டி, பானை, தட்டு முதலிய வெவ்வேறுருபங்களையுடைய அநேகபாத்திரங்கள் இருந்தபொழு

திலும் எல்லாம் களிமண்ணாலே செய்யப்பட்டவையாகும். அதுபோலவே ஒருவராகிய ஈசுவரன் வெவ்வேறு தேசங்களில் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறுநாமங்களுடனும் வெவ்வேறு ரூபங்களுடனும் பூஜிக்கப்படுகிறார்.

9. வெவ்வேறு கொள்கைகளும் ஈசுவரனிடத்திற்கு இட்டுச்செல்லும் வெவ்வேறுமார்க்கங்களேயாகும். காளிகட்ட (இதுதான் ஸ்ரீராமகிருஷ்ணர் இருந்தஇடம்)த்திலுள்ள காளிக்ஷேத்திரத்திற்கு வருவதற்கு எத்தனையோ வழிகளில்லையா? அதுபோலவே ஈசுவரசந்நிதானத்திற்கு இட்டுச்செல்வதற்கு எத்தனையோ வழிகளிருக்கின்றன.

10. பர்த்வான் மகாராஜா அவர்களுடைய சபையிலே சிவன்பெரியவரா? விஷ்ணுபெரியவரா? என்று ஒரு தர்க்கம் உண்டாயிற்று. சிலர் சிவன்பெரியவரென்றும், சிலர் விஷ்ணுபெரியவரென்றும்கூறி நியாயங்கள் ஸ்தாபிக்கவே, அங்கிருந்த அறிவாளியான ஒரு பண்டிதர் "நான் சிவனையும் பார்த்ததில்லை; விஷ்ணுவையும் பார்த்ததில்லை; எவர் பெரியவரென்று எப்படிக்கூறுவது?" என்றார். ஆகையால் ஒரு மூர்த்தியை இன்னொரு மூர்த்தியுடன் ஒப்பிட்டுப்பார்க்க முயற்சிசெய்யாதே. நீஒன்றைத் தரிசித்தால் இரண்டும் ஒரே பிரம்மவஸ்துவின் தோற்றங்களேயென்று உனக்கே தெரியவரும்.

11. ஒரு வீட்டின்கூரையில் ஏறவேண்டுமென்றால், ஏணி வைத்து ஏறலாம். ஒரு மூங்கில்தடியை ஆதாரமாகக்கொண்டு ஏறலாம்; அல்லது படிக்கட்டுகளின்மூலமாகஏறலாம். அல்லது ஒரு கயிற்றைப்பிடித்து ஏறலாம். அதுபோலவே ஈசுவரனையடைவதற்கும் எத்தனையோ வழிகளிருக்கின்றன. உலகிலுள்ள ஒவ்வொருமதமும் இவ்வழிகளிலொன்றையே குறிப்பிடுகின்றது.

12. எல்லாநரிகளும் ஊளையிடும் சத்தம் ஒன்றாகவேயிருக்கின்றது. அதுபோல, மகாத்மாக்களுடைய உபதேசங்களெல்லாம் ஒரே மாதிரியாயிருக்கின்றன.

13. தர்க்கம் செய்யாதே. நீ உன்னுடைய நம்பிக்கையிலும் அபிப்பிராயத்திலும் உறுதியாயிருப்பதுபோல, மற்றவர்களும் அவர்களுடைய நம்பிக்கைகளிலும் அபிப்பிராயங்களிலும் உறுதியாய் நிற்கும்படி அவர்களுக்குசமஸ்வதந்திரம்கொடு. வீண்தர்க்கத்தினால் இன்னொருவனுடைய குற்றத்தையெடுத்துக்காட்டி அவனைச்சீர்திருத்த உன்னால்ஒருபொழுதும் முடியாது. ஈசுவரகிருபை யுண்டாகும்பொழுது ஒவ்வொருவனும் தன்னுடைய தப்பிதங்களைத்தானேயறிந்துகொள்வான்.

14. வியாதியினால் பீடிக்கப்பட்ட குழந்தைகளைப் பராமரிக்கும் தாயார் அக்குழந்தைகளின் வியாதிக்குத்தக்க

வாறு ஒன்றுக்குச் சோறும்குழம்பும் மற்றொன்றுக்குச்சவ் வரிசிக்கஞ்சியும், இன்னொன்றுக்கு ரொட்டியும் கொடுத்த ல்போல ஈசுவரன் வெவ்வேறு ஜனங்களுக்கு வெவ்வேறு வழிகளை அவரவர்களுடைய இயற்கைக்குத்தக்க பிரகாரம் செப்பனிட்டிருக்கிறார்.

15. ஜீவன் பிரிந்துபோகுங்காலத்தில் எந்த சரீரத்தை நினைத்துக்கொண்டிருந்ததோ அந்த சரீரத்தையே அடைகிறது. ஆதலால் பக்தியனுஷ்டானம் மிகவும் அவசியமாம். இடைவிடா அப்பியாசத்தினால் மனத்தில் உலகஎண்ணமே கிளம்பாமலிருக்கும்பொழுது ஜீவனில் ஈசுவர எண்ணமே நிறைந்து அந்தியகாலத்தில்கூட விட்டுப்போகிறதில்லை.

16. ஈசுவரனிடத்து பக்தியில்லாக்குறையாலேயே மனிதன் கஷ்டப்படுகிறான். அந்தியகாலத்தில் ஈசுவரஸ்மரணம் உண்டாகும்படியான வழிகளை மனிதன் அனுசரிக்கவேண்டியது. இடைவிடாத ஈசுவரஸ்மரண அப்பியாசமே இதற்கு வழியாகும்.

17. தெரிந்தேனும் தெரியாமலேனும் விரும்பியேனும் விரும்பாமலேனும் எவ்விதத்திலாவது ஒருவன் ஈசுவரநாமத்தைக் கூறுவானாயின் அவன் ஈசுவரநாம ஜபத்தாலுண்டாகும் பலனை நிச்சயமாய் அடைகிறான். ஸ்நானம் செய்வதற்காகவே நதிக்குச்சென்றமனிதன் ஸ்நானம் செய்து அதன் பலனையடைகிறான்; அதுபோலவே, இன்னொருவனால் நதிக்

குள் தள்ளப்பட்டவனும் அல்லது நன்ருய் நித்திரைசெய்யும்பொழுது சரீரத்தில் ஜலம்கொட்டப்பெற்றவனும் ஸ்நாநபலனை யடைகிருன்.

18. பந்தத்திற்குட்பட்ட ஜீவர்கள் மரணகாலத்திலே உலகவிஷயங்களைப்பற்றித்தான் பேசுகிருர்கள். புண்ணியஸ்தலயாத்திரை செய்வதிலும் கங்காஸ்நாநம் செய்வதிலும் ஜெபமாலைகளைத்தரித்துக்கொள்வதிலும்பிரயோசனமில்லை. ஹிருதயத்தில் உலகப்பற்றுக்கள் இருந்தால் மரணகாலத்தில் அவைவெளிப்பட்டுவிடுமென்பது நிச்சயம். சாதாரண சமயங்களில் ஒரு கிளியானது 'கிருஷ்ணு! 'கிருஷ்ணு' என்று சொல்லும்; ஆனல் பூனையினிடத்தில் அகப்பட்டுக்கொண்டபொழுது அதுகீச்சுகீச்சு என்றுதான் சத்தமிடும்.

19. ஒரு குடியானவன் தனதுகரும்புத்தோட்டத்திற்கு நாள்முழுதும் தண்ணீர்பாய்ச்சிக்கொண்டிருந்தான். மாலையில் பார்த்தபொழுது ஒருதுளிஜலம்கூட தோட்டத்திற்குள் நுழையவில்லை. பாய்ச்சின நீரெல்லாம் அங்கிருந்த அநேக பெரிய எலிவளைகளுக்குள் ஓடிப்பூமிக்குள் போய்விட்டன: உலகசுகம் கீர்த்தி முதலியவற்றில் ஹிருதயத்தில் இரகஸ்யமாக ஆசை வைத்துக்கொண்டு ஈசுவரனை பூஜிப்பவனுடைய நிலைமையும் இதுபோன்றதே. தினந்தோறும் பஜிக்கின்றுனுயினும் இவன் அபிவிருத்தியடைகிறதில்லை; ஏனென்ருல் அவனுடைய பக்திமுழுதும் இவ்வாசைகளாகிற எலிவளைகளுக்குள் நுழைந்து ஓடிவிடுகின்றன. அவன் ஆயுள்முழு

தும் பக்திசெலுத்திய பொழுதிலும், அவன்பக்தி செலுத்த ஆரம்பிப்பதற்கு முன்னிருந்த பழயமனிதனாகவே யிருக்கின்றான்.

20. மனமானது நிஷ்டையில் உட்கார்ந்தால் ஏன் சலிக்கின்றது?.

ஈயானது மிட்டாய்க்கடையில் மிட்டாயின்மீது சில சமயங்களில் உட்காருகிறது: ஆனால் ஒருகுப்பைக்காரன் ஒரு கூடைக்குப்பையை யெடுத்துக்கொண்டு செல்லும் பொழுது ஈயானது மிட்டாயை விட்டுவிட்டு அக்குப்பையில் உட்காருகிறது. ஆனால் தேனீயானது தேனுக்காகத் திறந்த புஷ்பங்களின்மீது உட்காருமேயொழிய ஒருபொழுதும் குப்பையில் உட்காராது. உலகமனிதர்கள் எப்பொழுதாவது ஒரு நிமிஷநேரத்திற்கு ஈச்வரபக்தியுண்டாகின்ற ஈக்களைப் போன்றிருக்கிறார்கள்; ஆனால் அவர்களுடைய இயற்கைத்தன்மையானது அவர்களை மறுபடியும் குப்பைமேட்டிற்கே கொண்டுவந்து விடுகிறது. ஆனால் மகாத் மாக்களாகிய பரமஹம்ஸர்கள் ஈசுவரனுடைய அருட்கிருபையில் ஆநந்தமடைந்து எப்பொழுதும் லயித்திருப்பார்கள்:

21. சூளையில் வைத்துச்சுடாத ஒருபானையானது உடைந்துவிட்டால், ஒருபுதியபானைசெய்வதற்கு குயவன் அந்தக் களிமண்ணை உபயோகப்படுத்திக்கொள்வான்; ஆனால் ஒரு சுட்டபானை உடைந்துவிட்டால், அவன் அம்மாதிரி செய்ய

முடியாது. அதுபோலவே, ஒருவன் அஞ்ஞான நிலைமையில் இறந்துவிட்டால் அவன்மறுபடியும் பிறக்கிறான்; ஆனால் அவன்உண்மையறிவாகிய அக்கினியில் சுடப்பட்டு, பரிபூர்ணத்துவத்தையடைந்து மரித்தானானால், அவன் மறுபடியும் பிறக்கிறதில்லை.

22. சுத்தமானபால் அதற்கு இரட்டிப்பு அளவு தண்ணீருடன் கலக்கப்பெற்றுவிட்டால், அது க்ஷீரமாவதற்கு(கட்டிப்பாலாவதற்கு) வெகு நேரமும் சிரமமும் வேண்டியிருக்கின்றன. லௌகிகமனிதனுடைய மனமானது தீயவும்அசுத்தமானவுமான நினைப்புக்களாகிற அழுக்குத்தண்ணீருடன் அதிகமாகக் கலக்கப் பெற்றிருக்கிறது. ஆதலால் அதைப் பரிசுத்தப்படுத்தி அதற்குத் தகுந்தபலமும் இடைவிடாத் தன்மையும் கொடுப்பதற்கு வெகுநேரமும் சிரமமும் வேண்டியிருக்கின்றன.

23. கிளிக்கு வயதுசென்று நாக்கு தடித்துவிட்டால், அதற்கு பாடச்சொல்லிக்கொடுக்க முடியாது. அதுபோலவே வயதுசென்றபின்னர் ஈசுவரனிடத்துமனத்தைச்செலுத்தப்பழகுதல் முடியாது; வாலிபத்தில் சுலபமாக முடியும்

24. ஈயானது மனிதசரீரத்தில் இருக்கும் புண்ணின்மீது உட்கார்ந்து உடனே ஈசுவர நைவேத்தியத்தின்மீது உட்காருவதுபோல லௌகிக மனிதனுடைய மனமானது ஒரு

சமயத்தில் மதவிஷயங்களில் செல்கிறது; அடுத்த நிமிஷத்தில் சிற்றின்பவிஷயங்களில் சென்றுவிடுகிறது.

25. ஒரு நனைந்த தீக்குச்சி எவ்வளவு உரைத்தபோதிலும் அது பற்றுகிறதில்லை. அது புகையத்தான்செய்யும். ஆனால் நன்றாய்க்காய்ந்துள்ள தீக்குச்சியானது சிறிதுஉரா ய்ந்தால் போதும், உடனே பற்றிக்கொள்ளும். உண்மைப் பக்தனுடைய ஹிருதயமானது நன்றாகக் காய்ந்துள்ள தீக்குச்சியைப்போன்றது. ஈசுவரனுடைய நாமத்தைச் சொன்னால்போதும், சட்டென்று பக்தியாகிற அக்கினி பற்றிக்கொண்டு விடுகிறது. லௌகீக மனிதனுடைய ஹிருதயமானது மூவாசைகளில் நனைப்புண்டு இருத்தலினாலே அது நனைந்த தீக்குச்சியைப்போன்று, ஈசுவரன் எத்தனைதரம் போதிக்கப்பட்டாலும், பக்தியாகிற அக்கினி பற்றிக்கொள்வதேயில்லை.

26. நன்றாகப்பழுத்தமாம்பழத்தை ஈச்வரனுக்கு நிவேதனம் செய்யலாம்; அல்லதுஎந்தவிதத்திலாவது பிரயோசனமானவழியில் உபயோகப்படுத்தலாம்; ஆனால் அதைக் காக்கை சுறண்டிவிட்டால், அதுஎதற்கும்உபயோகப்படாது. அது ஈசுவரனுக்கும்நிவேதனம் செய்யப்படக்கூடாது. தர்ம விஷயமாக பிராஹ்மணனுக்கும் கொடுக்கப்படக் கூடாது; பரிசுத்தமான எவரும் அதை உபயோகப்படுத்த மாட்டார்கள். அதுபோலவே ஹிருதயமானது அழுக்கற்

றிருக்கும் பொழுதே, உலகஆசைகளாகிற அசுத்தங்கள் அதைக்கறைப்படுத்தாமலிருக்கும் பொழுதே, இறவர்களை ஈசுவர பக்தியில் பயிற்றுவிக்கவேண்டும். அவர்களுடைய மனத்தில் உலகஆசைகள் நுழைந்துகொண்டாலும் சரியே, அவர்களைச்சிற்றின்பமாகிற பேய் பிடித்துக்கொண்டாலும் சரியே, பின்னர் அவர்களைச் சத்தியமார்க்கத்தில் செல்லும்படி செய்வது மிகவும் கஷ்டம்.

27. இளமூங்கிலை எளிதில் வளைத்துவிடலாம்; முற்றின மூங்கிலானது வளைப்பதற்குச் செய்யப்படும் பலமான முயற்சியில், ஒடிந்துவிடும். அதுபோல, இளம்ஹிருதயத்தை ஈசுவரன் பக்கமாக வளைப்பது எளிது; ஆனால் முற்றின ஹிருதயமானது வளைத்தால் நழுவிவிடும்.

28. பின்சொல்லப்படுபவர்கள் ஆத்மஞானத்தைஅடையமுடியாதவர்கள்:—(1) தங்களுடைய கல்வியைப்பற்றித் தாங்களே புகழ்ந்து கொள்பவர்கள். (2) அகங்காரிகள். (3) பணச்செருக்குப் பிடித்தவர்கள். எவராவது இவர்களிடம் "அதோ, அந்த இடத்தில் ஒருமகான் இருக்கின்றார்; வாருங்கள், போய்வருவோம்" என்றால், இவர்கள் ஏதேனும் சாக்குப்போக்குச்சொல்லி, வரமுடியாது என்று வருத்தப்படுபவர்கள்போல பாவனை பண்ணுவார்கள். ஆனால் இவர்கள் "நாம் உயர்ந்த நிலைமையிலுள்ளவர்கள்; நாம் ஏன் இன்னொருவரிடத்திற்குப் போகவேண்டும்"? என்று நினைத்துக்கொள்கிறதினாலேயே இவர்கள் போகிறதில்லை.

29. சிலருக்கு சம்சாரபந்தங்களெல்லாம் தாமே நிவிர்த்தியாய் விடுகின்றன. ஆனாலும் அவர்கள் தாங்களே பந்தங்களை யுண்டாக்கிக்கொண்டு தங்களைத் தாங்களே கட்டிக்கொள்ள முயற்சிசெய்கிறார்கள். அவர்கள் முக்தியை விரும்புவதில்லை. பெண்டுபிள்ளையற்ற ஒருவன் ஒரு நாய்க்குட்டியையாவது ஒரு பட்சியையாவதுபிடித்து வைத்துக்கொண்டு செல்லம் கொஞ்சுகிறான். மானிடவர்க்கத்தின்மீது மாயைசெலுத்தும் வல்லமை அத்தகையது.

30. பச்சைக்களிமண்ணில் தான் உருவம்பதியும்; கல்லிற் பதியாது. அதுபோல, பக்தனுடைய ஹிருதயத்தில் தான் ஈசுவரஞானம் உதயமாகும்; பெத்த ஆத்மாவின் ஹிருதயத்தில் உண்டாகாது.

31. இரும்பு கொதிக்கின்ற உலையில் வைக்கப்பட்டுள்ள வரையில், அது பழுக்கக்காய்ந்து சிவந்ததா யிருக்கிறது. ஆனல் அது அங்கிருந்து எடுக்கப்பட்டவுடனே கறுப்பு ஆய்விடுகிறது. இப்படியேதான் சாதாரண மனிதனும். அவன் ஒரு க்ஷேத்திரத்தி னுள்ளாவது சாதுக்களின் மத்தியிலாவது இருக்கும் வரையில் அவனிடத்தில் மதஉணர்ச்சிகள் இருக்கும்; ஆனல் அவன் அவற்றை விட்டு வந்துவிட்டானைல் அவ்வுணர்ச்சிகளெல்லாம் பறந்துவிடுகின்றன.

32. எந்த ஆயுதமும முதலையின்முதுகுத்தோலைத் துளைக்கமுடியாது; அதுபோல நீ எவ்வளவுதான் ஒரு உலகின

னுக்கு மதஉபதேசம் செய்தபோதிலும் அது அவனுடைய மனத்திற்குள் நுழையவே நுழையாது.

33. ஒரு பாலத்தின்கீழ்ச்செல்லும் தண்ணீரானது ஒருபுறமிருந்து நுழைந்து இன்னொருபுறம் செல்வதுபோல, மதஉபதேசமும் ஒரு உலகினனுடைய ஒரு காதுக்குள் நுழைந்து இன்னொரு காதுவழியாக வெளியே சென்றுவிடுகிறது; உள்ளே ஒன்றும் பதிந்துகொள்கிறதில்லை.

34. உலகபாசங்களினால் கட்டப்பட்ட மனிதன் தான் இடைவிடாமல் எண்ணற்ற துன்பங்களினாலும் துக்கங்களினாலும் மொத்துண்டபொழுதிலும் ஸ்திரீ ஆசையையும் தன ஆசையையும் எளிதில் விடமாட்டான்,

35 ஒரு பாபியினுடைய ஹிருதயமானது ஒருசுருண்ட ரோமத்தைப்போன்றது. அதை எவ்வளவுதான் நேர்படுத்தினாலும், அது ஒருபொழுதும் நேராகாது. அதுபோலவே துஷ்டர்களுடைய ஹிருதயத்தையும் நேர்மையும் சுத்தமும் உடையதாக ஆக்கமுடியாது.

36. தண்ணீர் கல்லுக்குள் நுழையாததுபோல, மதஉபதேசமும் பெத்தஜீவனுடைய ஹிருதயத்தில் நுழையாது.

37. கன்னிக்குக்கலியாணசுகம் தெரியாததுபோல, உலகினனுக்கு ஈசுவரனிடத்தில் ஏகத்துவம் அடைவதால்உண்டாகும் இன்பம் தெரியாது.

38. தயிர்வைத்திருந்த பாத்திரத்தில் பாலைவிட்டால் அதுவும் தயிராய்விடுமாதலால், ஒருவரும் அதில் பால் வைக்கமாட்டார்கள். அதுபோல, உலகினனுக்கு உயர்ந்த ஆத்மோபதேசத்தைச் செய்தால் அவன் அதைக்கெடுத்து விடுவானென்று ஞானகுரு அவனுக்கு உபதேசம் செய்ய மாட்டார்.

39. உலகினனுக்கு ஞானியைப்போன்ற அறிவும் புத்தியும் இருக்கலாம்; ஒருயோகியைப்போன்று அவன்பலதுன்பங்களையும் சகித்துக்கொள்ளலாம்; தபசியைப்போன்று அவன் பெரியதியாகங்கள்செய்யலாம்; ஆனால்அவன் ஈசுவரனுக்காக அவற்றைச்செய்கிறதில்லையாதலாலும்பெயருக்கும் பெருமைக்கும் தனத்திற்குமே செய்கிறானதலாலும் அவனுடைய முயற்சிகளெல்லாம் வீண்; அவனுடைய சக்திகளெல்லாம் தப்பான வழிகளில் செலவழிக்கப்படுகின்றன.

40. வாசனையின் வல்லமைதான் என்னே! சில சந்நியாசிகள், உட்கார்ந்திருந்த ஓரிடத்தின் பக்கமாக ஒருயுவதி சென்றாள். எல்லோரும்அவளைக்கவனியாது ஈசுவரனை த்தியானம் செய்துகொண்டிருந்தார்கள். ஆனால் ஒரே யொருவன் அவளைக்கடைக்கண்ணால் பார்த்தான். ஸ்திரீயைக் கண்டு மயங்கிய இவன் சந்நியாசம் அடைவதற்கு முன்கிரகஸ்தனயிருந்து மூன்று குழந்தைகளைப் பெற்றவன்.

41. வாயெல்லாம் ரத்தம் பீறிட்டுக்கொண்டு ஒழுகிய பொழுதிலும், ஒட்டகங்கள் முட்செடிகளையே தின்னுகின்

றன; அதுபோல உலகினனும் எத்தனை துன்பங்கள் நேரி டினும் அறிவடைகிறதில்லை.

42. உலகினனுடைய நிலைமையானது சிலசமயங்களில், தவளையைப்பிடித்துக்கொண்டு உள்ளேயும் விழுங்கமுடியா மல் வெளியிலும் தள்ளமுடியாமல் தவிக்கின்ற சர்ப்பத்தி னுடைய நிலைமைபோன்றிருக்கின்றது. இவ்வுலகில் என் றும் உள்ளது ஒன்றுமில்லையென்று உலகினன் அறியலாம்; ஆயினும் அவன் அதைவிட்டு விட்டு ஈசுவரனிடத்தில் மனத் தைச் செலுத்தமுடியவில்லை. மலத்தைத்தின்று விருத்தியா கும் புழுக்கள் சோற்றுப்பானைக்குள் போடப்பட்டால் உடனே மரித்துவிடும். அதுபோல, உலகினனும் உலகப் பற்றுக்களினின்றும் நீக்கப்பட்டுச் சாது சங்கத்தில் வைக் கப்பட்டால், மிகவும்கஷ்டப்படுவான்.

43: சந்நியாசியினுடைய கமண்டலமானது பாரதகண்ட த்திலேதரிசிக்கவேண்டிய நான்குக்ஷேத்திரங்கட்கும் சென் றிருக்கலாம். ஆயினும் அதை உடைத்து ருசிபார்த்தால், அது கசப்பாகவேயிருக்கும். இதுதான் உலகினனுடைய இயற்கையும்.

44. சித்திசெய்பவர்களிடம் செல்லாதே. இவர்கள் சத் தியமார்க்கத்தினின்றும் தவறியவர்கள். பிரஹ்மநிஷ்டனுக முயற்சிக்கும் முமுக்ஷுவின் வழியில் தடைகளாகக்குறுக் கிடுகிறமனோசக்திகளிலே இவர்களுடைய மனமானது கட்

டுப்பட்டுவிட்டது. இச்சக்திகளினிடத்திலே ஜாக்கிரதையாயிருங்கள்; இவற்றைவிரும்பாதீர்கள்.

45. ஒருவன் பதினான்கு வருஷகாலம்கடூரமான தபஸ் செய்து ஜலத்தின்மீது நடக்கும் சக்தியை அடைந்தான். உடனே சந்தோஷபூரிதனாகி இவன் தன்னுடைய குருவினிடத்திற்குச்சென்று "குருமூர்த்தி! நான்ஜலத்தின்மீது நடக்கும் சக்தியில் சித்திபெற்றேன்" என்றான். குருவானவர் கோபித்துக்கொண்டு, "சீச்சீ இதுதானா உனதுபதினான்கு வருடத்தபசின்பலன்? படவுக்காரனுக்கு பைசா கொடுத்தால் உன்னை அதிலேற்றி தண்ணீரைக்கடந்து அக்கரைகொண்டுபோய்ச் சேர்ப்பானே; இதற்காகவாநீபதினான்கு வருஷகாலம்கஷ்டப்பட்டாய். உனதுதபஸ் இதுகாறும் பைசா தான்விலைபெற்றிருக்கிறது" என்றார்.

46. லாகிரிவஸ்துக்களை உபயோகித்துக்கொண்டும் வைத்தியம் செய்துகொண்டுமிருக்கின்ற சாது உண்மைச்சாது ஆகமாட்டான். அத்தகையோருடன் சகவாசம் செய்யாதே.

47. நான் பஞ்சவடியின்கீழ் கடூரமான தபசுசெய்துகொண்டிருந்தபொழுது கிரிஜா என்னும் பெயருடைய ஒருபெரியயோகி வந்தார். நான் ஒருநாளிரவு எனது அறைக்குள் வந்தபொழுது அவர் தமது கையைத்தூக்கினார்; அவருடைய கைம்மூலத்திலிருந்து ஒரு ஜோதிதோன்றி நெடுக

வெளிச்சம் கொடுத்தது. நான் அவருக்குபுத்தி போதித்து இனிமேல் அந்த சக்தியை அவர் உபயோகப்படுத்தக்கூடா தென்று கூறி, அவருடைய மனத்தை ஆத்மஞானவிஷயத்தில் செலுத்திவிட்டேன். வரவர அவர் அந்த சக்தியையிழந்துவிட்டார்; அதனால் ஆத்மஞானமடைந்துவிட்டார்.

48. மனிதர் மலத்தினின்றும் ஒதுங்கிப்போவதுபோல, சித்திகளினின்றும் நீங்கிக்கொள்ளவேண்டும். சாதனங்களினாலும் சம்யம (ஐம்பொறிகளையடக்குதல்) த்தினாலும் இந்தச்சித்திகள்உண்டாகின்றன. ஆனால்சித்திகளில்மனத்தைச் செலுத்துபவர்கள் அவற்றிலேயே ஒட்டிக்கொள்கிறார்கள். அவற்றிற்குமேல் கிளம்பமுடிகிறதில்லை.

49. சர்க்கஸ் வித்தையிலே சிறுபையன் உயரச்சென்று ஒரு கயிற்றைப்பிடித்துக்கொண்டு சிறிதும் பயமின்றிச்சுற்றிவருவதுபோல, நீ ஈசுவரனை உறுதியாய்ப் பற்றிக்கொண்டு உலககடமைகளைச் செய்வாயானால், உனக்குச் சிறிதும் பயமேயில்லை.

50. தினந்தோறும் நான் சாப்பாட்டுக்கு என்னசெய்வதென்று இதேசிந்தனையாயிருந்தால்,ஈசுவரனிடத்தில் நாம் பக்திசெலுத்துவது எப்பொழுது?

51. எவனொருவன் உலகத் தூண்டுதல்களுக்குள் ளிருந்துகொண்டே பரிபூரணத்துவம் அடைகிறானோ, அவனே தீரன்.

52. முதலையானது தண்ணீரில் நீந்தவிரும்பி மேலேகிள ம்புகிறது. ஆனால்வேட்டையாளர்கள் குறிவைப்பதுகண்டு தண்ணீருக்குள் முழுகிவிடுகிறது. சமயம் வாய்க்கும்பொழுது சந்தோஷக்கூச்சலுடன் கிளம்பி அகன்ற தண்ணீர்ப் பரப்பில் ஆநந்தமாக நீந்துகிறது. ஏ உலகவலையில் பட்டுழலும் மனிதனே! நீயும் ஆனந்த சமுத்திரத்தில் நீந்தி விளையாட விரும்புகிறாய். ஆனால் உனது குடும்பமும் உலகமும் உன்னைப்பிடித்துத் திக்குமுக்காடச்செய்துவிடுகின்றன. ஆயினும் தைரியம்விடாதே. உனக்குச்சாவகாசம்கிடைக்கும் பொழுது ஈசுவரனிடத்தில் ஏகாக்கிர நிஷ்டை செலுத்தி உருக்கமாகப் பிரார்த்தித்து அவரிடத்தில் உனது குறைகளைச் சொல்லிக்கொள். நீ பக்குவமானபொழுது அவர்உனக்கு பந்தநிவர்த்திசெய்து ஆநந்த சமுத்திரத்தில் உல்லாசமாக நீ நீந்தும்படிசெய்வார்.

53. நமது தேசத்திலே நாட்டுப்புறத்துப் பெண்கள்தங்கள் தலைமேலே ஒன்றன்மேலொன்றாக நாலு ஐந்துகுடங்களில் தண்ணீர்நிரப்பி அவற்றைவைத்துக்கொண்டு, வழிநெடுக ஒருவருடனொருவர் தங்கள் சுகதுக்கங்களைப்பேசிக் கொண்டுசென்றபொழுதிலும் அக்குடங்கள் ஆடாமலும், அசையாமலும் அவற்றினின்றும் ஒருதுளிநீர்கூட வெளியே ததும்பாமலும் இருப்பதுபோல, தர்மமார்க்கத்தில் செல்பவன் நடக்கவேண்டும். எந்த நிலைமையில் வைக்கப்பட்டபோதிலும் தனது ஹிருதயமானது சத்தியமார்க்கத்தி

வாதிருக்குமாறு கிரகஸ்தன் ஜாக்கிரதையாயிருக்கக்கடவன்.

54. நீ பக்திசெய்யும்பொழுது கேலிபண்ணுகிறவர்களிடத்திலிருந்தும், சத்துக்களையும், சன்மார்க்கத்தையும்பரிகசிப்பவர்களிடமிருந்தும் ஒதுங்கிவிடு.

55. ஒரு வியபசாரஸ்திரீ தனது வீட்டுவேலைகளைச் சுறுசுறுப்பாகச்செய்துகொண்டிருக்கும்பொழுதும் தனதுகள்ளப்புருஷனையே நினைத்திருப்பதுபோல, உலகினர்களும் திடமாக ஈசுவரனிடத்தில் ஹிருதயத்தைநிறுத்தி லௌகீகச்செயல்களைச் செய்தல்வேண்டும்.

56. ஒரு சமயத்தில் பிரமசமாஜத்தைச் சேர்ந்த சிலவையன்கள் தாங்கள் ஜனகமகாராஜனுடைய திருஷ்டாந்தத்தைப் பின்பற்றுவதாக என்னிடம் கூறினார்கள்; இவ்வுலகில் அவர்கள் சிறிதும் பற்றுதலின்றியிருநதார்கள். அப்படிச் சொல்வது சுலபமென்றும் ஆனால் ஜனகரைப்போலிருப்பது வேறு காரியமென்றும் நான் அவர்களிடம் சொன்னேன். அழுக்குப்படாமல் உலகில் வசிப்பது மிகவும் கடினம். ஆரம்பத்தில் ஜனகரும்எவ்விதத்தவங்களைத்தான் இயற்றவில்லை! நீங்கள் அவ்விதத்தவங்கள் புரியவேண்டுமென்று நான் கூறவில்லை; ஆனால் நான் விரும்புவதாவது நீங்கள் சிறிதுபக்தியுடன் சிறிதுநேரமாவது ஒருசத்தமற்ற இடத்தில் தனித்திருக்கவேண்டுமென்பதே. நீங்கள் ஞானத்

தையும் பக்தியையும் அடைந்த பிறகு உலகத்துக்குள் நுழையுங்கள். பாலானது ஆடாமல் அசையாமல் தனியே அமைதியாகவைக்கப்பட்டிருந்தால் நல்ல தயிர் உண்டாகும். பால் ஆடினாலும் அசைந்தாலும், தயிர் ஆகாது. ஜனகர் பற்றற்றிருந்தார்; ஆதலால் அவருக்கு விதேகர் என்ற பெயர்கிடைத்தது. அவர் ஜீவன்முக்தராயிருந்தார். தான் சரீரம் என்ற எண்ணத்தை யழித்தல் அசாத்தியமானகாரியம். ஜனகர் தீரர். அவர் ஞானயுதம், கர்மாயுதம் என்ற இரண்டு ஆயுதங்களையும் மிகவும் சுலபமாகக் கையாண்டு கொண்டிருந்தார்.

57. நீ உலகில் பற்றற்று வாழவிரும்பினால் ஒருவருடம், ஆறுமாதம், ஒருமாதம், அல்லது குறைந்தபட்சம் பன்னிரண்டு நாட்களாவது தனியிடத்தில் வாசம்செய்து, பக்திபயிலவேண்டும். இவ்வேகாந்தவாசசமயத்திலே நீ இடைவிடாது ஈசுவரனைத் தியானித்து அவனிடத்துப் பக்திப்பிரேமைபெருகுமாறு நீ பிரார்த்தனை செய்தல் வேண்டும். உனக்குச்சொந்தமாக இவ்வுலகில் ஒன்றுமேயில்லையென்றநினைப்பினால் நீ உனது மனத்தை நிரப்பிக்கொள்ளவேண்டும். உனக்குச் சொந்தமாக நீ நினைத்துக்கொண்டிருக்கிறவர் ஒருநாள் உன்னைவிட்டுப்பிரிவது நிச்சயம். உண்மையில்கடவுள் ஒருவர் தாம் உனக்குச் சொந்தமானவர். அவரையே யநுபவத்தில் எப்படியறிவது என்பதிலேயே உனது கண்ணும் கருத்துமிருக்கவேண்டும்.

58. பலவித இச்சைகள் உண்டாகும்படியான இடத்துக்கு நீபோகும்படி நேரிட்டால், எப்பொழுதும் ஜகன்மாதாவின் தியானத்துடன் செல். உனது ஹிருதயத்திலேயே மறைந்துகுடிகொண்டிருக்கும் பல பாபநினைப்புக்களிலிருந்துங்கூட உன்னை அவள் ரட்சிக்கமுடியும்.

59. நீ பலாப்பழத்தையுடைக்கு முன் உனதுகைகளில் கொஞ்சம் எண்ணெயைத்தடவிக்கொண்டால் அப்பழத்தின் பசையானது உனது கைகளில் ஒட்டிக்கொண்டு உனக்குத்தொந்தரவு கொடுக்காது. பரமாத்மஞானத்தினால் நீ உன்னைப் பலப்படுத்திக்கொண்டு, பின்னர் தனத்திலும் லௌகிகத்திலும் நீ உழன்றபோதிலும், இவை உன்னைச்சற்றும் பாதிக்கா.

60. ஒரு சிறு பையனுடைய ஹிருதயத்திலிருக்கின்ற அன்பானது பிரிவடையாததாயும் முழுதுமாயுமிருக்கிறது. அவனுக்கு விவாகமாய்விட்டால், பாதியன்பு மனைவிக்குக் கொடுக்கப்படுகிறது. குழந்தைகள் பிறந்துவிட்டால், இன்னும் கால்வாசியன்பு குழந்தைகளுக்குக் கொடுத்துவிடப்படுகிறது. மிகுதி கால்வாசியன்பு தாய், தகப்பன், கௌரதை, கீர்த்தி, ஆடை, ஆபரணம் முதலியவற்றிற்குக் கொடுத்துவிடப்படுகிறது. கடவுளிடத்தில் செலுத்துவதற்கு அவனிடத்தில் அன்புமிச்சமில்லை. ஆகையால்ஒருபையனுடைய பிரிவையடையாத அன்பானது இளமையிலேயே கடவுளிடத்திலே செலுத்தப்பட்டால் அவன் அவரிடத்தில் தனது

முழுஅன்பையும்செலுத்தி அவரைச் சுலபமாகத் தரிசிக்க முடியும். வயதுமுதிர்ந்தவர்கள் அப்படிச்செய்வதுசுலபமான காரியமன்று.

61. உலகத்தில்வசிக்கும் ஞானிகளுக்கும் உலகத்தைத்தியஜிக்கும் ஞானிகளுக்கும் வித்தியாசம் ஏதாவது உண்டா என்றுகேட்டால், இருவகையாரும் ஒருபடித்தானவர்களேயென்று நான்சொல்வேன்.; ஆனால் ஞானி உலகவாழ்க்கையில் இருப்பானானால், ஐம்புலப்பற்றுக்களுடன் வசித்தலில் பயமிருத்தலினாலே, அவனுக்கு பயத்திற்குக் காரணங்களுண்டாகும்; ஆனால் அது சொற்பமே. கரிபிடித்த அறையியில் நீ வசித்தால், நீ எவ்வளவு ஜாக்கிரதையா யிருந்தபோதிலும், கொஞ்சமாவது அக்கரியழுக்கு உன்னைப்பற்றுமென்பது நிச்சயம்.

62. சிறுகுழந்தைகள் தாயாரைவிட்டுவிட்டு பொம்மைகள் வைத்துக்கொண்டு விளையாடுகின்றன; ஆனால் தாயார் அங்குவந்துவிட்டால், அக்குழந்தைகள் பொம்மைகளைப் போட்டுவிட்டு "அம்மா" "அம்மா" என்று கத்திக்கொண்டு அவளிடம்ஓடுகின்றன. நீங்களும் அப்படியே இவ்வுலகில் தனம், பெருமை, கீர்த்தி முதலிய பொய்மைகளை வைத்துக்கொண்டு விளையாடுகிறீர்கள்; வேறொன்றையும் கவனிக்கிறதில்லை. ஆனால் நீங்கள் உங்களில் இருக்கும்ஜகன்மாதாவை யொருதரம் பார்த்துவிட்டால், தனம், பெருமை, கீர்த்தி முதலிய இவற்றுள்ளதிலும் உங்களுக்கு இச்சையுண்

டாகாது. இவற்றையெல்லாம் விட்டுவிட்டு நீங்கள் அவனிடம் ஓடிவிடுவீர்கள்.

63. நீங்கள் உலகினருக்கு சர்வசங்க பரித்தியாகம்செய்து சாட்சாத் பரமேசுவரனுடைய பாதாரவிந்தத்தில் சரணுகதியடையவேண்டுமென்று போதித்தால் அவர்கள்கேட்கமாட்டார்கள். இவ்வுலகினரை நல்வழிப் படுத்துவது எப்படியென்று தீர்க்காலோசனை செய்து பின்னர்தான் ஸ்ரீகௌரங்கரும் அவருடைய சிஷ்யராகிய நிதையென்பவரும் "வாருங்கள், வாருங்கள், எல்லோரும் வாருங்கள், மச்ச மாம்சாதிகளை மனமாற உண்ணுங்கள்; இன்பமநுபவியுங்கள், ஹரிநாமத்தை ஆரவாரத்துடன் பஜனைசெய்யுங்கள்" என்று போதித்தார்கள். மச்ச மாம்சாதிகளையுண்டு மாதரைமணஞ்செய்து மகிழ்வடையலாமென்ற எண்ணத்துடன் அநேகர் ஆஷாடபூதி வேஷமிட்டுக்கொண்டு இவர்களுடன் சேர்ந்துகொண்டார்கள். ஆனல் ஈசுவர நாம பஜனத்தினு லுண்டாகும் இன்பத்தை யவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக அநுபவிக்க ஆரம்பிக்கவே, அவர்களுக்குப் பெரியோர்களின் போதனையின் ஆந்தரார்த்தம் இன்னதென்று விளங்கிற்று. ஈசுவரனை நினைந்துநினைந்து ஹிருதயம் பொங்கிப்பொங்கி வழிந்தோடுகின்ற ஆநந்தக் கண்ணீரே அவர்கள் போதித்த மச்சத்தின் சாரமாகும்; ஆநந்தாமிர்த வெறிகொண்டு நிற்கமுடியாது கீழேவீழ்ந்து கட்டிப்புரள்கின்றபூமிதான்இன்பிற்குரியகன்னிகையாகும்.

64. யுத்தவீரர்கள் எதிரியுடன் போர்புரிவதற்குச் செல்லுமுன், போர்த்தொழிலை ஒருகோட்டையில்பழகிக்கொள்வது வழக்கம்; ஆனால் வெட்டவெளியில் நடக்கும்யுத்தத்தின் கடுமைகளை இவர்கள் அநுபவிப்பதில்லை அதுபோலவே, நீஎல்லாவற்றையும்விட்டுவிட்டுத்தவம்செய்வதற்குச் செல்லுமுன், உனது கிரகஸ்தாச்ரமவாழ்க்கையிலேற்படும் சௌகரியங்களை யெல்லாம் உனக்கு அநுகூல மாக்கிக்கொள்

65. நீ எவ்விதவாழ்க்கை வாழ்ந்தாலும் சரியே; உனது மனம் மாத்திரம் ஈசுவரனிடத்தில் நிறுத்தப்பட்டிருக்க வேண்டும். ஒருகையால் உனது வேலையைச் செய்; மறுகையால் ஈசுவரனுடைய பாதாரவிந்தத்தைப்பிடித்துக்கொள் உனக்கு உலகில் செய்வதற்கு வேலையேயில்லாமல்போய் விடும்பொழுது, அவருடைய பாதாரவிந்தங்களை இரண்டு கைகளாலும் சேர்த்துப்பிடித்து உனது ஹிருதயத்துடன் இறுகக்கட்டிக்கொள்.

66. கிரகஸ்தனும் ஈச்வரனை தரிசிக்கலாம். ராஜரிஷியாகிய ஜனகமகாராஜர் கிரகஸ்தராகத்தான் இருந்தார். ஆனால் எவனும் ஜனகராஜனுடைய நிலைமையைத் திடீரென்று அடையமுடியாது. ஜனகர் உலகதடபுடல்களினின்றும் நீங்கிஏகாந்தத்தில் இடைவிடாததியானமுயற்சியில் அநேக வருஷங்கள் செலவழித்தார். மனிதர் அடிக்கடி சேர்ந்தாப்போல் மூன்று நாட்களுக்காவது ஏகாந்தவாசம் செய்ய

முயற்சித்தால் அவர்களுக்கு அளவற்ற நன்மையுண்டாகுமென்பது நிச்சயம்; ஈசுவரன் தரிசனம் கொடுப்பதும் நிச்சயம்; ஈசுவரானுபூதியுண்டாவதும் நிச்சயம்.

67. உலகமானது கடவுளுடையது, என்னுடையதன்று என்று நிச்சயமாய் அறிந்துகொள். நான் அவருடைய இஷ்டத்தை நிறைவேற்றுவதற்கு வந்த வேலைக்காரனே.

68. கடவுள் புலியினிடத்தும் இருக்கிறார் என்பது உண்மையேயாயினும் நாம் அம்மிருகத்தினிடத்தில் சென்று எதிரே நிற்கலாகாது. கடவுள் மிகத் துஷ்ட ஜீவராசிகளிடத்திலும் வசிக்கிறார் என்பது உண்மையேயாயினும் நாம் அவற்றுடன் சேர்ந்து சகவாசம் செய்வது தகுதியன்று.

69. பின்கூறப்படுபவர்களைப்பற்றி ஜாக்கிரதையாயிரு:

(1) அடக்கமில்லாமல் வாயில்வந்ததையெல்லாம் உளறிக்கொட்டுவன்.

(2) திறந்த இருதயத்தையுடைத்தாயிராதவன்.

(3) ருத்திராட்சமணிகளையாவது துளசிமணிகளையாவது பூண்டு மகாபக்தன்போல் வேஷமிடுபவன்.

(4) துணியை யிழுத்து இழுத்து முகத்தை மூடுகின்ற ஸ்திரீ.

(5) பாசம்படர்ந்து பலவிதச்செடிகள் நிறைந்து ஓட்டமின்றியிருக்கும் ஒருமடுவின் குளிர்ந்தஜலம்; இது ஆரோக்கியத்திற்கு மிகவும்கெட்டது.

70. எல்லாத் தண்ணீரிலும் ஸ்ரீமந். நாராயணமூர்த்தி வசிக்கிறாரென்றாலும், எல்லாத்தண்ணீரும் குடிப்பதற்கேற்றதன்று. அதுபோலவே எல்லாவிடத்திலும் ஈசுவரன் இருக்கிறாரென்றாலும், எல்லாவிடமும் மனிதன் செல்வதற்கேற்றதன்று. ஒருவிதத்தண்ணீர் கால்கழுவுவதற்கு மாத்திரமும், இன்னொருவிதத்தண்ணீர் ஸ்நாநத்திற்குமாத்திரமும், வேறுவிதத்தண்ணீர்குடிப்பதற்குமட்டும் உபயோகப்பட்டு, இன்னும் வேறுவிதத் தண்ணீர்தொடவும் கூடாததாயிருப்பது போல,நாம் சிலஇடங்களின் அருகில்செல்லலாம்; சில இடங்களுக்குள் நுழையலாம்; சில இடங்களைநாம் தூரத்திலிருந்துஎறிட்டுப்பார்க்கவும்கூடாது.

71. உப்பினால் செய்தது ஒன்றும், துணியினால்செய்தது ஒன்றும்,கல்லினால்செய்ததுஒன்றும் ஆகமூன்றுவித பொம்மைகள் இருக்கின்றன. இந்தபொம்மைகளைத்தண்ணீரில் அமிழ்த்தினால் உப்பினாலாக்கப்பெற்றது உருவழிந்து தண்ணீரில்கரைந்துவிடும்; துணியினாலாக்கப் பெற்றதுஏராளமான தண்ணீரை இழுத்துக்கொள்ளும், ஆனால் உரு அழியாது; கல்லினாலாக்கப்பெற்றதோ தண்ணீரினால் சிறிதும் பாதிக்கப்படாது நிற்கும். உப்பினாலாக்கப்பட்ட பொம்மையானது ஜீவாத்மாவைப்பரமாத்மாவில் ஐக்கியப்படுத்திஇரண்டறக்கலந்து ஏகமாய்நிற்கும் மனிதரைக்குறிப்பிடுவதாகும்; இவரே முக்தபுருஷர். துணியினாலாக்கப்பட்ட பொம்மையானது சாட்சாத்பரமேசுவரனுடைய அருட்பிரசாதத்தை

யும் அறிவையும் பெற்று நிற்கும் பரமபக்தனைக்குறிப்பிடுவதாகும். கல்லினாலாக்கப்பட்ட பொம்மையானது தனது ஹிருதயத்தில் உண்மையறிவுக்குச் சிறிதேனும் இடங்கொடாத உலகினனைக்குறிப்பிடுவதாகும்.

72. ஜீவர்களெல்லோரும் ஒன்றே; ஆனால் அவரவர்களுடைய பக்குவத்திற்குத்தக்கபிரகாரம் நான்கு விதங்களாயிருக்கிறார்கள்:

(1) பெத்தன் அல்லது, பந்தத்திற்குட்பட்ட ஜீவன்

(2) முமுக்ஷு அல்லது, மோக்ஷமடையவேண்டுமென்று இரவு பகலாக இதே இச்சையாகிப்பாடு பட்டுக்கொண்டிருப்போன்.

(3) முக்தன் அல்லது, பந்தங்களினின்றும் நிவிருத்தியடைந்து உபசாந்தபதவியிலிருப்போன்.

(4) நித்திய முக்தன் அல்லது என்றும் ஸ்வதந்திரமாகி இடையிலாது பொங்குகின்ற இன்பப்பெருக்கையெடுத்தெடுத்து எப்பொழுதும் மடுத்துக்கொண்டிருப்போன்.

73. மனிதர்கள் தலையணையுறைகளைப் போன்றிருக்கிறார்கள். அவற்றில் ஒன்றின் நிறம் சிவப்பாயிருக்கலாம், இன்னொன்றின்நிறம்நீலமாயிருக்கலாம், இன்னொன்றினுடையது கறுப்பாயிருக்கலாம். ஆனால் எல்லாவற்றுக்குள்ளும் ஒரே பஞ்சு

தான் இருக்கிறது. அதுபோலவே ஒருவன் அழகாயிருக்கலாம், ஒருவன் கறுப்பாயிருக்கலாம், ஒருவன் நல்லவனாயிருக்கலாம், ஒருவன் கெட்டவனாயிருக்கலாம். ஆனால் இவர்களெல்லோருக்குள்ளும் ஈசுவரனாகிய ஒருவரே யிருக்கிறார்.

**74.** ஒருவன் வியாதியினால் அவஸ்தைப்படுகின்ற தனது குழந்தையை யெடுத்துக்கொண்டு அந்தக்குழந்தையின் வியாதிக்கு நிவிர்த்திதேடும் பொருட்டு ஒரு பரிசுத்தபுருஷரிடத்திற்குச் சென்றான். அவர் அவனை மறுநாள் வரும்படி உத்தரவு செய்தார். அப்படியே மறுநாள் அந்தமனிதன் சென்றபொழுது, அவர் "குழந்தைக்குத்தித்திப்புப் பண்டங்கள் கொடுக்காதே; குழந்தைசௌக்கியமடைந்துவிடும்" என்று கூற, அவன் "இவ்வளவுதானா? இதை நேற்றேசொல்லியிருக்கலாகாதா?" என்று கேட்டான்: அதற்கு அவர் "வாஸ்தவம்தான்: நேற்றேநான் கூறியிருக்கலாம். ஆனால் நேற்று என்எதிரே ஒருசர்க்கரைக்கட்டியிருந்தது. அப்பொழுது நான் இப்படிச் சொல்லியிருந்தால், குழந்தை அந்தச் சர்க்கரைக்கட்டியைப்பார்த்துவிட்டு நான் ஒரு ஆஷாடபூதியென்றும் சர்க்கரைதின்னலாகாதென்றுபிறர்க்குபதேசித்துவிட்டுநானேசர்க்கரைதின்கிறேனென்றும்நினைத்திருக்காதா"? என்றார்.

**75.** யோகிகளும் சந்நியாசிகளும பாம்பைப்போன்றவர்கள்: பாம்பானது தனக்கென்று ஒருவளைதோண்டிக்

கொள்வதில்லை எலிதோண்டும் வளையில் அது வசிக்கிறது. ஒருவளை வசிக்கமுடியாதபடி ஆய்விட்டால், பாம்பு வேறு வளைக்குச்சென்று விடுகிறது. யோகிகளும் சந்நியாசிகளும் அதுபோலவே, தங்களுக்கென்றுவீடுகட்டிக்கொள்வதில்லை. அவர்கட்கு இன்றைக்கு ஒருவீடு, நாளைக்கு இன்னொருவீடு இம்மாதிரியாகயோகிகளும் சந்நியாசிகளும் பிறர்வீடுகளில் காலங்கழிக்கிறார்கள்.

76. சந்நியாசாச்ரமத்துக்கு எவர் தகுந்த அதிகாரி?

நாளை எங்கு உணவுகிடைக்கும்? எப்படியுடைகிடைக்கும்? என்ற எண்ணமேயில்லாது உலகத்தைத்துறப்பவன் எவனோ, அவனே அதிகாரி. ஓர் உயர்ந்தவிருட்சத்தின் உச்சிக்கொம்புக்கு ஏறித் தனது அவயவங்களுக்கு ஆபத்து நேரிடுமோவென்ற பயம் சிறிதும் இன்றிக் கைகால் பிடிப்புக்களைவிட்டுவிடும்படியான தைரியம் வாய்ந்தவனைப் போன்றிருப்பவனே சந்நியாசத்திற்கு அதிகாரி.

77. சந்நியாசிகள் அநுஷ்டிக்கவேண்டிய விதிகள் மிகவும் கடினமானவை. ஆனால் அவர் அத்தகைய கடினமான விதிகளையநுசரிக்கத்தான்வேண்டும்:—அவர் ஜனசமூகத்திற்கு ஆசாரியரானதால்—ஜனங்கள் அவருடையஜீவித அநுபவத்திலிருந்து நல்வாழ்க்கையைக்கற்றுக் கொள்ளவேண்டும். அவர்ஸ்திரீகளுடன் சகவாசம்செய்யக்கூடாது; ஸ்திரீகளுடைய படத்தைக்கூட அவர் பார்க்கக்கூடாது.

78. தனிமையாயிருக்கும் பொழுதும் எப்பாபத்தையும் செய்யாதவனே உண்மைப்பக்தன்; ஏனென்றால் தனிமை யாயிருக்கும் பொழுது மனிதன் எவனும் பார்க்காவிட் டாலும் கடவுள் பார்க்கிறரென்று அவன் உணர்கிறன்.

79. நிர்மாநுஷ்யமான தனிக்காட்டில் யௌவனபருவ முள்ள, அழகிய ஒரு மங்கையைப்பார்த்தும் கடவுள்பார்க் கிறார் என்ற பயத்தினலே மயங்காமலிருப்பவன் எவனே, கடவுள் பார்க்கிறார் என்ற பயத்தினலே அவளிடத்தில் பார்வை செலுத்தாதவன் எவனே, அவனே உண்மையில் சன்மார்க்கமுள்ளவன்.

80. ஞானமே ஒற்றுமைக்கு இட்டுச் செல்கிறது; அஞ் ஞானமே வேற்றுமைக்கு இட்டுச் செல்கிறது.

81. விளையாட்டுப்பொம்மைகளுக்காகவும் தட்டுக்காக வும் தாயாரைநோக்கிக் கெஞ்சிக்கெஞ்சி யழுகின்ற குழந் தையைப்போல, ஈசுவரனைத்தனக்குமிகவும்நெருங்கிய பந்து வென்றும் மிகவும் அருமையானவன்என்றும் கருதிக்குற்ற மற்ற குழந்தையைப்போல அவரைத்தரிசிக்கவேண்டுமென் ற ஆவல் மிகுதியினல் அழுகின்றவன் திவ்யதரிசனம்பெறு வான். அத்தகைய அவாவும் ஆத்திரமுமுள்ள பக்தனிடத் திலிருந்து கடவுள் ஒளிந்திருக்கமுடியாது.

82. ஒருவிளையாட்டுப்பழம் அல்லது ஒரு விளையாட்டு யானை உண்மையானபழத்தையும் உண்மையான யானையை

யும்ஞாபகப்படுத்துகிறதுபோல, பூஜிக்கப்படுகின்ற விக்கிரகங்களெல்லாம் அரூபமான, நித்தியமான ஈசுவரனைஞாபகப்படுத்துகின்றன.

83. ஒருவன் சிறிய எழுத்துக்களை எழுதுவதற்கு முயற்சிப்பதற்கு முன் பெரிய எழுத்துக்களை எழுதி எழுத்துக்களைக் கற்றுக்கொள்ள ஆரம்பிப்பதுபோல, ஒருவன் முதலிலே மனத்தை வடிவங்களிலே செலுத்தி ஏகாக்கிர சக்தியைச் சம்பாதிக்கவேண்டும். வடிவங்களிடத்தே அவன் மனத்தை நிலைநிறுத்தப் பழகிவிட்டால், பின்னர் அரூபவஸ்துவினிடத்திலே நிறுத்தலாம்.

84. உண்மையில் பஜனைகளிலே பயனில்லையா? பயனுண்டு. ஒருவஸ்துவைக் கேட்பதிலே மனமும் வாக்கும் ஒன்றுசேர்ந்துதீவிரமாகக்கேட்டால்,அந்தப்பிரார்த்தனைகேட்கப்படுகிறது. "ஏ ஈசுவரா! இவையெல்லாம் உன்னுடையனவே" யென்று வாயினால்மாத்திரம் சொல்லிவிட்டு எல்லாம் தன்னுடையதேயென்று எப்பொழுதும் ஹிருதயத்தில் நினைத்துக்கொண்டிருக்கிறவனுடைய பிரார்த்தனை பயனற்றது.

85. பழங்கள் நிறைந்துள்ள மரமானது எப்பொழுதும் வளையும். நீபெரியோனாயிருக்கவிரும்பினால், தாழ்மையுடையவனாயும் வணக்கமுடையவனாகவும் இரு.

86. அதிகாலையில் கடையப்பட்ட வெண்ணெயானது மிகச்சிறந்தது. சூரியோதயத்துக்குப்பின்னர் கடையப்பட்டது அவ்வளவு சிறந்ததாகாது. ராமகிருஷ்ணபரமஹம்சர் தமது வாலிபசந்நியாச சிஷ்யர்களை நோக்கி "நீங்கள் அதிகாலையிலே கடையப்பட்ட வெண்ணெய் போன்றவர்கள்; எனது கிரகஸ்தாச்ரமசிஷ்யர்களோ சூரியன் உதயமாகி வெகுநேரம்கழித்துக்கடையப்பட்ட வெண்ணெய்போன்றவர்கள்" என்றார்.

87. ஆழ்ந்தபக்தி, உண்மை, அத்தியந்த அவா இம்மூன்றுடனே கூடினவர்களாய் ஈசுவரனை யடைகிறவர்களுக்கு குரு அவசியம் இல்லை. ஆனால் அத்தகைய அத்தியந்தஅவா மிகவும் அபூர்வம்; ஆதலால்தான் குருவேண்டியிருக்கிறார். குரு ஒருவரே; உபகுருக்கள் அநேகராயிருக்கலாம். எதேனும் கற்றுக்கொடுக்கின்றவர் உபகுருவாவர். மகானாகிய அவதூதருக்கு அத்தகைய உபகுருக்கள் இருபத்துநான்கு பெயர்கள் உண்டு.

88. அவதூதர் ஒரு மைதானத்தினூடே ஒருவிவாகஊர்வலம் மேளவாத்திய கோஷங்களுடனே செல்வதைக்கண்டார். அவ்வூர்வலம்செல்கின்ற அப்பாதைக்குப்பக்கத்திலே ஒருவேடன் ஒருபக்ஷியைக்குறிவைத்துக்கொண்டிருந்தான் அவன் ஊர்வலத்தின் தடபுடலைக்கவனிக்கவேயில்லை. அதை ஏறெடுத்துப்பார்க்கக்கூட இல்லை. அவதூதர் அந்தவேடனை

நமஸ்கரித்துச் சொன்னதாவது:—"ஐயா! நீங்கள் என்னுடைய குரு. நான் நிஷ்டையில் உட்காரும்பொழுது, உம்முடைய மனம்பட்சியினிடத்து நிலைத்ததுபோல, என்னுடைய மனமானது நிஷ்டைசெய்யப்படும்வஸ்துவிடத்திலே ஒருமுகப்படுத்தப்படட்டும்." என்பதே.

89. ஒருவலையன் ஒருகுளத்திலே மீன்பிடித்துக்கொண்டிருந்தான். அவதூதர் அவனைநெருங்கி "சகோதர! காசிக்குச்செல்வதற்கு வழிஎது?" என்று கேட்டார். அப்பொழுதுதான் தூண்டிலிலுள்ள இரையை மீன்கவ்வுவது போலிருந்தது. ஆதலால் அவன்பதிலே யுரையாமல், தூண்டிலிலே கவனமாயிருந்தான். மீன் பிடிபட்டவுடனே அவன் திரும்பிப்பார்த்து "என்ன ஐயா சொன்னீர்கள்"? என்றான். அவதூதர் அவனை நமஸ்கரித்துச் சொன்னதாவது:—"ஐயா! நீங்கள் என்னுடைய குரு. நான் பரமாத்மாநிஷ்டையிலே யுட்காரும்பொழுது, தங்கள் திருஷ்டாந்தத்தைப் பின்பற்றுவேனாக; எனது தியானம் முடிவுபெறுவதற்குள்ளாக, நான் வேறெதையுங்கவனியாமலிருப்பேனாக." என்பதே.

90. ஒருசமயத்தில் ஒரு நாரை மீன் பிடிப்பதற்காகஒருகுளத்து ஜலத்தை நோக்கி மெதுவாகச் சென்றுகொண்டிருந்தது. பின்புறத்திலே ஒருவேடன் அப்பட்சியைக்குறிவைத்துக்கொண்டிருக்கிறான்; ஆனால்அந்தப்பக்ஷிக்கு அது சிறிதும் தெரியாது. அவதூதர் அந்த நாரையை நமஸ்கரி

த்துச் சொன்னதாவது:—நான் நிஷ்டையிலே யுட்காரு கிற பொழுது, உனது திருஷ்டாந்தத்தைப் பின்பற்றி, எனக்குப் பின்னால் யார் இருக்கிறார்கள் அல்லது என்ன இருக்கிறது என்பதைப்பற்றிப்பார்ப்பதற்கே யொருபொழுதும்திரும்பாமலிருப்பேனாக'' என்பதே.

91. ஒருபருந்து தனது மூக்கிலே ஒரு மீனைக்கௌவிக் கொண்டுபறக்க, அநேகம் காக்கைகளும் பருந்துகளும்கூச் சலிட்டுக்கொண்டு அப்பருந்தினிடமிருந்து அந்தமீனைப்பிடுங்கிவிடும்பொருட்டு முயற்சிசெய்தன. அது எப்பக்கம்சென்றாலும், காக்கைகளும் பருந்துகளும் அதைவிடவேயில்லை. இதென்னடா! பெரிய தொந்தரவு என்று நினைத்து அது அந்த மீனைப்போட்டுவிட்டது. இன்னொரு பருந்து அந்த மீனை எடுத்துக்கொண்டது. கூடியிருந்த பருந்துகளும் காக்கைகளும் புதிதாகமீனையெடுத்துக்கொண்ட பருந்தைத்துரத்தின. முதலாவது பருந்து தொந்தரவுநீங்கி, ஒரு மரத்திலேபோய் அமைதியாய் உட்கார்ந்தது. அவதூதர் அதை நமஸ்கரித்துச்சொன்னதாவது:—"பருந்தே! நீஎனக்குக் குரு; மனிதன் உலகஆசைகளாகிற சுமையை எறிந்துவிடாமலிருக்கும் வரையில், அவன் உலகத்துன்பங்களினின்றும் நீங்கிச்சாந்திபெற முடியாதென்பதை நீஎனக்கு உபதேசித்தாய்'' என்பதே.

92. நீ ஈசுவர ரகஸ்யத்தை யறிவதற்கு உண்மையில் ஆத்திரமுள்ளவனாயிருந்தால், ஈசுவரனே உண்மையான சத்

குருவை உன்னிடம் அனுப்புவார். ஏ, பக்தா! குருகிடைக்கவில்லையே யென்று நீ ஏன் வருத்தப்படவேண்டும்.

93. பரம்பரையாகக் குடியானவனாயிருப்பவன், பன்னிரண்டு வருஷங்கட்கு மழைபெய்யாவிட்டாலும், நிலத்தை உழாமலிருக்கமாட்டான். சமீபத்திலே விவசாயம் செய்ய ஆரம்பித்த செட்டி, ஒருதரம்மழையில்லாவிட்டாலும் உற்சாகம்குன்றிவிடுகிறான். உண்மைப்பக்தனுக்குஒருபொழுதும் உற்சாகம் குன்றுகிறதில்லை; வாழ்நாள்முழுதும் பக்திசெலுத்தியும்ஈசுவரனைத்தரிசிக்காவிட்டாலும்கூட, அவன் மனம் உடைகிறதில்லை.

94. பொன்னினிடத்தும் பெண்ணினிடத்தும் உள்ள ஆசை மனத்திலிருந்து துடைக்கப்பட்டுவிட்டால், அங்கே வேறு என்ன இருக்கிறது? பிரஹ்மாநந்தம்தான் அங்கே உள்ளது.

95. பொன்னை வேலையாளாக உடையவனே உண்மை மனிதன். பணத்தை எப்படி உபயோகிப்பது என்று அறியாதவர்கள் மனிதர்கள்என்று அழைக்கப்படுதற்கும் யோக்கியதை யுடையவர்களல்லர்.

96. கற்கண்டுக்கட்டியினிடத்திலே மிட்டாய் வர்க்கங்களினிடத்துள்ளதீக்குணங்கள் இல்லை. ஆகையால் தாஸபாவத்தையுடைய "நான்" என்பதை, பக்தனுடைய "நான்"

என்பதை வைத்துக்கொள்வதினாலே தீங்கு இல்லை. அது மனிதனை ஈசுவரனுக்கு அருகே இட்டுச் செல்கிறது. இது தான் பக்தியோகம் எனப்படுவது.

97. ஒருஅறை நூற்றுக்கணக்கான வருஷங்களாக இருளடைந்திருந்தாலும், அவ்விருள் ஒருதீபம் கொண்டுவரப் பட்டவுடனே போய்விடுகிறது. இதுபோல எண்ணற்றஜன்மங்களிலே செய்யப்பட்ட பாவங்கள் மூட்டை மூட்டையாகக் குவிக்கப்பட்டிருந்தபோதிலும் ஈசுவரனுடைய கிருபா நோக்கம் ஒன்றினாலே இப்பாபமூட்டைகள் பஸ்பமாய்ப் போய்விடுகின்றன.

98. ஒருகிரகஸ்தசிஷ்யன்:—ஸ்வாமி! தாங்கள் ஈசுவரனை பிரத்தியட்சத்தில் தரிசனம் செய்தவர்கள் என்று நாங்கள் கேட்டிருக்கிறோம். தயவுசெய்து நாங்களும் அவரை தரிசிக்கும்படிசெய்யலாகாதா? ஈசுவரனுடையகிருபையைச்சம்பாதிப்பது எப்படி?

99 ஸ்ரீ ராமகிருஷ்ணர்:—எல்லாம் ஈசுவரனுடையஇச்சை. ஈசுவரதரிசனம் செய்யவேண்டுமானால், நீ நிரம்பவேலைசெய்யவேண்டும். நீ ஒரு ஏரிக்கரையிலே உட்கார்ந்துகொண்டு “இவ்வேரியிலே மீன் ஏராளமாக இருக்கிறது” என்று சொல்வதினாலே மீன்பிடித்தவனாய் விடுவாயா? மீன்பிடிப்பதற்கு வேண்டிய வஸ்துக்களை வாங்கிக்கொண்டு வா; பிரம்பு, தூண்டில் முதலியவற்றைச் சம்பாதி; தண்ணீரிலே

அதற்கு இரை எதையாவது போடு; பின்னர் ஆழ்ந்தஜலத்திலிருந்து மீன்கிளம்பி அருகிலே வரும். அப்பொழுது நீ பார்த்து அதைப் பிடித்துக்கொள்ளலாம். நீ சிறிதும் முயற்சி செய்யாமல் சும்மா உட்கார்ந்துகொண்டு, ஈசுவரனைக் காண்பிக்கவேண்டுமென்று என்னிடம் கூறுகிறாய். தயிராக்கி, வெண்ணெய் கடைந்து, உன்வாயிலே கொண்டு வந்து வைக்கவேண்டும், 'நான் மீனைப்பிடித்து உன்கையிலே கொடுக்கும்படி நீகேட்கிறாய். இதுநியாயம்தானா? நீயே பார்.

100. சிலருக்குச்சாராயம்கொஞ்சம்குடித்தாலேமயக்கம் உண்டாய்விடுகிறது; வேறு சிலருக்கு அதே மாதிரிமயக்கம் உண்டாவதற்கு இரண்டு அல்லது மூன்று புட்டிகள் வேண்டியிருக்கின்றன. ஆனால் இருவகையாரும் லாகிரியினாலுண்டான அந்தச்சுகத்தைச்சமமாகவேயநுபவிக்கிறார்கள். அதுபோன்றே, சிலபக்தர்கள் ஈசுவரப்பிரபையின் ஒரு கிரணத்தினாலேயே ஆநந்தமடைந்து விடுகிறார்கள். வேறு சிலர் ஜகந்நாதனுடைய சந்நிதானத்தையடைந்தால் தான், பிரஹ்மாநந்தமடைகிறார்கள். ஆனால் இருவரும் பாக்கியவந்தர்களே.

101. மனிதனுடைய ஹிருதயத்துக்குள்ளே ஈசுவரன் நுழைந்திருக்கிறார் என்பதற்கு அடையாளங்கள் என்ன? விடியற்காலம் சூரியன்தனதுவெளிச்சத்தினாலேதனது உதயத்தைக்குறிப்பிடுவதுபோல,ஈசுவரன் நுழைவதற்கு முன்

னைஸ்வயநலமற்ற தன்மை, பரிசுத்தம், நியாயாநுஷ்டானம் இவையுண்டாகும்.

102. இரும்பு, தத்துவஞானியினுடைய கல் (ரஸவேதி) யினலே தொடப்பட்டுப் பொன்னக மாற்றப்பட்ட பின்னர் பூமிக்குள் வைத்திருக்கப்படலாம், அல்லது குப்பைக் குவியலுக்குள்ளே எறியப்படலாம்; அது எப்பொழுதும் பொன்னகவேயிருக்கும், தனதுமுந்திய (இரும்பு) நிலைமையை அடையாது. எந்த மனிதனுடைய ஆத்மா சாட்சாத் பரமேசுவரனுடைய பாதாரவிந்தங்களை ஒரு தரமேனும் ஸ்பரிசித்ததோ, அந்தமனிதனுடையநிலைமைஅத்தகையது. அவன் உலகக்கூச்சல்களினிடையே வசித்தபோதிலும் சரியே, காட்டிலே ஏகாந்தமாக வசித்தபோதிலும் சரியே, ஒன்றும் அவனைக்கறைப்படுத்தாது.

103. காற்று அடிக்கும்பொழுது விசிறிகள் வேண்டியதில்லை. அதுபோலஈசுவரகிருபையுண்டாகும்பொழுது, ஜபதபங்கள் அவசியமில்லை.

104. சில மீன்களுக்கு அனேக எலும்புகள் உண்டு; வேறுசிலவற்றிற்கு ஒரே எலும்புதான்உண்டு. மீன்தின்பவர்கள், அநேகமானாலும் ஒன்றேயானாலும் எலும்புகள் எல்லாவற்றையும் நீக்கிவிடுகிறார்கள். அதுபோலவே சிலருக்குப் பாபங்கள் அதிகம் உண்டு; வேறுசிலருக்குக் கொஞ்சமாக இருக்கும்; ஆனால் ஈசுவரகிருபையானது தக்ககாலத்

திலே அவர்கள் எல்லோரையும் ஒரேமாதிரி பரிசுத்தம்செய்துவிடுகிறது.

105. கம்பிளிப்பூச்சியானது தானே உண்டாக்கிக்கொண்ட வலைக் கூட்டுக்குள்ளே அடைபட்டுக்கொள்கிறது. அப்படியே உலகினனும் தன்னுடைய ஆசைகளாகிற வலைகளிலே அகப்பட்டுக்கொள்கிறான். ஆனால் அந்தக்கம்பிளிப்புழு அழகிய, பிரகாசமான ஒரு வண்ணாத்திப்பூச்சியாகமாறுகிறபொழுது அது அந்த வலைக்கூண்டை உடைத்தெறிந்து தாராளமாக வெளியே பறந்து ஸ்வதந்திரம் அநுபவிக்கிறது. அப்படியே உலகினனும் விவேகம், வைராக்கியம் என்ற சிறகுகள்உண்டாய்விட்டால், மாயாவலைகளை உடைத்தெறிந்து விடுவான்.

106. மனத்தை ஏகாக்கிரப்படுத்துவதற்கு மிகவும் சுலபமானமார்க்கமாவது, மனத்தை ஒருவர்த்திச்சுடரிலே நிலைநிறுத்துவதாம். அதனுள்ளேயுள்ள நீலபாகமானது காரணசரீரத்துக்குச் சமானமாம். மனத்தை அதன்மீது நிலைநிறுத்துவதினாலே, ஏகாக்கிரசக்தி சீக்கிரம் அடையப்படுகிறது. நீலச்சுடரைக் கவிந்திருக்கும் பிரகாச பாகமானது சூட்சும சரீரத்துக்குச் சமானமாகும்; அதற்கு வெளியேயுள்ளது ஸ்தூலசரீரத்துக்குச் சமானமாகும்.

107. எவரும் அறியாத ஒரு மூலையில் அல்லது வனங்களின் ஏகாந்தத்திலே அல்லது உனது ஹிருதயமாகிற மௌன

னக்ஷேத்திரத்துக்குள்ளே உட்கார்ந்துகொண்டு,ஈசுவரனைத் தியானம்செய்.

108. ராமகிருஷ்ணர் ஒரு சமயத்திலே கூறினதாவது:— "ஒருமாலையிலுள்ள புஷ்பங்கள் எனக்கு வேண்டியதில்லை; ஆனால் அம்மாலையினூடு செல்கின்றநூல் எனக்குவேண்டும். இப்பிரபஞ்சத்திலுள்ள எல்லாவஸ்துக்களும் எனக்குவேண்டியதில்லை; ஆனால் இப்பிரபஞ்சமானது கோக்கப்பட்டிருக்கிற சூத்திராத்மாவைக்காண நான் விரும்புகிறேன்." என்பதே.

109. அவருடைய பெயர் சின்மயம். அவருடைய வாசஸ்தானம் ஞானம்; ஈசுவரனாகிய அவர் சர்வஞானம்.

110. வேதங்கள், தந்திரங்கள், புராணங்கள்முதலிய உலகத்துப் பரிசுத்த சாஸ்திரங்களெல்லாம் எச்சிலாக்கப்பட்டவையே; ஏனென்றால் அவைகள் மானிடர்வாய்களினாலே திரும்பத்திரும்பக் கூறப்பட்டிருக்கின்றன. ஆனால் பிரஹ்மம் அல்லது அகண்டவஸ்துவானது எச்சிலாக்கப்பட்டதேயில்லை; ஏனென்றால் ஒருவரும் அவரை இதுவரைவெளிப்படுத்தினதேயில்லை.

111. முதலில் உனது ஆத்மாவை யறிந்துகொள்; பின்னர் அநாத்மாவையும் இரண்டுக்கும் எஜமானாயுள்ள ஈசுவரனையும் நீ அறிவாய். "நான்" என்பது என்ன? எனது

கையா, அல்லதுகாலா, அல்லதுசதையா, அல்லதுரத்தமா? ஆழ்ந்துயோசனைசெய்துபார்; "நான்" என்று ஒன்று இல்லவேயில்லையென்று நீ அறிவாய். ஒரு வெங்காயத்தினுடைய தோலை உரிக்கஉரிக்க, அதிகம்தோல்வெளிப்படுகிறது; நீ விதையையே அடையமுடியாது. அப்படியே "நான்" என்பதைப்பகுத்துப்பார்த்தால் "நான்" என்றுசொல்லும்படியான உண்மையானவஸ்து ஒன்றுமேயில்லையென்று நீ காண்பாய். ஆராய்ச்சியின்முடிவு ஈசுவரனேயாம். "நான்" என்பது போய்விட்டபொழுது, ஈசுவரன் தோன்றுகிறார்.

112. ஈசுவரத்துவம் தோன்றுவதற்குமுன் மனுஷ்யத்துவம் மரிக்கவேண்டும்; ஆனால் பிரஹ்மமாயி தோன்றுவதற்குமுன் இந்த ஈசுவரத்துவமும் மரிக்கவேண்டும். மரித்தஈசுவரத்துவத்தின் மார்பின்மீதிலேயே பிரஹ்மமாயி தனது தெய்வீக நடனமாடுகிறாள்.

113. நீ நாமரூப மண்டலத்திலேயிருக்கிற வரையில் வெண்ணெயையும் மோரையும் ஒப்புக்கொள்ள வேண்டும்;—சகுண ஈசுவரனையும் பிரபஞ்சத்தையும் நீ ஒப்புக்கொள்ளத்தான்வேண்டும். உவமைகூறுமேவாமானால், ஆதியிலிருந்தபால் சமாதியிலே அனுபவிக்கப்படும்பிரஹ்மவஸ்துவாகும்; 'வெண்ணெய்' நிர்க்குண-சகுண ஈசுவரனாகும்; 'மோர்' இருபத்துநான்கு தத்துவங்களாலாக்கப்பெற்ற பிரபஞ்சமாகும்.

114. உண்மையில் பிரஹ்மவஸ்துவுக்கும் சக்திக்கும் உள்ள வித்தியாசமானது வித்தியாசமற்றதொருவித்தியாசமாம்.

பிரஹ்மவஸ்துவும் சக்தியும் ஒன்றே (அபேதமே) அக்கினியும் அதன் உஷ்ணமும் ஒன்றாவதுபோல.

பிரஹ்மவஸ்துவும் சக்தியும் ஒன்றே, பாலும் பாலின் வெளுப்பும் ஒன்றாவதுபோல.

பிரஹ்மவஸ்துவும் சக்தியும் ஒன்றே, மணியும் அதன் ஜோதியும் ஒன்றாவதுபோல.

ஒன்றில்லாமல் மற்றதை நினைக்கமுடியாது, வித்தியாசமுண்டுபண்ணமுடியாது.

115. சொரூப ஈசுவரனுடைய தோற்றமானது அநேகமாக ஆத்மீகவடிவமேயாம்; மகாபரிசுத்தமான ஆத்மாவாலேயே அது தரிசிக்கப்படும். இந்த ரூபங்கள் ஈசுவரனிடத்திலிருந்து கிடைக்கப்படுகின்ற ஞானசரீர (பகவதீதநு)த்துக்குச் சொந்தமான ஆத்ம தரிசன இந்திரியங்களினாலே அநுபவத்தில் அறியப்படுகின்றன. ஆகையால் பரிபூரண மனிதனே அந்ததிவ்விய வடிவங்களைப் பார்த்தல்கூடும்.

116. ஒருவன் ஈசுவரலயத்திலே அதிகப்பிரேமை கொண்டாலும், கெடுதல் நேரிடாது. ரத்தினத்தினுடைய கிர

ணங்கள் பிரகாசம் கொடுத்துக்கொண்டு ரம்மியமாயிருக்கின்றன; ஆனால் ஒருபொழுதும் எரிக்கிறதில்லை.

117. பரமாத்மாவானது நிஷ்க்ரியமாக, சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் முதலிய சக்திகளற்றதாக நினைக்கப்படுகிற பொழுது, நான் அந்தபரமாத்மாவை பிரஹ்மம் அல்லது புருஷன் என்ற பெயரால் அழைக்கிறேன்.

ஆனால் நான் அவரை சகுணமுள்ளவராக, சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹார சக்திகளுள்ளவராக நினைக்கிறபொழுது சக்தி, அல்லது மாயை, அல்லது பிரகிருதியென்ற பெயரால் அழைக்கிறேன்.

118. என்னிடத்திலே "நான்" என்பது உள்ளவரையில், சொரூப ஈசுவரன் என்முன்னே பற்பலவிதங்களான பெருமையுடனே ஜீவர்களாகவும் ஜகத்தாகவும் விளங்குகிறார்.

119. முதலில் ஈசுவரானுபூதி; பின்னர் ஈசுவரனுடைய சிருஷ்டியைப்பற்றிய அநுபவம். தியானம் செய்வதற்கு வால்மீகி "ராமா" என்ற மந்திரம் கொடுக்கப்பட்டார். அதைத் தலைகீழாக "மாரா" என்றுசொல்லி ஆரம்பிக்கும்படி உபதேசிக்கப்பட்டார். மா என்றால் ஈசுவரன், ரா என்றால் ஜகத்—முதலில் ஈசுவரன், பின்னர் பிரபஞ்சம்.

120. அக்கினிக்கு உருவம் இல்லை. ஆனால் அது பிரகாசச் சுடர்களிலே வெவ்வேறு வடிவங்களை யடைகிறது.

வடிவமில்லாத அக்கினிக்கு அப்பொழுது வடிவங்கள் உண்டாகின்றன. அதுபோன்றே வடிவமற்ற கடவுளும் தமக்கு வடிவங்களையுண்டாக்கிக்கொள்கிறார்.

121. பிரஹ்மம் ஞானத்துக்கும், அஞ்ஞானத்துக்கும், நன்மைக்கும் தீமைக்கும், தர்மத்துக்கும் அதர்மத்துக்கும் அதீதமானது.—உண்மையில் துவந்துவங்களுக்கெல்லாம் அப்பாற்பட்டது.

122. பிரஹ்மம் நன்மையிடத்தாவது தீமையிடத்தாவது பற்றினதன்று. அது விளக்கின்சுடர்போன்றது. விளக்கின் பிரகாசத்திலே நீபாகவதம் படிக்கலாம், அதே வெளிச்சத்திலே ஒருபத்திரத்திலே நீ யொரு பொய்க் கையெழுத்து மிடலாம்.

இன்னும் பிரஹ்மம் சர்ப்பம் போன்றது. சர்ப்பத்துக்கு அதன் நச்சுப்பைகளிலே விஷமிருந்தால் தான் என்ன?. சர்ப்பத்துக்கு அதனாலே கெடுதல் இல்லை; விஷமானது அதற்கு மரணமுண்டாக்குவதில்லை. அதுகடிக்கநேரிடும்படியான இதரபிராணிகளுக்குத்தான் அதுவிஷமாயிருக்கிறது.

அதேமாதிரி, துன்பம், பாபம், இவ்வுலகிலே நாம் பார்க்கின்ற தீமை ஆகியவெல்லாம் நம் சம்பந்தப்பட்டமட்டில்தான் அப்படியிருக்கின்றன. பிரஹ்மமானது இவ் விஷயங்களுக்கெல்லாம் அதீதமானது.

சிருஷ்டியிலே காணப்படுகின்ற நன்மையும், தீமையும் பிரஹ்மவஸ்துவுக்கில்லே.

123. உரைகல்லிலேபொன்னேயும், பித்தளேயையும்உரைத்து இதுபொன், இதுபித்தளே என்று ஒருவன் தெரிந்துகொள்வதுபோல உண்மையான சாதுவையும், வேடச்சாதுவையும் துன்பமும் நிந்தையுமாகிய உரைகல்லிலே உரைத்து இன்னவர் என்று கண்டுபிடித்துவிடலாம்.

124. நீ இவ்வுலகத்திலே வைக்கப்படுகிறபொழுது செய்யவேண்டியதென்ன?

எல்லாவற்றையும் அவரிடத்திலே ஒப்புவித்துவிடு—உன்னேயே அவரிடத்தில் அர்ப்பணம் செய்துவிடு; அதன்பின் உனக்குத்தொந்தரவேயில்லே. அப்பொழுது எல்லாம் அவருடைய இச்சையினுலேயே செய்யப்படுகின்றனவென்பதை நீ அறிந்துகொள்வாய்.

125. வேதங்கள்,சாஸ்திரங்கள்,ஆகியஎல்லாம்ஈசுவரமார்க்கத்தையே காண்பிக்கின்றன, ஒருதரம்உனக்குமார்க்கம் தெரிந்துவிட்டால், புத்தகங்களினுலாயபயன்யாது?. :அப்பொழுது, ஈசுவரனுடன் ஏகாந்தநிஷ்டைசெய்வதிலேயே ஆத்மா பிரகாசிக்கும்படியானகாலம் ஏற்பட்டுவிடுகிறது.

126. ஈசல்கள் உண்டாகின்றன, அவை எங்கிருந்துஉண்டாகின்றனவென்பது தெரிகிறதில்லே. நெருப்புஎரிகிறபொ

ழுது, அவை அதனுள்வீழ்ந்து மரிக்கின்றன. நெருப்பு ஈசலைகளையொருபொழுதும் அழைக்கிறதில்லை. இப்படியேதான் பரிபூர்ணர்களுடையபோதனையும், அவர்கள் தாங்கள் கூறுவதைக்கேட்பதற்குப் பிறரையழைப்பதில்லை; ஆனால் நூற்றுக்கணக்கானவர்கள் அவர்கள் கூறுவதைக்கேட்பதற்கு எங்கிருந்தோ வருகிறார்கள்.

127. ஈசுவரனே மானிடவடிவெடுத்து லீலைபுரிகிறார். அவர் தாம் பெரியசெப்படி வித்தைக்காரர்; ஜீவனும் ஜகத்துமாகிய இக்காட்சி அவருடைய பெரியசெப்படி வித்தையாம். செப்படிவித்தைக்காரன்தான் உண்மையில் உள்ளவன்; செப்படிவித்தைபொய்யே.

128. அத்வைதமாகிய திவ்யஞானத்தை ஜேபியிலே போட்டுக்கொண்டு, நீ எது வேண்டுமானாலும் செய்; அப்பொழுது உன்னிடத்திலிருந்து தீமையே வராது.

129. இக்கலியுகத்திலே ஞானயோகமானது மிகவும் கஷ்டமானது.

முதலாவது, இந்தயுகத்திலே நமது வாழ்க்கை ஆகாரத்தைச்சார்ந்திருக்கிறது. (அன்னகதப்பிராண)

இரண்டாவது, இந்த யுகத்திலே மனுஷ்யஜீவிதத்தின் காலம் இக்காரியத்திற்குப் போதாததாயிருக்கிறது.

மூன்றாவது, நம்மிடத்தில் ஒட்டிக்கொண்டிருக்கின்ற தேக புத்தியை நீக்குவது இந்த யுகத்திலே அநேகமாக அசாத்தியமேயாம்.

ஆனால் ஞானியடையவேண்டிய முடிவாவது, "நான் சரீரமல்லன்; நான் விராட்புருஷனுடன் ஒன்றாயிருக்கிறேன்; அகண்டமான நித்திய முக்தவஸ்துவுடன் ஒன்றாயிருக்கிறேன். நான் சரீரமாயில்லாததினாலே, சரீரத்தின் ஆவஸ்யகங்களாகிற பசி, தாகம், ஜனனமரணம், வியாதி முதலியவற்றுக்கு உட்படாதவன்" என்பதே.

சரீரத்தின் இவ்வாவஸ்யகங்களுக்கு உட்பட்டுக்கொண்டிருக்கும் ஒருவன் தான் ஞானியென்று கூறிக்கொள்வானாயின், அது, முட்செடியினாலே கையிலே எங்கும் கிழித்துக்கொண்டு, ரத்தம் பீறிட்டு ஒழுக, அத்தியந்த துக்கமநுபவிக்கும் ஒருவன் "என்ன! எனது கைக்குக்கேடு ஒன்றுமில்லை; அது எல்லாம் சரியாயிருக்கிறது" என்று சொல்வது போலிருக்கிறது.

130. சர்ப்பமானது அதன் சட்டையினின்றும் வேறாயிருப்பதுபோல, ஆத்மாவும் சரீரத்தினின்றும் வேறாயிருக்கிறது.

131. நித்தியாநந்தத்தையும் ஞானத்தையும் தியானம் செய்; நீ ஆநந்தமடைவாய். ஆநந்தம் நித்தியமானதே;

ஆனால் அது அஞ்ஞானத்தினால் மூடப்பட்டு மறைந்திருக்கிறது. இந்திரியங்களிடத்து உனது பற்றுதல்குறையக்குறைய, ஈசுவரனிடத்து உனது பக்தி அதிகரிக்கிறது.

132. ஈசுவரன் எல்லாரிடத்திலும் இருக்கிறார்; ஆனால் எல்லாரும் ஈசுவரனிடத்தில் இல்லை; அதுதான் அவர்கள் துன்பையுறுவதற்குக்காரணம்.

133. ஆடிச்சலித்துக்கொண்டிருக்கும் பாம்புக்கும் அடங்கிப்படுத்திருக்கும் பாம்புக்கும் என்ன வித்தியாசமோ அதே வித்தியாசம்தான் மாயைக்கும் பிரஹ்மத்துக்கும் உள்ளது. கிரியையிலே யுள்ள சக்தி மாயையாம்; அமைதியிலேயுள்ள சக்தி பிரஹ்மமாம்.

134. ஈசுவரனும் அவருடைய வாக்குக்களும் அவருடைய பக்தர்களும் ஒன்றேயாம்.

135. ஈசுவரப்பிரேமையிலே ஆழ்ந்து ஐக்கியமாவதற்கு எவருக்கும் பொறுமையாவது ஆசையாவது இல்லை. எவரும் விவேகத்தை அல்லது வைராக்கியத்தைப்பற்றிக்கவனிக்கிறதேயில்லை. சாதனங்கள் அப்பியசிக்கவேண்டுமென்ற எண்ணமுமில்லை; ஆனால் எல்லோரும் தங்கள் ஜேபிகளிலே புத்தக அறிவிலே ஒருசிறு துண்டெடுத்துப் போட்டுக்கொண்டு பிரசங்கம் செய்யவும் போதிக்கவும் புறப்பட்டுவிடுகிறார்கள். என்ன ஆச்சரியம்! பிறருக்குப் போதிப்பது

மிகக் கடினமானவேலை. ஈசுவரனையடைந்து ஈசுவரனிடமிரு ந்து உத்தரவுபெறுகிறவர்களே போதிக்கலாம்.

136. ஈரவிறகும் நெருப்பின்மீது வைக்கப்பட்டால், சீக்கிரத்திலே உலர்ந்து எரிய ஆரம்பித்துவிடுகிறது. அதுபோலவே, சாதுக்களுடைய சங்கம் உலகினர்களுடைய ஹிருதயங்களிலிருந்து காமமும் ஆசையுமாகிற ஈரத்தைப்போக்கடிக்கின்றது; பின்னர் விவேகாக்கினிவிடாமல் எரிகிறது.

137. உலகிலேவசி; ஆனால் உலகினனாயிராதே; "சர்ப்பத்தின்முன்னே தவளையைக்குதிக்கச்செய்; ஆனால் சர்ப்பமானது தவளையைவிழுங்கிவிடாமல் பார்த்துக்கொள்" என்று பழமொழி கூறுகிறதுபோல.

138. ஒருபடகு தண்ணீரில் இருக்கலாம். ஆனால் தண்ணீர் படகிலேயிருக்கக்கூடாது. முமுட்சு உலகிலே வசிக்கலாம்; ஆனால் உலகம் அவனிலேயிருக்கக்கூடாது.

139. சாத்வீககுணமுள்ள ஒருவன் எப்படித் தியானம் செய்கிறானென்பதை நீஅறிவாயா? அவன்அர்த்தராத்திரியிலே பிறர்பாராதிருக்கும்பொருட்டுத்திரைக்குள்ளே தனது படுக்கையின்மீது உட்கார்ந்துகொண்டு தியானம் செய்கிறான்.

140. காரணம் அறியாமலே ஈசுவரனிடத்து பக்திசெலுத்துவது என்று ஒன்று உண்டு; அது உண்டாய்விட்டால்

ஆசையுறவேண்டியது ஒன்றுமேயில்லை. அத்தகைய பக்தியுடைய ஒருவன் "ஓ ஈஸ்வரா! எனக்கு ஐசுவரியம்வேண்டியதில்லை, கீர்த்தி வேண்டியதில்லை, சரீரசுகம் வேண்டியதில்லை, சந்தோஷம் வேண்டியதில்லை, வேறொன்றும்வேண்டியதில்லை; உனது பாதாரவிந்தங்களிலே நான் என்றென்றும் பரிசுத்தமான பக்திசெலுத்தும்பொருட்டு அருள் புரிகுவாய்" என்று கூறுகிறான்.

141. பாவம் என்பது ஒரு மாங்காய்போன்றது; பிரேமையென்பது பழம்போன்றது.

142. பிரேமையென்பது சச்சிதாநந்தசொரூபியாகிய சாட்சாத் ஈசுவரனைக்கட்டுவதற்கு பக்தனுடைய கைகளிலேயிருக்கும் கயிறுபோன்றதாகும். பக்தன் ஈசுவரனைத்தன்கீழ் அடக்கிவைத்துக்கொள்கிறான். அவன் கூப்பிடும்பொழுதெல்லாம், ஈசுவரன் அவனுக்குப் பிரத்தியட்சமாகிறார்.

143. சதைக்குப்பின்னால் எலும்புகள் இருக்கின்றனவென்றும் எலும்புகளுக்குப்பின்னால் மூளையிருக்கிறதென்றும் அப்படியே மேன்மேலும் என்றும் எல்லாவற்றுக்கும்பின்னால் பிரேமையிருக்கிறதென்றும் பாரமீக புத்தகங்களிலே எழுதப்பட்டிருக்கிறது.

144. காற்றானது சந்தனத்தினுடைய வாசனையையும் அதேசமயத்தில் அழுகிப்போன பிணத்தினுடைய துர்க்கந்தத்தையும் கொண்டுசெல்கிறது; ஆனால் அது இவற்றுள்

எதனுடனும் கலக்கிறதில்லை. அதேமாதிரி முக்தியடைந்த ஜீவன் உலகிலே வசிக்கிறான்; ஆனால் உலகத்துடனே கலக்கிறதில்லை.

145. பாபத்தையும் நரகாக்கினியையும்பற்றி ஏன் உனது வாழ்நாட்களெல்லாம் பேசிக்கொண்டிருக்கவேண்டும்? ஈசுவரநாமத்தைச்சொல்லு, "ஏ ஈசுவரா! நான்செய்யக்கூடாத விஷயங்களைச் செய்திருக்கிறேன். நான் செய்யவேண்டிய விஷயங்களைச் செய்யாமல் விட்டிருக்கிறேன். ஈசுவரா என்னை மன்னித்திடுக" என்று ஒருதரமாயினும் சொல்க: இப்படிச் சொல்லிக்கொண்டு ஈசுவரனிடத்திலே விசுவாசமுடையவனாயிரு; உன்னிடத்திலிருந்து எல்லாப் பாபங்களும் நீங்கிவிடும்.

146. ஈசுவரநாமத்தைச் சொல்கிறவர்கள் பரிசுத்தவான்கள்.

147. ஒருபுண் ஆறிவிட்டால், பொறுக்குதானே விழுந்துவிடுகிறது. அதற்குமுன் அந்தப்பொறுக்கையெடுத்தால், புண்ணிலே ரத்தம் வருகிறது. அதுபோன்றே திவ்வியஞானம் உண்மையில் உண்டாகும்பொழுது, ஜாதிவித்தியாசங்களெல்லாம் ஒழிந்துவிடுகின்றன. ஆனால் அஞ்ஞானிகள் அந்த வித்தியாசங்களை மீறிநடப்பது தப்பு.

148. பக்தியானது அஞ்சனைக்கு ஒப்பிடப்படுகிறது. ஒரு சமயத்திலே ராதை தனது சிநேகிகளைப் பார்த்து,

"நான் எனது கிருஷ்ணனை எங்கும் பார்க்கிறேன்" என்றாள். அதற்கு மற்ற கோபிகாஸ்திரீகள் "நீ உனது கண்களிலே அன்பாகிற அஞ்சனத்தைத்தீட்டிக்கொண்டிருக்கிறாய்; ஆதலால் நீ அப்படிப் பார்க்கிறாய்" என்றார்கள்.

149. எல்லாம் ஈசுவரனேயாய்விட்டால், பாபம் இல்லையா? புண்ணியம் இல்லையா? என்று ஒருவன் ஸ்ரீராமகிருஷ்ணரிடம் கேட்டான்.

ஸ்ரீராமகிருஷ்ணர்:—ஆம், உண்டு; ஆனால் இல்லவுமில்லை. ஈசுவரன் நம்மிலே "நான்" என்றதை வைத்திருக்கும் பொழுது, அவர் இரண்டு என்ற எண்ணத்தையும் பாபபுண்ணியத்தைப்பற்றியுள்ள அறிவையும் வைத்துவிடுகிறார். ஆனால் சில வேளைகளிலே அவர் பலரிடத்திலே "நான்" என்பதை அடியோடு அழித்து விடுகிறார்—அப்பொழுது அவர்கள் நன்மையையும் தீமையையும் கடந்தவர்களாகிறார்கள். ஒருவன் ஈசுவரனையநுபவத்தில் அறியாமலிருக்கிறவரையில், துவைதஉணர்ச்சி, நன்மைதீமையென்ற எண்ணம் நிச்சயமாக இருக்கத்தான் இருக்கும். நன்மை, தீமையெல்லாம் உனக்குச்சரிசமானமே யென்று நீவாயினால் சொல்லிவிடலாம்; ஆனால் இவையெல்லாம்வீண்வார்த்தைகளேயென்று நீ உனதுஹிருதயத்துக்குள்ளேயறிவாய். நீ ஏதேனும் தீய செயல்களைச்செய்கிற அந்த நிமிஷமே, உனது மனச்சாட்சி உன்னைக்குத்த ஆரம்பிக்கும்.

150. வீட்டிலே விளக்கில்லாவிட்டால், அது வறுமைக்கு ஒருஅடையாளம்; ஆகையால் மனிதன் தன்னுடைய ஹிருதயத்திலே ஞானமாகிற விளக்கை ஏற்றிக்கொள்ளவேண்டும். "ஏ! மனமே! ஞானமாகிற தீபத்தைக் கொளுத்திக் கொண்டு, பிரஹ்மமாயினுடைய முகத்தைப்பார்."

151. பூமியின் நாலாபக்கங்களிலும் யாத்திரை செய்து பார்; எங்கும் நீ ஒன்றையும் காணமாட்டாய். இருக்கிறதெல்லாம் இங்கேதான் இருக்கிறது; இந்தஹிருதயத்திலேதான் இருக்கிறது.

152. ஒருவன் ஒருகூட்டம் குழந்தைகளைப் பெற்று வளர்ப்பதினால், அவன்புகழுக்குரியவனாகமாட்டான்; குழந்தைகளைப் பெறுவதிலே உண்மையாண்மையில்லை. நாய்களும்பூனைகளும்கூட குட்டிகளைப்பெற்று வளர்க்கின்றன. ஒருவன் தனது சொந்த தர்மத்தைச் செய்வதிலேயே உண்மையாண்மையுள்ளது; அத்தகைய ஆண்மை அர்ச்சுனனாலே காண்பிக்கப்பட்டது.

153. சந்தியாவந்தனம் காயத்திரியிலே அடங்கிவிடுகிறது. காயத்திரி பிரணவத்திலே அடங்கிவிடுகிறது. பிரணவமும் கடைசியில் சமாதியிலே அடங்கிவிடுகிறது. ஆகையால் எல்லாக்கர்மமும் (சந்தியாபோன்றன) சமாதியிலேதான் அடங்கிவிடுகின்றன.

154. முக்தியடைந்த ஜீவனிடத்திலே மாயையிருக்க முடியுமா? சுத்தமான பொன்னைக்கொண்டு ஆபரணங்கள் செய்யமுடியாது; கலப்பு அதனுடன் சேர்க்கத்தான் வேண்டும். மனிதனுக்குச் சரீரமுள்ள வரையில், அந்தச் சரீரத்தின் தர்மங்கள் நடைபெறுவதற்கு அவனுக்குக் கொஞ்சம் மாயை இருக்கத்தான் வேண்டும்; மாயையே பரிபூரணமாக நீங்கி விட்ட மனிதன் 21 நாட்களுக்குமேல் ஜீவிக்கமாட்டான்.

155. ஈசுவரத்துவம் மனிதனிடத்திலே எவ்வளவு காலம் இருக்கிறது?

இரும்பு அக்கினியிலுள்ளவரையில் சிவப்பாக இருக்கிறது. அது அக்கினியிலிருந்து எடுக்கப்பட்ட நிமிஷமே கறுப்பாய்விடுகிறது. மனிதன் ஈசுவரனிடத்திலே நிஷ்டை செலுத்துகிறவரையில், அவன் ஈசுவரத்துவம் கொண்டிருப்பான்.

156. ஒரு தர்க்கசாஸ்திரி ஒரு சமயத்தில் "ஞாதுரு ஞான ஞேயமென்றால் என்ன?" என்று ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் கேட்டான். ராமகிருஷ்ணர் "ஐயா! எனக்கு இந்த வித்வத் திறமைகளெல்லாம் கிடையாது; என்னிலுள்ள ஆத்மாவையும் என்னுடைய ஜகன்மாதாவையுமே நான் அறிவேன்" என்றார்.

157. முதலில் ஈசுவரனையடை; பிறகு தனம் சம்பாதி; ஆனால், நேர் எதிரிடையாகச் செய்ய முயற்சியாதே. ஆத்

மஞானமடைந்த பின்னர் நீ உலகவாழ்க்கையிலேயிருந்தால், ஒருபொழுதும் நீ உனது மனச்சாந்தியை இழக்கமாட்டாய்.

158. சிறுகுழந்தைகள் திண்ணைகளிலே உட்கார்ந்துகொண்டு கவலையில்லாமல் பயமில்லாமல் அடக்குவாரில்லாமல் பொம்மைகளை வைத்து விளையாடுகிறார்கள்; ஆனால் அவர்களுடைய தாயார் உள்ளே வந்தவுடனே, அவர்கள் தங்கள் பொம்மைகளைத் தூர எறிந்துவிட்டு "அம்மா! அம்மா!" வென்று கத்திக்கொண்டு அவளிடம் ஓடுகிறார்கள். ஏ மனிதா! நீயும் இப்பொழுது இந்த ஜடவுலகத்திலே விளையாடிக்கொண்டிருக்கிறாய்; தனம், பெருமை, கீர்த்தி, முதலிய பொம்மைகளினாலே மயங்கியிருக்கிறாய்; நீ எவ்வித பயத்தையும் கவலையையும் உணர்கிறதில்லை. நீ உனது திவ்யமாதாவை ஒருதரம் பார்த்துவிட்டால், இவற்றிலெல்லாம் நீ சுகங்காணமாட்டாய். இவற்றை யெறிந்துவிட்டு நீ அவளிடமே ஓடுவாய்.

159. ஒருகாலத்திலே ஒருசெட்டி ராமகிருஷ்ணரிடத்துக்குவந்து "நான் எல்லாவற்றையும் தியாகம் செய்தும் இன்னும் ஈசுவரனைத்தரிசிக்கவில்லையே." என்றான்.

ஸ்ரீராமகிருஷ்ணர்:—"என்னை வைத்துக்கொள்வதற்கு உபயோகப்படுத்தப்படுகின்ற தோல்பைகளை நீ அறிவாய். அப்பைகளிலிருந்து எண்ணெய் எல்லாவற்றையும்

எடுத்துவிட்டால்,பக்கங்களிலும் அடியிலும்எண்ணெய்கொஞ்சம் ஒட்டிக்கொண்டிருக்கும். கடைசிவரையில் வாசனையிருக்கும். அதுபோலவே என்னிடத்திலே இன்னும் கொஞ்சம் உலகவாசனையிருக்கிறது.''

160. பக்தி விதங்களிலே அதி கடூரபக்தி எது?

“ஜயகாளி, ஜயகாளி'' யென்று பயங்கரமாக வாயோயாமல்கூச்சலிட்டு அல்லும்பகலும் அதேதைபத்தியமாய்அப்படியேஆடி ஓடிச்சுற்றிக்கொண்டிருப்பது அல்லது, “ராமா! ராமா!'' என்று கூவிக்கொண்டே கைகளை உயரத்தூக்கிக் கொண்டு கண்ணும் கருத்தும் கலங்கிய பித்தனைப்போலக் களிக்கூத்தாடுவது. இக்கலியுகத்துக்குக்கடூரபக்திதகுந்ததென்பது மாத்திரமன்று,அஃது அதிசீக்கிரத்திலே பலனையும் அளிக்கின்றது. ஈசுவரனுடையகோட்டைதிடமென்று எதிர்க்கப்படவேண்டும்; அப்பொழுதுதான் அதுபிடிபடும்.

161. சமாதிநிஷ்டை யடைந்தபிறகுகூட, சிலர் ‘அகம்' என்பதை வேண்டுமென்றே வைத்துக்கொள்கிறார்கள். சங்கராச்சாரியார் பிறருக்குப்போதிக்கும்பொருட்டு வித்யா அகத்தை வைத்துக்கொண்டிருந்தார்.

162. அஞ்ஞானத்திலே பிறந்து அஞ்ஞானத்திலேவளர்ச்சியடைந்துவரும் அகங்காரமே தமோகுணத்தின் லட்சணமாம்.

163. "நான் எப்பொழுது முத்தியடைவேன்?" என்று நீ வினவின், "நான்" என்பது உன்னிடமிருந்து ஒழியும் பொழுது" என்பதே அதற்குவிடை. 'நான்' என்பதும், 'எனது' என்பதுமே அஞ்ஞானமாம்; "நீ" யென்பதும், "உனது" என்பதுமே உண்மைஞானமாம். உண்மை பக்தன், "ஈசுவரா! நீயே கர்த்தா! எல்லாம் செய்வதும் நீயே, செய்விப்பதும் நீயே, நான் ஒரு யந்திரம் மாத்திரமே; நீ என்னை எது செய்யச்சொல்கிறுயோ, அதையே நான்செய்கிறேன். இதுவெல்லாம் நினது மகிமையே. இந்தவீடும்இந்தக் குடும்பமும் உன்னுடையனவே, என்னுடையவையன்று; து ஆக்ஞையின் பிரகாரம் நடப்பதற்கே நான் அருகன்" என்று சொல்வான்.

164. இந்த "நான்" என்பது போகும்படி செய்ய உன்னல் முடியாவிட்டால் அந்த "நான்" என்பது வேலையாள் போலிருக்கட்டும். "நான் எனது ஆண்டானுக்கு அடிமை" என்று அறிந்துகொள்கின்ற "நான்" என்பதினல் பயமேயில்லை. சர்க்கரைப்பண்டங்கள் வயிற்றுநோவை யுண்டாக்கும்; ஆனல் கற்கண்டு ஒன்றும் செய்யாது.

165. பக்தனுடைய அல்லதுகுழந்தையினுடைய "நான்" என்பது தண்ணீர்மீது தடிகொண்டிழுத்த கோடுபோன்றதாம். அது நெடுநேரம்இருக்காது.

166. மற்றெல்லாருடைய வீண்கர்வங்கள் மெல்லமெல்ல ஒழிந்துவிடும்; ஆனல் ஒரு சாதுவுக்குத்தனது சாதுத்தன்மையைப்பற்றிய கர்வமானது ஒழிவது வெகுகடினம்.

167. ஸ்ரீசங்கரருடைய சிஷ்யர்களுள் ஒருவன் அவரிடத்திலே அதிபக்தி சிரத்தையோடு பணிவிடைசெய்துவந்தானாயினும், அவர் அவனுக்கு எவ்வித உபதேசமும் செய்யவில்லை. இதுபற்றி அவன்மனம் மிகவருந்தியிருந்தான். ஒரு சமயத்திலே சங்கரர் தனியே உட்கார்ந்துகொண்டிருந்த பொழுது, பின்புறத்திலே எவரோ வருகிற காலடி சப்தம் கேட்டது. “யார் அங்கே?” என்று அவர்கேட்டார். “நான் தான்” என்றான் சிஷியன். ஆசாரியர் உடனே “‘நான்’ என்னும்பதம் உனக்கு அவ்வளவு அருமையானால் அதை எல்லையிலாது விரித்து விரித்து இப்பிரபஞ்சத்துடனே ஒன்றாக்கிவிடு, அல்லது அதை அடியோடு விட்டுவிடு” என்றார். அந்தசிஷியனுக்கு இதுதான் உபதேசம்.

168. பணமானது பலம்மிகுந்ததோர் உபாதியாம். ஒருவன் தனவந்தனானவுடனே, அவன் அடியோடு மாறுதலடைந்து விடுகிறான்.

169. ஜீவனுடைய தன்மை உபாதி சேரச்சேர, மாறுதலடைகிறது. ஒருவன் டம்பாச்சாரி யுடையுடுத்து வெளியே புறப்பட்டானானால், கூத்துப்பாட்டுக்கள் கோலாகலமாய் அவன் வாயிலிருந்து வெளிவரும். காலிலே பூட்ஸ் அணிந்துகொண்டால், ஒருவிதமான நடையுண்டாகிறது. மெத்தைக்குப் படிமீதேறிச்செல்ல விரும்பினால் டக், டக் என்று படிக்குப்படி குதித்துக்கொண்டே செல்வான். ஒருவனுக்குக் கையிலே பேனாவிருந்தால் அவன் எதையேனும் கிறுக்கிக்கொண்டே யிருப்பான்.

170. ஈசுவரனை யடைவது எப்படி? உனது சரீரம், மனம், தனம் எல்லாவற்றையும் நீ தியாகம் செய்யவேண்டும்.

171. மனம் நிறைய ஆசைகளை வைத்துக்கொண்டு சாஸ்திரங்களை முணமுணவென்று படிப்பதிலே பயனில்லை. விவேகமும் வைராக்கியமும் இல்லாமல் ஆத்மஞானம் உதயமாகாது.

172. நீந்தக்கற்றுக்கொள்பவன் சின்னாட்கள்வரைநீந்திப் பழகவேண்டும். ஒரேநாள் நீந்தப்பழகி உடனே தண்ணீரின் இறங்கிவிடமுடியாது. இதுபோல பிரஹ்மசாகரத்திலே நீ நீந்த விரும்பினால், நன்றாக நீந்துவதற்குத்தெரிந்துகொள்ளும் வரையில் பயனற்ற முயற்சிகள் பல செய்யத்தான் வேண்டும்.

173. கோழைத்தனமும் விரோதமும்பயமும் குடிகொண்டிருக்கும் இடத்திலே ஈசுவரன் பிரத்தியட்ச மாகிறதில்லை.

174. ஹநுமார் ஈசுவரனை ஸகாரமாகவும் நிராகாரமாகவும் தரிசிக்கும்படியான பாக்கியம் பெற்றார். ஆனால் அவர் தாம் ஈசுவரதாசன் என்ற அகத்தை மாத்திரம் வைத்துக்கொண்டார். நாரதர், சனகர், சாநந்தர், சனத்குமாரர் முதலியவர்களும் அப்படியே.

175. கர்வமுள்ளவனாயிருப்பது மிகவும் இழிவு. காக்கையைப்பார். தான் எவ்வளவு அறிவுள்ளது என்று அது நி

ளைத்துக்கொள்கின்றது. அது எப்பொழுதும் வலையில் படுவதேயில்லை. ஆபத்து வருகிறதென்று சிறிது தெரிந்துவிட்டால் போதும், அது பறந்துவிடுகிறது. மிகுந்த சாமர்த்தியத்துடனே அது ஆகாரத்தைத் திருடுகின்றது. இவ்வளவெல்லாம் சாமர்த்தியம் அதற்கிருந்தும் அது மலத்தைத் தின்னாமலிருக்கமுடியவில்லை. இதுதான் அளவுக்கு மிஞ்சிய அறிவின்பயன் போலும்!

176. ஈசுவரனிடத்துப் பக்தியில்லாக்குறையினாலேயே மனிதன் துன்புறுகிறான். அந்தியகாலத்திலீசுவரஞாபகம் உண்டாகும்படியான உபாயத்தை மனிதன் அநுஷ்டித்துக்கொண்டிருக்கவேண்டும். உபாயமாவது: பக்தியை இடைவிடாது அநுஷ்டித்தலே. முன்னமேயே அத்தகைய அநுஷ்டானம் ஒருவன் செய்து கொண்டிருந்தானானால், அந்தியகாலத்தில்கூட அது அவனுக்கு உண்டாவது நிச்சயம்.

177. சமாதியிலே ஒருவனுடையமனம் எத்தன்மையதாயிருக்கும்?. ஒருமீனானது தண்ணீரிலிருந்து எடுக்கப்பட்டுச்சிலநிமிஷங்கள் கரையிலேவைக்கப்பட்டிருந்து மறுபடியும் தண்ணீருக்குள் இடப்பட்டால் அது அநுபவிக்கும் சுகம் எத்தகையதோ, அத்தகைய சுகம் போன்றதே சமாதியாம்.

178. எத்தகையகர்மம் செய்து ஈசுவரனையடையலாம்.? கர்மத்திலே வித்தியாசம்இல்லை. இந்தக்கர்மம் தான் ஈசுவர

னிடத்துக்கு இட்டுச் செல்லுமென்றும், இது இட்டுச்செல்லாதென்றும் நீ நினைக்காதே. எல்லாம் அவருடைய கிருபையைச் சார்ந்திருக்கிறது. நீ அவருடைய கிருபையை வேண்டினால், என்னகர்மம் செய்தாலும் அக்கர்மத்தை அத்தியந்த அன்புடனும் உண்மையுடனும் செய். அவருடைய கிருபையுண்டாய்விட்டால், வேண்டிய சௌகரியங்கள் உண்டாகும். அநுபூதியடைவதற்கு அவசியமான அநுகூலங்களெல்லாம் ஏற்படும். உன்னுடைய குடும்பமானது ஜீவனத்துக்கு உன்னையே சார்ந்திருக்க, நீ உலகைத் தியஜிக்கவிரும்பினால், ஒருவேளை உன்னுடையசகோதரன் குடும்பபாத்தியதைகளை யொப்புக்கொண்டு விடுவான்; உனது மனைவியே உனது ஆத்மஞான அநுபூதி முயற்சியிலே உனக்கு அநுகூலமாயிருந்தாலும் இருப்பாள்; ஒருவேளை உனக்கு விவாகம் ஆகவே ஆகாது.

179. தாங்கள் சமாதிகூடியிருக்கும் காலத்திலே தங்களுக்கு 'நான்' என்ற ஞாபகம் சிறிதேனும் உண்டா?

உண்டு. வழக்கமாக மிகவும் சொற்பம் அகம் பாக்கியிருக்கிறது. தங்கக்கட்டியும் தங்கக்கட்டியும் உராய்ந்தால் அடியோடு நொறுங்கி அழிந்து விடுகிறதில்லை. பகிர்முகப் பிரக்ஞையெல்லாம் மறைந்துவிடுகிறது. ஆனால் ஈசுவரன் தன்னுடைய தரிசனத்தைக்கண்டு நான் ஆநந்திக்கும் பொருட்டு என்னிடத்திலே சிறிது அகங்கிருதியைவிட்டு வைக்கிறார்.

சிலசமயங்களில் ஈசுவரன் அந்தச்சொற்ப அகங்கிரந்தியையும் நீக்கிவிடுகிறார். இப்பொழுது அநுபவிக்கும் நிலைமைதான் சிரேஷ்டமான சமாதி நிலைமை. அந்த ஸ்திதியின் தன்மை இத்தகையதென்று எவராலும்கூறமுடியாது— ஜீவன் ஈசுவரத்தன்மையடைந்து ஜீவனும் ஈசுவரனும் ஒன்றாகி, சிவத்தன்மைவிளங்குவதாம். சமுத்திரத்தை அளப்பதற்கு உப்புப் பொம்மை அதனுள் சென்றது. உள்ளே சென்றவுடனே கரைந்துவிட்டது. அப்படியானால், மேலே வந்து சமுத்திரத்தின் ஆழம் இவ்வளவென்று சங்கதி சொல்பவர். எவர்?.

180. எரிக்கப்பட்ட கயிறு அதன்வடிவத்தை மாத்திரம் வைத்துக்கொண்டிருப்பதுபோலவும், எதையும் கட்டுவதற்கு அதற்குவன்மையில்லாததுபோலவும், அகங்கிரந்திபிரஹ்மஞானாக்கினியினாலே எரித்துவிடப்படுகிறது.

181. பலிபீடமும், பலிக்குக்கொண்டு போகப்படுகின்ற பிராணியும், அப்பிராணியைப் பலிசெய்கின்றவனும் ஆகிய மூன்றும் ஒரேவஸ்துவே என்று நான் அநுபவத்தில் அறிகிறேன்.

182. நீ சாந்தத்துடனும் சமாதானத்துடனும் இருக்க விரும்பினால், மனிதர் உன்னைப் புகழ்ந்தாலும் இகழ்ந்தாலும் நீஅவற்றைக் கவனியாதே.

183. அரசனைக் காதலனாக உடைய ஒருஸ்திரீ தெருக்கள்தோறும் பிச்சையேற்றுத்திரியும் பிச்சைக்காரனிடத்திலே அன்பு செலுத்துவாளா? அதுபோன்றே சாட்சாத் ஈசுவரனுடைய அநுக்கிரகம்பெற்றஆத்மா இவ்வுலகத்தின் அற்பவிஷயங்களிலே ஆசையுறுமா?

184. ஈசுவரபக்தன் ஏன்ஏகாந்தத்தை விரும்புகிறதில்லை? கஞ்சாக்குடிப்பவன் ஏகாந்தத்தில் குடித்தால் ஆநந்தமடைகிறதில்லை. கஞ்சாக்குடிப்பவனைப்போலவேஈசுவரபக்தனும் ஏகாந்தத்திலே ஈசுவரநாமசங்கீர்த்தனம் செய்தால் ஆநந்தமடைகிறதில்லை.

185. வெளிச்சம் கொடுப்பது விளக்கின்தன்மை; விளக்கின் உதவியால் சிலர் சமையல் செய்துகொள்ளலாம், சிலர் பத்திரத்திலே பொய்க்கையெழுத்து இடலாம், வேறு சிலர் சாஸ்திரங்கள்படிக்கலாம். இவைபோலவே, ஈசுவரநாமத்தினுடைய உதவியினால் சிலர் மோட்சமடைய முயற்சிக்கிறார்கள், வேறு சிலர் தீயகாரியங்கள் செய்கிறார்கள். ஈசுவரநாமம் என்றும் பரிசுத்தத்திலேயே இலங்குகிறது.

186. இவ்வுலகு அநித்தியமா?

நீ ஈசுவரனையறியாமலிருக்கிறவரையில் அது அநித்தியமே. ஏனெனில், நீ அவரை (ஒவ்வொன்றிலும்) பாராமல், "நான்" "எனது" என்னும் பாசங்களினாலே உன்னையே

நீ உலகத்துடனே சேர்த்து பந்தித்துக்கொள்கிறாய். இவ்விதமாக, நீ அஞ்ஞானத்திலே அகப்பட்டுக்கொள்வதினாலே, இந்திரியவிஷயங்களுடன் உனக்குப்பற்றுதல் உண்டாகிறது; மாயையாகிய பாழும்பள்ளத்திலே நீ மேலும் மேலும் கீழே செல்கிறாய். மார்க்கம் நேரேகாணப்பட்ட பொழுதிலும் மனிதர் ஸம்ஸாரத்தைக்கடந்து செல்லமுடியாதபடி அவர்களுடைய கண்களை மாயை மறைத்துவிடுகிறது.

187. ஈசுவரனிடத்து நம்பிக்கையில்லாக் குறையினாலேயே மனிதன் துன்புறுகிறான்.

188. ஒருவன் ஜீவிதத்திலிருக்கும்பொழுதே ஞானியாய்விட்டால், அவன் ஞானமடைந்தது உண்மையென்று அறிவதெப்படி?.

ஹரிநாமம் கேட்டமாத்திரத்திலே, அவன் கண்களினின்றும் கண்ணீர் ததும்பி மாலைமாலையாகச் சொரியும்; ரோமம்சிலிர்க்கும்; ஒருவித குதுகலமுண்டாகும். இவன் உண்மையில் ஞானமடைந்தவனே.

189. பன்னிரண்டு வருஷங்கள் ரேதஸைக் கட்டினவன் மகாசித்திகள் பலஅடைவான். சரீரத்தினுள்ளே ஒரு புதிய நாடி சிருஷ்டிக்கப்படுகிறது. அது மேதாநாடி யெனப்படும். அந்தநாடி வளர்ச்சியடைந்துவிட்டால், மனிதனுக்கு எல்லாம் ஞாபகத்துக்குவரும்; எதுவும் விளங்கிவிடும்.

190. குண்டலினிசக்தி எழுப்பப்பட்டாலொழிய, ஆத்ம ஞானம் ஒருபொழுதும் உதயமாவதில்லை. மூலாதாரத்திலே குண்டலினி அடங்கிக்கிடக்கின்றது. அது எழுப்பப் பெற்ருல், சுஷும்னு நாடிக்குள்சென்று சுவாதிஷ்டானம், மணிபூரகம் முதலிய ஆதாரங்களின் மூலமாகப்போய்க் கடைசியாக பிரமரந்திரம் அடைகிறது. அப்பொழுது சமாதியுண்டாகிறது.

191. ஸ்ரீகிருஷ்ணனே ராதாயந்திரத்தை வைத்துக் கொண்டு அபாரமான சாதனங்கள் அநுஷ்டித்திருக்கிருர். யந்திரமானது பிரஹ்மயோனியேயாம்—சாதனமானது அதன்பூஜையும் தியானமுமேயாம். இந்த பிரஹ்மயோனியிலிருந்துதான் லக்ஷக்கணக்கான உலகங்கள் கிளம்புகின்றன.

192. ஈசுவரனுக்கு எதையேனும் அர்ப்பணம் செய்தால், அது ஆயிரம்மடங்கு அதிகமாகி உனக்கேதிரும்பிவரும். ஆகையால் கர்மம் முடியும் சமயத்திலே, ஒருவன் தான் தன்னுடைய கர்மபலனை ஸ்ரீகிருஷ்ணனுக்கு அர்ப்பணம் செய்துவிட்டதாக ஒருகையளவு தண்ணீர் ஊற்றிவிட்டால் போதும்!

193. பரிபூர்ணஞானியை சாக்தேயர்கள் கௌலன் என்கிருர்கள்; வேதாந்திகள் பரமஹம்சனென்கிருர்கள்; வைஷ்ணவர்கள் சம்யி என்கிருர்கள்.

194. ஈசுவராநுபூதிக்கு முன்னே பிரேமை யுண்டாகிற தில்லை.

195. ஈயானது மனுஷ்யசரீரத்திலுள்ள அழுகிய புண்ணின்மீது இப்பொழுது உட்காரும்; அடுத்த நிமிஷத்தில் ஈசுவரார்ப்பண நைவேத்தியத்தின்மீது உட்காரும். அது போலவே உலகினனுடைய மனமானது ஒரு சமயத்திலே ஈசுவரவிஷயங்களில் செல்லும்; அடுத்தநிமிஷத்திலே சிற்றின்பங்களிலே சென்றுவிடும்.

196. அநேகர் தங்களை மிகவும் வணக்கமுள்ளவர்களைப் போலக் காட்டிக்கொண்டு "நான் ஒரு சிறு புழு' என்று சொல்லிக்கொள்கிறார்கள். இவர்கள் எப்பொழுதும் தாங்கள் புழுக்களேயென்று நினைத்துக்கொள்கிறார்கள்.

197. எச்சிலிலைபோன்று இவ்வுலகில் வசி. காற்றினால் அது சிலசமயங்களில் வீட்டினுள்ளே யடித்துக்கொண்டு போகப்படுகிறது; சிலசமயங்களில் தெருவில் தீண்டாத இடங்களில் கொண்டுபோகப்பட்டுவிடுகிறது. இதுபோல, இப்பொழுது ஈசுவரன் உன்னை இங்கே வைத்திருக்கிறார்; நல்லது, இங்கேயேயிரு; அவர் உன்னை இன்னும் நல்ல இடத்தில் வைப்பாரானால், அப்பொழுதும் 'சரி' யென்று சொல். பற்றற்று உன்னை ஈசுவரனிடத்திலே நீ யர்ப்பணஞ் செய்துவிடு. நடக்கிறபடி நடக்கட்டும்.

198. 'ஹோமம்' என்ற பெயருடைய ஒருவித பக்ஷியுண்டாம். அது ஆகாயத்திலே வெகு உயரத்திலே வசிக்கின்ற

தாம். அது ஒருபொழுதும் பூமிக்கு வருகிறதேயில்லையாம்; ஆகாயப்பிரதேசங்களினிடத்திலே அதற்கு அவ்வளவு பிரீதி. அது ஆகாயத்திலேயேதான் முட்டைகூட இடுகின்றதாம். இம்முட்டைகள் ஆக்ருஷணசக்தியினாலேகிரகிக்கப்பட்டு, பூமிக்குவரும்போது வழியிலேயேகுஞ்சுபொறித்துவிடுகின்றனவாம். இங்ஙனம்பொறிக்கப்பட்ட புதியகுஞ்சுகள் தாங்கள் பூமியை நோக்கிச் செல்வதாக அறிந்துகொண்டு, உடனே தங்கள் மார்க்கத்தைமாற்றி, தங்கள்உள்ளுணர்ச்சிகளால் தூண்டப்பட்டு ஆகாயத்தைநோக்கிமேலும்மேலும் உயரப்பறந்துவிடுகின்றன. இவைபோன்றே, சுகதேவர், நாரதர், இயேசு, சங்கரர் முதலியவர்கள் தாங்கள் சிறுபையன்களாயிருக்கும்பொழுதே இவ்வுலக வஸ்துக்களிடத்துள்ள எல்லாப்பற்றுக்களினின்றும் நீங்கி ஆத்மஞானமும்திவ்ய ஜோதியுமாகிற மிகவும் சிரேஷ்டமான பிரதேசங்களுக்குச் சென்றுவிடுகிறார்கள்.

199. ஒருபெரிய சக்திவாய்ந்த கப்பலானது வேகமாகச் சமுத்திரத்தினூடே செல்வதுபோல, பூமியிலே ஒரு ரட்சகர் அவதரிக்கும்போது அவர் ஆயிரக்கணக்கான ஜனங்களை மாயாசமுத்திரத்தினின்றும் நீக்கி அக்கரைக்குக்கொண்டுசென்றுவிடுகிறார்.

200. பூனையானது தன்னுடைய குட்டியைப்பல்லினாலே கடித்து எடுத்துக்கொண்டுசெல்கிறது; அக்குட்டிக்குத்துன்பமேயுண்டாவதில்லை. ஆனால் அதேமாதிரி பூனைவாயிலே

ஒரு எலி அகப்பட்டுக்கொண்டால் அவ்வெலிமரித்தாவிடுகிறது. அப்படியே மாயையும் எல்லோரையும் அழித்தபொழுதிலும் ஈசுவரபக்தனை மாத்திரம் அழிப்பதில்லை.

201. இரவுகாலத்தில் ஆகாயத்திலே அநேக நட்சத்திரங்களை நீ பார்க்கிறாய்; ஆனால் சூரியன் உதயமாய்விட்டால், அவற்றைப் பார்ப்பதில்லை. அதனால், பகற்காலத்திலே நட்சத்திரங்கள் இல்லையென்று சொல்ல உன்னால்முடியுமா? ஏ மனிதா! நீ உனது அஞ்ஞானாந்தகார நாட்களிலே ஈசுவரனைப்பார்க்கமுடியாவிட்டால், ஈசுவரனில்லையென்று சொல்லாதே.

202. நான் எப்பொழுது முக்தியடைவேன்?

[illegible]
“நான்” என்பதும் “எனது” என்பதும் அஞ்ஞானமே
“நீ” யென்பதும் “உனது” என்பதும் ஞானமே.

203. கற்பூரம் கொளுத்தப்பட்டபொழுது, எரிந்தபின் தங்குவதொன்றுமேயில்லை. இதுபோல் நித்தியாநித்திய வஸ்துவிவேசனம் செய்யப்பட்டு உத்தமோத்தமமாகிய சமாதி நிலைமையும் அடையப்பட்டு விட்டால், “நான்” என்பதுமில்லை, “நீ” என்பதுமில்லை, பிரபஞ்சமுமில்லை; ஏனென்றால் இந்த மனமும் அகங்கிருதியும் அகண்ட பிரஹ்மவஸ்துவினிடத்திலே லயித்துவிட்டன.

204. பரிசுத்தஞானமும் பரிசுத்தபக்தியும் ஒன்றேயாம்.

205. ஒருதிருடன் இருள்மூடியுள்ளதோர் அறைக்குள்ளே நுழைந்து, அங்கேயுள்ள பலபொருள்களையும் தொட்டுப்பார்க்கிறான். ஒருவேளை அவன் ஒருமேஜையைத் தொடுகிறான்; "இதுவல்ல" வென்றுகூறிவிட்டு, அப்புறம் போய்விடுகிறான். வேறு ஏதோஒன்றைத் தொடுகிறான். "இதுவல்ல"வென்று கூறிவிட்டு, அப்பாற் செல்கிறான். இப்படியே ஒவ்வொன்றாகத் தொட்டுப்பார்த்துக் கடைசியாகப் பணப்பெட்டியிலே கைவைக்கிறான். இதுபோன்றதே பிரம்ம வஸ்துவைப்பற்றிய விசாரமும்.

206. ராதை கிருஷ்ணனையணுகி வந்துகொண்டிருந்தபொழுதே, கிருஷ்ணனுடைய சரீரத்திலிருந்து கிளம்பியசுகந்த வாசனையையடைந்தாள். ஒருவன் எவ்வளவுக்கெவ்வளவு ஈசுவரனையணுகுகிறானோ, அவ்வளவுக்கவ்வளவு ஈசுவரனிடத்து அவனுடைய பக்தியும் அதிகரிக்கிறது.

207. போலீஸ்காரன் தனது லாந்தர் வெளிச்சத்தை எவர்மீது திருப்புகிறானோ, அவரை அவனால் பார்க்கக்கூடும்; ஆனால் அவர் அவன்தானே அந்தவெளிச்சத்தைத் தன்மீது திருப்பிக்கொண்டாலொழிய அவனைப் பார்த்தல்முடியாது. அதுபோன்றே ஈசுவரன் எல்லாரையும் பார்க்கின்றார். ஆனால் அவர், தாமாகவே எவருக்கேனும் தரிசனங்கொடுத்தாலொழிய, எவரும் அவரைப்பார்த்தல் முடியாது.

208. ஸ்ரீராமச்சந்திரர் குருஉபதேசம் பெற்று வைராக்கிய சாலியாகி, உலகத்தைத்துறக்கத்துணிந்தார். ஸ்ரீராமரு

டைய மனத்தைத்துறவுமார்க்கத்திலிருந்து திருப்பும்படி அவருடைய பிதாவாகிய தசரதர் வசிஷ்டரை ராமரிடத்துக்கு அனுப்பிவைத்தார். தீவிரதரவைராக்கியம் ராமருக்கு உண்டாய்விட்டதை வசிஷ்டர் கண்டார். வசிஷ்டர் ராமரை நோக்கி "ஏ ராமா! முதலாவது என்னுடனே வாதம்செய்துவிட்டு, பின்னர் உலகை விட்டுவிடு. உலகம் ஈசுவரனிடத்திலிருந்து வேருனதா? என்று நான் கேட்கிறேன். உலகம் ஈசுவரனிடத்திலிருந்து வேருயிருந்தால், நீ உலகைவிட்டுவிடுவதைப்பற்றிச் சந்தோஷமே" என்றூர். இந்த வார்த்தைகளைக் கேட்ட ராமர் ஈசுவரனே ஜீவனும் ஜகத்துமாம் என்பதையறிந்து கொண்டார். ஈசுவரனிடத்திலேயே சமஸ்த ஜீவகோடிகளும் அடங்கிகின்றன. ராமர் ஒன்றுமே பேசவில்லை; மௌனம் சாதித்தார்.

209. அவதாரபுருஷர்கள் ஜனிக்கின்றகாலத்தில் அவர்களுடனே வேலைசெய்வதற்காகப் பிறக்கின்றவர்கள் நித்தியமுக்தி யடைந்த ஆத்மாக்களாயிருக்கவேண்டும், அல்லது, கடைசியாக ஜனிக்கின்றவர்களாயிருக்கவேண்டும்.

210. சிப்பியானது கடலின் ஆழத்திலிருந்து மேலே கிளம்பி, சுவாதி நட்சத்திரம் உச்சத்திலிருக்கும் காலத்திலே மழைத்தண்ணீரை கிரகிப்பதற்காக மேல்மட்டத்துக்கு வருகிறது. அந்த அற்புதமான சுவாதிமழையை அது கிரகிக்கும் வரையில், அது தனது ஓடுகளைத்திறந்து கொண்டே, தண்ணீரின்மேல் மிதக்கிறது. பின்னர் அது

கடலினடியிற் சென்று அந்த மழைத்துளியிலிருந்து ஒரு அழகிய முத்தை உருவாக்கும் வரையில் அங்கேயே இருக்கிறது. அதுபோன்றே, குருமொழியாகிய ஒருமொழியை உபதேசமாகப்பெற்றுக்கொள்ளும்பொருட்டுச் சற்குருவை நாடி, சில உண்மையான முமுட்சுக்கள் ஊரூராகப்போய் அலைகிறார்கள். குருஉபதேசம் தான் நித்தியாநந்தக்கதவை அவர்களுக்குத் திறந்துவிடுவது. அப்படித்தேடி ஓடிச்செய்யும்முயற்சியிலே, ஒருவனுக்கு சற்குரு கிடைக்கும்படியான பாக்கியம் ஏற்பட்டிருந்தால் அவன் ஜனசமுகத்திலிருந்து நீங்கிவிடுவான்; தனதுசொந்தஹிருதயத்துக்குள்ளே நுழைந்து நித்திய சாந்தியடையும் வரையில் அவன் அங்கே சும்மா ஒளிந்திருக்கிறான்.

211. ஒரு பணக்கார ஜமீன்தாரனுடைய காரியஸ்தன் வெளியூர்களுக்குச்சென்றால் அந்தஜமீன்தாரனின்கீழ்இருக்கும் குடித்தனக்காரர்களைப்பலவிதத்திலும் இம்சிக்கிறான். ஆனால் திரும்பித்தலைநகருக்கு வந்தபின்னர், ஜமீன்தாரனுடைய முன்னிலையில் பக்திமிகுந்தவனாய் விடுகிறான்; குடித்தனக்காரர்களை பட்சமாக நடத்துகிறான்; அவர்களுடைய குறைகளையெல்லாம் சாங்கோபாங்கமாக விசாரணை செய்கிறான்; பட்சபாதமற்றவனாக முயற்சிக்கிறான்; அந்தக்கடூர காரியஸ்தன் தனது எஜமானன் சமீபத்தில் இருப்பதினால் பயந்து நல்லவனாகிறான். அதுபோன்றே, பரிசுத்தவான்களுடைய சந்நிதியிலே தீயோர்களுக்கு பயமும் பக்தியும் உண்டாகி அவர்கள் நல்லோர்களாகி விடுகிறார்கள்.

212. ஜீவன் சித்தசுத்திபெற்று மோட்சமடையச் செய்யும் முயற்சியில் அநுஷ்டிக்கவேண்டியிருக்கின்ற சாதன சோபானங்கள் இவையாம்:—

1. சாது சங்கம்.

2. சிரத்தை. அதாவது, ஆத்மீகவிஷயங்களிலே அத்தியந்த விசுவாசம்.

3. நிஷ்டை. அதாவது, தன்னுடைய லட்சியத்தினிடத்தில் ஏகாக்கிரபக்தி.

4. பாவம். அதாவது, ஈசுவரதரிசனமுண்டாய்விட்டால், பேச்சற்று அப்படியே வியித்துவிடுதல்.

5. மகாபாவம். அதாவது, பாவம் அதிகரித்தபொழுது அதுமகாபாவம் எனப்படுகிறது. பக்தன் ஒரு பித்தனைப்போன்றுசில சமயங்களில் சிரிக்கிறான், சிலசமயங்களில் அழுகிறான், அவன் அடியோடு சரீரத்தை மறந்துவிட்டான். அவனுக்குக் கிஞ்சித்தும் சரீரப்பிரக்ஞை கிடையாது. இந்த நிலைமை ஜீவனால்மாத்திரம் அடையப்படுகிறதன்று. மகா புருஷர்கள் அல்லது ஈசுவராவதாரங்களால் மாத்திரம் அடையப்படுகிறது.

6. பிரேமை. அதாவது ஈசுவரனிடத்துச்செலுத்துகின்ற அத்தியந்த அன்பு. மகாபாவம் உள்ளவிடத்தில் அது

வும் இருக்கும். ஒருவன் இந்த நிலைமையடைந்தானென்பதற்கு இரண்டு அடையாளங்கள் உண்டு. அவையாவன: முதலாவது இவ்வுலகைமறதி; இரண்டாவது தன்மறதி. இதனால் பக்தன் ஈசுவரனைநேருக்குநேரே தரிசித்துப்பிறவிப்பயனையடைகிறான்.

213. தண்ணீர் வைத்துள்ள ஒரு ஜாடியினடியிலே ஒரு சிறு துவாரம் இருந்தால், தண்ணீர் முழுதும் அந்தச்சிறு துவாரத்தின் மூலமாக வெளியே ஓடிவிடும். அதுபோன்றே, உள்ளினிடத்தில் அணுவளவேனும் உலகவாசனையிருந்தால், அவனுடைய முயற்சிகளெல்லாம் பயனற்றனவாய்விடும்.

214. சர்ப்பங்கள் நிறைந்தவீட்டிலே குடியிருப்பவர்கள் எப்பொழுதும் ஜாக்கிரதையாயிருக்கிறதுபோல, இவ்வுலகில் வசிப்பவர்களும் எப்பொழுதும் பொன்னாசை, பெண்ணாசை ஆகியஇந்தவித மயக்கங்களிலிருந்தும் நீங்கிஜாக்கிரதையாயிருக்கவேண்டும்.

215. எல்லாம் செய்கிறவர் ஈசுவரனே என்று ஒருவனுக்குத்திடநம்பிக்கைவிழுந்துவிட்டால், அவன்ஜீவன்முக்தனாய்விடுகிறான்.—"ஏ ஜகன்மாதா! உனது வேலையை நீ செய்கிறாய்; ஆனால் ஜனங்கள் 'நான் செய்கிறேன்' என்று கூறுகிறார்கள்."

216. தண்ணீர் ஓடிக்கொண்டும் கலங்கிக்கொண்டும்இரு ந்தால் அதில்பூரணசந்திரன் அப்படியே பிரதிபலிக்காமல், சிறுசிறு துண்டுகளாகப்பிரதிபலிக்கும், அதுபோல, உலக ஆசைகளினாலும் அவாக்களினாலும் கலங்கிக்கொண்டிருக் கின்றமனத்திலே ஈசுவரப் பிரகாசம் பரிபூரணமாய் உண் டாவதில்லை.

217. ஈசுவரனிடத்திலே வித்தை, அவித்தை ஆகிய இர ண்டும் இருக்கின்றன. வித்தியாமாயையானது மனிதனை ஈசுவரனிடத்துக்கு இட்டுச்செல்கின்றது. அவித்தியாமாயை யானது மனிதனை ஈசுவரமார்க்கத்தினின்றும் பிரித்து உல கத்திலே புகுத்திவிடுகின்றது. ஞானம், பக்தி, வைராக்கி யம், தயை ஆகிய இவையெல்லாம் வித்தியாமாயையின்வெ ளிப்பாடுகளே; அவற்றின் உதவியால்தான் ஒருவன் ஈசுவ னையடையக்கூடும்.

ஆனால் நீ இன்னும் ஒருபடியேறினால், ஈசுவரனைய டைகிறாய்—பிரஹ்மஞானம் உதயமாகிறது. இந்தஸ்திதி யிலே நான் ஈசுவரன் எல்லாமாயிருக்கிறார் என்பதையுணர் கிறேன்—நான் பார்க்கிறேன்.—தள்ளுவதற்கு அல்லது எடுத்துக்கொள்வதற்கு ஒன்றுமேயில்லை! எவரையாவது கோபித்துக்கொள்ளுதல் எனக்குஅசாத்தியமாய்விடுகிறது.

ஒருசமயத்திலே நான் வண்டியில் போய்க்கொண்டி ருந்தபொழுது, ஒரு மேல்மெத்தை ஜன்னலில் இரண்டு

தாசிகள் நிற்பதைக் காணும்படி நேர்ந்தது. ஆனால்நான் உண்மையில் அவர்களிடத்தில் ஜகன்மாதாவையே கண்டு நமஸ்கரித்தேன்.

நான் இந்தஸ்திதியை யடைந்தபொழுது, (தக்ஷிணேசுவர ஆலயத்திலேயுள்ள) ஜகன்மாதாவுக்கு பூஜைபுரியமுடியவில்லை. அதற்கு, கோயில் காரியஸ்தன் என்னைத்திட்ட ஆரம்பித்தான். அவன் அப்படித்திட்டியதினால், எனக்குச்சிறிதும் வருத்தம் உண்டாகவில்லை. நான் வெறுமனே சிரிக்கத்தான் செய்தேன்.

218. ஈசுவரப்பிரேமையாகிற அமிருதத்தை ஏராளமாகக்குடித்துள்ள ஒருபக்தன் முழுக்குடிகாரன் போன்றேயிருக்கின்றான்; ஆகையினாலே அவன் சமுதாயவிதிகளை எப்பொழுதும் அநுசரிக்கமுடியாது.

219. ஆணியானது கல்லுக்குள்ளே நுழையாது; மண்ணுக்குள்ளே சுலபமாக நுழையும். அதுபோல, மகான்களின் போதனையும் பிரபஞ்சத்திலே தடித்துக் கடினமாயிருக்கின்ற மனத்துக்குள்ளே நுழையாது; விசுவாசமும் நம்பிக்கையும் நிறைந்த ஹிருதயத்துள்ளே சுலபமாக நுழைந்துவிடும்.

220. சில சமயங்களிலே சித்திகளையுடைத்தாயிருப்பது அபாயகரமாயிருக்கிறது. என்னிடத்திலே தோத்தாப்பூரி

ஒன்றுசொல்லியிருக்கிறார். அதாவது“ஒருசமயத்திலே ஒரு சித்தபுருஷர் சமுத்திரக்கரையிலே உட்கார்ந்துகொண்டிருந்தார். ஒருபெரும்புயற்காற்றுஉண்டாயிற்று.இதென்னபெருங்கோஷ்டமாயிருக்கிறதேயென்றுசித்தர்நினைத்து 'புயற்காற்று நிற்கட்டும்'என்றார். உடனே காற்று அடங்கிவிட்டது. அப்பொழுது அந்தச் சமுத்திரத்திலே காற்றினுலே ஒருகப்பல் வெகு வேகமாகப் போய்க்கொண்டிருந்தது. புயற்காற்று திடீரென்று நிற்கவே, கப்பல் அமிழ்ந்திவிட்டது; அதனுள் இருந்தவர்களும் மடிந்தார்கள். இப்பொழுது அத்தனை பெயர்கட்கும் மரணத்தையுண்டாக்கிய பாபமானது அந்தச்சித்தபுருஷரைச் சேர்ந்தது; இதனுல் அவர் தமது சித்தி சக்திகளையெல்லாம் இழந்துவிட்டு நரகம போய்ச்சேர்ந்தார்” என்பதே.

221. ஸ்ரீசங்கரருக்கு ஒருமூட சிஷ்யன் இருந்தான். அவர் என்ன செய்தாலும் அவனும் அப்படியே செய்துவந்தான். அவர் “சிவோகம்” என்று கூறினுல், அவனும் “சிவோகம்” என்பான். அந்த சிஷ்யனுடைய மூடத்தனத்தை விளக்கிக்காட்டுவதற்காக, ஸ்ரீசங்கரர் தாம் ஒருநாள் வழியில் போய்க்கொண்டிருந்தபொழுது கருமான் உலையிலே இரும்பைக்காய்ச்சி ஊற்றிக்கொண்டிருந்ததைப் பார்த்தார்; அவ்வாறு அவர் அதனைப்பார்த்ததும் அப்படியேஎடுத்துக்குடித்துவிட்டார்.சிஷ்யனைக்கூப்பிட்டு அவனையும் குடிக்கச்சொன்னார். குருசெய்ததை சிஷ்யன்இப்பொ

பூஜை செய்யமுடியவில்லை; அதிலிருந்து அவன் "சிவோகம்" என்று சொல்வதையும்விட்டு விட்டான்.

222. சாத்விகபூஜை, ராஜஸிகபூஜை, தாமஸிகபூஜை ஆகிய இவற்றுக்குள்ள வித்தியாசமென்ன?

ஆடம்பரமில்லாமலும், கர்வமில்லாமலும், தனது ஹிருதய ஆழத்திலிருந்துபூஜிக்கின்றவன்சாத்விக உபாசகன். ஈசுவரனை பூஜிக்கும்பொழுது வீட்டையலங்கரித்துச்சங்கீதமேளதாளவாத்தியங்களுடனே தடபுடல்செய்து,பெரியதோர் விருந்தும் நடத்த ஏற்பாடுசெய்பவன் ராஜஸிக உபாசகன். ஈசுவரபூஜை செய்யும்பொழுது நூற்றுக்கணக்கான ஆடுகளையும் கோழிகளையும் பலிகொடுத்து, மதுமாம்சாதிகளைநைவேத்தியத்திற்கு வைத்து ஆடிப்பாடிஅதனைச்செய்கின்றவன் தாமஸிக உபாசகனும்.

223. ஏழுபெயர்கள் ஈசுவரன்பொருட்டுப் பெரியோர்களுக்குக் கீழ்ப்படியவில்லை. அவர்கள்:—பரதன், ப்ரஹ்லாதன், சுகதேவர், விபீஷணர், பரசுராமர், பலி ஆகிய இவர்களும், கோபிகாஸ்திரீகளும்.

224. பிறர் எது செய்யவேண்டுமென்று நீ விரும்புகிறாயோ, அதை நீயே செய்.

225. ஹிருதயர் எனது சரீரத்தின் ஸ்திதியைப் பார்த்தபின் "இவ்வளவு மெலிந்த சரீரத்திலே அவ்வளவு ஆத்மஞா

229. ஒருபக்தன்:—"ஸ்வாமி! எனக்கொரு சந்தேகம் உளது. நமது மனம் ஸ்வதந்திரமானதென்றும், நன்மையோ தீமையோ நாம் பிரியப்படுகின்ற எதைவேண்டுமானாலும் செய்துகொள்ளலாமென்றும் சிலர்சொல்லுகிறார்களே அஃது உண்மைதானா?

ஸ்ரீ பரமஹம்சர்:—"எல்லாம் ஈசுவரனுடைய இச்சையைப்பொறுத்தது. இதெல்லாம் அவருடையலீலை. அவர் நன்மை, தீமை, பெரிது, சிறிது முதலிய பற்பல விஷயங்களைப் பற்பலவழிகளிலே நாம் செய்யும்படி செய்துகொண்டிருக்கிறார். நல்லோர், தீயோர்ஆகிய இவர்களெல்லோரும் அவருடைய மாயையே—அவருடைய லீலையே. திருஷ்டாந்தமாக, ஒரு தோட்டத்திலுள்ள மரங்கள் எல்லாம் உயரத்தில் அல்லது அழகில் அல்லது கம்பீரத்தில் ஒன்றுபோலில்லை.

மனிதன் ஈசுவரனை அநுபவத்தில் அறியாமலிருக்கிறவரையில், தான் ஸ்வதந்திரன் என்று நினைக்கிறான். ஆனால் மனிதனிடத்திலே இந்தபிரமையையைவைத்திருப்பவர் அவரே; இல்லையேல்பாபங்கள் பெருகிவிடும். ஜனங்கள் தீமைசெய்ய பயப்படமாட்டார்கள்; குற்றத்துக்கோ, பாபத்துக்கோ தண்டனையும் ஏற்பட்டிராது.

ஆனால் ஈசுவரனைத்தரிசித்தவனுடையலட்சணத்தை நீ அறிவாயா?.—"நான் யந்திரம், நீகர்த்தா; நான் க்ஷேத்திரம், நீ க்ஷேத்திரக்ஞன்; நான் ரதம், நீசாரதி; நீ என்னை

அசைப்பிப்பதுபோல, நான் அசைகிறேன்; நீ என்னைப் பேசுவிப்பதுபோல நான்பேசுகிறேன்!'' என்பவனே ஈசுவரனை யறிந்தவன்.

230. பக்தன்:—ஆகாரவிஷயத்திலே, ஒருவன் தனக்குக் கிடைப்பதையுண்ணக்கூடாதா?

ஸ்ரீ ராமகிருஷ்ணர்:—அது ஞானஅபிவிருத்திநிலைமையைப்பொறுத்திருக்கிறது. ஞானமார்க்கத்திலே அதுதீமையை உண்டுபண்ணுவதில்லை; ஞானி யுண்ணும்பொழுது, அவன் தன்னுடைய உணவை குண்டலினி யக்கினியிலே அர்ப்பணம்செய்து விடுகிறான். ஆனால் பக்தனுடையவிஷயம் வேறு. பக்தன் பரிசுத்தமான ஆகாரத்தைத்தான் உட்கொள்ளவேண்டும்; தனது அன்புக்குரியஆநந்தநாதனுக்கு, தான் தாராளமாகக் கள்ளங்கபடின்றிக் கொடுக்கக்கூடிய ஆகாரத்தையுட்கொள்ளவேண்டும். மாம்சபக்ஷணம் பக்தனுக்காகாது.

ஆனால், ஒருவன் பன்றிமாம்சத்தைத் தின்றபொழுதிலும் ஈசுவரனிடத்திலே பக்தி செலுத்தினானால், அவன் புண்ணியவானே; ஒருவன்பாலும்சோறுமேதின்றுகொண்டிருந்தபொழுதிலும் அவனுடைய மனமானது பெண்ணிடத்திலும் பொன்னிடத்திலும் சென்று கொண்டிருந்தால், அவன் மிகவும் இழிந்தவனே.

231. ஆரம்பத்திலே யொருவன் தனது மனத்தை ஏகாந்த இடத்திலே யுட்கார்ந்துகொண்டு ஒருமுகப்படுத்த எப்பொழுதும் முயற்சிக்கவேண்டும்; இல்லாவிட்டால், அநேக விஷயங்கள் அந்த மனத்தைக்கலைத்துவிடும். பாலையும் தண்ணீரையும் ஒன்றுகவைத்தால், அவை கலந்து கொள்வது நிச்சயம். ஆனல் பாலானது கடைதலினலே வெண்ணெயாக மாறிவிட்டால், இந்தமாற்றுரு அடைந்தபால் (வெண்ணெய்) தண்ணீருடன் கலந்துகொள்வதற்குபதிலாக அதன் மீது மிதக்கும். ஆகையால் ஒருவன் இடைவிடா அப்பியாசத்தினல் மனத்தை யொருமுகப்படுத்தி விட்டானுனல் அவன் எங்கிருந்த பொழுதிலும் அவனுடைய மனம் எப்பொழுதும் சுற்றங்கட்கு மேலேகிளம்பி, ஈசுவரனிடத்திலே அமைதியுறும்.

232. ஏன்பத்தன் எல்லாவற்றையும் ஈசுவரன்பொருட்டு தியஜித்துவிடுகிருன்?

வெளிச்சத்தைக்கண்டவுடனே இருட்டிலிருந்து பூச்சி பறந்துவிடுகிறது; எறும்பு சர்க்கரையிலே உயிரை யிழந்து விடுகிறது. ஆயினும் அது ஒருபொழுதும் அதை விடுகிறதில்லை. அப்படியே பக்தன் என்றும் ஈசுவரனிடத்திலே ஒட்டிக்கொள்கிருன்; மற்றெல்லாவற்றையும் விட்டுவிடுகிருன்.

233. ஈசுவரனைப்பற்றிய ஞானம் நம்பிக்கையுடனேயே வளர்கிறது. நம்பிக்கை குறைந்தவிடத்திலே அதிகஅறிவுக்கு எதிர்பார்ப்பது வீணே.

234. எவ்வளவுக்கெவ்வளவு இந்திரியவிஷயங்களிலேபற்றுதல்குறைகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு ஈசுவரபக்தியதிகரிக்கிறது.

235. கடலினடியிலே யிருக்கும் காந்தக்கல் மலையானது அக்கடலிலே செல்லும் கப்பலை யாகருஷித்து அதிலிருந்த இரும்பு ஆணிகளையெல்லாம் கழற்றி யிழுத்துக்கொண்டு பலகைபலகையாகப் பிரித்துக்கப்பலைக் கடலுக்குள் அமிழ்த்திவிடுவதுபோல, மனிதனும் விராட்புருஷனென்கிற காந்தத்தினாலே ஆகருஷிக்கப்படுகிறபொழுது அந்தக்காந்தசக்தி ஒரு நிமிஷத்திலே மனிதனுடைய அகங்கிரந்தியையும் ஸ்வயநலத்தையும் அழித்துவிட்டு ஈசுவரனுடைய அகண்டமான அன்புசாகரத்திலே ஆத்மாவை யமிழ்த்திவிடுகிறது.

236. இயேசு கிறிஸ்து யூதர்களாலே குருசில் தறிக்கப்பட்டபொழுது, அவர் அவ்வளவு துன்பம் அநுபவித்தபொழுதிலும் ஏன் அந்த யூதர்களைக் கடவுள் மன்னிக்கவேண்டுமென்று பிரார்த்தனை செய்தார்?

ஒரு சாதாரணத் தேங்காயை உடைத்தால், ஓடும் காயும் ஒன்றுசேர்ந்திருக்கிறது. ஆனால், நன்றாக முற்றி உலர்ந்த தேங்காயை உடைத்தால், காய் ஓட்டினின்றும் வேறாய்விடுகிறது. இயேசுகிறிஸ்து முற்றின தேங்காய் போன்றவர்; அவருடைய அந்தராத்மா அவருடைய ஸ்தூலசரீரத்திலிருந்தும் வேறாயிருந்தது; ஆகையால் சரீரத்துன்பங்கள் அவரை பாதிக்கவில்லை. ஆணிகள் ஒன்றன்மேலொன்

று அடிக்கப்பட்ட பொழுதிலும் அவர் தமது எதிரிகளின் நன்மையைக்கோரி மனஅமைதியுடனே பிரார்த்திக்க முடிந்தது.

237. இவ்வுலகிலே காணப்படுகின்ற சித்தர்கள் ஐந்து விதமாவர்:—

(1) ஸ்வப்பன அருளினாலே பரிபூரண ஸ்திதியை அடைகிறவர்கள் ஸ்வப்பன சித்தர்கள்.

(2) மந்திரத்தின் மூலமாகப்பரிபூரண ஸ்திதியை அடைகிறவர்கள் மந்திரசித்தர்கள்.

(3) ஒரு ஏழையானவன் புதையல் கண்டுபிடித்ததினாலேயாவது அல்லது ஒரு பணக்காரியை விவாகம் செய்துகொண்டதினாலாவது திடீரென்று தனவந்தனாய்விடுவது போல, திடீரென்று பரிபூரண ஸ்திதியை அடைகிறவர்கள் ஹதத் ஸித்தர்கள்.

(4) ஈசுவர கிருபையினாலே பரிபூரண ஸ்திதியை யடைகிறவர்கள் கிருபாசித்தர்கள். ஒருவன் ஒரு காட்டை வெட்டித் திருத்திக்கொண்டிருந்த பொழுது, திடீரென்று ஒரு வீட்டையோ குளத்தையோ கண்டுபிடித்து விடுவது போல, சிலர் அதிக சிரமமில்லாமலே திடீரென்று பரிபூரண ஸ்திதி யடைந்துவிடுகிறார்கள்.

(5) எப்பொழுதுமே பரிபூரண ஸ்திதியிலிருப்பவர்கள் நித்திய சித்தர்கள். பூசினிச்செடியிலே, முதலில் காய் வந்து பின்னர் பூவெளிப்படுவதுபோல, என்றும் பரிபூரணமாயுள்ளவன் பிறப்பிலேயே சித்தனாய்ப் பிறந்திருக்கிறான்; அவன் பரிபூரணஸ்திதி யடைவதற்கு முயற்சிகள் செய்பவன்போலத் தோன்றுவதெல்லாம்மானிடவர்க்கத்தினர் அவற்றைப்பின்பற்றும் பொருட்டேயாம்.

238. ஒரு பழம் பழுத்து மரத்திலிருந்து தானேவிழுந்தால், அது மிகவும் ருசியாயிருக்கிறது; ஆனால் காய் பறிக்கப்பட்டுச்செயற்கையினாலே பழுக்கும்படிசெய்யப்பட்டால் அஃது அவ்வளவுருசியாயிருக்கிறதில்லை; சீக்கிரம்வதங்கிவிடுகிறது. ஒருவனுக்கு எல்லா வஸ்துக்களினும் ஒற்றுமையுணர்ச்சி அநுபவத்தில் உண்டாகும்பொழுதுதான், அவனுக்கு ஜாதிவித்தியாசங்கள் கிடையா. ஆனால் இவ்வுயர்ந்த அநுபவம் உண்டாகாதவரையில், பிறரிடத்திலே உயர்வு, தாழ்வு என்ற எண்ணம் எவருக்கும் நீங்காது; அத்தகையோரெல்லோரும் ஜாதிவித்தியாசங்களை யநுசரிக்கவேண்டியவர்களே. இந்த அஞ்ஞானதசையிலே ஒருவன்ஜாதிவித்தியாசங்களையெல்லாம் விட்டுவிட்டு, தான்பரிபூரண ஸ்திதியடைந்துவிட்டதாகவும், முக்திவாழ்க்கை வாழ்வதாகவும் பாவனைசெய்வானானால், அவன்செயற்கையினாலே பழுப்பிக்கப்பட்ட பச்சைக்காய்போன்றவனே.

239. கற்கண்டை ஒருதரம் சாப்பிட்டவன் மலத்தைச் சாப்பிடப்பிரியப்படமாட்டான்; ஒரு அரண்மனையிலே நித்திரை செய்தவன் அழுக்குக்குடிசையிலே படுத்துக்கிடக்க விரும்பமாட்டான்; அப்படியே திவ்யஆநந்தத்தின் அருமையை அநுபவித்த ஆத்மா இவ்வுலகத்துச்சாதாரணசுகங்களிலே சந்தோஷம் காண்கிறதில்லை.

240. மாம்பழம் தின்றால் பிறர் அறிந்து கொள்ளாதிருக்கும் பொருட்டு உதடுகளைத்துடைத்துக்கொள்கிறவர்களும் உண்டு; ஆனால் ஒரு மாம்பழம் கிடைத்தால் பிறரையும் கூப்பிட்டு அவர்களுடன் பங்கிட்டு உண்பவர்களும் உண்டு. அதுபோலவே, சிலர் தாங்கள் பிரஹ்மாநந்தம் அடைந்துவிட்டால் பிறருக்கும்பிரஹ்மானந்தம் ஊட்டுகிறார்கள்; வேறு சிலர் தாங்களே அநுபவிக்கிறார்கள்.

241. நாளையுண்பதற்கு என்செய்வது? உடுப்பதற்கு என்செய்வது? என்றநினைப்பேயில்லாமல் உலகைமுற்றத்துறப்பவனே உண்மைச் சந்நியாசியாவதற்குத் தகுந்தவன். ஒருயர்ந்த மரத்தின் உச்சிமீதேறித்தனக்கு அபாயம் நேரிடுமேயென்ற நினைப்பு சிறிதுமேயில்லாமல், அவ்வுயரத்திலிருந்து அற்பமும் பயமில்லாமல் தானுகவேவிழுகின்றமனிதன் போன்றிருக்கவேண்டும் உண்மைச்சந்நியாசி.

242. உலகினர் எல்லாவற்றையும் தியாகம்செய்துவிட்டு, ஈசுவரனிடத்துக்கு ஏன் ஓடுகிறதில்லை?. இவ்வுலகமானது

மனிதர் பற்பலவேஷங்கள் அணிந்து அநேக பாத்திரங்களாக நடித்துவிளையாடுகின்ற ஒரு நாடகசாலைபோன்றது. கொஞ்சக்காலமாவது விளையாடுகிறவரையில், அவர்களுக்கு அந்த வேஷத்தை யெடுத்துவிடப்பிரியமில்லை. அவர்கள் கொஞ்சக்காலம் விளையாடட்டும்; பிறகு அவர்கள் தாங்களாகவே வேஷத்தை நீக்கிக்கொள்வார்கள்.

243. உலகவாழ்க்கையிலிருந்தும் ஆத்மஞானமடைந்ததாக ஜனகருடைய திருஷ்டாந்தத்தை ஜனங்கள்எப்பொழுதும் கூறுகிறார்கள். ஆனால் மானிடவர்க்கத்தின் சரித்திரம் முழுதிலும் இந்த ஒன்றேதான் திருஷ்டாந்தம். லட்சத்தில் ஒருவர் அவர். சாதாரணவிதியாவது, எவரும் பொன்னையும் பெண்ணையும் துறந்தாலொழிய ஆத்மீக பரிபூர்ணத்துவத்தையடைய முடியாதென்பதே. நீ உன்னையே ஒரு ஜனகராக நினைத்துக்கொள்ளாதே. ஜனகர்இருந்துஅநேக நூற்றுண்டுகள்ஆய்விட்டன; உலகத்திலே இன்னொரு ஜனகர் உண்டாகவில்லை.

244. கிடைப்பதற்கருமையான மானிடஜன்மம் கிடைத்தும் இந்த ஜீவிதத்திலேயே ஈசுவரனையடைய முயற்சிக்காதவன் பிறப்பு வீண் பிறப்பேயாம்.

245. புதிதாய்ப்பிறந்த கன்றுக்குட்டி துள்ளிக்குதித்து விளையாடுகிறது. அது நாள்முழுதும் ஆடியோடி ஆநந்திக்கிறது; தாயாரிடத்தில் பால்குடிப்பதற்குத்தான் நிற்கிறது;

மற்றசமயங்களிலெல்லாம் குதித்து விளையாடிக்கொண்டே யிருக்கிறது. எரிலே கட்டுவதற்கு அதன் கழுத்திலே கயிறு போடப்பட்டவுடனே அதுமெல்ல மெல்ல இளைக்க ஆரம்பிக்கிறது; குதிப்பு விளையாட்டெல்லாம் போய்விடுகின்றன; அதன் முகத்திலே வாட்டமும் துன்பமும் தோன்றுகின்றன. ஒருபையனுக்கு உலகவிஷயங்களுடனே சம்பந்தமில்லாமலிருக்கும் வரையில் அவன் சந்தோஷமாயும் உற்சாகமாயுமிருக்கிறான். ஆனால் அவன் உலகிலே விவாகமாகிற விலங்கினாலேகட்டப்பட்டுக்குடும்பத்தொல்லைகளுக்கும் உட்படுத்தப்பட்டுவிட்டானானால், அவனுடைய சந்தோஷம் போய்விடுகிறது. அவன் முகத்திலே 'ஈயாடுவதில்லை; கண்களில் ஒளிமழுங்குகிறது. ஆயுள்முழுதும் அறியாப்பையனாயிருப்பவனே பாக்கிய வந்தன்.

246. ஒருவன் ஈசுவரனுக்கு அர்ப்பணம்செய்கின்ற ஐசுவரியத்தையெல்லாம் அவர் லக்ஷியம் செய்கின்றாரா? கிடையவே கிடையாது. அவரிடத்தே அன்பையும் பக்தியையும் கொண்டுசென்று எவன் அளிக்கின்றானோ, அவனிடத்தே அவர் கிருபைபுரிகிறார். அவருக்குப்பிரியமானது எதுவென்றால், அவர் பொருட்டுஉண்டாகின்ற பிரேமையும், பக்தியும், விவேகமும், வைராக்கியமுமேயாம்.

247. அகங்காரத்தை எப்படியழிப்பதென்று நீஅறிவாயா? ஒருதராசில்சில நுட்பமான பொருள்களை வைத்து

திறுக்கும் பொழுது, எடை சரியா? என்று பார்ப்பதற்கு அதிலுள்ள ஊசியைச்சரிப்படுத்திக்கொள்வது வழக்கம். அப்படியேநான் என்னுடைய அகங்கிரந்தி என்னுள்ளே இருக்கிறதா? இல்லையா? வென்று பார்க்கும் பொருட்டு நான் என்னைத்தானே பலவிதத்திலும் திட்டிக்கொள்வது வழக்கம். சில சமயங்களிலே நான் சரீரத்தைப் பின்வருமாறு பகுத்துப்பார்த்து யோசனைசெய்வது வழக்கம். அதாவது:—"இந்தச்சரீரத்தைப்பார். இது சதையுமெலும்பும்சேர்ந்தகூண்டுதானே. இரத்தம், மஜ்ஜை முதலிய அசுத்தபதார்த்தங்களால்தானே இது ஆக்கப்பெற்றிருக்கிறது. இதனிடத்தே இவ்வளவு கர்வமும் ஆசையும் வைத்தல் ஆச்சரியம்" என்பதே.

248. பிதாவினிடத்திலிருந்து கிடைப்பது முதற்பிறப்பு; உபநயனகாலத்திலே நாம் அடைவது இரண்டாவது பிறப்பு; சந்நியாசம் மூன்றாவது பிறப்பாம்.

249. பிரேமபக்தியிலே "நான்" "என்னுடையது" என்று இரண்டு உண்டு. (அதாவது, 'நான்தான்பக்தன், என்னுடைய ஈசுவரன் முழுதும் என்னுடையவனே' என்பவைகளாம்.) தன்னைத்தவிர வேறெவராலும் கோபாலனைப்பராமரிக்கமுடியாதென்றும், தான் கவனிக்காவிட்டால் கோபாலன் வியாதியில் விழுந்துவிடுவானென்றும் யசோதை நினைத்துக்கொள்வது வழக்கம். தன்னுடைய கிருஷ்ணன் ஈசுவரன் என்று நினைப்பதற்கு அவள் ஒருபொழுதும் பிரி

யப்பட்டதில்லை. பக்தனுடைய "என்னுடையது" என்பது, 'அவன் என்னுடையவனே; எனக்கே சொந்தம்; என்னுடைய கோபாலன்' என்று உணரும்படி செய்கிறது. உத்தவர் யசோதையைநோக்கி "தாயே! உன்னுடைய கிருஷ்ணன் ஈசுவரனே; அவர் சாதாரண மனிதரன்று. அவர்பிரபஞ்சம் முழுதுக்கும் சிந்தாமணியாவர்" என்று கூற, யசோதை "அல்ல அல்ல; உன்னுடைய சிந்தாமணியைப்பற்றி நான் கேட்கவில்லை; என்னுடைய கோபாலன் எப்படியிருக்கிறானென்றுதான் கேட்கிறேன். சிந்தாமணியல்ல! என்னுடைய கோபாலன்" என்றாள்.

250. மனிதன் ஈசுவரானுபூதி யடைந்தபின்னர் ஈசுவரனை எங்கும் எல்லாவற்றிலும் பார்க்கிறான். ஆனால் மனிதனிடத்தேதான் அவர் மிகவும் சிரேஷ்டமாகத் தோன்றுகிறார். சத்துவகுணபக்தர்களிடத்திலே அவர் இன்னும் சிரேஷ்டமாக விளங்குகிறார். பொன்னையும் பெண்ணையும் சொப்பனத்திலும் கருதாதவர்களிடத்திலேதான் இன்னும்சிரேஷ்டமாக விளங்குகிறார்.

251. ஒருவன் தான்விரும்பினால்கூட, தியஜிக்க முடியாது; ஏனெனில், பிராரப்தம், சம்ஸ்காரம் முதலியவை தடையாயேற்படலாம். ஒருகாலத்திலே ஒருயோகி ஒரு அரசனை நோக்கி "என்னருகேயுட்கார்ந்து ஈசுவரனைக்குறித்துதியானம்செய்" என்றார். அரசன் என்னால் முடியாது. நான்தங்கள் அருகேயிருந்தாலும் எனக்கு போகத்தின்மீதுதான்

ஆசைசெல்கிறது. நான் இக்காட்டில் இருப்பேனுனல்; இன்னும் உலக இன்பங்களை அநுபவிக்கவேண்டியிருக்கிறதினலே, இக்காட்டினுள்ளேயே ஒரு அரசாங்கம் கிளம்பினுலும் கிளம்பும் என்ருன்.

252. ஒருசிஷ்யன்:—"உண்மையான சாதுவைநாமெப்படி யறிந்துகொள்ளலாம்?"

ஸ்ரீ ராமகிருஷ்ணர்:—எவருடைய ஹிருதயமும் மனமும் ஈசுவரனிடத்தே அர்ப்பணம் செய்யப்பட்டிருக்கிறதோ, அவரே உண்மையானசாது. பெண்ணையும்பொன்னையும் துறந்தவர் எவரோ அவரே உண்மையானசாது. உண்மையானசாது ஒரு ஸ்திரீயை சாதாரண உலகினர் பார்க்கும் பார்வையிலே பார்ப்பதில்லை. அவர் ஸ்திரீகளிடத்திலிருந்து எப்பொழுதும் வெகுதூரத்திலேயே இருக்கின்ருர்; ஸ்திரீகள் சமீபத்தில் வந்தால் அவர் அவர்களைத் தம்முடைய தாயாராகவே நினைத்து அவர்களிடம் மரியாதை செலுத்துகிருர். உண்மையான சாதுவானவர் இடைவிடாமல் ஈசுவரனையே நினைத்து அவர் எல்லாவற்றிலும் இருக்கிறதாகப்பாவித்து எல்லாப்பிராணிகளுக்கும்பணிவிடை செய்கிருர். இவைதாம் உண்மையான சாதுக்களின் பொதுலட்சணங்கள்"

253. ரேதஸை வீண்செலவு செய்தால் சக்திக்கு நஷ்டமேயாம். வீரியம் விரும்பாமலே நழுவி விட்டால், அத

னால் அதிகம் பாதகமில்லை. அதற்குக்காரணம் ஆகாரமாம். ஆயினும், முமூட்சு, ஸ்திரீ முகத்தைப் பார்க்கலாகாது.

254. ஜபமாவது ஒரு அமைதியான இடத்தில் உட்கார்ந்து கொண்டு, வாய்க்குள்ளேயே ஈசுவரநாமத்தைத்திரும்பத்திரும்பச் சொல்லுதலாம். ஒருவன் ஏகாக்கிரபக்தியுடனே ஈசுவரநாமத்தை ஜபித்துக்கொண்டேயிருப்பானுனல் அவனுக்குக் கடைசியாக ஈசுவரதரிசனங்கள் உண்டாவது நிச்சயம். அவன் ஈசுவரானுபூதியடைவது நிச்சயம். தண்ணீரிலே ஒரு பெருங்கட்டை மூழ்கிக்கிடக்கின்றது; அதன்ஒருமுனை கரையிலிருந்து வருகின்ற ஒருசங்கிலியுடன் கட்டப்பட்டிருக்கிறது; சங்கிலியைப் பிடித்துக்கொண்டு, வளையத்தின்பின் வளையமாக அதன்வழியேசென்றால், கடைசியாகக் கட்டையண்டைபோய்ச் சேர்வது நிச்சயம். அப்படியே, ஒருவன் ஜபத்தினுலே ஈசுவரத்தியானத்திலேபடிப்படியாக லயித்துக்கொள்ள முடியுமானால், கடைசியில்ஈசுவரானுபூதியடைவது நிச்சயம்.

255. "நேதி, நேதி" என்று கூறிக் காட்சியெல்லாவற்றையும் களைந்து ஆத்மானுபூதியடைதலே ஞானமாம்; தத்துவவிசாரம்செய்து காட்சிகளைக் களைவதினுலே மனிதன் சமாதிநிஷ்டையிலே ஆத்மானுபூதியடைகிறான்.

இன்னும் அதிகத்தெளிவாயும் பூரணமாயும் அறிந்து கொள்ளுதலே விஞ்ஞானமாம். சிலர்பாலைப்பற்றிக்கேட்டு

மாத்திரம் இருக்கிறார்கள், சிலர்பார்த்து மாத்திரம் இருக்கிறார்கள், வேறு சிலர் ருசித்திருக்கிறார்கள். கேட்டுமாத்திரமுள்ளவன் அஞ்ஞானி; பார்த்து மாத்திரமுள்ளவன் ஞானி; ஆனால் அதை ருசிபார்த்துள்ளவன் விஞ்ஞானி; இவன்தான் அதை நன்றாய் முழுதும் அறிந்தவன். ஈசுவரனைத்தரிசித்தபின்னர், அவரைநமது பரமபந்துவாகக்கருதி அவருடனே அந்நியோந்நிய அந்தரங்கசம்பந்தம் வைத்துக் கொள்ளுதலே விஞ்ஞானமாம்.

256. விவேகாநந்தர்:—ஸ்வாமி! தந்திரசாஸ்திரங்களிலே கூறப்பட்டுள்ளபடி ஸ்திரீசம்சர்க்கத்திலே செய்யப்படும் பக்திமார்க்கங்களைப்பற்றித் தங்களுடைய அபிப்பிராயமென்ன?

ஸ்ரீ ராமகிருஷ்ணர்:—அவை பந்தோபஸ்தான "மார்க்கங்கள்" அல்ல,—மிகவும் கஷ்டமானவையே; இடையூறுகள் பல அடிக்கடி நேரிடும். தந்திரமார்க்கத்தின் பிரகாரம் பக்தியநுஷ்டிப்பதற்கு மூன்றுமார்க்கங்கள் உண்டு—"ஒரு 'வீரனை''ப்போல, ஒரு "பணிப்பெண்ணை"ப்போல, "மாதாவுக்குமகனை"ப்போல. என்னுடையது (ஈசுவரனுடைய) தாய்த்தன்மையே. ஒருவன்தான் ஜகன்மாதாவினுடைய பணிப்பெண்ணென்று நினைத்துக்கொள்ளுதலும் நலமேயாம். ஆனால் "வீராச்சார" மார்க்கமானது அபாயங்கள் நிறைந்தது. "மகவு"* மார்க்கம் மிகவும் பரிசுத்தமானது.

257. யுதிஷ்டிரர் தமது பாபங்களையும் ஸ்ரீகிருஷ்ணனுக்கு அர்ப்பணம் செய்யப்போகும் சமயத்தில், பீமன் "ஆ! ஆ! தாங்கள் அப்படிச்செய்யக்கூடாது. தாங்கள் கிருஷ்ணனுக்கு அர்ப்பணம் செய்வது ஆயிரம்மடங்காக அதிகரித்துத் தங்களிடத்துக்கே திரும்பிவரும்" என்றுகூறி எச்சரித்தான்.

258. ஸ்திரீபோகத்தை விட்டவன் எவனோ, அவனே உலகைத்துறந்தவன்; ஈசுவரன் அவனுக்கு அதிசமீபத்தில் இருக்கிறார்.

259. தியானத்திலே தீவிரமான ஏகாக்கிரதையுண்டாகிறது. அப்பொழுது ஒன்றுமேபார்க்கப்படுகிறதில்லை, கேட்கப்படுகிறதில்லை; பார்வை அல்லது உணர்ச்சிகூடப் போய்விடுகிறது. சர்ப்பமானது சரீரத்தின்மேல் ஊரலாம்; ஆனால் அதுதெரிகிறதில்லை; தியானஞ்செய்பவனும் உணர்கிறதில்லை; சர்ப்பமும் உணர்கிறதில்லை.

260. ரசம்பூசிய ஒரு கண்ணாடித்துண்டிலே ஒருமனிதன் தனதுமுகத்தின் ப்ரதிபலனத்தைப்பார்க்கமுடிவதுபோல, பிரஹ்மச்சரியத்தினாலே தன்னுடைய சக்தியையும் பரிசுத்தத்தன்மையையும் காப்பாற்றி வைத்துக்கொண்டிருக்கும் மனிதனுடைய ஹிருதயத்திலே, சர்வேசுவரனுடைய சாயை பிரதிபலிக்கின்றது.

261. ஞானயோகமானது ஞானோபாயங்களினாலே ஈசுவரனுடனே லயமாவது. ஞானியின் நோக்கமாவது அக

ண்டமாகிய பிரஹ்மவஸ்துவை அநுபூதியில் அடைவதே யாம். அவன் அநித்தியமான வஸ்துக்களெல்லாவற்றையும் ஒன்றன்பின் ஒன்றாக 'இது அன்று, 'இதுஅன்று' என்று களைந்துசென்று நித்தியாநித்தியவஸ்து விசாரத்தை ஒழித் துவிடுகிறான். பிரஹ்மவஸ்து சமாதியிலேஅறியப்படுகிறது.

262. தண்ணீருக்குள்ளே வைக்கப்பட்ட ஒரு பாத்திரத் துக்கு உள்ளும்புறம்பும் தண்ணீர் நிறைந்திருக்கிறதுபோல ஈசுவரனிலேயமுழ்ந்தியுள்ள ஆத்மா உள்ளும் புறம்பும் சர்வ வியாபகவஸ்துவைப் பார்க்கிறான்.

263. ஈசுவரன் வெளியே எங்கேயோ தூரத்தில் இருக்கி றார் என்று தோன்றுகிறவரையில், அஞ்ஞானமுண்டு. ஆனா ல்ஈசுவரன் உள்ளேயே அறியப்பட்டுவிட்டால்அதுவேஉண் மை.

264. ஞானியின் ஹிருதயத்திலே யோடுகின்ற ஞானகங் கை ஒரேமுகமாகத்தான் ஓடுகின்றது. ஞானிக்குப் பிரபஞ் சம் முழுதும் ஸ்வப்பனமேயாம். அவன் எப்பொழுதும் தனது ஆத்மாவினிடத்திலேயே அமர்ந்து இருக்கிறான். ஆனால் ஒரு பக்தனுடைய ஹிருதயத்திலே ஓடுகின்ற பிரே மா கங்கையானது எப்பொழுதும் ஒரே முகமாக ஓடுகிறதி ல்லை. அதற்கு ஏற்றமும் இறக்கமும் உண்டு. பக்தன் அழுகி றான், சிரிக்கிறான், ஆடுகிறான், பாடுகிறான். பக்தன் தனது ஆநந்தநாதனை யநுபவிக்கவிரும்புகிறான், தனது அன்பனி

டத்தில் லயித்துவிடவிரும்புகிறான். தண்ணீரிலிட்ட ஒருபனிக்கட்டியைப்போல, அவன் அவரிடத்திலே நீந்துகிறான், சிலசமயங்களில் முழுகிவிடுகிறான், சிலசமயங்களில் மேலே கிளம்புகிறான்.

265. சந்திரன் ஒவ்வொரு குழந்தைக்கும் "அம்புலிமாமா" வாயிருப்பதுபோல, ஈசுவரன் மானிடவர்க்கம் முழுதுக்கும் ஞானகுருவாயிருக்கிறார்.

266. ஆயிரம் வருஷங்கட்கு மேலாக அடைக்கப்பட்டு அந்தகாரமே சூழ்ந்திருக்கும் ஒரு அறைக்குள்ளே கொண்டுவரப்பட்ட ஒருதீபமானது உடனே இருட்டைப்போக்கடித்து விடுவதுபோல, ஞானஜோதியானது ஜீவனுடைய அநாதியவித்தையைப் போக்கடித்துவிடுகிறது.

267. ஒரு நாடகசாலையிலே ஒருமனிதன் ஒன்றன்பின் ஒன்றாக அநேக வேஷங்களைத் தரிப்பதுபோல, உலகிலே ஈசுவரன் அநேக வடிவங்களை யெடுத்துக்கொள்கிறார். ஒரே வேஷமானது அநேகரால் போடப்படுவதுபோல, பலவித ஜந்துக்களும் மனுஷ்ய உடை உடுத்துக்கொண்டிருக்கின்றன. சிலர் செந்நாய்களாயிருக்கின்றனர்; சிலர்பயங்கரமான புலிகளாயிருக்கின்றனர், சிலர் வஞ்சக நரியாய் அல்லது விஷப்பாம்பாயிருக்கின்றனர்; பார்வையிலே இவர்கள் மனிதர்கள்போலத்தான் இருக்கின்றனர்.

268. திருடன் சென்று திருடும்படி அவனைத் தூண்டுகிறவர் ஈசுவரனே; திருடன் வருகிறானென்று வீட்டுக்காரனை ஜாக்கிரதைப்படுத்துபவரும் அவரே. எல்லாம் செய்கிறவர் ஈசுவரனே.

269. ரூபத்துடன் கூடிய ஈசுவரனைப் பார்க்கலாம்; நாம் நமது பிராண நண்பனைக்கண்டு பேசுவதுபோல, அவரை நேருக்கு நேராகக்கண்டு பேசலாம்.

270. ஒருவன் கற்பகவிருக்ஷத்தினடியிலே யுட்கார்ந்து கொண்டு நான் ஒரு அரசனாகவேண்டும் என்று விரும்பினான்; ஒரு நிமிஷத்திலே அவன் அரசனானான். அடுத்த நிமிஷத்திலே அவன் எனக்கு அழகியதோர் மங்கை மனைவியாகட்டும் என்று விரும்பினான்; ஒருயுவதி உடனே அவனருகில் இருந்தாள். அந்த விருட்சத்தின் அற்புதமான லட்சணங்களை இன்னும் பரிசோதிக்கும்பொருட்டு அவன் ஒரு புலிவந்து என்னைவிழுங்கட்டும் என்று விரும்பினான்; உடனே ஒருபுலி அவன்மீது பாய்ந்தது. ஈசுவரனே இக்கற்பக விருக்ஷம்; எவனொருவன் அவருடைய சந்நிதியிலே நின்று கொண்டு "ஈசுவரா! என்னிடம் ஒன்றுமே யில்லை"யென்று கூறுகிறானோ, அவனுக்கு உண்மையில் ஒன்றுமே கிடைப்பதில்லை; ஆனால் "ஈசுவரா ! எனக்கு வேண்டியவெல்லாம் நீ கொடுத்திருக்கிறாய்" என்று எவன்கூறுகிறானோ, அவனுக்கு எல்லாம் கிடைக்கின்றன.

271. எனது ஜகன்மாதா ஒன்றாயும் பலவாயு மிருக்கிறாளென்று அறிந்துகொள்; ஏகத்தையும் அநேகத்தையும் கடந்து மிருக்கிறாளென்று அறிந்துகொள்; எனது ஜகன்மாதாவே அநேகமாகத் தோன்றுகின்ற ஒரே உண்மைப் பொருள். அகண்டசக்தியையுடைய இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி முதலிய பல சக்திகளுடனே ஜீவனாகவும் ஜகத்தாகவும் பிரிந்துநிற்கிறாள். எனது ஜகன்மாதா வேதாந்தத்தில் கூறப்பட்டுள்ள பிரஹ்மவஸ்துவைத்தவிர வேறொன்றுமில்லை. அவள் நிர்க்குணப்பிரஹ்மத்தின் சகுணப்ட்சமாம்.

272. ஈசுவரன் ரூபமில்லாதவர் என்று நினைப்பது நியாயமேயாம். ஆனால் அந்த அபிப்பிராயந்தான் உண்மையென்றும் மற்றதெல்லாம்தப்பென்றும் நினைத்துவிடாதே. அவரை "வடிவங்களுடைய"வராக தியானிப்பதும் நியாயமேயாம். ஆனால் நீஅநுபவத்தில் அறிகிறவரையில், ஈசுவரனைத்தரிசிக்கிறவரையில், நீஉனது அபிப்பிராயத்தினிடத்தில் உறுதியாயிருக்கவேண்டும். அப்பொழுது எல்லாம் தெளிவாகும்.

273. சமாதி கலைந்து இந்திரிய ஞானபூமிக்கு வருகின்றவனுக்குத்தான் திவ்யசக்ஷுவை வைத்துக்கொண்டு ஆநந்திப்பதற்கு வேண்டுமளவு ஒருரேகைபோன்று. அகலமின்றி நீண்ட அளவான ஒருமெலிந்த அகங்கிரந்தியுண்டு. இதுவே ஜீவனாகவும் ஜகத்தாகவும் தானாகவும் இப் பற்பல

வடிவங்களில் வெளிப்படுகின்ற ஒரேவஸ்துவைத் தரிசிக் கும்படி செய்கின்றது. இந்த ஈசுவர தரிசனம் நிர்விகற்ப சமாதியிலே நிராகார நிர்க்குணப் பிரஹ்மத்தையும் சவி கற்ப சமாதியிலே சகார சகுண பிரஹ்மத்தையும் அநு பூதியில் அடைந்த விஞ்ஞானிக்குண்டாகின்றது. நீ உனக்கு அகங்கிரந்தி யுள்ளவரையில் ஈசுவரனை மனிதனுகவன்றி வேறு விதத்திலே நினைக்கமுடியாது, கற்பித்துக்கொள்ள முடியாது, பார்க்கமுடியாது. அதுவரையில் அந்த நிர்க் குணவஸ்து சகுணவஸ்துவாக, ரூபமுள்ள ஈசுவரனுக உள் ளும்புறம்பும் உனக்குத் தோன்றத்தான்வேண்டும். இவ் வடிவத்தோற்றங்கள் உண்மையில் குறைந்தவையல்ல; சரீர த்தை அல்லது மனத்தை அல்லது வெளியுலகத்தைப் பார் க்கிலும் அதிக உண்மையானவையே.

274. தெளிந்த ஆகாயத்திலே திடீரென்று ஒரு மேகம் தோன்றி இருளை உண்டுபண்ணிவிடலாம்; பின்னர் திடீரெ ன்றே காற்றுக்களினுல் அம்மேகம்கலைக்கப்பட்டுவிடலாம். அப்படியேதான் மாயையும். அது திடீரென்று பிரக்ஞை யாகிற தெளிந்த ஆகாயத்தை மூடுகின்றது, பிரத்தியட்ச மாயுள்ள பிரபஞ்சத்தை சிருஷ்டிக்கின்றது, ஈசுவரனுடைய மூச்சுக்காற்றினுலே மறுபடியும் கலைக்கப்பட்டுவிடுகிறது.

275. மேகமானது சூரியனை மறைக்கின்றதுபோல, மா யையானது ஈசுவரனை மறைக்கின்றது. மேகம் நீங்கிவிட் டால் சூரியன் காணப்படுகிறது; மாயைநீங்கிவிட்டால் ஈசு வரன் பிரத்தியட்சமாகிறார்.

276. சிவம், சக்தி, அதாவது ஞானமும் சக்தியும், இரண்டும் சிருஷ்டிக்கு அவசியமாம். உலர்ந்த களிமண்ணை வைத்துக்கொண்டு, எந்தக்குயவனும்சட்டிசெய்யமுடியாது தண்ணீரும் அவசியமாம். அதுபோலவே, சக்தியின் உதவி யில்லாவிட்டால், சிவம்மாத்திரம் சிருஷ்டிக்கமுடியாது.

277. மாயையென்றால் என்ன? ஆத்மீக அபிவிருத்திக்கு அடிக்கடி தடையாக ஏற்படுகின்ற காமமேயாம்.

278. மாயையைப்பார்க்கவிரும்பி, நான் ஒருநாள் ஒரு தரிசனம் கண்டேன்: ஒரு சிறுதுளி மெல்லவிரிந்து ஒரு பெண்ணாயிற்று; அந்தப்பெண் ஒரு ஸ்திரீயாயிற்று, அந்த ஸ்திரீக்கு ஒருகுழந்தை பிறந்தது; குழந்தைபிறந்தவுடனே, அவள் அதை யெடுத்து விழுங்கிவிட்டாள். இம்மாதிரி அநேக குழந்தைகள் அவளுக்குப்பிறந்தன, எல்லாம் அவ ளால் விழுங்கப்பட்டுவிட்டன. அது மாயை யென்று அப் பொழுது நான் அறிந்தேன்.

279. அன்னபட்சியானது தண்ணீரிலிருந்துபாலைப்பிரி த்து, தண்ணீரைவிட்டுவிட்டு, பாலைமாத்திரம் குடித்து விடு கிறது; ஆனால் மற்றபக்ஷிகள் அப்படிச் செய்ய முடியாது. ஈசுவரன்மாயையுடன் அந்யோந்யமாகச் சம்பந்தப்பட்டிரு க்கிறார். சாதாரணமனிதர் அவரைமாயையினின்றும் வேறு பிரித்துப்பார்க்கமுடியாது. பரமஹம்சர்கள் மாத்திரம் தான் மாயையைத்தள்ளி, ஈசுவரனைமாத்திரம் எடுத்துக் கொள்ளமுடியும்.

280. பிரஹ்மஞானலாபமும் மோக்ஷலாபமும் நமக்கு சாத்தியமாவது மாயையினாலேதான்; இல்லையேல் இவ்விஷயங்களை யெல்லாம் அநுபவிப்பதற்குக்கூட எவர் கனவு காணக்கூடும்? மாயையிலிருந்துதான் அவைதமும் அந்யோந்ய சம்பந்தமும் கிளம்புகின்றன; மாயைக்கப்புறம் போக்தாவுமில்லை, யோகப்பொருளுமில்லை, ஒன்றுமேயில்லை.

281. நான் இந்தச்சரீரத்தையெடுத்துக்கொண்டதினாலே நான் செய்துள்ள தியாகத்தையும், எடுத்துக்கொண்டுள்ள உலகச்சுமையையும் எவர் அறிதல் கூடும்? ஈசுவரன்மாம்சபிண்டமாகும்பொழுது செய்கின்ற தியாகத்தின் அளவை எவரும் அறியார்.

282. நமக்குள்ளதெல்லாம் ஒரே அவதாரம் தான்; ஒரே கடவுள் ஜீவிதமாகிற சமுத்திரத்திலே மூழ்கி ஒரு பக்கத்திலே கிருஷ்ணன் என்ற பெயருடன் கிளம்புகிறார்; இன்னொருதரம் முழுகி, இன்னொரு இடத்திலே கிறிஸ்து என்ற பெயருடன் கிளம்புகிறார்.

283. ஒருபெருங்கட்டை நதியிலே மிதந்துவரும்பொழுது, அது ஆற்றுக்கணக்கான பட்சிகளைக்கொண்டு செல்கிறது; தண்ணீரில் அமிழ்ந்துகிறதில்லை. மிதந்துவரும் ஒரு புல் காக்கை யுட்கார்ந்தாலும் அமிழ்ந்திவிடும். அப்படியே ஒரு ரட்சகர் அவதரிக்கும்பொழுது, அவரிடத்திலே அபய

290. பஞ்சபூதங்களுடன் சம்பந்தப்படுதலினாலே பிரஹ்மவஸ்து துன்புறுகிறது.

291. மகாத்மாக்கள் ஈசுவரனுடைய மிகவும் நெருங்கிய பந்துக்களின் உள்வட்டமாகும். அவர்கள் ஈசுவரனுடைய நண்பர்கள், தோழர்கள், பந்துக்கள் போன்றவர்கள். சாதாரணஜனங்களெல்லோரும்வெளிவட்டமாயிருக்கிறார்கள். அவர்கள் ஈசுவரனுடைய பிராணிகளேயாவர்.

292. உடம்பையெல்லாம் அழுக்காக்கிக்கொள்வது குழந்தையின் தன்மை. ஆனால் தாயார் எப்பொழுதும் அதை அழுக்காகவே யிருக்கும்படி விடுகிறதில்லை. அவள் அதை அடிக்கடி கழுவுகிறாள். அதுபோன்றே, பாபம் செய்வதே மனிதனுடைய தன்மை. ஆனால் அவன் பாபம் செய்வது எவ்வளவு நிச்சயமோ, அதுபோலவே ஈசுவரன் அவனுடைய பாபநிவிருத்தியின்பொருட்டு உபாயங்களையும் சிருஷ்டிக்கிறானென்பதும் அவ்வளவு நிச்சயமே.

293. சூரியப்பிரகாசமானது எங்கே விழுந்தாலும் ஒன்றாகவேயிருக்கிறது. ஆனால் தண்ணீர் அல்லது கண்ணாடி அல்லது மெருகுகொடுக்கப்பட்ட லோகங்கள்போன்ற பிரகாசமான மேல்மட்டத்திலேயே அது பிரதிபலிக்கப் படுகிறது. அப்படியேதான் ஈசுவரப்பிரகாசமும். அது எல்லா ஹிருதயங்களிலும்பக்ஷபாதமற்று சரிசமமாகவிழுகின்றது. ஆனால் நல்ல சாதுக்களுடைய ஹிருதயங்கள் தாம் அந்தப் பிரகாசத்தைப் பெற்றுக்கொண்டு பிரதிபலிக்கின்றன.

294. யார் யாருக்கு குரு? ஈசுவரனே பிரபஞ்சத்துக்குக் குருவாவர்.

295. நன்றாய்மலர்ந்த புஷ்பம் தென்றல் காற்றின் மூலமாகத்தனது சுகந்தவாசனையை வீசுகிறபொழுது, தேனீ தானே வருகின்றது. மிட்டாய் வைக்கப்பட்டுள்ள இடத்திலே எறும்புகள் தாமே வருகின்றன. தேனீயையாவது எறும்பையாவது அழைப்பவர் எவருமில்லை. ஆகையால் ஒருவன் பரிசுத்தனும் பரிபூரணனுமாகிறபொழுது, அவனுடைய ஒழுக்கத்தின் செல்வாக்கு நாலாபக்கத்திலும் வியாபிக்கிறது. உண்மையை ஆராயவிரும்புகிறவர்கள் எல்லோரும்இயற்கையிலேயே அவனிடத்து ஆகருஷிக்கப்படுகிறார்கள்; அவன், தான் சொல்வதைக் கேட்பதற்கு ஜனங்களைத்தேடவேண்டிய அவசியமில்லை.

296. உண்மையான போதனை எப்படியிருக்கும்?

பிறருக்கு போதிப்பதற்குப்பதிலாக, ஒருவன் ஈசுவரனை பூஜித்துக்கொண்டிருப்பானானால், அதிலேயே போதுமான போதனையிருக்கிறது. தானேமுக்தியடைவதற்கு முயற்சி செய்கிறவனே உண்மையான போதகன். எல்லாப் பக்கங்களிலிருந்தும் நூற்றுக் கணக்கானவர்கள் வருகிறார்கள்; எங்கிருந்து வருகிறார்களென்பதை எவரும் அறியார்; முக்தனைநாடி, அவனிடமிருந்து உபதேசம் பெறுதற்பொருட்டு ஜனங்கள் கும்பல் கும்பலாய் வருகிறார்கள்.

ஒரு ரோஜாமொட்டு மலர்ந்தால் தேனீக்கள் எல்லாப்பக்கங்களிலிருந்தும் தாமாகவே எவராலும் அழைக்கப்படாமலே வந்து சேர்கின்றன.

297. உண்மை ஞானப்பிரகாசத்தினால் ஒளிபெற்றிருப்பவனே உண்மையாசாரியன்.

298. இவ்வுலகிலே பரிபூரண மனிதர்கள் இரண்டு வகைப்படுகிறார்கள்:—உண்மையை யடைந்து மௌனமாகி, பிறரைப்பற்றிய ஞாபகமேயில்லாமல் எல்லாவற்றையும் தாங்களே அநுபவிக்கிறவர்கள்; இன்னொரு வகுப்பு ஜனங்கள் உண்மையையடைந்து தங்களுக்கே வைத்துக்கொள்வதில் சந்தோஷமடையாது "எல்லாரும் வாருங்கள் எங்களுடன் சேர்ந்து இன்பாநுபூதியெய்துங்கள்" என்றுபறையோசையிடுகிறார்கள்.

299. முதலில், உங்கள் ஹிருதயமாகிற க்ஷேத்திரத்தில் ஈசுவரனைப் பிரதிஷ்டைசெய்து கொள்ளுங்கள்; முதலில் அவரை யநுபவத்தில் அறியுங்கள்; பிரசங்கங்கள், போதனைகள் எல்லாம் பின்னே யுண்டாகலாம்;—நீ ஈசுவரனைத்தரிசித்தபின்னர் இவற்றை எடுத்துக்கொள்ளலாம்—அதற்கு முந்திவேண்டாம். ஜனங்கள் ஈசுவரனைப்பற்றியும் பிரஹ்மத்தைப்பற்றியும் எளிதாகப் பேசிவிடுகிறார்கள்; ஆனால் அப்பொழுதெல்லாம் அவர்கள் உலகவிஷயங்களிடத்திலே பற்றுடையவர்களாயிருக்கிறார்கள். இதனால் என்னவிளங்கு

கிறது? கோவிலுக்குள்ளே பூஜிப்பதற்கு ஈசுவரன் இல்லாதிருக்க, பூஜைக்கு சங்கம் முழக்குகிறது போலிருக்கிறது.

300. நிறைகுடம் சப்திக்கின்றதில்லை; ஆனால் நாரதர் முதலியோர் விஷயம் என்ன? நாரதரும் சுகதேவரும்வேறு சிலரும் சமாதி நிஷ்டையடைந்த பிறகு அநேக படிகள் கீழே யிறங்கி வந்தார்கள். மானிடவர்க்கத்தின்மீதுள்ள தயையினாலே, இரக்கத்தினாலே அவர்கள் போதித்தார்கள்.

301. வைத்தியர்கள்மூன்றுவிதமாவதுபோல, மதபோதகர்களும் மூன்றுவிதமாவர்:- சிலவைத்தியர்கள் வியாதியஸ்தனைப்பார்த்து நாடிசோதனைசெய்து அவசியமான மருந்துகளை எழுதிக்கொடுத்து, அந்த மருந்துகளை வியாதியஸ்தன் உட்கொள்ளும்படி கூறுவது வழக்கம்; வியாதியஸ்தன், மருந்து சாப்பிட மறுத்துவிட்டால், அவர்கள் பேசாமல் போய்விடுகிறார்கள். இவர்கள் ஒருவகையினர். இவர்கள்தாம் வைத்தியர்களுக்குள்ளே மிகவும் தாழ்ந்த வகையினர். அதேமாதிரி தங்கள் போதனைகள் மதிக்கப்பட்டுப் பின்பற்றப்படுகின்றனவா? அல்லவா? என்று கவனியாத சிலமதபோதகர்கள் உண்டு.

இரண்டாவதுவகை வைத்தியர்கள், வியாதியஸ்தன் மருந்துசாப்பிடவேண்டுமென்று சொல்வதுமாத்திரமன்று; அவன் மறுத்துவிட்டால், மருந்துசாப்பிடும்படி அவனைக் கட்டாயப்படுத்தி அவனுக்குத்தொந்தரவுகொடுக்கிறார்கள்;

அதேமாதிரி, இதோபதேசங்களினாலே, ஜனங்களைத் தர்மமார்க்கங்களிலே ஈசுவரபக்தியுடன் சத்தியநீதிகளைப் பின்பற்றி நடக்கும்படி வற்புறுத்துகிற மதஆசாரியர்கள், இரண்டாவது வகையினரென்று சொல்லப்படலாம்.

மூன்றாவது வகையினராகிய உத்தம வைத்தியர்கள், வியாதியஸ்தன் மருந்துசாப்பிட மறுத்துப்பிடிவாதமாயிருந்தால், அவனுக்குப் பலவந்தமாகமருந்துகொடுக்கிறார்கள். வியாதியஸ்தனுடைய மார்பின்மீது தங்கள் முழங்கால்களை வைத்து அழுத்திக்கொண்டு, மருந்தைப்பலவந்தமாக ஊட்டுகிறார்கள். அதுபோன்றே, ஈசுவரமார்க்கத்திலே சிஷியர்கள் நடக்கவேண்டுமென்ற உத்தேசத்துடனே, அவசியம் நேரிட்டால் சிஷியர்களிடத்து பலத்தையும் உபயோகிக்கின்ற மதாசாரியர்கள் உண்டு. இவர்கள் தாம் உத்தமோத்தமவகையினர்.

302. பிரசங்கம் செய்வதே ஒருவன் தொழில்; அவன் பிரசங்கம் செய்தால், கேட்பவர்களுடையமனம் அனலிலிட்டமெழுகுபோல் உருகிவிடும்; கண்ணீர் தாரை தாரையாய்ச்சொரியும்; ஜனங்கள் அப்படியே பிரமித்து விடுவார்கள். ஆனால் அவன் ஒழுக்கமுடையவனன்று; அவனுடைய ஒழுக்கமின்மையைக் கேள்வியுற்று நான் வருத்தமுற்று "நீ இவ்வளவு ஒழுக்கம் கெட்டவாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்க, உனது வசனங்கள் மனிதர்களுடைய ஹிருதயத்தை பக்தியில்கரைப்பது ஆச்சரியமாயிருக்கிறது." என்

றேன். அதற்கு அவன் வணங்கி 'ஸ்வாமி! விளக்குமாறு இழிந்ததேயாயினும் வீட்டையும் தெருவையும் எவ்வளவு சுத்தமாகத்துலக்கி விடுகின்றது' என்றான். உண்மைதான், என்றால் அவனுக்கு பதில் அளிக்கமுடியவில்லை.

303. ஈசுவரபக்தி பரிசுத்தகிரந்தங்களை படிப்பதினால் உண்டாய் விடுமா? இன்னின்னமாசத்திலே இன்னின்ன இடத்திலே இவ்வளவு மழை பொழியுமென்பது பஞ்சாங்கத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அவ்வளவு மழையைப்பற்றிக் கூறப்பட்டிருக்கிறஅந்தப்புத்தகத்தைப் பிழிந்து பார்த்தால் ஒரு நாழி ஜலம்கூட அதிலிருந்து வராது. அது போலவே, அநேக நன்மொழிகள் சாஸ்திரங்களிலே காணப்படுகின்றன; ஆனால் அவற்றைப்படித்தலினால் மாத்திரம் ஒருவன் பக்தியுடையோனாய் விடமாட்டான் ஈசுவரபக்தி யடைவதற்கு அந்தக்கிரந்தங்களிலே கூறப்பட்டுள்ள புண்ணியங்களை நாம் அப்பியசிக்கவேண்டும்

304. தேனீயானது புஷ்பங்களின் இதழ்களுக்கு வெளியே இருக்கும்பொழுது, உள்ளேயுள்ள தேனை ருசிபாராமலிருக்கும்பொழுது, 'பஸ்' என்று சத்தமிட்டுக்கொண்டு புஷ்பத்தைச் சுற்றிச்சுற்றிப் பறக்கிறது; ஆனால் அது புஷ்பத்துக்குள்ளே யிருக்கும்பொழுது சப்தமிடாமல் தேனைக்குடிக்கிறது. ஒருவன் கோட்பாடுகளையும் கொள்கைகளையும் பற்றி வாதமிட்டுக்கொண்டிருக்கிறவரையில்; அவன் உண்மைவிசுவாசமாகிய தேனைக்குடிக்க முடியாது,

ஆனால் அவன் அதை உண்மையில் பருகினானால், அமைதி யுற்றுச்சாந்தியடைந்து விடுகிறான்.

305. ஆத்மஞானம்சிறிதுமில்லாது நன்றாய்ப்பேசிப்பிறருக்குப் போதிக்கின்றவர்களைப்பற்றித் தங்கள் அபிப்பிராயமென்ன? அவன் தன்னிடத்துநம்பிக்கையாகவைத்துள்ள இன்னொருவனுடைய சொத்தைக் கண்டபடி செலவழிக்கிறவன்போன்றவன். அவன்பிறருக்குச் சுலபமாகப்போதிக்கக்கூடும்; ஏனெனில் அதனால் அவனுக்கு நஷ்டமில்லை; அவன் வெளியிடுகின்ற கருத்துக்கள் அவனுடைய சொந்தமாயில்லாமல் இரவல் வாங்கினவையா யிருக்கிறபடியிலேயே.

306. சைதந்யதேவர் தக்ஷிணதேசத்திலே தீர்த்தயாத்திரை செய்துகொண்டிருந்தபொழுது, ஒரு இடத்திலேயொரு பண்டிதர் கீதாகாலக்ஷேபம்செய்துகொண்டிருந்தார். அதைக்கேட்டுக்கொண்டிருந்த ஒருமகாபக்தனுடைய கண்களினின்றும் கண்ணீர் ஆறாய் ஓடிக்கொண்டிருந்தது. இந்தபக்தனுக்கு எழுத்துக்கள்கூடத்தெரியா. கீதையிலே ஒரு சுலோகம்கூட அர்த்தமாகாது. அவன் ஏன் கண்ணீர்விட்டானென்றுதேவர் அவனைக்கேட்கவே, "கீதையிலே ஒருவார்த்தையைக்கூட நான் அறியேன் என்பது உண்மையே. ஆனால் அது படிக்கப்படும் காலத்திலே, எனது மனக்கண்ணாலே குருக்ஷேத்திர யுத்தகளத்திலேரதத்தின்மீது அர்ச்சுனனுடனே ஸ்ரீகிருஷ்ணன் உட்கார்ந்துகொண்டு கீதோபதேசம்செ

ய்வதைநான் பார்த்துக்கொண்டிருக்கிறேன். இதுதான் எனக்கு ஆநந்தக்கண்ணீர்வருவதற்குக்காரணம்'' என்று அவன் கூறினன்.

307. ஒரு சமயத்தில் கேசவச்சந்திரசேனர் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடத்துக்குவந்து "வித்துவான்கள் எண்ணற்ற மதகிரந்தங்கள் படித்தபொழுதிலும் ஏன் ஆத்மீகவிஷயத்தில் அஞ்ஞானிகளாயிருக்கிருர்கள்? '' என்று கேட்டார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் பதில்கூறியதாவது:—பருந்தும் கழுகும் ஆகாயத்திலே எவ்வளவோ உயரப்பறக்கின்றன; ஆனல் அவற்றின் கண்கள் அழுகிப்போன பிணங்கள் எங்கேயிருக்கின்றன வென்றே நாடுகின்றன; அதுபோன்றே வித்துவான்கள் என்று சொல்லப்படுபவர்களுடைய மனமும் உலகவிஷயங்களிலே—காமத்தினிடத்திலும் காஞ்சனத்தினிடத்திலும் பற்றுதல் உடையதாயிருக்கின்றது; ஆகையால்தான் அவர்களுக்கு உண்மைஞானம்உண்டாவதில்லை.'' என்பதே.

308. ஒருகுடம் நிரப்பப்படுகிறபொழுது, 'பக், பக்'என்று ஒரு சத்தம் கேட்கப்படுகிறது; அது நிறைந்தவுடனே, அந்த சப்தம் நின்றுவிடுகிறது. அதுபோன்றே ஈசுவரனைத் தரிசியாதவன் ஈசுவரனைப்பற்றி வீண்தர்க்கங்கள் நிறைந்தவனுயிருக்கிறன். ஆனல் அவரைத் தரிசித்தவன் மௌனமாக பிரஹ்மாநந்தம் அநுபவிக்கிறன்.

309. முமூட்சுக்களிலே இருவகையினர் உண்டு: அவர்களிலே யொருவகையினர் குரங்குக்குட்டி போன்றவர்கள்

மற்றவர்கள் பூனைக்குட்டிபோன்றவர்கள். குரங்குக் குட்டியானது தாய்க்குரங்கைப் பலமாகக்கட்டிப் பிடித்துக் கொள்கிறது; பூனைக்குட்டி தாய்ப்பூனையைக் கட்டிக்கொள்ளமுடிகிறதில்லை; ஆனால் பரிதாபகரமாகக் கத்துகிறது; இருந்த இடத்தைவிட்டு அங்ஙனம் அசைகிறதில்லை. குரங்குக்குட்டி தனது தாயைப்பிடித்திருக்கும் பிடியை விட்டுவிட்டால் அது கீழேவிழுந்து துன்புறுகிறது. இது தன்னுடையசொந்தபலத்தையே நம்பிக்கொண்டிருப்பதினாலே இம்மாதிரி நேரிடுகிறது. ஆனால் பூனைக்குட்டியின்விஷயம் அப்படியில்லை. தாய்ப்பூனையே குட்டியைக் கவ்வியெடுத்து ஒவ்வொரு இடத்துக்கும்கொண்டுசெல்கிறது. அதுபோன்றே, ஞான மார்க்கத்தைப் பின்பற்ற விரும்புகின்ற முமுட்சுவானவன் மோட்சமடைதற்குத் தனது சொந்தமுயற்சியையே நம்புகிறான். ஆனால்பக்திமார்க்கத்தைப் பின்பற்றுகின்ற முமுட்சுவானவன் எல்லாவற்றுக்கும் கர்த்தா ஈசுவரனேயென்று அறிந்து பரிபூரண நம்பிக்கையுடனே அவருடைய இரக்க சித்தத்தினிடத்திலே தன்னை அர்ப்பணம் செய்துகொள்கிறான். முன்னவன் குரங்குக்குட்டிபோன்றவன், பின்னவன் பூனைக்குட்டிபோன்றவன்.

310. புத்திரன் பிறக்கவில்லையேயென்று அநேகர் கண்ணீரை ஆறாகப்பெருக்குகின்றனர்; ஏராளமானசொத்துக்கள் கிடைக்கவில்லையேயென்று அநேகர் இரவும்பகலுமாக வருந்துகிறார்கள்; ஆனால், ஆ! ஈசுவரனைத்தரிசிக்கவில்லையே யென்று அழுது துன்புறுகிறவர்கள் எத்தனைபேர் உண்டு?

மிகச்சிலரே! தேடுபவனே அவரைக்காண்பான்; ஈசுவரனைக் குறித்து எப்பொழுதும் அழுகிறவனே அவரைக் காண்கிறான்.

311. இந்தக் கலியுகத்திலே ஒருவனுக்கு ஈசுவரனைத் தரிசிக்கவேண்டுமென்ற அத்தியந்த அவா மூன்று நாட்களுக்கிருந்தால் போதும். அப்படியிருந்தால் அவனுக்கு ஈசுவரனுடைய அருள் சித்தித்துவிடும்.

312. பொன்னின்மீது ஆசையுறுகிறலோபியைப்போல, உனது ஹிருதயம் அவர்மீது ஆசையுறட்டும்.

313. எவனுடைய நிஷ்டையும் அவாவும் அத்தியந்தம் பலமுள்ளனவாயிருக்கின்றனவோ, அவனே ஈசுவரனை மிகவும் சீக்கிரத்திலே தரிசிக்கிறான்.

314. எவனுடைய மனமானது ஈசுவரனை நாடிச்செல்கின்றதோ, அவன் ஊண், உடை முதலிய அற்பவிஷயங்களிலே மனத்தைச் செலுத்தமுடியாது.

315. ஈசுவரனிடத்தே நாம்செலுத்தவேண்டிய பக்தி எவ்வளவு ஆத்திரமுள்ளதா யிருக்கவேண்டும் தெரியுமா? ஒரு பதிவ்ரதா ஸ்திரீ தனது புருஷனிடத்துச் செலுத்துகின்ற பக்தி, லோபி தனதுதனக்குவியலின்மீதுவைத்துள்ள பற்று, உலகினருக்கு உலகவிஷயங்களின்மீதுள்ள ஆசை, ஆகிய இம்மூன்றினுடைய அளவும் ஒன்றுசேர்ந்து, ஈசுவர

னைக் காணவேண்டுமென்று அத்தியந்த பிரேமையாகமாறி விட்டால், அப்பொழுது அவர் பிரத்தியட்சமாகிறார்.

316. மிகுந்த காற்றின்முன் எறியப்பட்ட இலைபோல நீ கர்வம் நீங்கியிருப்பாய்.

317. கனமுள்ள தராசு கீழேபோய்விடுகிறது, மென்மையான தராசு மேலே கிளம்பிவிடுகிறது. அப்படியே சமர்த்தும் வித்துவத்தும் உள்ளவன் எப்பொழுதும் தாழ்மையுள்ளவனாயும் வணக்கமுள்ளவனாயு மிருக்கிறான்; மூடன் கர்வத்தினாலே தலைகீழாகவீழ்கிறான்.

318. ஒருவன் குழந்தையைப்போலக் களங்கமற்றவனாகாதவரையில், அவனுக்கு ஞானம் உதயமாகாது. நீ கற்றுள்ள உலகஅறிவை யெல்லாம் மறந்துவிடு. குழந்தையைப் போல ஒன்றுந் தெரியாதவனாய்விடு. அப்பொழுதுதான் உனக்குச்சத்தியஞானம் உண்டாகும்.

319. ஞானாபிவிருத்திக்கு அவசியமாகவேண்டியவிஷயங்களிலே சாதுக்களுடனும் ஞானிகளுடனும் சகவாசம்செய்தல் ஒன்று.

320. தங்கத்தையும் பித்தளையையும் உரை கல்லிலே உரைத்து 'இதுஇன்னது,' 'இது இன்னது' என்று கண்டுபிடிப்பதுபோல, உண்மையான சாதுவையும் வேஷதாரியையும் துன்பமும் நிந்தையுமாகிற உரைகல்லிலே உரை

த்து அவர்களின் உண்மைத்தன்மையைக் கண்டுபிடித்துவி டலாம்.

321. பெருங்காயம் வைத்த பாத்திரம் எத்தனை தரம்கழு வினாலும் பெருங்காயவாசனை விடாததுபோல, அகங்கார மானது எவ்வளவு வைராக்கியத்துடன் ஒழிக்கமுயன்று லும் அடியோடு ஒழிகிறதேயில்லை; அஃது அவ்வளவுபிடிவா தமாயிருக்கிறது.

322. அகங்காரம் உள்ளவரையில் ஞானமும் சாத்திய மில்லை; முக்தியும் சாத்தியமில்லை; ஜனனமரணமும் அக ல்வதில்லை.

323. எல்லாம் ஈசுவரனுடைய இச்சையினாலேயே நடக் கின்றனவென்றும், தான் ஈசுவரனுடையகைகளில்ஒருகருவி யேயென்றும் திடஞானம் ஒருவனுக்கு உண்டாய்விட்டால் அவனே ஜீவன்முக்தன். "ஈசுவரா! நீ உன்னுடைய வேலை யைச்செய்கிறாய்; ஆனால் 'நான் செய்கிறேன்' என்று ஜனங் கள் சொல்லுகிறார்கள்." என்று சிந்திக்கவேண்டும்.

324. தாயே! நான் ஒரு யந்திரம்; நீ யந்திரி; நான் க்ஷே த்திரம்; நீக்ஷேத்திரக்ஞை; நான் உறை; நீவாள்; நான்ரதம் நீ சாரதி; நீ செய்யச்சொல்கிறபடி நான்செய்கிறேன்; நீபே சச்சொல்கிறபடி நான் பேசுகிறேன்; நீ நடக்கச் சொல்கிற படி நான்நடக்கிறேன்; 'நான்,அன்று; 'நான்' அன்று; ஆனு ல் 'நீ' தான்.

325. மழை ஜலமானது உயர்ந்த பூமியில் நிற்பதில்லை; மிகவும் தாழ்ந்த இடத்தையே நோக்கிச்செல்கிறது. அப்படியே ஈசுவரனுடைய கிருபையும் வணக்கமுள்ளவர்களுடைய ஹிருதயங்களிலேதான் தங்குகின்றது; கர்வமும்மமதையுமுள்ளவர்களிடத்து உண்டாவதில்லை.

326. இரண்டு சமயங்களிலே ஈசுவரன் புந்நகை புரிகிறார்:—

1-வது. ஒருவன் அபாயகரமாக வியாதிக்குட்பட்டுமரணவஸ்தையிலிருக்கும்பொழுது, வைத்தியர் உள்ளேநுழைந்து, அவனுடைய தாயாரிடத்திலே "ஏன்! சிறிதும் கவலைப்படவேண்டாம். உங்கள் பிள்ளையை ரட்சிப்பதற்கு நானாயிற்று" என்று சொல்லுகிறபொழுது;

2-வது. இரண்டு சகோதரர்கள் தங்கள்பூமியைப் பாகமிட்டுக்கொண்டிருக்கும்பொழுது அவர்கள் அளவு கயிறெடுத்துப் பூமியிலே போட்டு "இப்பக்கம் என்னது, அப்பக்கம் உன்னது" என்று கூறுகிறபொழுது.

327. துரியாதீத நிலைமையடைந்து பிரஹ்மாநுபூதியாகவே விளங்குகின்ற சிலமகாத்மாக்கள் மானிடவர்க்கத்தின் நன்மையைக்கோரி அவ்வுயர்பதவியினின்றும் கீழேயிறங்கி வருகிறார்கள். வித்தியாகங்காரத்தை மாத்திரம வைத்துக் கொள்கிறார்கள். இந்த அகங்காரம் தோற்றல்மாத்திரமான

தேயாம். இது தண்ணீரிலே இழுக்கப்பட்ட கோடுபோன்றது.

328. எவனோ ஒருவன் தன்னை வெட்டவருவதாக ஒருவன் சொப்பனங்காண்கிறான்; பயந்து நடுநடுங்கி, "ஐயோ! அப்பா" என்று சொல்லிக்கொண்டே விழிக்கிறான். சுற்றிப்பார்க்கும்பொழுது உள்ளே எவருமில்லை; வாசற்கதவு நன்றாகத்தாளிடப்பட்டிருக்கிறது. ஆயினும் கொஞ்சநேரத்துக்கு அவனுடைய ஹிருதயம் துடித்துக்கொண்டுதான் இருக்கிறது. அதுபோலவே ஒருவனுக்கு ஞானாநுபூதியுண்டாய்விட்டாலும், கொஞ்சநாட்களுக்கு அபிமான வாசனையிருக்கத்தான்செய்யும்.

329. சிராரத்த காலங்களிலே கொடுக்கப்படும் போஜனத்தையுண்ணாதே; ஏனென்றால் அப்போஜனம் பக்தி, சிரத்தை யெல்லாவற்றையும் அழித்துவிடும்; பிறருக்காக யாகங்கள்செய்துபிழைக்கும் வைதீகனுடைய வீட்டிலும்உண்ணாதே.

330. சரீரத்திற்குச் சூடு உண்டுபண்ணாத அல்லது மனத்தைக் கலக்காத ஆகாரத்தைத்தான் பக்தன் உட்கொள்ள வேண்டும்

331. தியானமார்க்கத்திலே முமூட்சுவானவன் யோகநித்திரை யெனப்படுகிற ஒருவித நித்திரையையடைகிறான். அப்பொழுது அவன் சிலதரிசனங்கள் காண்கிறான்.

332. பரபக்தி என்பது என்ன?

பரபக்தியிலே பக்தன் ஈசுவரனைத் தனக்கு மிகவும் நெருங்கிய அருமையான பந்துவாகக் கருதுகிறான். ஸ்ரீகிருஷ்ணனிடத்திலே கோபிகைகள் செலுத்திய பக்திபோன்றது பரபக்தி. அவர்கள் ஸ்ரீகிருஷ்ணனை கோபிகாநாதனென்று தான் அறிவார்களேயொழிய ஜகந்நாதனென்று அறியார்கள்.

333. ஞானம் புருஷன்போன்றது; பக்தி ஸ்திரீ போன்றது. ஞானமானது ஈசுவரனுடைய அந்தப்புர வாசல்வரையில்தான் செல்லலாம்; பக்தியோ அந்தப்புரத்துக்குள்ளும் செல்லும்.

334. பிரேமையின் இரண்டு லட்சணங்களாவன:—ஒன்று வெளியுலகத்தை மறத்தல்; இன்னொன்று சொந்தச்சரீரத்தைமறத்தல்.

335. பக்தி சந்திரனாகும்; ஞானம் சூரியனாகும். வடகோடியிலும் தென்கோடியிலும் சமுத்திரங்கள் உண்டென்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். சமுத்திரங்கள் அங்கே உறைந்து, பெரும் பனிக்கட்டிகள் உண்டாகும்படி யவ்வளவு குளிர்மிகுந்திருக்கின்றன; கப்பல்கள் அங்கும் இங்கும் அசையமுடியாதபடி அப்பனிக்கட்டிகளினிடையில் அகப்பட்டுக்கொள்கின்றன.

பக்திமார்க்கத்திலே செல்லும் ஜனங்கள் அதேமாதிரி பாதிவழியிலே அகப்பட்டுத்தவிக்கிறார்களா?

ஆம்; அகப்பட்டுக்கொள்கிறார்கள்; ஆயினும் பாதகமில்லை; ஏனென்றால் பனிக்கட்டி சச்சிதாநந்த சமுத்திரத்தின் கெட்டித்தன்மையடைந்துள்ள ஜலமே. "பிரஹ்மைவ சத்தியம், ஜகன்மித்தியா" என்று நீ நியாயம் பேசினால், பனிக்கட்டி ஞானசூரியன்முன்னர் உருகிவிடும்; எஞ்சியிருப்பது யாது? சச்சிதாநந்த சாகரத்தின் ஜலமே.

336. மீன் சாப்பிடுகிறவர்கள் அந்த மீனுடைய உபயோகமற்ற தலை, வால்முதலியவற்றை விரும்புகிறதில்லை; ஆனால் அதன்மிருதுவான மத்திய பாகத்தையே விரும்புகிறார்கள். அப்படியே நாமும் நமது சாஸ்திரங்களில் உபயோகமில்லாதவற்றையெல்லாம் தள்ளிவிட்டு, முக்கியமானதை எடுத்துக்கொண்டு, நமது தற்காலத்து ஆவசியகங்களுக்குத் தக்கவாறு பொருத்திக்கொள்ளவேண்டும்.

337. முதலில் பக்தியை அடைந்துகொள்ளுங்கள்; மற்றெல்லா வஸ்துக்களும் உங்களுக்குக்கொடுக்கப்படும்: முதலில் பக்தி, பின்னர் கர்மம். பக்திநீங்கலாகப் பார்ப்போமானால் கர்மமானது உதவியற்றது, தானாக ஒன்றுஞ் செய்யமுடியாதது.

338. ஈசுவரன் பலவிதங்களில் தோன்றுகிறார்—சிலவேளைகளில் மானிடவடிவத்திலும் சிலவேளைகளில் சின்மயரூபமாகவும் தோன்றுகிறார். ஆனால் மனிதனுக்கு திவ்ய சொரூபங்களிடத்திலே நம்பிக்கையிருக்கவேண்டும்.

339. சசாதரபண்டிதர் ஸ்ரீராமகிருஷ்ணர் வியாதியினால் பீடிக்கப்பட்டிருந்தபொழுது அவரைநோக்கி, "மனத்தை வியாதியினால் பீடிக்கப்பட்டிருக்கும் இடம்நோக்கிச் செலுத்தி ஒருமுகப்படுத்தி ஏன் சொஸ்தம்பண்ணிக்கொள்ளக் கூடாது?" என்று கேட்டார்.

ஸ்ரீராம கிருஷ்ணர் கூறியதாவது:—"ஈசுவரனிடத்திலே அர்ப்பணம்செய்துவிட்ட அந்த மனத்தை, இந்த இழிந்தஎலும்புக்கூண்டினிடத்திலா செலுத்துவது?" என்பதே.

சசாதரர் பின்னர் கூறியதாவது:—ஜகன் மாதாவை நோக்கிப் பிரார்த்தனைசெய்து ஏன் தங்கள்வியாதியைநீக்கி சொஸ்தம் பண்ணிக்கொள்ளக்கூடாது?"

ஸ்ரீராமகிருஷ்ணர் அதற்குப்பின்வருமாறு பதில்அளித்தார். "நான் எனது மாதாவைப்பற்றி நினைக்கும்பொழுது, எனதுஸ்தூலசரீரத்தின்பிரக்ஞையே எனக்குக்கிடையாது; நான் ஸ்தூல சரீரத்தைவிட்டு நழுவியிருக்கிறபடியினாலேசரீரத்தைப்பற்றியுள்ள எதை வேண்டியும் என்னால் பிரார்த்தனைசெய்யமுடியவில்லை."

340. தண்ணீருக்குள் வைக்கப்பட்ட ஒரு பாத்திரமானது உள்ளும்புறம்பும் தண்ணீர் நிறைந்ததாயிருக்கிறது. அதுபோலவே, ஈசுவரனிடத்திலே லயமாயுள்ள ஆத்மா சர்வவியாபகமாயுள்ள பரமாத்மாவை உள்ளும் புறம்பும் பார்க்கிறது.

341. க்ஷமை சந்நியாசியினுடைய உண்மை லட்சணம்.

342. எல்லோரும் ஈசுவரனைப் பார்க்கமுடியுமா? எவரும் எப்பொழுதும் பட்டினிகிடக்கமுடியாது. சிலர் காலை 9-மணிக்குச் சாப்பிடுகிறார்கள்; சிலர் மத்தியானம் சாப்பிடுகிறார்கள்; வேறுசிலர் பகல் 2 மணிக்குச் சாப்பிடுகிறார்கள். இன்னும் சிலர் மாலையில் அல்லது இருட்டினபிறகு சாப்பிடுகிறார்கள். அதுபோன்றே, எப்பொழுதாவது, இந்த ஜன்மத்திலாவது இன்னும் அநேக ஜன்மங்கள் கழித்தாவது, எல்லோரும் ஈசுவரனைத்தரிசிக்கத்தான்வேண்டும்; தரிசிக்கத்தான்செய்வார்கள்.

343. "நிஷ்டையிலே பரிபூரணனானவனுக்கு மோக்ஷம் சமீபத்திலுள்ளது" என்பது ஒருபழஞ்சொல். ஒருவனெப்பொழுது நிஷ்டையிலே பரிபூரணனாகிறான் என்பது உனக்குத்தெரியுமா? அவன் நிஷ்டைசெய்வதற்கு உட்கார்ந்துவிட்டால், திவ்ய ஆகாயத்தினாலே சூழப்பட்டவனாய் விடுகிறான்; அவனுடைய ஆத்மா ஈசுவரனிடத்திலே லயித்துவிடுகிறது.

344. உனக்குள்ளேயே பின்கூறப்படும் மாதிரியாகஎப்பொழுதும் விசாரணை செய்துகொள். அதாவது: "இக்குடும்பக்கவலைகள் என்னுடையவையன்று. இவை ஈசுவரனுடையவையே; நான் அவருடைய தாசன்தான்; அவருடைய இச்சையின்பிரகாரம் நடப்பதற்கே நான் இங்குவந்திரு

க்கிறேன்.'' என்பதே. இவ்வெண்ணம் உறுதியடைந்துவிட்டால், ஒருவன் தனக்குச் சொந்தமென்று கூறும்படியாக ஒன்றுமேயிராது.

345. ஒரு மண்பாத்திரத்திலே தண்ணீரை நிரப்பி ஒரு அலமாரியிலே வைத்துவிட்டால் சின்னாட்களில் அத்தண்ணீர் வற்றிவிடும்; ஆனால் அதைத் தண்ணீருக்குள்ளே அமிழ்த்திவைத்திருந்தால், அஃது அங்குள்ளவரையில் நிரம்பியேயிருக்கும். அம்மாதிரியேதான் நீ ஈசுவரனிடத்தச் செலுத்தும் பக்தியின் விஷயமும். நீ கொஞ்சகாலத்திற்கு உனது ஹிருதயத்தை ஈசுவரபக்தியினாலே நிரப்பிப் பின்னர் அவரை அடியோடு மறந்துவிட்டு, இதரவிஷயங்களிலே மனத்தைச் செலுத்திக்கொண்டிருந்தால், உனது ஹிருதயத்திலுள்ள பக்தியானதுவற்றிவறண்டுவிடும். ஆனால் நீஎப்பொழுதும்உனது ஹிருதயத்தில் ஈசுவரபக்தியையும் நம்பிக்கையையுமேநிரப்பிவைத்தக்கொண்டிருந்தால்தான் அப்பக்தி என்றும் குன்றாது ஓங்கிவளர்ந்துகொண்டிருக்கும்.

346. பளிங்குக்கல் லட்சக்கணக்கான வருஷங்கள் தண்ணீருக்குள் இருக்கலாம்; ஆயினும் அதில்அந்தர்ப்பூதமாயுள்ள அக்கினியை அது ஒருபொழுதும் இழக்கிறதில்லை. உனக்குப் பிரியப்பட்டபொழுது, அதை இரும்பினால் அடித்தால், வெளியே நெருப்புப்பொறி பறக்கின்றது. அப்படியேதான் உண்மைப்பக்தனும் தனது விசுவாசத்தில் இருக்கின்றான். உலகத்து அழுக்குகளினால் அவன் சூழப்பட்டிருந்த

போதிலும், அவன் தன்னுடைய நம்பிக்கையையும் விசுவாசத்தையும் இழக்கிறதில்லை. ஈசுவரனுடைய நாமத்தைக்கேட்டமாத்திரத்திலே அவன் அப்படியே மெய்ம்மறந்துவிடுகிறான்.

347. நம்பிக்கை யுள்ளவனுக்கு எல்லாம் உண்டு; நம்பிக்கையில்லாதவனுக்கு ஒன்றுமேயில்லை.

348. வெட்டவெளியான நிலத்திலேயுள்ள ஒரு சிறிய குட்டை ஜலமானது அதிலிருந்து ஒருவரும் தண்ணீர் எடுக்காமற்போனாலும், சீக்கிரம் வற்றிவிடும். அதுபோலவே பாபியானவன் ஈசுவரனிடத்திலே தன்னைத்திரிகரண சுத்தியாக அப்படியே அர்ப்பணம்செய்துகொள்வானானால், பாபங்கள்நீங்கிப்பரிசுத்தமடைந்து விடுகிறான்.

349. சாதுக்களுடையசங்கமானது அரிசிக்கழுநீர்போன்றது. இக்கழுநீர் காடி நீரினாலுண்டாகும் மயக்கத்தைப் போக்கடிக்கும் வல்லமையுள்ளது. அப்படியேதான் சாதுக்களுடைய சங்கமும் வீணைசையாகிற மதுபானத்தினால் உண்டாகும் மயக்கத்தைப் போக்கடிக்கும் வல்லமையுள்ளது.

350. எடைகனமாயுள்ள தராசுத்தட்டு கீழே சென்று விடுகிறது. எடை இலேசாயுள்ள தராசுத்தட்டு உயரக்கிளம்புகிறது. அப்படியேதான், சமர்த்தும் சக்தியுமுள்ள மனி

தன் எப்பொழுதும் தாழ்மையும் வணக்கமு முள்ளவனு யிருக்கிறான்; மூடன் வீண்கெர்விதனுகித் தலைநிமிர்ந்தவனாக வீழ்கிறான்.

351. ஒரு சமயத்திலே ஒரு கிராமத்திலே பத்மலோசனன் என்னும் ஒருவாலிபன் இருந்தான். அந்தக்கிராமத்திலே பாழடைந்த கோவிலொன்று இருந்தது; அதிலே விக்கிரகம் ஒன்றும் கிடையாது. கோவில்முழுதும் செடி, கொடி, புல், பூண்டுகள் நிறைந்து, புதர் அடர்ந்திருந்தது. அது பலவிதமான பக்ஷிகளுக்கும் வௌவால்களுக்கும்இருப்பிடமாயிருந்தது. ஒருநாள் மாலையிலே திடீரென்று அக்கோவிலில், கணகணவென்று மணியடிக்கிற சப்தமும சங்கநாதமும் கேட்டன. ஆண், பெண், குழந்தை, குட்டிகள் ஆகிய அக்கிராமத்து ஜனங்கள் எல்லோரும்அக்கோவிலுக்குஓடிச் சென்றார்கள்; எவனே ஒருபக்தன் புதிதாக அக்கோவிலிலே விக்கிரகப்பிரதிஷ்டை செய்திருக்கலாம் என்றுநினைத்தார்கள். கோவிலுக்கு வெளியே எல்லோரும்மகாபயபக்தியுடனே, எப்பொழுது கதவு திறக்கப்படுமோ, ஈசுவரதரிசனம் செய்யலாமோவென்று வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக்காத்துக்கொண்டிருந்தார்கள். அவர்களில் தைரியமுள்ள ஒருவன், மெல்லக்கதவைச் சிறிது திறந்து எட்டிப் பார்த்தான். என்ன ஆச்சரியம்! பத்மலோசனன் இந்த தடபுடல் செய்துகொண்டிருக்கிறான். மூலஸ்தானம் எப்பொழுதும்போல அழுக்கடைந்துதான் இருக்கிறது; அங்

கே விக்கிரகமும் இல்லை. அவன் பத்மலோசனனை நோக்கி "அடே பத்மா! உள்ளே ஈசுவர விக்கிரகம்இல்லையே. நீ கோவிலைச் சுத்தம்செய்யக்கூட இல்லையே. கோவில் வௌவால்களின் வாசஸ்தானமாயிருக்கிறதே. அப்படியிருக்க ஏன் சங்கநாதம்செய்துவீணே இப்பெரும் சத்தத்தையுண்டுபண்ணுகிறாய்?" என்றுகேட்டான். ஆதலின்உனது ஹிருதயக்ஷேத்திரத்திரத்தினுள்ளே ஈசுவரவிக்கிரகத்தை நீபிரதிஷ்டை செய்யவிரும்பினால், நீ அவரையநுபவத்தில் அறியவிரும்பினால், சங்கசப்தம்செய்துவீண் கூச்சலிடுவதில் பயன்யாது? முதலில், உனது ஹிருதயத்தையே சுத்தம்செய்துகொள். மனம்பரிசுத்தமாக்கப்பட்டபொழுது, ஈசுவரன் தாமாகவே வந்து தமது ஆசனத்தில் அமர்கிறார். அசுத்தமான இடத்திலே ஈசுவர விக்கிரகம் எதுவும் பிரதிஷ்டைசெய்ய முடியாது. முதலில் உனது ஆத்மசமுத்திரத்துக்குள்ளேயே முழுகி, ரத்தினங்களை யெடுத்துக்கொள்; பிறகுமற்றவற்றை யெடுக்கலாம். முதலாவது உன் ஹிருதயத்திலே ஈசுவரன் குடிகொள்ளவேண்டும். பின்னர் பிரசங்கங்களும்போதனைகளும் வேண்டியமட்டும் வைத்துக்கொள்ளலாம்.

352. பக்தனுக்கு ஈசுவரன் பலவடிவங்களிலும் பிரசன்னமாகிறார். ஆனால் சமாதியிலே பிரஹ்மஞானாநுபூதியடைந்தவனுக்கு, அவர் திரும்பவும் நிர்க்குண பிரஹ்மமாகவே நிராகாரவஸ்துவாகவே, நிர்ப்பந்தப்பொருளாகவேயிருக்கிறார். இங்குத்தான் ஞானமும்பக்தியும் ஒற்றுமைப்படுவது.

353. இந்தப்பிரபஞ்சலீலை எவருடையதோ, அவருக்கே நித்தியத்தன்மையுண்டு; எவருக்கு நித்தியத்தன்மையுண்டோ, அவருடையதே இந்தப்பிரபஞ்சலீலை.

354. குருவையும் அறியாத, சிஷ்யனையும் அறியாத அப்பரிசுத்தஸ்திதி அதிரகஸ்யமானது. ஒருவனுக்கு பிரஹ்மஞானம் உண்டாய்விட்டால், பின்னர் குருவென்றும் சிஷியனென்றும் வித்தியாசம் கிடையாது; பிரஹ்மஞானம் அவ்வளவு ரகசியமானது.

355. அகத்தேயுண்டாகும் ஆநந்தம் ஈசுவரதரிசனமடைந்ததினலேற்படும் அடையாளங்களுள் ஒன்றும். சமுத்திரத்தின் மேல்மட்டத்திலே அலைகள் சலித்துப்புரள்கின்றன. ஆனல் அடியிலேயுள்ள ஜலமானது நிச்சலனமாயிருக்கின்றது.

356. சிலசமயங்களில் நான் உடைதரித்தும் சிலசமயங்களில் உடையின்றியும் இருப்பதுபோல, பிரஹ்மவஸ்துவானது சிலசமயங்களில் சகுணமாயும் சிலசமயங்களில்நிர்க்குணமாயும் இருக்கின்றது. சகுணப்பிரஹ்மம் சக்தியோடு கூடிய பிரஹ்மமாகும். அப்பொழுது அது ஈசுவரன் எனப்படுகிறது.

357. அடங்கிய பிரஹ்மவஸ்துவும் ஆத்திரமுள்ள சக்தியும் ஒன்றேயாம். அகண்டசச்சிதாநந்த சொரூபியாயிருக்

கப்பட்டவரே சர்வஞ்ஞ, சர்வதரிசன, சர்வாநந்த ஜகன் மாதாவாயிருக்கிறார். தானேபிரகாசிக்கும் மணியும் அந்த மணியின் ஒளியும்ஒன்றேயாம்; ஒளியின்றி மணியைநினைக்க முடியாது, மணியின்றி ஒளியைநினைக்க முடியாது.

358. இராமரும் சீதையும் லட்சுமணரும் காட்டுக்குச் சென்றபொழுது, ராமர் முதலிலும் மத்தியில் சீதையும்கடைசியில் லட்சுமணருமாகச் சென்றார்கள். லட்சுமணருக்கு இராமரை நன்றாகப்பார்க்கவேண்டுமென்று அதிக ஆசை. ஆனால், சீதை மத்தியில் இருந்தபடியினால், இராமரை நன்றாகப்பார்க்க முடியவில்லை. பின்னர், லட்சுமணர் சீதையைக் கொஞ்சம் ஒதுங்கிக்கொள்ளும்படி பிரார்த்தித்தார். அவள்சற்று விலகியவுடனே, லட்சுமணருடைய ஆசை நிறைவேறிற்று. அவர் இராமரை நன்றாகப்பார்த்தார். அப்படியேதான் இவ்வுலகிலே பிரஹ்மம், மாயை, ஜீவன் ஆகிய இவற்றுள் ஒன்றுக்கொன்று உள்ளஏற்பாட்டுமுறையும். மாயாப்பிரமை விலகாதவரையில், சிருஷ்டிப்பொருள் சிருஷ்டிகர்த்தாவைப்பார்க்கமுடியாது—மனிதன் தன்னுடைய ஈசுவரனைத் தரிசிக்கமாட்டான்.

359. சமுத்திரத்தினின்றும் அலைகள் எப்படி யுண்டாகின்றனவோ அப்படியே அவதார புருஷர்கள்பிரஹ்மவஸ்துவிடம் தோன்றுகிறார்கள்.

360. ஈசுவரஞானம் புத்தகங்களின் மூலமாகவே யடையப்படவேண்டுமென்றும் வேறு எவ்வழியிலும் முடியாதெ

ன்றும் அநேகர் நினைக்கிறார்கள். ஆனால் சாஸ்திரங்களை வாசிப்பதைவிட கேட்பதுமேன்மை; அதிலும் அநுபவமே மிகவும் சிறந்தது. கிரந்தங்களின் வீண்படிப்பைவிட சற்குருமூலமாகச்சத்தியத்தை சிரவணம் செய்தலே மனத்தில் நன்றாய்ப்பதிகின்றது. அதிலும் பிரத்தியட்ச தரிசனமே மிகவும் நன்றாய்ப்பதிகின்றது. காசியைப்பற்றிப் படிப்பதைவிடகாசிக்குச்சென்று அவ்விடத்தைநேரே பார்த்தவரிடமிருந்து அவ்விடத்தைப்பற்றிக்கேட்பதுமேல்; அதிலும் சொந்தக்கண்களால் காசியை நேராகக் காண்பதே மிகவும் சிறந்தது.

361. ஜகன்மாதாவின்மீது தமக்கிருந்த அத்தியந்தபிரேமையின் விதத்தைப்பற்றி ஸ்ரீ ராமகிருஷ்ணர் பின்வருமாறு கூறுவார்:—"தக்ஷிணேசுவராலயத்திலேசாயரட்சை பூஜை நடக்கும்சமயத்திலே மணிசப்தம், சங்கநாதம் முதலியவற்றைக்கேட்டவுடனே நான் கங்காதீரத்துக்கு ஓடிச்சென்று ஜகன்மாதாவைநோக்கி, கண்ணீர் தாரைதாரையாக அழுதுகொண்டு 'ஆ தாயே! இன்றொருநாள் போய்விட்டதே; நீ இன்னும் எனக்கு பிரத்தியட்சமாகவில்லையே' என்று கதறுவேன்."

362. அழுக்கடைந்த கண்ணாடிஒருபொழுதும் சூரியனுடையபிரகாசத்தைப் பிரதிபலிப்பிக்கிறதில்லை;மாயையிலகப்பட்டு ஹிருதயத்திலேஅசுத்தமும் அழுக்கும்நிறைந்தவர்கள் ஒருபொழுதும் ஈசுவரதரிசனம் அடைகிறதில்லை. ஆனால் அழுக்கு நீங்கித்தெளிந்தகண்ணாடி சூரியனைப்பிரதிபலிப்

பிப்பதுபோல, ஹிருதயசுத்தமுள்ளவர்கள் ஈசுவரனைத் தரிசிக்கின்றார்கள். ஆதலின் நீ பரிசுத்தமாயிரு.

363. ஒரு யானையின் சரீரத்தை நன்றாகக் குளிப்பாட்டி மறுபடியும் அதனை யதேச்சையாகத் திரியும்படி விட்டுவிட்டால், சீக்கிரத்திலே அது தனது சரீரத்திலே அழுக்கேற்றிக்கொள்வது நிச்சயம்; ஆனால் அதைக்குளிப்பாட்டிய பின்னர் அதை அதன் கூடத்திலே கட்டிப்போட்டுவிட்டால், அது சுத்தமாகவே யிருக்கும்; அப்படியேபரிசுத்த புருஷர்களுடைய கிருபாகடாட்சத்தினாலே உனக்கு ஆத்மசுத்தி ஏற்பட்டுவிட்டாலும், பின்னர் நீ உலகினருடனே தாராளமாகக் கலந்து சகவாசம்செய்தால், உனக்குண்டான சுத்தியை சீக்கிரம் இழந்துவிடுவது நிச்சயம். ஆனால் நீ உனது மனத்தை ஈசுவரனிடத்திலேயே செலுத்திநிறுத்தியிருந்தால், உனது ஆத்துமசுத்தியிலே ஒருபொழுதும் அழுக்குஏற்படாது.

364. பரிபூரண நம்பிக்கையின் லட்சணமென்ன? கஷ்டப்பட்டு வேலைசெய்பவன் தனதுவேலைமுடிந்து வீடுதிரும்பி வந்து, தலையணையிலே சாய்ந்துகொண்டுசாவகாசமாகச்சுருட்டுக்குடிக்கும்பொழுதுண்டாகின்ற, ஆறுதலளிக்கும் ஆநந்தநிலைமையாய்; அஃது எல்லாக்கவலைகளினின்றும் துன்பங்களினின்றும் நீங்கியிருத்தலாம்.

365. உன்னுடைய குடும்பக்கவலைகள் உன்னுடையவையல்லவென்றும், அவை ஈசுரவனுடையவையே யென்றும்

நீ அவருக்கு தாசனேயென்றும், அவருடைய ஆக்ஞைகளின்படி நடப்பதற்கே இங்கு வந்திருக்கிறாயென்றும் எப்பொழுதும் நினைத்துக்கொள். இவ்வெண்ணமானது உறுதிப்படும்பொழுது, ஒருவன் தனக்குச் சொந்தமென்று சொல்லக்கூடிய ஒன்றுமே உண்மையில் இருக்கிறதில்லை.

366. பிதாவு மாதாவும் மனிதனுக்குமுக்கியத்திலேமுதன்மைபெற்றவர்கள். அவர்கள் சந்தோஷமடைந்தாலொழிய, பக்தியநுஷ்டானங்களில் ஒன்றும் பயன்படாது. ஈசுவரப்பிரேமையினாலே பித்துப்பிடித்த சைதந்நியரைப்பாருங்கள்; அவரும் சந்நியாசமெடுத்துக்கொள்வதற்குமுன், தமது தாயாருக்கு ஆறுதல் கூறுவதற்கு மிகுந்த சிரமப்பட்டார்; அவர் தமது மாதாவை நோக்கி "அம்மா! விசனப்படாதே, நான் அடிக்கடி வந்து உன்னைப்பார்த்துவிட்டுப் போகிறேன்" என்றுகூறினார். ஒருவன்செலுத்தவேண்டிய கடன்கள் அநேகமுண்டு; அவை: தேவர்கடன், ரிஷிகளின் கடன், பெற்றோர்கடன், மனைவிகடன். பெற்றோர்கடன் செலுத்தப்பட்டாலொழிய, எந்தற்காரியமும் பயனடையாது. மனைவிக்குங்கூடச்செலுத்தவேண்டியகடன் ஒன்று உண்டு.

367. ஸ்திரீகளின் மத்தியிலே இருந்தாலும் அவர்களையறியாதவன் எவனோ அவனேவீரன்.

368. பக்தியோகமென்பது பக்தி, சரணாகதி யென்னும் உபாயங்களினாலே ஈசுவரனிடத்திலே லயமடைவது. அது

கலியுகத்திற்கென்று பிரத்தியேகமாக ஏற்பட்டது. இது தான்இந்தயுகதர்மம். அதுகர்மத்தைப்பெரும்பான்மையும் குறைத்துவிடுகிறது. இடைவிடாப்பிரார்த்தனையை அது போதிக்கிறது.

369. ஒருவன்மதசம்பந்தமான ஒவ்வொன்றிலும் உண்மையில் வெறுப்புக்காட்டும்தன்மையினாலே, இவன்உலகினன் என்று அறியப்பட்டுவிடுவான். அவன் ஈசுவரநாமத்தைக்கேட்கவோ அல்லதுபஜனையைக்கேட்கவோ பிரியப்படுகிறதில்லை; அவற்றைக் கேட்கலாகாதென்று அவன் பிறருக்கு போதிக்கவும் செய்வான். நாமசங்கீர்த்தனங்களை இகழ்ந்து பக்திமார்க்கசபைகளையும் புருஷர்களையும் நிந்திக்கின்றவன் எவனோ, அவனே உலகின் உண்மைப் பிராணி.

370. ஒரு வியபசாரஸ்திரி ஒருபரிசுத்த புருஷனைப்பிடித்துக்கொண்டு அவனைத்தீய வழியிலே இழுக்க ஆரம்பித்தால், என்னநேரிடுகிறது?.

நன்றாய்ப்பழுத்த மாம்பழமானது கையிலே வைத்து நன்றாகப் பிதுக்கப்பட்டபொழுது கொட்டையும் சதையும் வெளியே போய்விட, தோல்மாத்திரம் கையில்நிற்பது போல, பரிசுத்தபுருஷனுடைய மனமும், ஸ்திரீயினாலேபாதிக்கப்படும்படி பஞ்சபூத சடலத்தை விட்டுவிட்டுஈசுவரனை நோக்கி நழுவிவிடுகின்றது.

371. ஈசுவரபக்தி ஹிருதயத்திலே நிரம்புகிறபொழுது, கர்மத்தியாகம் தானே யுண்டாய்விடுகிறது. ஈசுவரனாலே அப்படிச்செய்யும்படி ஆக்ஞாபிக்கப்பட்டவர்கள்மாத்திரம் கர்மம்செய்யட்டும். காலம் பக்குவமாய்விட்டால், மனிதன் எல்லாவற்றையும் விட்டுவிட்டு "ஏ மனமே! வா; ஹிருதயத்திலேயுள்ள ஈசுவரனைநாம்ஒன்றுசேர்ந்து கவனிப்போம்" என்று சொல்லவேண்டும்.

ஈசுவரனிடத்திலே சரணாகதி யடைந்துவிடு; கூச்சம், பயம் முதலிய மூடஉணர்ச்சிகளையெல்லாம் உதறிவிடு. "நான் ஈசுவரநாமத்தைச் சொல்லிக்கொண்டு நிர்த்தனம் செய்தால், பிறர் என்ன சொல்வார்களோ" என்பதுமுதலிய எண்ணங்களெல்லாவற்றையும் எறிந்துவிடு.

372. மனிதனில் உள்ள ஆத்மா விழித்துக்கொண்டாலொழிய, அவன் ஈசுவரனை அறியமுடியாது.

373. ஒரு விறகுவெட்டி அடுத்த காட்டிலிருந்து தான் தினந்தோறும் கொண்டுவரும் விறகுச்சுமையை விற்றுக்கிடைக்கும் சிறு சம்பாத்தியத்தினால் மிகவும் கஷ்ட ஜீவனம் செய்துகொண்டிருந்தான். ஒரு சமயத்திலே அக்காட்டினூடே அவ்வழியேசென்ற ஒரு சந்நியாசி அவன் விறகுவெட்டுவதைப்பார்த்து, அக்காட்டிற்குள்ளே சென்றால் நல்லலாபம் கிடைக்கலாம் என்று அந்தவிறகுவெட்டியினிடம்சொ

ல்லிவிட்டுச் சென்றார். அந்த விறகுவெட்டி அவருடையகூற்றுக்குக் கீழ்ப்படிந்து அக்காட்டினுள்ளே சிறிதுதூரம் சென்று, அங்கே ஒரு சந்தனமரத்தைக்கண்டான்; மிகுந்த சந்தோஷத்துடனே சந்தனக் கட்டைகளை வேண்டியமட்டும் வெட்டியெடுத்துக்கொண்டு வீடுநோக்கிச்சென்று அக்கட்டைகளைவிற்று நல்லலாபம் சம்பாதித்தான். அந்தச்சந்நியாசி ஏன் நம்மிடத்தில் சந்தனமரத்தைப்பற்றிச் சொல்லாமல் காட்டினுள்ளே செல்லு என்றுமாத்திரம் சொன்னார்? என்று தனக்குத்தானே யோசனைசெய்துபார்த்தான். மறுநாள் அவன் சந்தனமரங்கள் இருந்த இடத்துக்கும் அப்பால் சென்று பார்க்கவே, ஒரு தாம்பிரக்கனி தென்பட்டது; உடனே அக்கனியிலேவெட்டித் தன்னாலானமட்டும் வேண்டியவற்றை எடுத்துச்சென்று விற்று வெகுபணம்சம்பாதித்தான். மறுநாள் தாம்பிரக்கனியோடுநிற்காமல், சாதுகூறியபடியே இன்னும் உள்ளேசென்றான். அங்கே ஒருவெள்ளிக்கனிதென்பட்டது. அதிலேதன்னால்சுமக்கமுடியுமான அளவுவெள்ளியைவெட்டியெடுத்து, விற்று இன்னும் அதிகபணம்சம்பாதித்தான். இப்படியே அவன் தினந்தோறும் மேன்மேலும் உள்ளேசென்று தங்கக்கனிகளையும்வைரக்கனிகளையும்கண்டுபிடித்துக் கோடீசுவரனாகிவிட்டான். இப்படித்தான்ஞானமடைய விரும்பும் முமூட்சுவின்விஷயமும் ஏதேனும் சிறிது அசாதாரண சித்தியுண்டானவுடனே அதனுடன் நின்றுவிடாமல், முமூட்சுவானவன் மேன்மேலும் சென்றுகொண்டே யிருப்பானானால், கடைசியில் அவன் நித்திய

ஞானமாகிய சத்திய சம்பத்திலே மிகுந்து சிறந்து விளங்குகிருன்.

374. அனுஹதசப்தம் எப்பொழுதும் தானுகவே தொனித்துச்கொண்டிருக்கிறது. இதுதான் பிரணவசப்தம். இது பரப்பிரஹ்மத்திலிருந்து உண்டாகிறது; யோகிகளுக்குக்கேட்கிறது. சாதாரண உலகினர் இதைக்கேட்கமுடியாது. இந்த சப்தமானது ஒருபக்கத்தில் உந்திக்கமலத்திலிருந்தும் மறுபக்கத்தில் பரப்பிரஹ்மத்திலிருந்தும் கிளம்புகிறது என்று யோகிகள் அறிந்துகொள்ளமுடியும்.

375. ஒரு கவி, பக்தியை புலிக்குஉவமையிட்டிருக்கிருர். புலியானது இதரமிருகங்களை அடித்துக்கொன்று தின்பது போல, பக்தியும் மனிதனுடைய விரோதிகளாகிய காமக்குரோதாதிகளையெல்லாம் கொன்றுதின்று விடுகிறது. ஒரு தரம் ஈசுவரபக்தி பரிபூரணமாய் உண்டாய்விட்டால், காமக்குரோதாதி தீய உணர்ச்சிகள் அடியோடு அழிக்கப்பட்டு விடுகின்றன. பிருந்தாவனத்துக்கோபிகைகள் தாங்கள் கிருஷ்ணனிடத்து வைத்திருந்த பக்தியின்மூலமாக அந்த நிலைமையை அடைந்தார்கள்.

376. சம்புமல்லிக் என்பவர் ஒரு சமயம் என்னிடத்தில் "ஜெகன்மாதாவினுடைய திவ்யபாதாரவிந்தங்களில் எனது ஐசுவரியத்தையெல்லாம் வைத்துவிட்டு நான்மரிக்கும்படி எனக்குத்தாங்கள் அநுக்கிரகிக்கவேண்டும்'' என்

று சொன்னார். அதற்குநான் பதில்கூறியதாவது: "நீஎன்ன பேசுகிறாய்? அஃதெல்லாம் உனக்குத்தான் ஐசுவரியம்! ஜகன்மாதாவுக்கு காலில்மிதித்துத்துவைக்கின்ற தூசின் அளவுகூட அது மதிப்பின்றியது.

377. பத்துவித ஔஷதிவேர்களினால் ஆக்கப்பெற்று, தசமூலபசனம் என்றுகூறப்படுகின்ற கஷாயமானது தற்கால ஜ்வரங்கட்கு ஏற்றநிவிர்த்தியென்றென்றுநீ அறியாயா? அந்த ஔஷதம்பலனடைவதற்குள்ளாக, வியாதியஸ்தன்மரித்தாலும் மரித்துவிடலாம். "ஜ்வரமருந்து'' என்று ஆங்கிலேய வைத்தியர் கூறுவதே தற்கால நிவிர்த்தி.

378. முழுதும் உலகிலேயே பந்தப்பட்டுள்ள ஜீவன் மலத்திலேயே வாழ்ந்துமலத்திலேயே மரிக்கும் புழுப்போன்றவன்; மேலான எண்ணம் ஒன்றும் இல்லாதவன். சாதாரண உலகினன் இப்பொழுது மலத்திலும் அடுத்த நிமிஷத்தில் சர்க்கரையிலும் உட்காருகின்ற ஈபோன்றவன். முக்தாத்மா ஒருவன்தான் தேனைமாத்திரம் குடித்து வேறொன்றையும் ருசிக்காத தேனீபோன்றவன்.

379. ஒரு செம்படவன் நதியிலே வலைவீசி அநேகமீன்களைப்பிடித்தான். சில, வலைக்கு வெளியே தப்பித்துச்செல்லவேண்டுமென்று முயற்சிக்காமலே அமைதியாயும் அசைவற்றும் கிடந்தன. வேறுசில, தங்களால், ஆனமட்டும் குதித்துப்பார்த்தனவாயினும் தப்பித்துக்கொள்ள முடியவில்லை.

இன்னும் சில, எப்படியோவலையினின்றும் தப்பித்து வெளியேறிவிட்டன. இப்படியே உலகினரும் மூன்றுவிதமாவர்:—

(1) முக்திவேண்டுமென்று முயற்சிக்கவே செய்யாத பெத்தர்கள் (2) முமுட்சுக்கள் (3) முக்தர்கள்.

380. ஒருஸ்திரீ தன்புருஷனுடன் தான் தினந்தோறும்செய்யும்சம்பாஷணையை எல்லோரிடமும் சொல்லக்கூச்சப்படுகிறாள். அவள் அதை எவரிடத்தும் கூறுகிறதுமில்லை, கூறப்பிரியப்படுகிறதுமில்லை; அந்தச்சம்பாஷணைஎவ்விதமாகவேனும்வெளியாய்விட்டால், அவளுக்குமனத்துன்பமுண்டாகின்றது. ஆனால் அவள் தனது அந்தரங்கத் தோழியினிடம் எல்லாவற்றையும் ஒளியாமல் உரைத்து விடுவாள்; அது மாத்திரம் அன்று; தோழியினிடம் சொல்வதற்காக அவள் வெகு ஆத்திரத்துடன் காத்திருக்கிறாள்; தோழியிடம் சொல்வதிலே சந்தோஷமடைகிறாள். அப்படியே, ஈசுவரபக்தனும் தனது தியானஅநுபவகாலத்திலே யுண்டாகின்ற ஆநந்தத்தை உண்மைப்பக்தனிடம் தவிர, வேறு எவரிடமும் கூறுகிறதில்லை; சிலசமயங்களிலே உண்மைப்பக்தனைக்கண்டு பிடித்துச் சொல்வதற்கு அவன் மிகவும் ஆசையுள்ளவனாயிருக்கிறான்; அப்படிச்சொல்வதிலே அவன் மிகவும் சந்தோஷமுமடைகிறான்.

381. மனிதனுக்கு எப்பொழுது மோட்சம் கிடைக்கும்? அவனுடைய அகங்காரம் அழியும்பொழுதுதான்.

382. ஒன்று என்ற எண்ணுக்குப்பின் பூச்சியங்களைக் கூட்டிப்பெருந்தொகைகளாக்கிக்கொள்ளலாம். ஆனால்ஒன் என்ற எண்ணை யெடுத்துவிட்டால், பூச்சியங்கள் எத் தனை சேர்ந்திருந்தாலும் அவற்றுக்குமதிப்பேயில்லை. அது போன்றே, ஜீவன் ஒன்று ஆகிய ஈசுவரனிடத்து ஒட்டிக் கொள்ளாத வரையில், அதற்கு மதிப்பேயில்லை; ஏனென் றால் இங்குள்ள எல்லாவஸ்துக்களுக்கும் ஈசுவரனிடத்துள்ள சம்பந்தத்தினாலேயே மதிப்பு ஏற்படுகின்றது.

383. சமுத்திரம்பொங்கினால், நதிகளிலும்சிற்றாறுகளிலு ம்வெள்ளம்பெருகிச்சுற்றுப்புறத்துள்ள நிலங்களெல்லாவற் றையும் ஒரே நீர்மட்டமாக்கிவிடுகின்றது; ஆனால் மழை ஜலமானது சாதாரணமாயுள்ள கால்வாய்களின்மூலமாக ஓடிவிடுகிறது. அதுபோன்றே ஒருரட்சகர் அவதரிக்கும் பொழுது, அவருடைய கிருபையினாலே எல்லோரும் ரட் சிக்கப்படுகிறார்கள். ஆனால் சித்தர்கள் மிகுந்த சிரமத்துட னும் கடுந்தவம்புரிந்தும்தங்களைத்தான் ரட்சித்துக்கொள்ள முடியும்.

384. சூரியன் பூமியைவிட எத்தனையோமடங்குபெரிது; ஆனால் அது வெகு தூரத்திலிருப்பதினாலே ஒரு சிறுவட் டம்போலக்காணப்படுகிறது; அப்படியே, ஈசுவரன் மகத் துக்கும் மகத்தானவர்; ஆனால் நாம் அவரிடத்திலிருந்து வெகு தூரத்திலிருக்கிறதினாலே, அவருடைய உண்மைப் பெருமையை யறிவதற்குச் சக்தியற்றவர்களா யிருக்கி றோம்.

385. மனுஷ்ய சரீரமானது ஒருபானைபோன்றது; மனமும், புத்தியும், இந்திரியங்களும், அதிலே இடப்பட்டநீரும் அரிசியும் உருளைக்கிழங்கும் போன்றன. தண்ணீர், அரிசி, உருளைக்கிழங்கு இவற்றையடக்கியுள்ள ஒருபானையை நீநெருப்பின்மீது வைத்தால், அவ்வெல்லா வஸ்துக்களும் சூடு அடைகின்றன. எவரேனும் அவற்றைத் தொட்டால் சூடு உண்மையில் பானைக்கு, அல்லது தண்ணீருக்கு, அல்லது உருளைக்கிழங்குக்குச் சொந்தமல்லாவிடினும், விரல்சுடுகின்றது. அதுபோன்றே, மனிதனுள் உள்ள பிரஹ்மசக்தியே மனமும், புத்தியும், இந்திரியங்களும் தங்கள் தங்கள் தொழில்களை நடத்துவதற்குக் காரணமாயிருக்கின்றது; அந்த சக்திவேலைசெய்யாது நின்றுவிட்டால் இவையும் வேலைசெய்யாது நின்றுவிடுகின்றன.

386. ஒருசமயத்திலே மேகமற்றுத் தெளிந்திருந்தஆகாயமானது திடீரென்று மேகங்களால் சூழப்பட்டதையும் அடுத்த நிமிஷத்திலே அந்தமேகங்கள் காற்றுக்களினாலே துரத்தப்பட்டுவிட்டதையும் ஒரு பரமஹம்சர்பார்த்து ஆநந்தநிர்த்தனம் செய்ய ஆரம்பித்து, பின்வருமாறு கூறினார்; “இப்படித்தான் மாயையும். மாயை முதலில்இருந்ததில்லை. பின்னர், திடீரென்று தெளிந்த பிரஹ்மாகாசத்திலே தோன்றிற்று. மறுபடியும் அதே பிரஹ்மத்தின் மூச்சுக் காற்றினாலே கலைக்கப்பட்டுவிட்டது”.

387. எவர் ஈசுவரனையறியக்கூடும்? ஈசுவரனையறிவதற்கு நமக்கு அதிர்ஷ்டபிராப்தியில்லை. அவரைப் பரிபூரணமாய்

அறியவேண்டுமென்று நாம்விரும்பவுமில்லை. நாம்அவரைப் பார்க்கக்கூடுமானால் அதுவேபோதும்—அவரே உண்மைப் பொருள் என்று உணரக்கூடுமானல், அதுவே போதும்.

388. வஜ்ரவதுலவிருட்சத்தின் விதைகள் அம்மரத்தின் அடியில் விழுவதேயில்லை. அவைகாற்றினலே வெகு தூரம் கொண்டுபோகப்பட்டு, அங்கு வேரூன்றிக்கொள்கின்றன. அப்படியே, ஒருதீர்க்கதரிசியினுடைய சக்தி அவருடைய சுதேசத்திலிருந்து வெகு தூரத்திலே வெளிப்படுகிறது; அங்குத்தான் அவர்புகழப்படுகிறர்.

389. தண்ணீரும் அதில் காணப்படும் குமிழியும் ஒன்றே. குமிழிதண்ணீரிலே பிறக்கின்றது; தண்ணீரிலே மிதக்கின்றது; கடைசியில் தண்ணீரிலேயே நசித்து விடுகின்றது. அதுபோன்றே, ஜீவாத்மாவும்பரமாத்மாவும் ஒன்றே. வித்தியாசம் அளவிலேதான்உள்ளது; ஒன்று, கண்டமாகிக்கட்டுப்பட்டது; மற்றது, அகண்டமானது; ஒன்று, பராபேக்ஷையுள்ளது; மற்றது ஸ்வதந்திரமானது.

390. ஒருமிராசுதாரர் மிகுந்ததனவந்தராயிருந்தாலும் ஒரு ஏழைக்குடியானவன் ஏதேனும் ஒன்றை ஹிருதய அன்புடனே அந்த மிராசுதாரருக்குக் கொடுத்து அவரைக்கண்டு கொள்வதற்குவந்தால், அவர் அதை மிகவும் சந்தோஷத்துடனே ஏற்றுக்கொள்கிறர். அப்படியே, ஈசுவரனும் மகத்துக்கு மகத்தாயும், சர்வவல்லமையுள்ளவரா

யும் இருந்தபொழுதிலும் அன்புள்ள ஹிருதயத்தின் அர்ப்பணங்களை அதிகதிருப்தியுடனும் சந்தோஷத்துடனும் ஏற்றுக்கொள்கிறார்.

391. குருதான் மத்தியஸ்தர்; விவாகம் செய்துவைப்பவர் புருஷனையும் மனைவியையும் ஒன்று சேர்ப்பதுபோல, குரு மனிதனையும் ஈசுவரனையும் ஒன்று சேர்த்துவிடுகிறார்.

392. தான் பூஜிக்கும் தேவர்கள், தேவிகள் முதலியவர்களுடைய விக்கிரகங்கள் உண்மையில் தெய்வீகமானவையேயென்று ஒருவன் திடமாக அறிந்து கொண்டானானால், அவன் ஈசுவரத்துவம் அடைகிறான். ஆனால் அவன் அவற்றை, சேறும் வைக்கலும் களிமண்ணுமே யென்று நினைப்பானானால், அவனுக்கு அத்தகைய விக்கிரகாராதனை உபயோகமில்லை.

393. ஒருவன் ஒரு நதியைக்கடக்க விரும்பினான். ஒரு மகான் அவனிடத்திலே ஒரு ரட்சாபந்தனம் கொடுத்து, 'இது உன்னை அக்கரைக்குக்கொண்டுசெல்லும்' என்று கூறினார். அந்தமனிதன் அதைக்கையிலெடுத்துக்கொண்டு ஜலத்தின்மீது நடக்க ஆரம்பித்தான்; அவன் அந்தநதியின்மத்தியில்சென்றவுடனே, அந்தரட்சாபந்தனத்தை யவிழ்த்துப் பார்க்கவேண்டுமென்று அவனுக்கு ஒரு ஆசையுண்டாயிற்று; அப்படியே அவிழ்த்துப்பார்க்க, ஒரு சிறுகாகிதத் துண்டிலே ஈசுவரநாமம் எழுதப்பட்டிருந்தது. அவன்

"இதுதானா ரகஸ்யம்?" என்று அலட்சியமாகக்கூறினான். உடனே அவன் நதியிலே முழுகிவிட்டான். ஈசுவரநாமத்திலே யுள்ள நம்பிக்கையே சித்திகளையுண்டுபண்ணுகிறது. ஏனென்றால், நம்பிக்கையே ஜீவிதம், சந்தேகமே மரணம்.

394. ஈசுவரகிருபையினாலே அதிதீவிரத்துறவுத்தன்மை ஒருவனுக்கு உண்டாகுமானால், அப்பொழுதுதான் அவனுக்குப் பெண்ணிடத்தும் பொன்னிடத்தும் உள்ளபற்றுதல் நீங்கிவிடும்; அப்பொழுதுதான் அவன் உலகபந்தங்களெல்லாவற்றினின்றும் நிவிர்த்தியடைந்தவனாவான்.

395. உனக்கு கர்வம் உண்டாகுமானால், நீ ஈசுவரனுடைய தாசனென்றும், ஈசுவரபுத்திரனென்றும்உள்ள நினைப்பிலே கர்வமடைந்துகொள். மகாபுருஷர்களுக்குக் குழந்தைகளின் தன்மையுண்டு. அவர்கள் எப்பொழுதும் ஈசுவரன் முன் குழந்தைகளே; ஆகையால் அவர்களுக்கு அகங்காரம் கிடையாது. அவர்களுக்குள்ள பலமெல்லாம் ஈசுவரனுடையதே; அவருக்கே சொந்தம்; அவரிடத்திலிருந்தே வருகின்றன; அவர்களுக்குச் சொந்தமாக ஒன்றுமேயில்லை.

396. ஆழ்ந்தநிஷ்டை, நிஷ்டைப்பொருளின் உண்மைத்தன்மையை வெளியேகொண்டுவந்து, நிஷ்டாபரனுடைய ஆத்மாவுக்குள்ளே புகுத்தி விடுகிறது.

397. ஸ்ரீகிருஷ்ணன் திரிபங்கர், அதாவது, வெவ்வேறு விதமான மூன்று வழிகளிலே வளைந்துள்ளவர் எனப்படுகி

றார். மிருதுவானவஸ்துவே வளைக்கப்படக்கூடியது; ஆகவே ஸ்ரீகிருஷ்ணனுடைய இவ்வடிவம் எதோ ஒருவிதத்திலே மிருதுவாக்கப்பட்டிருக்கவேண்டும். இங்கே மிருது வாக்கப்பட்டதற்குக்காரணம் பிரேமையேனப்படுகிறது.

398. பாலானது தண்ணீருடனே கலக்கப்பெற்றால், உடனே ஒன்று சேர்ந்து விடுகிறது. ஆயினும் அதைவெண்ணெயாக்கிவிட்டால், அது தண்ணீரில் கலப்பதில்லை. ஆனல் அதன்மீது மிதக்கிறது. ஆகையால், ஆத்மா ஒருதரம் ஈசுவரத்தன்மையை அடைந்துவிட்டால், அது மேன்மையடையாத எண்ணற்ற ஜீவர்களுடனே எப்பொழுதும் சகவாசம் செய்துகொண்டிருக்கலாம். ஆனல் அவர்களின் தீயசேர்க்கையினல் சிறிதும் பாதிக்கப்படமாட்டாது.

399. ஒருசமயம் ஒருசாது ஒரு தெருவினூடே போய்க்கொண்டிருந்த பொழுது, ஒருதீயோனுடைய விரலையதேச்சையாக மிதித்துவிட்டார். அக்கொடியோன் கோபதீபிதனுகிச் சாதுவை இரக்கமின்றியடித்தான்; அவர் தரையிலே மூர்ச்சையாகி விழுந்துவிட்டார். அவருடைய சிஷ்யர்கள் மிகுந்த சிரமமெடுத்து அவரைமூர்ச்சை தெளிவிப்பதற்குப் பிரயாசைப்பட்டார்கள்; அவர் சிறிது மூர்ச்சைதெளிந்தாரென்று அறிந்தவுடனே, சிஷ்யர்களுள் ஒருவன் "ஸ்வாமி! இப்பொழுது தங்களுக்குப் பணிவிடைசெய்கின்றது யார் என்பதுதங்களுக்குத்தெரிகிறதா?" என்றுகேட்டான். அவர் "என்னைஎவன்அடித்தானே அவன்தான்" என்றுபதிலளி

த்தார். உண்மைச் சாதுவுக்கு நண்பனென்றும், பகைவனென்றும் வித்தியாசமில்லை.

400. மனிதர் இருவகைப்படுவர்:—(1) பெயரில் மாத்திரம் மனிதர்கள். (2) விழிப்பையடைந்த மனிதர்கள். ஈசுவரதாகமுள்ளவர்களே விழிப்பையடைந்த மனிதர்கள்; பெண்ணிடத்தும் பொன்னிடத்தும் பித்துப்பிடித்தவர்கள்எல்லோரும் சாதாரணமனிதர்களே—பெயரில் மாத்திரம் மனிதர்கள்.

401. உண்மையில் மதவிசுவாசமுள்ளவன் இதரமதங்களெல்லாம் சத்தியத்துக்கு இட்டுச்செல்லும் மார்க்கங்களேயென்று நினைக்கவேண்டும். நாம் இதரமதங்களினிடத்து எப்பொழுதும் ஒருவித மரியாதைத் தன்மையையே பாராட்டவேண்டும்.

402. சுத்தநீருள்ள பெரிய குளங்களிலே கோரைப்புல் வளர்வதில்லை. ஆனால் சிறியனவும், நீரோட்டமில்லாதனவும், பாசம்பிடித்தனவுமாகிய குட்டைகளில்தான் வளர்கிறது. அதுபோன்றே, சுத்தமானவையும் ஸ்வயநல மற்றவையுமான விரிந்த நோக்கங்களுள்ளவர்களிடத்தே சமயபேதம் ஏற்படாது; ஸ்வயநன்மை, பொய்ம்மை, பிடிவாதம் முதலிய குணங்களையுடையவர்களிடத்தில்தான் சமயபேதம் ஏற்படும்.

403. சிறைச்சாலையிலேதேவகிக்கு ஸ்ரீகிருஷ்ணனுடைய திவ்ய தரிசனம் கிடைத்தபொழுதிலும், அது அவளுடைய சிறைவாசத்தை நிவர்த்திசெய்ய முடியவில்லை.

404. கோபிகைகளின் பக்தி பிரேமாபக்தியாம். அது 'கலப்பற்றபக்தி' யெனப்படும். 'மிசிரபக்தி' யென்றாலென்ன? தெரியுமா? ஞானத்துடன் கலந்த பக்தி மிசிரபக்தியெனப்படும். "கிருஷ்ணரே எல்லாமாயிருக்கிறார்; அவர் பரப்பிரஹ்மமே; அவரே சிவம்; அவரேசக்தி." ஆனால் நீ பிரேமாபக்தியுடனே கலந்த அந்த விதமான ஞானத்தைக் காணமாட்டாய். துவாரகையிலே ஹநுமார் வந்து சீதையையும்ராமரையுமே தாம்பார்க்கவிரும்புவதாகக்கூறினார். ஸ்ரீகிருஷ்ணர் ருக்மணியை நோக்கிச் சீதை வடிவெடுக்கும்படிக்கும் இல்லையேல் ஹநுமார் சமாதானமடையமாட்டார் என்றும் சொன்னார். பாண்டவர்கள் ராஜஸூய யக்ஞத்தைக்,கொண்டாடியபொழுது, யுதிஷ்டிரர் சிம்ஹாசனத்திலே வீற்றிருந்தார். எல்லா அரசர்களும் அவருக்கு அடிபணிந்தார்கள். அப்பொழுது விபீஷணன் மாத்திரம் ஸ்ரீகிருஷ்ணனுக்கேயன்றி வேறெவருக்கும் அடிபணியமாட்டேனென்று மறுத்துவிட்டான். அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணரே யுதிஷ்டாரை நமஸ்கரித்தார்; பின்னர் விபீஷணன் யுதிஷ்டிரர் அடிகளிலே தனதுமுடியைத் தாழ்த்திச் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தான்.

405. ஒருபிரர்ஹ்மணர் ஒருசந்நியாசியைச் சந்தித்தார், இருவரும் லௌகிகமாகவும் வைதிகமாகவும் உள்ள அநேக

விஷயங்களைப்பற்றிச் சம்பாஷித்தார்கள். கடைசியாக சந்நியாசி பிராஹ்மணனைப்பார்த்து "இதோ, பார்; குழந்தையே! இவ்வுலகிலே எவர்மீதும் சார்ந்திருப்பது என்று ஒன்றுமில்லை" என்று கூறினார். பிராமணன் அதை நம்பவில்லை. இரவும்பகலுமாகத்தான் உழைத்துச் சம்பாதித்துப் போடுகிறதனது குடும்பத்தார் தனக்குச்சமயத்திலே உதவி செய்யமாட்டார்கள் என்று அவன் எப்படி நம்புவான்? ஆகையால் பிராஹ்மணன், "ஸ்வாமி! எனக்குக்கொஞ்சம்தலைவலிவந்துவிட்டால்கூட என் தாயார் மிகவும் கவலைப்படுகிறாள்; என்னை ஆபத்திலிருந்துகாக்கும்பொருட்டும், எனது க்ஷேமத்தைக்கோரியும் என் தாயார் உயிர்விடவும் தயாராயிருக்கிறாள். அத்தகையதாயை நான் நம்பக்கூடாதென்பது ஆச்சரியமாகவேயிருக்கிறது" என்றான். சந்நியாசி, "அப்படியானால், அவள் உனக்கு வேண்டியவள்தான். ஆனால் உனக்கு உண்மை இன்னும் தெரியவில்லை. உனது தாயாராவது, மனைவியாவது, மகனாவது உன்பொருட்டு உயிரைத்தியாகம் செய்வார்களென்று நீ ஒருநிமிஷமேனும் நம்பாதே. வேண்டுமென்றால் நீ பரிசோதித்துப் பார்த்துக் கொள்ளலாம்; வீட்டுக்குச்சென்று, வயிற்றிலே கொஞ்சம் நோவுண்டாய்விட்டதென்று பாவனை பண்ணிக்கொண்டு, குய்யோ, முறையோ, என்று கத்து. நான் வந்து கொஞ்சம் வேடிக்கைகாண்பிக்கிறேன், பார்." என்றார்.

பிராமணன் அப்படியே செய்தான். வைத்தியநிபுணர்கள் அநேகர் வந்து பார்த்தார்கள்; ஆனால் எவரும் அந்த

நோயை நிவிருத்தி செய்யமுடியவில்லை. அந்தபிராஹ்மண னுடையதாய் பெருமூச்சுவிட்டுப்புலம்பி யழுதுகொண்டிருந்தாள்; மனைவியும் குழந்தைகளும் தேம்பித்தேம்பி யழுதார்கள். இச்சமயத்திலே சந்நியாசிவந்து சேர்ந்தார்.

சந்நியாசி "வியாதி கடுரமானது; இந்தவியாதியஸ்தன் பொருட்டு எவரேனும் தம்முடைய உயிரைக்கொடுக்கமுன் வந்தாலொழிய, இந்த வியாதி நீங்கு மென்பதற்குள்ள அடையாளமில்லை." என்றுகூறினர். இதைக்கேட்டவுடனே எல்லோரும் பிரமைகொண்டு விழிக்க ஆரம்பித்தார்கள். சந்நியாசி வியாதியஸ்தனுடைய தாயாகிய கிழவியைப் பார்த்து "உன்னுடைய இக்கிழட்டு வயதிலே எல்லோருக்கும் பாடுபட்டுத் தேடிச்சோறிடுகின்ற இக்குமரனை இழப்பதானல், நீ யிருந்தும் ஒன்றுதான், மரித்தும் ஒன்றுதான். அவனுடைய உயிருக்குப் பதிலாக உன்னுடைய உயிரைக்கொடுப்பாயானல், நான் உன் புத்திரனை ரட்சிக்கமுடியும். தாயாகிய நீ இதற்கு முன்வராவிட்டால், வேறு எவர் முன்வருவார்" என்று சொன்னர்.

கிழவி அழுதுகொண்டே "ஸ்வாமி! என்புத்திரன்பொருட்டுத் தாங்கள் ஆக்ஞாபிக்கின்ற எதையும்செய்யத் தயாராயிருக்கிறேன்; என் புத்திரனுடைய உயிரைவிடஎன் உயிர் அவ்வளவு பெரிதா? ஆனல்—நான் மரித்துவிட்டால், என்னுடைய சிறு குழந்தைகள் என்ன செய்யும்என்னும் நினைப்பே என்னைச்சிறிதுபின்வாங்கும்படிசெய்கிறது.

என் துரதிர்ஷடம், இச்சிறுகுழந்தைகள் என்வழியிலேநிற்கின்றன" என்றுகூறினள்.

வியாதியஸ்தனுடைய தாயும் சந்நியாசியும் சம்பாஷிப்பதைக்கேட்டுக்கொண்டிருந்த மனைவி தேம்பித்தேம்பியழுது தன் பெற்றோரை நோக்கி "ஆ! என்னருமையப்பனே! அன்னையே! என்னை எறும்பு அணுகவொட்டாமல் செல்வமாய் வளர்த்த உங்களைவிட்டுப்பிரிய எனக்கு மனம் வரவில்லை; ஆதலால்தான் நான் என் உயிரைக்கொடுப்பதற்கு யோசிக்கவேண்டியதாயிருக்கிறது" என்றாள். சந்நியாசி அவளைநோக்கி "வியாதியஸ்தனுடைய தாயார்உயிர்கொடுக்க மறுத்துவிட்டபடியால், மனைவியாகிய நீயாவது உயிர்கொடுக்கமாட்டாயா?" என்றார். மனைவி "ஐயோ! நான் பாவி; நான்விதவையாகவேண்டும் என்று விதியிருந்தால், எவரால் தடுக்கமுடியும்? எனது பெற்றோருக்கு மனவருத்தமுண்டாகும்படி நான்மரிக்கமுடியாது" என்று கூறினள். இவ்விதமாக எல்லோரும் மறுத்துவிட்டார்கள். அப்பொழுது சந்நியாசி வியாதியஸ்தனைநோக்கி "இப்பொழுது பார்த்தாயா? உனக்காகஉயிர்விடத்தயாராயிருப்பவர்கள் இங்குளவரும் இல்லை. உலகிலே எவர்மீதும் சார்ந்திருப்பதனென்று ஒன்றுமில்லையென்பது இப்பொழுதாவது விளங்குகிறதா?" என்று கேட்டார். பிராம்மணன் இவற்றையெல்லாம்பார்த்து, தன்வீட்டைவிட்டுநீங்கிச் சந்நியாசியைப்பின் தொடர்ந்தான்.

406. ஒரு பிராஹ்மணன் ஒருதோட்டம் வைத்துப்பராமரித்து வந்தான். அவன் இரவு பகலாக அதே கவலையாயிருந்தான். ஒரு நாள் ஒரு பசு அத்தோட்டத்துக்குள்ளே நுழைந்து அவன் அருமையாக வளர்த்து வந்த ஒரு மாஞ்செடியைத்தின்றுவிட்டது. பிராஹ்மணனுக்குக் கோபம் பொங்கிற்று; அதை யடியடியென்று அடித்தான்; அது இறந்து விட்டது. பிராஹ்மணன் பசுவைக்கொன்றானென்னும் சங்கதி ஊர்முழுதும் பரவிவிட்டது. அவ்வூரிலே அந்த பிராஹ்மணனுக்கு வேதாந்தி யென்று பெயர். அவ்வூரினர் பசுக்கொலைப்பாபத்தை அப்பிராஹ்மணன்மீது சுமத்த, பிராஹ்மணன் "எல்லாம் பகவான் செயல்; நமக்கு இவ்விஷயத்தில் ஸ்வதந்திரமேது! பகவான் ஆட்டுவிக்கிறபடிதானே நாம் ஆடுகின்றோம்; ஆகையால் பாபமோ, புண்ணியமோ எல்லாம் பகவானையே சேரும்" என்று வேதாந்தம் பேசினான். சாக்ஷாத்பகவான் இதையறிந்து ஒருகிழத்தாப்பிய பிராஹ்மண வடிவெடுத்து, தோட்டத்துக்குச் சொந்தக்காரனாகிய அந்தப்பிராஹ்மணனண்டையில் வந்து "ஐயா! இதுயாருடையதோட்டம்?" என்றார். "என்னுடையதே" என்றான் பிராமணன்.

பகவான்:—"இது அழகிய தோட்டமாயிருக்கிறது; உன்னிடத்திலுள்ள தோட்டக்காரன் மிகவும் கெட்டிக்காரன். ஆ! எவ்வளவு அழகாகவும் செழிப்பாகவும் செடிகளை வைத்திருக்கிறான்!"

பிராஹ்மணன்:—"நிரம்பச் சந்தோஷம். அதுவும் என்னுடைய வேலையே. என்னுடைய மேல்பார்வையிலும் உத்தரவின்படிக்கும் செடிகள் வைக்கப்பட்டன."

பகவான்:—"அப்படியா? வெகுநன்றாயிருக்கின்றது. இப்பாதையைவெட்டிச்செப்பனிட்டவர்எவர்? இதுமிகவும் நேர்த்தியாய்க்கண்ணைக்கவர்கிறது."

பிராஹ்மணன்:—"இஃதெல்லாம்நான்செய்ததே." என்றான். பின்னர்பகவான்பிராஹ்மணனைநோக்கி"இவ்வெல்லா வஸ்துக்களும் உன்னுடையவையாயும், இத்தோட்டத்திலேயுள்ள வேலைத்திறமைக்குள்ள பெருமையெல்லாம் உன்னுடையதாயும் இருக்க, பசுக்கொலைக்கு மாத்திரம் அந்த ஏழைப் பகவானை உத்தரவாதமாக்கியது நியாயமாகாது." என்று கூறி மறைந்துவிட்டார்.

407. ஒருவன் ஒரு கிணறு வெட்ட ஆரம்பித்தான்; இருபதடி ஆழம்வரையில் வெட்டிப்பார்த்தும் தண்ணீர் வராமையினாலே, அவன் அந்த இடத்தைவிட்டு விட்டு, இன்னொரு இடத்திலே இன்னும் சிறிது அதிக ஆழமாகவே வெட்டிப்பார்த்தான்; அங்கும் தண்ணீர்தென்படவில்லை. வேறொரு இடத்திலே இன்னும் அதிக ஆழமாக வெட்டினான். அங்கும் தண்ணீர் கிடைக்காததினாலே, கிணறுவெட்டவேண்டுமென்ற எண்ணத்தையே விட்டுவிட்டான். இம்மூன்று கிணறுகளிலும் இவன் வெட்டிய ஆழத்தையொ

ன்றுசேர்த்துப்பார்த்தால், அவன் எறக்குறைய நூறு அடிவெட்டியிருப்பான். வெவ்வேறுஇடமாக மாற்றாமல்முதல் இடத்திலேயே அவன் எடுத்துள்ள மொத்த சிரமத்திலே பாதி சிரமத்தையாவது எடுத்திருப்பானானால், கட்டாயமாகத் தண்ணீரைக் கண்டிருப்பான். அப்படியேதான் பக்திவிஷயத்திலுள்ள முயற்சியும். நாம் ஜயமடையவேண்டுமானால் ஒரே வஸ்துவினிடத்திலே ஏகாக்கிரமனத்துடனே பக்திசெலுத்த வேண்டும். அதுபயன்படுமா? பயன்படாதா? என்று சிறிதும் சந்தேகிக்கலாகாது.

408. ஒருகாலத்திலே ஈசுவரனைத் தரிசிக்கவேண்டுமென்ற எண்ணத்துடனே இரண்டுயோகிகள் தவம் செய்துகொண்டிருந்தார்கள். ஒருநாள் திரிகாலஞானியாகிய நாரதர் அவர்களுடைய ஆசிரமத்தின் வழியே சென்றார். அவ்விருவரில் ஒருவர் நாரதரை நோக்கி "தாங்கள் தேவலோகத்திலிருந்து வருகிறீர்களா?" என்றுகேட்டார். நாரதர் "ஆம்" என்று கூறவே, அவர்கள் "அங்கே ஈசுவரன்என்னசெய்துகொண்டிருக்கிறார்?" என்றுகேட்டார்கள். நாரதர் "அங்கே ஈசுவரன் ஊசித்துவாரத்தின் மூலமாக ஒட்டகங்களையும் யானைகளையும் செல்லும்படி செய்து கொண்டிருக்கிறார்" என்று கூறினார். யோகிகளில் ஒருவர் "அதில் ஆச்சரியப்படும்படியாக ஒன்றுமில்லை. ஈசுவரனுக்கு அசாத்தியமானது எதுவுமில்லை" என்று கூறினார். ஆனால் மற்றவர் "ஓ! அது சுத்தமூடத்தனம்; அது அசாத்தியமே. ஈசுவர

னிடத்திற்கு நீர் ஒரு பொழுதும்சென்றதேயில்லையென்று அது ரூபிக்கிறது'' என்றார்.

முதலாமவன் ஒருபக்தன்; குழந்தையினது நம்பிக்கை போன்றநம்பிக்கை அவனுக்குண்டு. ஈசுவரனுக்கு அசாத்தியமானதொன்றுமேயில்லை; அவருடையலட்சணத்தைப்பரிபூரணமாயறியக்கூடியவரும் எவருமில்லை.

409. ஒரு காலத்திலே ஒரு கசாப்புக்காரன் ஒருபசுவை தூரத்திலேயிருந்த ஒருகொலைக்களத்துக்கு இட்டுச்சென்று கொண்டிருந்தான். நடுவழியிலே அவன் அப்பசுவைத்துன்புறுத்தியதினாலே, அது வழியிலே மிகவும் கஷ்டத்தைக் கொடுத்தது. வெகுநேரம் கழித்து நடு மத்தியான்னவேளையிலே, அவன்மிகக்களைத்துப்போய் ஒருகிராமத்தையடைந்தான். அங்கேயிருந்த ஒரு தர்மசத்திரத்திலே சாப்பிட்டுக் களை தீர்த்துக்கொண்டு, மறுபடியும் பசுவைநடத்திச்சென்றான். அப்பசுவைக்கொன்ற பாவத்திலே யொருபாகம் சத்திரத்திலே சோறிட்டவனுக்கும் போய்ச்சேர்ந்தது. ஆகையால், தானம் செய்வதிலும் தானம் பெறுபவன் அந்த தானத்தை தீயகாரியங்களுக்கு உபயோகிக்கும் பாபியல்லனென்பதை யறிந்துகொள்ளவேண்டும்,

410 ஒருவன் ஈசுவரனைத்தரிசிக்கும்பொழுது, ஒவ்வொன்றும், (விக்கிரகங்களும் மற்றவைகளும்) ஈசுவரசக்தியின் தோற்றமேயென்று அவன் அநுபவத்தில் அறிந்துகொள்

கிறன். அவனுக்கு விக்கிரகமானது களிமண்ணினால் செய்யப்பட்டதன்றென்றும் சக்தியினாலேயே ஆயது என்றும் விளங்கும்.

411. ஒருகுடும்பத்திலேயுள்ளஒருவாலிபன் மனைவி, தன்னுடையமாமனார், மாமியார் முதலியவர்களுக்கு மரியாதை செய்து, அவர்களுக்குவேண்டுவனபுரிந்து, அவர்களை நிந்திக்காமலும் அலட்சியம் செய்யாமலும் இருந்துகொண்டு, அதே சமயத்தில் அவர்களிடத்திலிருப்பதைவிடத் தனது புருஷனிடத்தில் அதிக அன்பு செலுத்துவதுபோல, நீ உனது இஷ்டதேவதையினிடத்தில் செலுத்தும் பக்தியிலே உறுதியாயிரு; இதர தேவதைகளை நிந்திக்காதே; எல்லாவற்றையும் கௌரவப்படுத்து. அவையெல்லாம் ஒரே அதிகார சக்தியையும் ஒரே அன்பையுந்தான் குறிப்பிடுகின்றன.

412. ஹிந்துக்களுக்குள்ளே அநேக வகுப்புக்கள் இருக்கின்றன. நாம் எந்தவகுப்பைப் பின்பற்றுவது? பார்வதி ஒரு காலத்திலே பரமசிவனைநோக்கி "பிரபு! நித்திய சர்வானந்தத்துக்கு வேரெது" என்றுகேட்டாள். அதற்குப்பரமசிவன் "விசுவாசமே வேர்" என்றுபதிலுரைத்தார். ஆகையால் அக்கட்சி பெரிது, இக்கட்சி பெரிது என்பதிலே பயனில்லை. ஒவ்வொருவனும் தன்னுடைய வகுப்பின் அநுஷ்டானங்களையும் தர்மங்களையும் விசுவாசத்துடனே செய்யட்டும்.

413. மனிதனுக்குச் சத்துருக்களாகிய, காமக்குரோதாதி குணங்கள் எப்பொழுது ஜயிக்கப்படுமென்று ஒருவர் கேட்க, ஸ்ரீராமகிருஷ்ணர் "இக்குணங்கள் உலகத்தைநோக்கியும் உலகவிஷயங்களை நோக்கியும் செலுத்தப்பெற்ருல் இவை சத்துருக்கள்போன்று நடக்கின்றன; ஆனல் இவை ஈசுவரனிடத்துச் செலுத்தப்பெற்ருல், மனிதனுக்கு மிகவும் சிறந்த நண்பர்களாகின்றன; ஏனென்ருல் அப்பொழுது இவை அவனை ஈசுவரனிடத்துக்கு இட்டுச் செல்கின்றன. உலகவஸ்துக்களினிடத்துள்ள ஆசையானது ஈசுவரனிடத்துள்ள ஆசையாக மாற்றப்படவேண்டும்; மனிதன் தனது சகோதரனிடத்துக்காண்பிக்கும் கோபமானது ஈசுவரன் தனக்குப் பிரசன்னமாகவில்லையே யென்றகாரணத்தினுல் ஈசுவரனிடத்துச் செலுத்தப்படவேண்டும். அப்படியேதான் எல்லாக்குணங்களும் ஈசுவரனிடத்துச் செலுத்தப்படவேண்டும். இக்குணங்கள் அழிக்கப்படத்தக்கனவல்ல, திருத்தப்படத்தக்கனவே" என்றுபதில் கூறினர்.

414. மிட்டாய் அல்லது சர்க்கரை விழுந்திருக்கும் இடத்துக்கு எறும்புகள் தாமாகவேவருகின்றன. நீ (ஞானருசி நிறைந்த) கற்கண்டுக்கட்டியாய்விட முயற்சிசெய்; எறும்புகள் (பக்தர்கள்) உன்னிடம் தாமாகவேவந்துசேர்வார்கள். ஈசுவரனிடத்திலிருந்து அதிகாரப்பத்திரம்பெருமல், நீபோதித்துக்கொண்டுசென்ருல், உனது போதனை, சக்தியற்றதாயிருக்கும்; நீ சொல்வதை எவரும் கேட்கமாட்டார்கள். பக்

தியினாலோ அல்லது வேறு உபாயங்களினாலோ, ஒருவன் முதலில் ஈசுவரனையடைந்து தீரவேண்டும்; அவரிடத்திலிருந்து உத்தரவுபெற்றுக்கொண்டு வந்தபின்னரே அவன் எங்கெங்கும் தாராளமாக மதத்தைப் போதிக்கலாம். ஏனென்றால் இவ்விதமாகத்தான் மனிதன் அவரிடத்திலிருந்துசக்தியையும் பலத்தையும் பெறுகிறான். ஆதலால் மேற்கூறியபடி உத்தரவுபெற்றுக்கொண்டபோதுதான் மனிதன் ஆசாரிய தர்மங்களை உத்தரவாதத்துடன் நடத்தக்கூடும்.

415. ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்குமுள்ள சம்பந்தமென்ன?

ஒரு நீரோட்டத்துக்குக்குறுக்கே ஒருசிறுமரத்துண்டு போடப்பட்டபொழுது தண்ணீர் இரண்டாய்ப்பிரிந்ததாகக்காணப்படுவதுபோல, பகாப்பொருளாகிய பிரஹ்ம வஸ்து மாயா உபாதியினால் இரண்டாகப்பிரிக்கப்பட்டது போலக்காணப்படுகிறது. உண்மையில் அவையிரண்டும் ஒன்றே.

416. எண்ணெயில்லாவிட்டால் விளக்கு எரியமுடியாததுபோல, ஈசுவரனில்லாவிட்டால் மனிதன் ஜீவிக்கமுடியாது.

417. ரயில்யந்திரவண்டியானது தான் சலித்துக்குறித்த இடம்போய்ச்சேர்கிறதென்பது மாத்திரம்அன்று, தனக்

குப்பின்னுல் தன்னுடன் சேர்க்கப்பட்டுள்ள அநேகமூட்டைவண்டிகளையும் இழுத்துக்கொண்டு செல்கிறது. அப்படியேதான் நமது ரட்சகர்களும்; அவர்கள் ஈசுவர சந்நிதானத்துக்கு, பாபத்தினுலே நிறைந்தமனிதர்களின்கூட்டங்களையும் கொண்டு செல்கிருர்கள்.

418. ஈசுவரன் சர்வவியாபகராகுல், நாம் ஏன் அவரைப் பார்க்கமுடியவில்லை? நெருங்கிப்பாசி பிடித்துள்ள ஒருகுட்டையின் கரையிலே நின்றுகொண்டு பார்த்தால் அக்குட்டையில் தண்ணீர் இல்லையென்றே நீசொல்வாய். நீ தண்ணீரைப்பார்க்கவிரும்பினுல், குளத்தின் மேல்மட்டத்திலிருந்து பாசியை நீக்கிவிடு. அப்போது ஜலம் தெரியும். இதுபோலவே மாயையாகிறபாசத்தினுலே மூடுண்டகண்களைவைத்துக்கொண்டு நீ ஈசுவரனைப்பார்க்கமுடியவில்லையென்றுகுறைகூறுகிருய். நீஅவரைப்பார்க்கவிரும்பினுல்,உன்னுடைய கண்களிலிருந்து மாயாபடலத்தைநீக்கிவிடு.

419. ஈசுவரன் கூறுகிருர்: "கடிக்கின்றபாம்பும் நானே; அடிக்கடிவிஷத்தைநீக்கிச்சொஸ்தம் செய்கின்றமந்திரவாதியும்நானே; தண்டிக்கின்ற நீதிபதியும் நானே; அந்ததண்டனையைச்செலுத்துகின்றவேலையாளனும்நானே."

420. ஜீவேசுவரஜகத்தின் ஒற்றுமையை அநுபவத்தில் அறிந்துள்ளவனை நன்மையும் தீமையும் கட்டுப்படுத்தா.

421. ஸ்ரீராமகிருஷ்ணர் தமது ஹிருதயத்தைச் சுட்டிக் காட்டிக்கொண்டே "எவனுக்கு ஈசுவரன் இங்கேயிருக்கிறுரோ அவனுக்கு ஈசுவரன் அங்கேயும் (வெளியுலகத்திலும்) உண்டு. தனக்குள்ளே ஈசுவரனைக் காணுதவன் ஒருபொழுதும் தனக்குவெளியிலும் ஈசுவரனைக்காணமாட்டான். ஆனுல் தனது சொந்த ஆத்மக்ஷேத்திரத்திலே அவரைத்தரிசிக்கிறவன்பிரபஞ்சக்ஷேத்திரத்திலும் தரிசிப்பான் "என்றுர்.

422. ஞானமானது அளவிலும் மாதிரியிலும் வித்தியாசப்படுகிறது. முதலாவது உலகினருடைய—சாதாரண ஜனங்களுடைய—அறிவு. இவ்வறிவு போதுமானபடி சக்தியுள்ளதன்று. இஃது ஒருஅறையினுள்ளேமாத்திரம் பிரகாசத்தைக்கொடுக்கின்ற ஒரு தீபவெளிச்சத்துக்கு ஒப்பிடப்படலாம். ஒரு பக்தனுடைய ஞானமானது ஒரு அறையினுள்ளேயும் வெளியேயும் உள்ளவஸ்துக்கள் தெரியும்படி செய்கின்ற சந்திரப்பிரகாசத்துக்குஒப்பிடப்படலாம். ஆனுல்அவதாரபுருஷனுடையஞானமானதுஇன்னும்அதிகசக்திவாய்ந்தது; அதைச்சூரியனுக்கு ஒப்பிடலாம்; அவரே எத்தனையோயுகங்களாகக்குவிந்திருந்த அஞ்ஞானத்தைப் போக்கடிக்கும் ஞானசூரியனுவர்.

423. ஈசுவரனை யறியாமல் தான் ஒரு தலைவனென்றும், ஒருவகுப்பையேற்படுத்தியுள்ளவனென்றும் ஒருவன் நினைத்துக்கொண்டிருந்தானுனல், அவன் பரிபக்குவமடையாதவனே. ஆனுல் ஒருவன் ஈசுவரனை யநுபூதியில் அறிந்து

அவரிடமிருந்து உத்தரவு பெற்றுக்கொண்டு பிறர் நன்மையின் பொருட்டுப் போதிப்பாளுனல், குற்றமில்லை. பரீக்ஷித்துவுக்கு பாகவதத்தைச் சொல்வதற்கு, சுகர் அத்தகைய உத்தரவுபெற்றிருந்தார்.

424. ஒரு சமயத்தில் ஒரு சிஷியன் ஸ்ரீ ராமகிருஷ்ணரை நோக்கி "எல்லாஜீவராசிகளிடத்தும் ஒரே ஈசுவரன் தானே இருக்கிறார். ஆகையால் ஏன் எல்லாரிடத்திலிருந்தும் ஆகாரம் எடுத்துக்கொள்ளக்கூடாது?" என்று கேட்டான். ஸ்ரீ ராமகிருஷ்ணர் அவனை 'நீ பிராஹ்மணனு?' என்று கேட்டு அவன் பிராஹ்மணனுகவேயிருக்க அதனைத்தெரிந்துகொண்டு "நீ பிராஹ்மணனுயிருப்பதனுல்தான் இக்கேள்விகேட்கிருய். நீ ஒரு நெருப்புக்குச்சியை ஏற்றி, நன்ருய் உலர்ந்த விறகுச்சுமை ஒன்றையும் அதன்மீது போட்டுவிட்டால், நெருப்பு என்னவாகும்?" என்று கேட்டார். சிஷியன் "சுமையினுலே நசுக்கப்பட்டு நெருப்பு அணைந்துவிடும்." என்ருன். மறுபடியும் ராமகிருஷ்ணர் "காட்டுப்பெருநெருப்பு ஒன்று எரிந்துகொண்டிருப்பதாக வைத்துக்கொள். அதிலே அநேகம் பச்சைவாழை மரங்களைப்போட்டால், அவை என்னவாகும்?" என்று கேட்க, அந்த சிஷியன் "அவை ஒரு நிமிஷத்திலேசாம்பராய்விடும்" என்று பதில்கூறினன். அதன்மேல் "அதுபோன்றே, உன்னிடத்திலுள்ள ஆத்மஞானமானது மிகவும் பலஹீனமாயிருந்தால், எல்லாரிடத்திலிருந்தும் ஆகாரம் வாங்கியுண்பதினுல் இப்பொழுதுஇரு

க்கும் ஆத்மஞானமும் நசித்துவிடுமே என்றுநீபயப்படவே ண்டும்; உன்னிடமிருக்கும் ஆத்மஞானம்திடமுள்ளதாயிரு ந்தால், நீஎடுத்துக்கொள்ளும் எந்த ஆகாரமும் உன்னை பா திக்காது'' என்றுர் ஸ்ரீராமகிருஷ்ணர்.

425. பகலிலே, நீதிருப்திப்படும்மட்டும் ஆகாரம்சாப்பி டு; ஆனுல் இரவிலே உனது ஆகாரம் மென்மையானதாக வும், கொஞ்சமாகவும் இருக்கட்டும்.

426. ஒரு அந்நியபாஷையைப்புதிதாகப்படிக்க ஆரம் பித்திருப்பவன், தான் வித்துவான் என்று காண்பித்துக் கொள்ளும் பொருட்டுப் பேசும்பொழுது, அந்த பாஷை வார்த்தைகளை அடிக்கடி உபயோகப்படுத்துகிருன்; ஆ னல் அந்த பாஷையை நன்ருய்க் கற்றுள்ள ஒருவன் தனதுதாய்ப்பாஷையைப்பேசும்பொழுது அந்தஅந்நியபா ஷைப்பதங்களைஉபயோகிப்பதேயில்லை. ஈசுவரமார்க்கத்தில் நன்ருக அபிவிருத்தியடைந்துள்ளவர்களுடைய விஷயமும் இப்படித்தான் இருக்கும்.

427. குடியானவர்கள்ஏர்உழும்மாடுகளை எப்படிவாங்கு கிருர்களென்று தெரியுமா? ஓ! அவர்கள் இவ்விஷயங்களில் மிகவும் சமர்த்தர்கள். கெட்டமாடுகளைநீக்கி நல்லமாடுகளை ப்பொறுக்கியெடுக்க அவர்களுக்குநன்ருய்த்தெரியும். மாட் டின்குணுகுணத்தையுங்கண்டுபிடிக்க அவர்களுக்குநன்ருய் த்தெரியும். அவர்கள் வாலைத்தொடத்தான் செய்கிருர்கள்;

அப்போது மிகமுங்காரியம்ஆச்சரியமானது! ரோஷமில்லா தமாடுகள் தரையிலே தூங்கச்செய்வதுபோலப் படுத்துக் கொண்டு சும்மாவிருக்கும். ஆனால் ரோஷமுள்ள மாடுகள் தங்களைத் தொட்டதற்காகக் கோபித்தனபோலக் குதித்து எழுந்திருக்கும். குடியானவர்கள், தொட்டவுடனே குதிக்கும்மாட்டையே நல்லதெனப் பொறுக்கியெடுத்துக்கொள்வார்கள்.

ஒருவன் வாழ்க்கையிலே ஜயமடைய விரும்பினால்அவனுக்குள்ளே உண்மையாண்மை யிருக்கவேண்டும். ஆனால் ஆண்மை யில்லாதவர்கள்—பாலில் ஊறிக் குழைந்தசோற்றைப்போன்று மிருதுவானவர்களாயும் கெஞ்சும் குணமுடையவர்களாயுமுள்ளவர்கள்—அநேகர்இருக்கிறார்கள். இவர்களிடம் உள்ளே பலமில்லை! நீடித்துச் செய்யவேண்டிய முயற்சிக்குப் பலமில்லை! மனோதிடமில்லை! இவர்கள் தாம் வாழ்க்கையிலேதவறியவர்கள்.

428. யுக்தியினாலுண்டாகும் ஞானம் ஒருவிதமென்றும், தியானத்தினாலுண்டாகும் ஞானம் இன்னொருவித மென்றும், ஈசுவரகிருபையினாலே உண்டாகிறஞானம் வேறொரு விதமென்றும் நான் அநுபவத்தில் பார்த்திருக்கிறேன்.

429. எளிய பிராஹ்மணன் ஒருவனுக்கு ஐசுவரியவானான ஒரு ஜவுளிவியாபாரி சிஷ்யனாயிருந்தான். வியாபாரி மிகவும் பெரியலோபி. ஒருநாள் அந்த பிராஹ்மணனுக்கு

அவனுடைய வேதபுத்தகத்தைக் கட்டிவைப்பதற்கு ஒரு சிறு துணிவேண்டியிருந்தது. அவன் தனது சிஷ்யனிடம் சென்று ஒருசிறு துணிவேண்டுமென்று கேட்டான். வியாபாரி "மிகவும்விசனிக்கிறேன்; கொஞ்சநேரத்துக்குமுன்னமேயே சொல்லியிருந்தால் தாங்கள் விரும்புகிற துணியைக் கொடுத்திருப்பேன். இப்பொழுது தங்கள் காரியத்துக்கு வேண்டிய அளவுதுணி கைவசம் இல்லை; ஆயினும், நான் உமது இச்சையை ஞாபகத்தில் வைத்துக்கொள்கிறேன்; அடிக்கடி தாங்களும் எனக்கு ஞாபகப்படுத்திக்கொண்டிருங்கள்" என்றான். இந்தமாதிரி குருவுக்கும் சிஷ்யனுக்கும் நடந்த சம்பாஷணையை சிஷ்யனுடைய மனைவி பக்கத்து அறையிலிருந்து கேட்டுக்கொண்டிருந்தாள். கோரிவந்தகாரியம் பயன்பெறாது திரும்பிச்சென்ற பிராஹ்மணனை அழைத்துவரும்படி அவள் ஒரு ஆளனுப்பி, அப்படியே பிராஹ்மணன் வந்ததும் " எனது புருஷரிடத்திலே தாங்கள் என்னகேட்டீர்கள்?" என்று கேட்டாள். பிராஹ்மணன் நடந்ததைச் சொன்னான். அந்த ஸ்திரீ "நல்லது; வீட்டுக்குப் போங்கள்; நாளைக்காலையில் தங்களுக்குத் துணிவந்துசேரும்" என்றுசொல்லி அவனையனுப்பிவிட்டாள். வியாபாரி வியாபாரத்துக்குப்போய் இராத்திரியில் வீட்டுக்குத் திரும்பிவந்தான். மனைவி அவனைப்பார்த்து "கடை மூடியாய்விட்டதா?" என்று கேட்டாள். "என்ன விசேஷம்?" என்று வியாபாரி கேட்டான். அவள் "உடனே போய், நல்ல வஸ்திரங்களாக அரண்டுகடையிலிருந்துகொண்டுவா" என்

ருள். அவன் "என் இவ்வளவு அவசரம்? நாளைக் காலையி லே நான் உனக்கு நல்ல வஸ்திரங்கள் வேண்டியன தரு கிறேன்" என்றான். மனைவி "இப்பொழுதே எனக்கு வேண்டும்; இல்லாவிட்டால் அவை வேண்டியதில்லை" யென்றாள். ஐயோ! பாவம்! அவ்வெளியவியாபாரி என் னசெய்வான்? வைதீககுருவைத்தான் இவன் வாய்தாச்சொ ல்லியனுப்பிவிட்டான்; தலையணைமந்திரோபதேசம்செய்யும் இந்தக்குருவைக்கூடஅப்படியனுப்பிவிடமுடியுமா?இப்பொ ழுது உடனே கீழ்ப்படிந்து தீரவேண்டும்; இல்லாவிட்டால் அன்றிரவு அங்கு ஒரு அமர்க்களமாய்விடும். வியாபாரி கடைச்சாவியையெடுத்துக்கொண்டு திரும்பவும் கடைக்குச் சென்று கடையைத்திறந்து அவளுக்குத்துணிகளைக்கொண் டுவந்துகொடுத்தான். மறுநாட்காலையிலே அந்தஸ்திரீ குரு வுக்கு வஸ்திரங்களை யனுப்பிக்கொடுத்தது மன்றியில் இனி மேல் அவருக்கு ஏதேனும்வேண்டியிருந்தால் தன்னைவந்து கேட்கும்படி சொல்லியும் அனுப்பினாள். ஆகையால் சர்வ ஜீவகாருண்ய சொரூபியாகிய சாட்சாத் ஜகன்மாதாவை நோக்கிப்பிரார்த்திப்பவர்களீசுவரனைப் பிதாவாக பாவித் துபூஜிப்பவர்களைக் காட்டிலும் அதிக நன்மையை அடை வார்களென்பதில் சந்தேகமில்லை.

430. ஒரு செம்படவன் இரவிலே ஒருவருடைய தோட் டத்துக்குள்ளே இரகஸ்யமாகநுழைந்து, அங்கிருந்த குளத் திலேவலைவீசித்திருட்டுத்தனமாக மீன்திருடிக்கொண்டிருந்

தான். சொந்தக்காரன் இதை யறிந்துகொண்டு, தன்னுடைய வேலையாட்களை அவ்விடத்திலேசூழச்செய்து, தீவர்த்திகளுடனே திருடனைக்கண்டு பிடிப்பதற்குவந்தான். செம்படவனுக்குத்தப்பித்துக்கொள்ள வழிஏற்படவில்லை. ஆகையால் அவன் சரீரம்முழுதும் சாம்பலைப்பூசிக்கொண்டு ஒரு மரத்தினடியில் உட்கார்ந்து கொண்டான். ஜனங்கள் வந்து பார்த்தபொழுதுதிருடன்எங்கும்காணப்படவில்லை. ஆனால், மேற்கூறியபடி சாம்பல்பூசியசாது தீர்க்கநிஷ்டைகூடி ஒரு விருக்ஷத்தினடியில் உட்கார்ந்து கொண்டிருக்கிறார். இன்னூர் தோட்டத்திலே ஒரு மகாத்மா வந்திருக்கிறாரென்று ஊரெங்கும் இச்சங்கதி தெரியலாயிற்று. நூற்றுக்கணக்கான ஜனங்கள் பால், பழங்கள் முதலியவற்றை யெடுத்துக்கொண்டு, மகாத்மாவைத் தரிசிக்க வந்து சேர்ந்தார்கள். சாதுவின் முன்னே வெள்ளிநாணயங்களும் தங்க நாணயங்களும் அதிகமாகக் குவிந்தன. அப்பொழுது செம்படவன் தானாகவே பின்வருமாறு நினைத்துக்கொண்டான்:—"என்னஆச்சரியம்! நான்உண்மைச்சாதுவல்லன்; ஆயினும் இந்த ஜனங்கள் எனக்கு இவ்வளவுதூரம் கௌரவம் செய்கிறார்கள். அப்படியானால், நான் உண்மைச்சாதுவாய் விட்டால், ஈசுவரனையடைவதுநிச்சயம்." இவ்விதமாக அவன் சமயத்துக்குத்தரித்த பொய்வேஷமானது அவனிடத்திலே உண்மையுணர்ச்சியை உண்டாக்கிவிட்டது.

431. ஒருசமயத்திலே நாரதருடைய ஹிருதயத்திலே சிறிது கர்வம் புகுந்து கொண்டது; தம்மைவிடச் சிறந்த

பக்தர் எவருமே யில்லையென்று அவர் நினைத்தார். பகவான் அவருடைய நினைப்பையறிந்துகொண்டு "நாரதரே! நீர் இன்ன இடத்திற்குப்போய் அங்கேயிருக்கிற பக்தன் ஒருவனுடனே பழக்கம் செய்து கொள்ளலாம்; அவன் தான் எனது உண்மையானபக்தன்" என்றுகூறினர். நாரதர் அவ்வாறேசென்று அங்கே யொருகுடியானவனைக்கண்டார். அவன் அதிகாலையில் எழுந்திருந்து ஒருதரம் ஹரிநாமத்தைக் கூறிவிட்டுக் கலப்பையையெடுத்துக்கொண்டுவயலுக்குச்சென்றுநாள்முழுதும்உழுவான். இரவிலே அவன்படுக்கப்போகும்தருணத்திலே இன்னொருமுறை ஹரிநாமத்தைச்சொல்லிவிட்டு உறங்குவான். நாரதர், இதைப்பார்த்து "இந்தப் பட்டிக்காட்டான் எப்படி ஈசுவர பக்தனாயிருக்கமுடியும்? இவன் எப்பொழுதும் உலகவிஷயங்களிலேயே உழன்று உழைத்துக்கொண்டிருக்கிறன். இவனிடத்திலே பக்தனுக்குள்ள அடையாளங்கள் இல்லையே" என்று தமக்குத் தாமே கூறிக்கொண்டு, பகவானிடத்திலேசென்று அந்தக் குடியானவனைப்பற்றித்தமக்குஏற்பட்டஅபிப்பிராயத்தைக் கூறினர். பகவான் "நாரதரே! இந்த எண்ணெய்க்கோப்பையை யெடுத்துக்கொண்டு இந்நகரத்தை யொரு சுற்றுச்சுற்றித்திரும்பிவாரும். ஆனல், ஜாக்கிரதை; ஒரு துளி எண்ணெய்கூடக் கீழேவிழக்கூடாது" என்று ஒரு எண்ணெய் நிறைந்த கோப்பையைக் காட்டி ஆக்ஞாபித்தார். நாரதர் அப்படியே செய்ய, ஈசுவரன் அவரைப் பார்த்து, "நல்லது, நாரதரே! ஊரைச்சுற்றித் தாம்வந்தபொழுது என்னை

எத்தனை தரம் நினைத்தீர்?'' என்று கேட்க, நாரதர் "நான் ஒருதரம்கூட நினைக்கவில்லை. எண்ணெய் நிறைந்த இக்கோப்பையைக்கவனிக்கிறதா? தங்கள்நாமத்தைநினைக்கிறதா?'' என்றார். "ஈசுவரன் இந்த ஒருகோப்பை எண்ணெய் உமது மனத்தைக்கலைத்து என்னை அடியோடு மறந்துவிடும்படி செய்துவிட்டதே; அக்குடியானவன் ஒரு பெரியகுடும்பபாரத்தைச் சுமக்கவேண்டியிருந்தபோதிலும் என்னை இரண்டுதரமாவது நினைக்காமலிருக்கிறானா?'' என்றார்.

432. உன்னுடையபிடிவாதத்திலேகண்டகர்ணனைப்போலிராதே. சிவனைமாத்திரம்பூஜித்து மற்றெல்லாத்தேவதைகளையும் இகழ்ந்துவந்த கண்டகர்ணன் ஒருவன்இருந்தான். ஒருநாள் சிவன் அவனுக்குப் பிரத்தியட்சமாகி "நீ மற்ற தேவதைகளை இகழ்ந்துகொண்டிருக்கும் வரையில், நான் உன்னிடத்திலே சந்தோஷமடையமாட்டேன்'' என்றார். அவன் ஒன்றுமே பதில் பேசவில்லை. சின்னாட்கள் கழித்துச் சிவன் மறுபடியும் அவனுக்குப் பிரத்தியட்சமானார். ஆனால் இச்சமயத்திலே அவர், ஹரிஹரனாக (பாதிசிவனாகவும் மறுபாதி விஷ்ணுவாகவும்) தோன்றினார். அவனுக்குப் பாதிசந்தோஷமும் பாதி துக்கமும் உண்டாயின. சிவபாகத்திலே அவன் தனது நைவேத்தியங்களை வைத்தான். அப்பொழுது சிவன் "உன்னுடைய பிடிவாதம் ஜயம்பெறமுடியாதது. நான் இவ்விரு உருவத்தையும் ஏக உருவத்திலே உனக்குக்காட்டி, எல்லாத்தேவதைகளும்,தேவிகளும் ஒரே

வஸ்துவினுடைய பற்பலவித லட்சணங்களாம் என்று ருசு
ப்படுத்த முயற்சித்தேன். நீ இன்னும் உண்மையை அறிந்
துகொள்ளவில்லை. நீ இவ்வாறு இதரதேவதைகளை நிந்திப்
பதற்குத்தக்க பலனையடைவாய்'' என்றுமறைந்துவிட்டார்.
அந்தமனிதன் அங்கிருந்து புறப்பட்டு ஒரு கிராமத்துக்குப்
போய்விட்டான். அவன் சீக்கிரத்திலே ஒருபெரியவிஷ்ணுவி
ரோதியாய்விட்டான். அக்கிராமத்துக் குழந்தைகள் எப்பொ
ழுதும் அவன்காதுக்குக்கேட்கும்படி விஷ்ணுவின்பெயரைச்
சொல்லிஅவனைத்துன்புறுத்த ஆரம்பித்தார்கள். அவன் தன்
னுடையகாதுகளில் இரண்டுமணிகளைக் கட்டித்தொங்கவிட்
டுக்கொண்டுபையன்கள் "விஷ்ணு, விஷ்ணு'' என்றுசொன்
னவுடனே, அச்சத்தம்காதுகளுக்கு உள்ளேநுழையாதபடி
அம்மணிகளையாட்டி யசைத்துக்கொள்வது வழக்கம். இத
னால்கண்ட கர்ணனென்று அவனுக்குபெயர்வந்தது.

433. இரண்டுவித சித்தர்கள்: (சாதனசித்தன், கிருபாசி
த்தன்) உண்டு. நல்லவிளைவைவிரும்பினால் சிலர்மிகுந்த கஷ்
டப்பட்டுக் கால்வாய்வெட்டி வயல்களுக்குத் தண்ணீர்பாய்
ச்சவோ அல்லது கிணற்றிலிருந்து தண்ணீர் இறைக்கவோ,
செய்து கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. வேறுசிலர் இவ்
விதகஷ்டங்களை யநுபவிக்கவேண்டி யிருக்கிறதில்லை; இவர்
கள் அவ்வளவு அதிர்ஷ்டசாலிகள்; மழை ஏராளமாகப்பெ
ய்து வயல்முழுதிலும் தண்ணீர் நிரம்பிவிடுகிறது. ஆகையா
ல் மாயாபாசங்களினின்றும் விடுதலை பெறுதற்கு எல்லாரு

ம் தியானஅநுஷ்டானங்களைப்பெருமுயற்யுடன் செய்யவே ண்டும். ஆனால் கிருபாசித்தர்கள் இக்கஷ்டங்களையெல்லாம் அநுபவிக்கவேண்டி யிருக்கிறதில்லை. அவர்கள் ஈசுவரகிரு பையினாலே பரிபூரணத்துவம் அடைகிறார்கள் ஆனால். அவ ர்களின் தொகைமிகவும் சொற்பம்.

434. பரிசுத்த நதியானது சமஓட்டத்துடனே ஞானி யினுடைய ஹிருதயத்தினூடே ஓடுகின்றது. அவனுக்கு உலகமே ஒரு சொப்பனம்; அவன் தன்னுடைய ஆத்மா விலேயே லயமடைந்திருக்கிறான். ஆனால் பக்தன் அப்படி யல்லன்; பக்தனிடத்திலே ஏற்றமும் உண்டு, இறக்கமும் உண்டு. அவன், வெவ்வேறுவிதமான ஹிருதயஉணர்ச்சிகளி னாலேசலிக்கப்பெற்றுச், சிரிக்கின்றான்; அழுகின்றான்; ஆடுகி ன்றான்; பாடுகின்றான். பக்தன் ஈசுவரசந்நிதியிலேயே வசித் துக்கொண்டு, அவருடைய சாந்நித்தியத்தை யநுபவிக்க விரும்புகின்றான்;—அந்த ஆநந்த சமுத்திரத்திலே அவன் சிலவேளைகளில் நீந்திக்கொண்டும், சிலவேளைகளில் அமிழ்ந் திக்கொண்டும், சிலவேளைகளில் மிதந்துகொண்டும், ஒரு பனிக்கட்டியானது தண்ணீரிலே மேலும்கீழுமாகச்சென்று ஆடுவதுபோல தன்னைப்போட்டுவிட விரும்புகிறான்.

435. ஈசுவரனைப்பிரத்தியட்சமாகக் கண்டவனே உண் மைஞானி. அவன் குழந்தை போன்று ஆய்விடுகின்றான். குழந்தைக்குச்சந்தேகமின்றி ஒரு தனித்தன்மையிருப்பது போலத்தோன்றுகிறது. ஆனால் அந்தத்தனித்தன்மையெம்

ருதோற்றமே; உண்மையன்று. குழந்தையின் அகங்காரா எவ்விதத்திலும் ஒருவளர்ந்த மனிதனுடைய ஆத்மாவைப் போன்றதாயில்லை.

436. பெருமீன் தண்ணீரில் நன்றாக முழுகி விடுகிறது; ஆனால் தண்ணீர் அதன் இறகுகளை நனைக்கின்றதில்லை. அப்படியே, முக்தன் உலகிலே வசிக்கிறான்; ஆனால் உலகம் அவனை பாதிக்கின்றதில்லை.

437. குழந்தைகூறிற்று:—"எனது அருமைத்தாயே! எனக்குப்பசிக்கும் பொழுது, என்னை எழுப்பிவிடு."

தாயார்பதில் கூறினாள்:—"என்கண்ணே! உன்பசியே உன்னை எழுப்பிவிடும்."

438. இந்த ஈசுவரஞானமானது வித்தியாகர்வம், தனகர்வம் உள்ளமனிதனுக்கு உண்டாகிறதில்லை. "ஓரிடத்திலே ஒருபரிசுத்த புருஷர் இருக்கிறார், தாங்கள் அவரைப்பார்க்கவருகிறீர்களா?" என்று நீ அம்மாதிரி மனுஷன் ஒருவனைக்கேட்டுப்பார்க்கலாம். ஆனால் அவன் வீண்சாக்குப்போக்குகள் கூறி, வரமாட்டானென்பது நிச்சயம். தான் மிகப்பெரிய மனிதனென்றும்,அவரைத்தரிசிக்கச்செல்வது இழிவென்றும் அவன் நினைக்கிறான். "கர்வம் அஞ்ஞானத்தினாலே யுண்டாகிறது."

439. எல்லையற்றதண்ணீர்ப்பரப்பொன்று இருப்பதாக வைத்துக்கொள்வோம்—மேலும் தண்ணீர், கீழும் தண்ணீர், நாலாபக்கங்களிலும் தண்ணீர். சில இடங்களிலே தண்ணீர் குளிரிலே உறைந்து விடுகிறது; உஷ்ணமுள்ள பொழுது அது உருகித்தண்ணீராகி விடுகிறது.

பிரஹ்மம்இவ்வெல்லையற்றதண்ணீர்ப்பரப்பே. இந்தத் தண்ணீரிலே பனிக்கட்டியாக உறைந்துள்ள பாகங்கள் ஈசுவரனுடைய ஞானசகுணவடிவங்களாகும். குளிர்ச்சி பக்தனுடைய பக்தியே (அவனுடைய அன்பு, அவனுடைய சிரத்தை, அவனுடைய ஆத்மசமர்ப்பணம்) உஷ்ணம் நிர்விகற்பசமாதிக்கு இட்டுச்செல்லும் ஞானவிசாரமாகும்; அப்பொழுது "நான்," "நான்" என்று சொல்கின்ற அகங்காரமானது அடியோடு அழிந்து விடுகின்றது.

440. சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் போன்ற செய்கையுள்ள இடத்திலே, ஞானசக்தியுண்டு. அமைதியாயிருந்தாலும் கலக்கப்பெற்றாலும் தண்ணீர் தண்ணீரே. அந்த அகண்டசச்சிதானந்த ஏகவஸ்துவே பிரபஞ்சத்தை சிருஷ்டி ஸ்திதி சம்ஹாரம் முதலியன செய்கின்ற நித்தியசைதந்நிய சக்தியாம்; இது எதுபோலென்றால், 'தளகர்த்தர்' (கல்கத்தாவிலே நேபாள அரசாங்கத்துக்குக் காரியஸ்தராயிருந்த விஸ்வநாத உபாத்யாயர்; ஸ்ரீராமகிருஷ்ணர் அவரைத் தளகர்த்தர் என்று அழைப்பது வழக்கம்) சிலவேளைகளில்ஒன்றும் செய்கிறதில்லை; சிலவேளைகளில் தமது பூஜையைச்

செய்கிறார்; இன்னும் சிலவேளைகளில் அவர் ராஜப்பிரதிநிதி பீடத்திலே செல்லுகிறார்; அவர் ஒரே ‘தளகர்த்தர்’ தான்; இவையெல்லாம் அவருடைய வெவ்வேறு உபாதிகளே.

441. எனது திவ்யமாதாவே அநேகமாக வெளிப்பட்டிருக்கும் ஒரேவஸ்து. அவள் தன்னுடைய அகண்ட சக்தியையே ஜீவனாகவும், கிரியாசக்தி, புத்திசக்தி, மனோசக்தி ஞானசக்தி முதலிய பலவிதமான சக்திகள் வாய்ந்த பிரபஞ்சமாகவும் வேறு படுத்தியிருக்கிறாள். எனது திவ்ய மாதா, வேதாந்தத்தில்கூறப்பட்டுள்ள பிரஹ்மத்தைத்தவிர வேறொன்றுமில்லை. அவள்நிர்க்குணப்பிரஹ்மத்தின் சகுண பட்சம்.

442. ஈச்வரனிடத்திலே எவ்வளவு லயித்திருந்தாலும், ஒருவனுக்கு அதனால் ஒருபொழுதும் கெடுதிநேரிடாது. இரத்தினத்தின்கிரணங்கள்ஒளிவீசி, மனத்துக்கு இரம்மியமாயிருக்கின்றனவே யொழிய, ஒருபொழுதும் சுடுகிறதில்லை.

443. எவரோ ஒருவரை நோக்கி ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறினார்:—“உலகிலே உன் வாழ்நாட்களின் சிறந்தபாகத்தை யெல்லாம் செலவழித்துவிட்டு, இப்பொழுதுஈச்வரனைத் தேடவந்திருக்கிறாய். ஈச்வரனை யறிந்தபின்னர் நீ உலகிலே பிரவேசித்திருப்பாயானால், ஆ! எத்தகைய சாந்தியையும் சந்தோஷத்தையும் அடைந்திருப்பாய்!”

444. நியாயமான விவேகம் இரண்டுவிதமாம்:—ஒன்று, பிரித்துப்பார்ப்பது; மற்றது, சேர்த்துப்பார்ப்பது. முதலாவது கூறப்பட்டுள்ளது, மனிதனைப் பிரபஞ்சத்திலிருந்து பிரஹ்மவஸ்துவுக்கு இட்டுச்செல்கின்றது; இரண்டாவது கூறப்பட்ட அதனுல் மனிதன் பிரஹ்மவஸ்து எப்படி பிரஹ்மமாகத்தோன்றுகிறது என்பதை யறிகிறான்.

445. சதையிலேமுள்தைத்துவிட்டால், மனிதன் இன்னெருமுள்ளினுல் முன்னமே தைத்திருந்த முள்ளைப்பிடுங்கி விட்டு, பின்னர் இரண்டையும் தூரஎறிந்துவிடுகிறான். ஆகையால் "அந்யோந்யசம்பந்த" அறிவே ஜீவனுடைய கண்ணை மறைக்கின்ற "அந்யோந்யசம்பந்த" அஞ்ஞானத்தையகற்றக்கூடும். ஆகையால் அறிவும் அஞ்ஞானமும் அவித்தையிலேயே உண்மையில் அடக்கப்பட்டுள்ளன. அகண்டஞானநுபூதியையடைகின்ற புருஷன் முடிவிலே அறிவையும் அஞ்ஞானத்தையும் தள்ளிவிடுகிறானுதலினுலே, எல்லா துவைதத்திலிருந்தும் அவன்விடுபட்டுவிடுகிறான்.

446. ஈசுவரன் ஸ்தூலசரீரத்திலே எப்படி வசிக்கிறார்? அவர் பீச்சாங்குழலினுள்ளேயுள்ள சிறுகுச்சிபோன்றுவசிக்கிறார்; அவர் சரீரத்தில் இருக்கிறார், ஆனல் அதனின்றும் வேறாயிருக்கிறார்.

447. சமுத்திரஜலமானது ஒரு சமயத்திலே அமைதியாயும் இன்னெரு சமயத்திலே குமுறிக்கொண்டுமிருப்பது

போலவே, பிரஹ்மவஸ்துவும் மாயையும். அமைதியான சமுத்திரம் பிரஹ்மம்; சலனசமுத்திரம் மாயை.

448. அவரே அகண்டவஸ்து; ஆனால் லீலை அவருடைய தே. இந்தலீலை நான்குவிதங்களாம். அவையாவன:—ஈசுவர லீலை, தேவலீலை, பிரபஞ்சலீலை, நரலீலை.

நரலீலையிலேதான் அவர் அவதரிப்பது சாத்தியமாகின்றது. இந்த நரலீலையின் தன்மையை நீ நன்குணர்கிறாயா? இதனை ஒரு பெரியமேல்மாடியிலிருந்து பெருவெள்ளமாகப் பெருகி ஓர் அகன்ற கால்வாயின்மூலமாகவெகு வேகங்கொண்டுபாய்கின்றதண்ணீர்போன்றதென்று ஒருவன்கூறலாம். அந்த அகண்ட வஸ்துவினுடைய, சச்சிதாநந்தவஸ்துவினுடையசக்தியே ஒருகால்வாயின் மூலமாகப் பாய்வதுபோல வெளியேபாய்கின்றது,வியக்தமாகின்றது. எல்லோரும்உண்மையில் அவதாரங்களை யறிந்துகொள்ளமுடியாது. பாரத்துவாஜரும்பிறருமாகியஏழுரிஷிகள் தாம் ஸ்ரீராமரை--அவதாரபுருஷரை, அவதாரபுருஷராகஅறிந்துகொள்ளல்முடிந்தது. மனிதனுக்கு உண்மைஞானத்தையும்பக்தியையும் உபதேசிப்பதற்காகவே ஈசுவரன் மானிட வடிவமெடுக்கிறார்.

449. நமக்கு எதையேனும் சொல்லிக்கொடுக்கும் ஒவ்வொருவரையும் குருவென்று அழைக்காமல், பிரத்தியேகமாக ஒருவரை நாம் குருஎன்று சொல்லவேண்டிய அவசியம் என்ன? ஒரு புதிய தேசத்துக்குச்சென்றால் வழிதெரி

ந்துள்ள வழிகாட்டி யொருவனுடைய சொற்களின் பிரகாரம் நடக்கவேண்டும். அனேகருடைய சொற்களைக்கேட்டு நடப்பதாயிருந்தால் நீ மிகுந்த குழப்பமடைந்துவிடுவாயென்பது நிச்சயம். ஆகையால் ஈசுவரனையடைய முயற்சிப்பதிலே ஈசுவரனிடத்து இட்டுச்செல்லும் மார்க்கத்தை அறிந்துள்ளஒரே குருவினுடையஉபதேசத்தைப்பரிபூரணமாய் நம்பி அதன்படி ஒருவன் நடந்துதீரவேண்டும்.

450. தற்காலத்திய மதபோதகர்களாலே கையாளப்படும் மார்க்கத்தைப்பற்றித் தங்களுடைய அபிப்பிராயமென்ன?

ஆகாரமானது ஒருவருக்குமாத்திரம் போதுமானதாயிருக்கும்பொழுது, நூறுபெயர்களை விருந்துக்கழைத்தது போன்று அஃது இருக்கிறது. அதுமிகச் சொற்பம்ஆத்மீக அநுபவத்துடனே மகாமதபோதகரெனப்பாவனைசெய்து கொள்ளுதலாம்.

451. ஒருநாள் நான் பஞ்சவடி வழியாகப் போய்க்கொண்டிருந்தபொழுது, ஒருதவளை கத்துகிற பயங்கரமானசத்தத்தைக்கேட்டேன். அஃது ஒருபாம்பினுல்பிடிக்கப்பட்டிருக்குமென்று ஊகித்தேன். வெகுநேரம் கழித்து, நான் அவ்வழியாகத் திரும்பிவந்தபொழுதும், அந்த சத்தம் கேட்டது. புதர்களினூடே நான்பார்க்க, விஷமில்லாத ஒருவிதத் தண்ணீர்ப்பாம்பு அதைத் தன்வாயிலே கவ்வியிருந்

தது: அப்பாம்பு அதை விழுங்கவும் முடியவில்லை, விடவும் முடியவில்லை; அந்தத் தவளையின் வேதனைக்கும் முடிவேயில்லை. அப்பொழுது நான் நினைத்ததாவது: "அந்தத்தவளை கொடுவிஷமுள்ள கிருஷ்ணசர்ப்பத்தினிடம் அகப்பட்டிருந்தால், அஃது அதிகமாக மூன்று சத்தங்கள்போடுவதற்குள்ளே விழுங்கப்பட்டிருக்கும். ஆனால் இப்பொழுது தவளைபடும் துன்பத்தினளவு அப்பாம்பும் பட்டுக்கொண்டிருந்தது. இதுபோலவே, அறிவில்லாத ஒருவன் தன்னுடைய மூடத்தனத்தினாலே இன்னொருவனை இரட்சிக்கும்பாத்தியதையை எடுத்துக்கொள்வானானால், இருவருக்கும் நேரிடும் துன்பங்கட்கும்முடிவேயிராது. சிஷ்யனுடைய அகங்காரமும்போகிறதில்லை, அவனுடையஉலகபந்தங்களும் அறுபடுகின்றதில்லை. சிஷ்யன் யோக்கியதையற்ற குருவின்கீழ் வருவானானால், அவன்மோக்ஷமடையப்போவதேயில்லை. ஆனால் தகுந்த உபதேசத்தின்கீழே, ஜீவனுடைய அகங்காரமானது மூன்றுசத்தங்களிலே அழிந்துவிடுகிறது." என்பதே.

452. ஒருவனுக்குஊரிலிருந்து காகிதம்வந்தது; அதிலே பந்துக்களுக்குச் சிலசாமான்கள் வாங்கியனுப்பும்படி எழுதப்பட்டிருந்தது. அவன் அந்தச்சாமான்களை வாங்கிவர விரும்பி, இன்னின்னசாமான்கள் என்று தெரிந்துகொள்ளும்பொருட்டு அந்தக்காகிதத்தைத்தேடினான்; அதுகாணப்படவில்லை;எங்கேயோ தவறிப்போய்விட்டது.வெகுநேரம் அவன் அந்தகாகிதத்தைதேடிப்பார்க்க, அங்கேஓரிடத்தில்

கடிதம்கிடைந்தது. அவன்சந்தோஷம்அடைந்தான்.வெகு ஆசையுடனே அக்காகிதத்தையெடுத்து நன்ருகப்படித்துப்பார்த்தான்.அதிலேபின்வருமாறுஎழுதப்பட்டிருந்தது "ஐந்து சேர் மிட்டாயும், 100-கிச்சிலிப்பழங்களும், எட்டு வேஷ்டிகளும்அனுப்பு." இவ்வாறுஉள்ளேயெழுதப்பட்டிருந்ததைப்படித்துத்தெரிந்துகொண்டவுடனே, அவன் அந்தக்காகிதத்தைத்தூரஎறிந்துவிட்டு, எழுதப்பட்டிருந்த சாமான்களை வாங்கப் புறப்பட்டான்.

453. "பத்மா! மாம்பழங்களைத்தின்று, தோட்டத்திலே எத்தனை மாமரங்கள் இருக்கின்றன, அம்மரங்களின்கிளைகளெல்லாம் சேர்ந்து எத்தனையாயிரம் இருக்கும், இலைகள் எத்தனைலட்சமிருக்கும்" என்றும், மற்றவிதமாகவும் நீஎண்ணுவதினுல் யாதுபயன்? நீ மாம்பழங்கள் தின்பதற்கு இங்கே வந்திருக்கிருய்; அவற்றைத்தின்று விட்டுப்போய் விடு. சாதனங்களினுலே ஈசுவரனை யடையவேண்டுமென்ற நோக்கத்துடனே நீயொருமனிதனுக இவ்வுலகில் வந்திருக்கிருய். பக்தியையடைவதற்கு உன்னுளனமட்டும் நீமுயற்சிப்பதே உனது கடமை. வீணுன தர்க்கங்களினுலே நீ ஏன் உன்னை வருத்தப்படுத்திக்கொள்கிருய். தத்துவதர்க்கங்கள் உனது ஜீவிதத்தையாற்றிவிடுமா? உனக்கு மயக்கமுண்டாக்குவதற்கு நான்கு அவுன்ஸ் சாராயமே போதுமாஞல், சாராயக்கடையிலே எத்தனை பீப்பாய்களிலே சாராயம் இருக்கின்றது என்று நீ கணக்கிடுவதினுல் உனக்கு என்ன பயன்? தெரிகிறதா?."

454. வீட்டிலுள்ளவர்கள் விழித்துக்கொண்டிருந்தால் திருடர்கள்வீட்டினுள் நுழையார்கள். அதுபோல, நீஎப்பொழுதும் ஜாக்கிரதையாயிருந்தால் தீயநினைப்புக்கள் உனது மனத்தினுள்சென்று அங்கே யுள்ள நன்மையைக்கொள்ளைகொள்ளமுடியாது.

455. ஒருசிஷ்யன்:—"ஈசுவரன்'ரூபத்துடன் கூடியவர்' என்று நம்பலாம். ஆனால் நிச்சயமாக அவர் பூஜிக்கப்படுகின்ற மண்ணுருவமன்று."

ராமகிருஷ்ணர்:—"அதை ஏன் மண்ணுருவமென்று சொல்லவேண்டும்? திவ்விய விக்கிரகம் சக்தியினாலாக்கப் பெற்றது. விக்கிராராதனையிலே ஏதேனும் தப்பிதமிருந்தாலும், பூஜையெல்லாம் அவருக்கே செய்யப்படுகின்றனவென்பது அவருக்குத்தெரியாதா? பூஜை அவருக்குத்தான் என்று அறிந்துகொண்டு அவர் அதைச்சந்தோஷமாக ஏற்றுக்கொள்வார். ஈசுவரனை நேசிப்பாய். உனக்கு மிகவும்சமீபத்திலுள்ள கடமை அதுதான்."

456. அரிப்பெடுக்கின்றபடையைச்சொறிவது சந்தோஷமாயிருக்கின்றது; ஆனால் பின்னால் கிடைக்கின்றபயன் மிகவும் துன்பகரமாயும் பொறுக்கமுடியாததாயுமிருக்கிறது; அதுபோலவே இவ்வுலக சுகங்கள் முதலில் மிகவும் ரம்மியமாயிருக்கின்றன; ஆனால், பின்னால் கிடைக்கும் பலன்கள்

பொறுக்கவும் முடியாமல், நினைக்கவும் முடியாமல் பயங்கர மாயிருக்கின்றன.

457. புதிதாகப்பிறந்த கன்றுக்குட்டி உறுதியற்றதாயிருக்கிறது; அஃதுஉறுதியாய்நிற்பதற்குத்தெரிந்துகொள்ளு ம்முன் எத்தனையோ தடவைகள் தத்தித்தத்தி விழுகிறது. அப்படியே, அநுஷ்டான மார்க்கத்திலும் தவறுதல்கள் அநேகமாயிருக்கலாம், அடிக்கடி நேரிடலாம்; வெகுகாலத்திற்குப்பின்னரே அதில் ஜயம் கிடைக்கும்.

458. அஜீரணவியாதியுள்ளவனுக்குப் புளிப்புப்பொருள்கள் ஆகாரத்திற்கு ஆகாஎன்று அவனுக்கேதெரியும். ஆனால்அவற்றைப்பார்த்தமாத்திரத்திலே அவனுடைய வாயிலே தண்ணீர் ஊறும். அப்படியே, ஒருவன் அகங்காரத்தையும் மமகாரத்தையும் அடக்குவதற்கு மிகுந்தகஷ்டப்பட்டு முயற்சித்தாலும், செய்கையிலே, பரிபக்குவ மடையாத அவனுடைய அகங்காரமானது முன்னே வந்து நின்றுவிடும்.

459. ஒருவன் மயக்கமுண்டுபண்ணாத சாகச பட்சணத்தையே உண்டுகொண்டிருந்த பொழுதிலும் அவனுக்கு ஈசுவரனையடையவேண்டுமென்ற இச்சையில்லாமற் போய்விட்டால், அச்சாதாரண ஆகாரம் மாட்டுமாம்சம் போன்று கெட்டதே. ஆனால் ஒருவன் மாட்டு மாம்சம், தின்று

கொண்டே, ஈசுவரனையடைய இச்சிப்பானாயின், அவனுக்கு அந்தமாட்டுமாம்சம் தேவர்களின் ஆகாரம் போன்றது.

460. ஔஷதம் சாராயத்திலே கலந்திருப்பதுபோல, நீ ஈசுவரனிடத்திலே கலந்திரு.

461. லௌகிகத்திலே எப்பொழுதும் சத்துவம், ரஜஸ், தமசு என்று மூன்று தன்மைகள் இருக்கின்றதுபோல, பக்தியிலும் சத்துவம், ரஜஸ், தமஸ் என்றுமூன்று தன்மைகள் உண்டு. சத்துவகுணபக்திசாந்தத்தோடுகூடியது, ராஜஸகுணபக்தி சப்தத்தோடுகூடியது; தமோகுணபக்தி மிருக சக்தியோடு கூடியது.

சாத்விகபக்தன் ரகஸ்யமாகத் தனது அநுஷ்டானங்களைச் செய்துகொள்கிறான். அவன் தனது படுக்கையிலே இரவில் கொசுவலைக்குள்ளேயுட்கார்ந்துகொண்டு தியானம் செய்கிறதினாலே காலையில் வெகுநேரம் கழித்து வெளியே வருகிறான்; அவனுடைய நண்பர்கள் இரவிலே நல்ல தூக்கமின்மையினாலே காலையில் வெகுநேரம் கழித்து எழுந்திருக்கிறானென்று நியாயம் கூறுகிறார்கள். ஆகாரவிஷயத்திலே அவனுக்குத்தொந்தரவில்லையானால், அவனுடையசரீரத்தைப்பற்றியும்அவனுக்குக்கவலையில்லை. ஆகாரவிஷயத்திலாகட்டும், உடைவிஷயத்திலாகட்டும், தன்வீட்டிலுள்ள தட்டுமுட்டு சாமான்களிடத்திலாகட்டும், வேறெதிலாகட்டும், அவனுக்கு டாம்பீகம் கிடையாது; புகழ்ச்சியினாலே உலகில் கிளம்பவேண்டுமென்ற ஆசைஅவனுக்கில்லை.

ராஜஸீக பக்தனுக்கு அவனுடைய சரீரத்திலே ஜாதி யடையாளங்கள்உண்டு. அவன் கழுத்தைச்சுற்றி ருத்திராட்ச மணிந்திருப்பான்; அதிலே ஆங்காங்கு சில தங்கமணிகள் நடுவில்கோக்கப்பட்டிருக்கும். பூஜைசெய்யும்பொழுது பட்டுக்கட்டுதல், ஆடம்பரத்துடனும் மேன்மையுடனும் பூஜைகளை நடத்துதல் முதலிய செய்கைகள் அவனிடத்திலிருக்கும்; அந்த பக்தன், இவைபோன்ற வெளிப்பார்வையான செய்கைகளையே விசேஷமாக நம்பியிருக்கிறான்.

தாமசீக பக்தனுக்கு ஒருவித கொடூரமான நம்பிக்கை உண்டு. இவன் ஈசுவரநாமத்தைச் சொல்லும்படி ஏற்பாடு செய்துவிட்டால் "என்ன நான் அவருடைய நாமத்தைக் கூறிவிட்டேன், இன்னும் எனக்கு பாபமுண்டா? அவருடைய ஐசுவரியத்துக்கு நான் பாத்தியாவான்" என்று நம்புவான். இப்படியிருக்கிறது இவனுடை ஆத்திரம் மிகுந்த ஆவல்.

462. ஒருவன் அரண்மனையிலுள்ள அரசனைப் பார்க்க விரும்பினால், அரண்மனைக்குப்போய், எல்லா வாசல்களையுங் கடந்து உள்ளே செல்லவேண்டும்; ஆனால் வெளி வாசலுக்குள் நுழைந்தவுடனேயே "அரசனெங்கே" யென்று கூச்சலிட்டால், அவன் அரசனைப் பார்க்க முடியாது. ஏழு வாசல்களையுங் கடந்து சென்றபின்னர் தான் அரசனைப் பார்க்கமுடியும்.

463. அநுபூதி யென்பது இங்குமங்கும் போய்க்கொண்டிருக்கும் நிலைமை. நீ பரமாத்மா விடத்துக்கே திரும்பிச்

சென்று, நீயும் அவரும் ஒன்றாய் விட்டால் அதுதான் சமாதி.பின்னர் நீ உனது அடிகளைப் பின்வாங்குகிறாய்? நீ உனது அகங்காரத்தைத் திரும்பவும் பெற்றுப் புறப்பட்ட இடத்துக்கே திரும்பிவந்து, உனது அகங்காரம் அதே பரமாத்மாவினிடமிருந்துதான் உண்டாயிற்று என்றும், ஜீவன், ஈசுவரன், ஜகத் ஆகிய மூன்றும் ஒரேஉண்மைப்பொருளின் வெவ்வேறு தன்மைகளென்றும் கண்டுகொள்வாய்; நீ அவற்றுள் எதையேனும் ஒன்றைப் பலமாகப் பிடித்துக் கொண்டால், அவற்றையெல்லாம் அறிந்துவிடுகிறாய்.

464. புதிதாக விவாகம் செய்துள்ள ஒருயுவதிகுழந்தை பிறக்கும்வரை வீட்டுவேலைகள் செய்வதிலே சர்வஜாக்கிரதையாயிருக்கிறாள். ஆனால் ஒரு குழந்தை பிறந்தவுடனே, வீட்டிலே செய்யப்படவேண்டிய சிறுவேலைகளையெல்லாம் கவனிப்பதேயில்லை; அவற்றைச் செய்வதிலே அவளுக்குச் சந்தோஷமுமில்லை. அதற்குப் பதிலாக, அவள் புதிதாகப் பிறந்த தன்னுடைய குழந்தையை நாள்முழுதும் முத்தமிட்டுக் கொஞ்சி விளையாடிக்கொண்டிருக்கிறாள். இவ்விதமாக, மனிதன் தனது அஞ்ஞான நிலைமையிலே எல்லாவிதவேலைகளையும் செய்வதில் சுறுசுறுப்பாயிருக்கிறான்; ஆனால் அவன் ஈசுவர சாந்நித்தியத்தைத் தன்னுடைய ஹிருதயத்தில் கண்டவுடனே, அவ்வேலைகள் செய்வதிலே அவனுக்குச்சந்தோஷமுண்டாவதில்லை. ஆனால் இப்பொழுது அவனுடைய சந்தோஷமானது ஈசுவரனைச்சேவிப்பதிலும், அவரதுஆக்

ஞையின்படி நடப்பதிலுமே யுள்ளது. வேறெத்தொழிலிலும் அவனுக்குச் சந்தோஷமுண்டாவதில்லை.

465. நீ சாந்தத்துடனும் சற்குணத்துடனும் இருக்க விரும்பினுல் மானிடவர்க்கத்தாருடைய புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் லட்சியம் செய்யாதே.

466. பிரசண்டமாருதம் அடிக்கும்பொழுது, ஆலமரத்துக்கும் அரசமரத்துக்கும் பார்வையிலே வித்தியாசம் கண்டுபிடிப்பதுகடினம். அது போலவே, ஒருமனிதனுள்ளே உண்மைஞானமாகிற காற்று அடிக்கிறபொழுது, ஜாதி வித்தியாசங்களை அவனிடத்திலே பார்க்கமுடியாது.

467. பாம்புமிகவும் விஷமுள்ளது; எவரேனும் அதைப் பிடிக்கப்போனுல் அது அவரைக்கடித்துவிடுகிறது. ஆனுல் பாம்புபிடிக்கும் தொழிலைக்கற்றுள்ளவன் பாம்பைப்பிடிப்பதுமாத்திரமன்று, தனது கழுத்தைச்சுற்றியும் கைகளைச்சுற்றியும் பலஆபரணங்களையணிந்திருப்பதுபோல அநேகபாம்புகளைத்தொங்கவிட்டுக்கொண்டு திரிகிறுன். அதுபோன்றே, ஆத்மஞானமடைந்தவன் காமமும் ஆசையுமாகியவிஷத்தினுலே ஒருபொழுதும் பாதிக்கப்படமாட்டான்.

468. மனமானது உறுதியற்றதாயும் சலனமுள்ளதாயும் இருக்கும் வரையில், மனிதனுக்கு சற்குருகிடைத்தும்பயனில்லை; சாது சங்கம் கிடைத்தும் பயனில்லை.

469. அழுக்குப்படிந்த ஒருகண்ணாடி முகத்தைப்பிரதிபலிப்பிக்காததுபோல, களங்கங்கள் நிறைந்தஹிருதயம்ஈசுவரனைப் பிரதிபலிப்பிக்காது. கண்ணாடியிலிருந்துஅழுக்கை நீக்கினவுடனே, மனிதன் தன்னுடையமுகம் அதிலே பிரதிபலிப்பதைப்பார்க்கமுடிவதுபோல, ஹிருதயம்பரிசுத்தமாகும்பொழுது ஈசுவரன் அங்குத் தாமேதோன்றிவிடுகிறார்.

470. ஸ்ரீகிருஷ்ணன் அர்ச்சுனனை நோக்கி "என்னையடைய வேண்டுமென்று உனக்குமனமிருந்தால், உன்னிடத்திலேஅஷ்டசித்திகளுள்ஒன்றேனும்இருக்கலாகாது;அஃதுள்ளவரையில் என்னையடைதல் முடியவேமுடியாது" என்று கூறினர்.

471. எல்லாமதங்களிலும் கூறப்படுகின்ற ஈசுவரன் ஒருவரேயானால், ஏன் அவர் வெவ்வேறு மதத்தினர்களாலே வெவ்வேறு விதமாக வர்ணிக்கப்பட்டிருக்கிறார்?.

ஈசுவரன் ஒருவரே; ஆனால் அவருடைய தன்மைகள் அநேகம். ஒருவரே ஒருவனுக்குப்பிதாவாயும், இன்னொருவனுக்குச்சகோதரனாயும், ஒருஸ்திரீக்குப்புருஷனாயும்இருந்துகொண்டுவெவ்வேறு ஆட்களால் வெவ்வேறு பெயர்களுடன் அழைக்கப்படுவதுபோல, ஒரே ஈசுவரன் தம்முடைய பிரத்தியேக உபாசகனுக்குத்தோன்றுகின்ற பிரத்தியேகத் தன்மையின்பிரகாரம் பற்பலவிதங்களில் வர்ணிக்கப்படுகிறார்.

472. ஒவ்வொருவனும் தனது சொந்தமதத்தையேபின் பற்றவேண்டும்; கிறிஸ்தவன் கிறிஸ்தவமதத்தைப்பின்பற்ற வேண்டும்; மகம்மதியன் மகம்மதிய மதத்தையேபின்பற்ற வேண்டும்; ஹிந்துவுக்கு பூர்வீகமார்க்கமே, (ஆர்யரிஷிகளுடையமார்க்கமே) மிகவும் சிறந்தது.

473. யுக்திஇருவகைப்படும். அவையாவன:—அநுலோமம், விலோமம் என்பனவாம். அநுலோம முறையினாலே மனிதன் சிருஷ்டியை தியானிப்பதிலிருந்துசிருஷ்டிகர்த்தாவைத்தியானிக்கஆரம்பித்துமேலேகிளம்புகிறான்; அதாவது காரியத்திலிருந்து முதற்காரணத்துக்குச் செல்கிறான். பின்னர் விலோமமுறையாரம்பிக்கின்றது. மனிதன் ஈசுவரனையடைந்தபின், சிருஷ்டியின்ஒவ்வொரு பாகத்திலும் அல்லது ஒவ்வொரு செய்கையிலும் ஈசுவரனுடையதோற்றத்தையே தரிசிக்கக்கற்றுக்கொள்கிறான். முன்னேகூறப்பட்டது, வாழைமரத்தை உள்ளேயுள்ள தண்டினிடம்செல்லும்வரையில் பட்டைபட்டையாக உரிப்பது போன்றதாம். பின்கூறப்பட்டது பட்டைமேல் பட்டைவைப்பது போன்றதாம்.

474. ஈசுவரன்சிலசமயங்களிலே பித்தர்கள், குடியர்கள், குழந்தைகள் ஆகிய இவர்களின் வாய்களின் மூலமாகப்பேசுகிறார்.

475. ஸ்திரீகள் எல்லோரும் பகவதி தேவியின் பாகங்களேயாவர்; ஆகையால் அவர்கள் எல்லோராலும் தாய்மார்களாகக் கருதப்படவேண்டும்.

476. ஒரு பக்தன்:—"ஸ்வாமீ! மனிதன் வேதாந்தவிசாரஞ்செய்து முதலில் இந்திரியங்களை யடக்கிக்கொள்ளவேண்டியது அவசியந்தானா?"

ஸ்ரீ ராமகிருஷ்ணர்:—"நல்லது; அதுவும் ஒருமார்க்கந்தான்—விசாரமார்க்கம். பக்திமார்க்கத்திலே தன்னடக்கந்தானே யுண்டாய்விடுகிறது—அது வெகு சுலபத்திலே யுண்டாய்விடுகிறது. ஈசுவரனிடத்தில்பக்தி யொருவனுக்கு எவ்வளவுக்கெவ்வளவு அதிகரிக்கிறதோ, இந்திரியசுகம் அவ்வளவுக்கவ்வளவு ருசியற்றதாய்விடுகிறது. இஃது, எதுபோலெனில் பெற்றோர் தங்கள் குழந்தை மரித்த அன்று சிற்றின்பத்தைச்சிறிதும் நினைக்காததுபோல"

477. ஒருவன் சுத்தப்பிரஹ்மச்சர்ய விரதத்தை யநுஷ்டித்தாலொழிய, ஆத்மாவைப்பற்றிய சூட்சும உண்மைகளை யறிந்துகொள்ளுதல் முடியாது.

478. ஒருவர், "ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஏன் கிரகஸ்தாசிரமத்தை வகிக்கவில்லை?" யென்று கேட்டார்.

அதற்கு ஸ்ரீ ராமகிருஷ்ணர் மறுமொழிகூறியதாவது:—"கார்த்திகேயதேவர் ஒருநாள் தமதுநகத்தினாலே ஒருபூனையைக் கீறிவிடும்படி நேர்ந்தது. வீட்டுக்குத் திரும்பிச்சென்று பார்த்தபொழுது, அவர் தமது தாயாரின்கன்னத்திலே யொரு கீறல்குறியைக்கண்டார். உடனே அவர் தமது தாயைநோக்கி 'அம்மா! உன்னுடைய கன்னத்திலே இந்த அ

வலட்சணமானகாயம் எப்படி ஏற்பட்டது?' என்று கேட்டார். ஜகன்மாதா 'இது உன்னுடைய கையின் வேலையே— உன்னுடைய நகத்தின்கீறலே' யென்றபதிலுரைக்க, கார்த்திகேயர் ஆச்சரியப்பட்டு "நான் எப்பொழுது உன்னைக் கீறினேன்; எனக்கு நினைப்பில்லையே' என்றார். மாதா 'கண்மணியே! இன்று காலையிலே நீயொரு பூனையைக்கீற வில்லையா? இதற்குள் மறந்துவிட்டாயா?' என்றாள். கார்த்திகேயர் 'ஆம்! நான் ஒருபூனையைக்கீறினது உண்மை தான். ஆனால் அக்கீற்று உனது கன்னத்திலே எப்படி வந்தது?' என்று கேட்டார். அதற்கு மாதா 'அருங்குழந்தாய்! இவ்வுலகிலே என்னைத்தவிர ஒன்றுமேயில்லை. நானே சிருஷ்டியெல்லாம். நீஎவரையேனும் துன்புறுத்தினால் என்னைத்தான் துன்புறுத்துகிறாய்.' என்றாள். கார்த்திகேயர் இதைக்கேட்டு ஆச்சரியமடைந்தார்; ஒருபொழுதும் தாம் விவாகம்செய்துகொள்வதில்லையென்று தீர்மானித்துக்கொண்டார். ஏனென்றால், அவர்எவரைவிவாகம் செய்துகொள்வது? ஒவ்வொரு ஸ்திரீயும் அவருக்குத் தாயே. இவ்விதமாக, ஸ்திரீயின் தாய்த்தன்மையை அறிந்து அவர் விவாகம் செய்து கொள்ளாமல் இருந்துவிட்டார். நான் கார்த்திகேயர் போன்றவன். ஒவ்வொரு ஸ்திரீயையும் ஜகன்மாதாவாகவே நான் கருதுகிறேன்." என்பதே.

479. ஒரு பேய் இருந்த மரத்தினடியில் ஒரு அம்பட்டன் சென்றபொழுது "ஏழு ஜாடிகள் நிரம்பத்தங்கமிருக்

கிறது; நீ ஏற்றுக்கொள்கிறாயா?'' என்று ஒருசத்தம் கேட்டது. அம்பட்டன் சுற்றிப்பார்த்தான். அங்கு எவரும் தென்படவில்லை. ஆனால் ஏழுஜாடிகள் நிரம்பத்தங்கம் கிடைக்குமே என்ற ஆசையால் அவன் "ஆகட்டும், நான் எடுத்துக்கொள்கிறேன்'' என்று உரக்கக்கூவினான். உடனே "நீ வீட்டுக்குப்போ, அந்தஜாடிகளை உனதுவீட்டுக்கு அனுப்பிவிட்டேன்'' என்று மறுமொழி வந்தது. அம்பட்டன் அஃதுண்மைதானாவென்று பார்ப்பதற்கு வெகுவேகமாக வீட்டை நோக்கி ஓடினான். அங்கே ஜாடிகள்வைக்கப்பட்டிருந்தன. அவன் திறந்து பார்க்கவே, ஒரு ஜாடி தவிர மற்ற ஜாடிகளிலெல்லாம் நிரம்பத்தங்கம் வைக்கப்பட்டிருந்தது; அவ்வொருஜாடியில் பாதிதான் தங்கம்வைக்கப்பட்டிருந்தது. இப்பொழுது அவ்வம்பட்டனுடைய ஹிருதயத்திலேபலமான ஆசையொன்று உண்டாயிற்று. "ஏழாவதுஜாடியையும் தங்கத்தினால் நிரப்பிவிடவேண்டும்; இல்லாவிட்டால், நமக்கு உண்டாகும் சந்தோஷம் குறைந்ததே'' யென்று அவன் நினைத்தான். அதனால் அவன்தன்னுடையபொன்னாபரணங்களையும் வெள்ளியாபரணங்களையும் விற்று நாணயங்களாக்கி அந்த ஜாடிக்குள்ளேபோட்டான்; அந்த அதிரகஸ்ய ஜாடி இன்னும் முன்போலவே நிரம்பாமலே யிருந்தது. அம்பட்டனுக்குக் கோபம் உண்டாய்விட்டது; இப்பொழுது அவன் தானும்தனது குடும்பத்தாரும்பட்டினிகிடந்து சேர்க்கமுடியுமானவற்றைச்சேர்த்து அந்தஜாடியிலேபோட்டான்; ஜாடிமுன்போலவேயிருந்தது. அந்தஅம்

பட்டன் அவ்வூர் அரசனுக்கு க்ஷவரம்செய்கிறவன். ஒரு நாள் அவன் தனக்குக்கொடுக்கப்படும் சம்பளம் தனது குடும்பஜீவனத்திற்குப் போதுமானதாயில்லை யென்றும் தனக்குச சம்பளத்தைச் சிறிது அதிகப்படுத்தவேண்டு மென்றும் அரசனிடம கேட்டுக்கொண்டான் அரசனுக்கு அவ்வம்பட்டன்மீது மிகுந்தபிரியமாதலாலே, அரசன் அவ் வம்பட்டனுடைய சம்பளத்தை இரட்டிப்பாக்கினான் அம் பட்டன் அப்படியப்படியே தனது சம்பளத்தையும் வரும் படியையும் ஜாடிக்குள் போட்டுவந்தான் ஆனால் அப்பே ராசை பிடித்தஜாடி திருப்தியடையவில்லை கடைசியாக, அம்பட்டன்வீட்டுக்கு வீடுபிச்சை யெடுக்க ஆரம்பித்தான்; அவன்இப்பொழுதும் தன்னுடைய சம்பளத்தையும் வரும் படியையும் பிச்சைவருமானத்தையும் இன்னும்மற்றஎல்லா வற்றையும் அந்த ஜாடிக்குள்ளே போட்டுவந்தான் அநேக மாதங்கள்கழிந்தன லோபியும் துக்கியுமான அம்பட்டனு டைய ஸ்திதிநாளுக்குநாள் இழிவையடைந்துவந்தது. அரச ன்அம்பட்டனுடைய பரிதாபகாமான நிலைமையைப்பார்த் து ஒருநாள் "அடே அப்பா! நீஇப்பொழுது வாங்கும் சம் பளத்திலே பாதிவாங்கிக்கொண்டிருந்த பொழுது உற்சாக முள்ளவனாகவும்,திருப்தியடைந்தவனாகவும், சந்தோஷமுள் ளவனாகவும் இருந்தாய்; ஆனால் இப்பொழுது, இரட்டிப்புச் சம்பளம் வாங்கியும் கவலைநிறைந்தவனாகவும்,ஏக்கமுற்றவனா கவும் காணப்படுகின்றாய். என்ன சங்கதி? உன்னிடத்திலே ஏழுஜாடிகள்வந்திருக்கின்றனவோ?" என்றான். இஃது அர

சனுக்கு எப்படித்தெரிந்ததென்று அம்பட்டன் ஆச்சரியப்பட்டவனாய். "அரசசமுகத்திலேஇச்சமாச்சாரத்தைக்கொண்டுவந்து உரைத்ததெவர்?" என்றுகேட்டான். அரசன் "எவருக்குப்பேய் ஏழு ஜாடிகளைக் கொடுக்கின்றதோ அவருக்கு உண்டாகும் அடையாளங்களே இவை யென்பதை நீ யறியாயோ? அப்பேய் எனக்கும் அந்த ஜாடிகளைக் கொடுத்தது. ஆனால் நான் 'அது வரும்படிப் பணமா? அல்லது செலவு பணமா? இப்பணம் செலவழிக்கப்படலாமா? அல்லது சேர்த்துவைக்கமாத்திரம் படலாமா?' என்று கேட்டேன். நான் இக்கேள்வி கேட்டவுடனே, பேயானது பதிலே சொல்லாமல் ஓடிவிட்டது. அப்பணத்தை எவரும் செலவழிக்க முடியாதென்பதை நீ அறியாயோ? சேர்த்து வைக்கவேண்டுமென்ற ஆசையைத்தான் அது உண்டாக்கும். ஓடிப்போய் அப்பணத்தைத் திரும்பக்கொடுத்துவிடு" என்று சொன்னான். அம்பட்டனுக்குப் புத்தி வந்தது; பேய்பிடித்தமரத்தினருகிலே சென்று "உனது தங்கத்தை நீ எடுத்துக்கொள்" என்றான். பேய் "சரி" யென்றது. அம்பட்டன் வீட்டுக்குத் திரும்பிவந்து பார்க்கவே, அந்த ஏழுஜாடிகளும் மாயமாய் மறைந்து விட்டன; அவற்றுடனே அவ்வெளிய அம்பட்டன் அதுவரைசம்பாதித்திருந்த பணமும் போய்விட்டது. ஈசுவரபூமியிலே சிலருடைய ஸ்திதி இப்படியிருக்கிறது. உண்மையான செலவுக்கும் உண்மையான வரும்படிக்கும் வித்தியாசம் அறியாதவர்கள் தங்களிடம் இருக்கிற எல்லாவற்றையும் இழந்துவிடுகிறார்கள்.

480. அத்தியந்த அவாவே ஈசுவரதரிசனத்துக்கு மிகவும் நிச்சயமான மார்க்கம்.

மனிதனுக்குக் குற்றமற்ற குழந்தையினுடைய நம்பிக்கைபோன்றநம்பிக்கையிருக்கவேண்டும்; எனினும் இதுமாத்திரம் போதாது; குழந்தைதாயாரைப்பார்க்க விரும்புகிறபொழுது, அக்குழந்தையினிடத்து உண்டாகின்ற ஆசைபோல் ஆசையுமிருக்கவேண்டும்.

ஜடிலன் என்னும் ஒருபையன் இருந்தான். அவன்காடுகளினூடே பள்ளிக்கூடத்துக்கு மாத்திரம் போவது வழக்கம். அடிக்கடி அவன் தனிமையாயும் பயந்துகொண்டும் போவான். அவன் அதைப்பற்றித் தன்னுடைய தாயாரிடம்சொன்னான்; அவள் சொன்னதாவது:—"குழந்தாய்! என் பயப்படுகிறாய்? உனக்கு பயம்உண்டாகிறபொழுது கிருஷ்ணனைக்கூப்பிடு." என்பதே. அதற்கு அவன், "அம்மா! கிருஷ்ணன்யார்?" என்றான். தாய் "கிருஷ்ணன் உன் அண்ணனேயாவன்" என்று பதிலுரைத்தாள். அதன்பின்னர், காட்டின்வழியே தனியாய்ச்செல்லும்போது, ஜடிலன் தனக்குபயம் உண்டானவுடன் "அண்ணே கிருஷ்ணா!" என்று உரக்கக்கூப்பிட்டான்; எவரும் வரவில்லை. அவன் மறுபடியும் "அண்ணே கிருஷ்ணா! நீ எங்கிருக்கிறாய்? வந்துஎன்னைக்காக்கக்கூடாதா? எனக்கு பயமாயிருக்கிறதே" என்று உரக்கச்சொன்னான். இந்த விசுவாசமிகுந்த குழந்தையின் அபயக்குரலைக்கேட்டுவிட்டு, கிருஷ்ணன் வராமலிருக்கமுடி-

யவில்லை; கிருஷ்ணன் ஒரு சிறுபையனைப்போல் வடிவெடுத்துத்தோன்றி "உனது அண்ணனாகிய நான் இதோஇருக்கிறேன். நீஏன்பயப்படுகிறாய்? என்னுடன்வா; நான்உன்னைப் பள்ளிக்கூடத்திற்கு இட்டுச்செல்கிறேன்" என்று சொல்லி அப்பையனைப் பள்ளிக்கூடத்திலே கொண்டுபோய் விட்டுவிட்டு, அவனை நோக்கிக் கூறினதாவது:—"நீ என்னைக் கூப்பிடும்பொழுதெல்லாம் நான் உன்னிடம் வருகிறேன் பயப்படாதே." என்பதே.

உண்மையவாவுக்கும் உண்மைநம்பிக்கைக்கும் உள்ள சக்தி இத்தகையது.

481. ஒரு காலத்திலே யசோதையானவள் தன்னுடைய கோபாலனைப்பற்றி யாதொரு சமாச்சாரமும் கிடைக்காததினாலே, ராதையினிடத்துக்குவந்து "கோபாலனைப் பற்றி ஏதேனும் சமாச்சாரம்தெரியுமா?" என்றுகேட்டாள். அப்பொழுது ராதை மெய்ம்மறந்து நிஷ்டையிலே யிருந்தாள். யசோதையின்கேள்வி அவளுடையகாதிலே நுழையவில்லை. அவள் நிஷ்டைதெளிந்து விழித்தபின்னர், தன்முன்னே யசோதை உட்கார்ந்திருப்பதைக்கண்ணுற்றுத்தலைவணங்கி நமஸ்கரித்து, வந்தகாரணத்தைக் கேட்டுத் தெரிந்துகொண்டு "அம்மா! கண்களைமூடி, கோபாலனுடைய வடிவத்தைத்தியானம்செய்; நீ அவரைப் பார்ப்பாய்" என்றாள். யசோதை கண்களை மூடினவுடனே, ஞானபாவமேயாயிருந்த ராதை தனது ஞானசக்தியினாலே யசோதையை மூடி

விட்டாள்; யசோதை அந்த பிரக்ஞாதீத ஸ்திதியிலே தன்னுடைய கோபாலனைக் கண்டாள். பின்னர் அவள் ராதையினிடத்திலே "அம்மா! என்னுடைய அன்பு மிகுந்த கோபாலனை நான் கண்களை மூடும்பொழுதெல்லாம் பார்க்கும்படி அருள்புரியவேண்டும்" என்று ஒருவரம் கேட்டுக்கொண்டாள்.

482. நாம் ஏன் ஜகன்மாதாவைப்பார்க்க முடிகிறதில்லை? அவள் திரைக்குப்பின்னே நின்றுகொண்டு சகல காரியங்களையும் மேல்பார்த்துக்கொண்டிருக்கும் ஓர் உயர்குலஸ்திரீபோன்றிருக்கிறாள். அவள் எல்லோரையும் பார்த்தல் முடியும்; ஆனால் ஒருவரும் அவளைப் பார்த்தல்முடியாது. அவளிடத்திலே பக்திமிகுந்த புத்திரர்கள் மாத்திரம் மாயையாகிற திரையை நீக்கி அவளருகில்சென்று அவளைப் பார்த்தல் கூடும்.

483. ஒவ்வொருவஸ்துவும் நாராயணனே யென்று ராமகிருஷ்ணர் கூறுவது வழக்கம்; மனிதன் நாராயணனே, மிருகமும் நாராயணனே, மகாத்மாவும் நாராயணனே, மூடனும் நாராயணனே, இங்கு உள்ளவையெல்லாம் நாராயணனே; நாராயணன் பற்பல லட்சணங்கள் வகித்து லீலைகள் புரிகிறார். எல்லாவஸ்துக்களும் அவருடைய வெவ்வேறு வடிவங்களும் அவருடைய மகிமையின் வெவ்வேறு தோற்றங்களுமாம்.

484. அத்வைதத்தைப்பற்றி நீபேச ஆரம்பித்தவுடனே யே, துவைதம் என்று ஒன்று இருப்பதாகக் கருதிக்கொள்ளவேண்டியிருக்கிறது. 'அகண்டம்' என்று பேசும்பொழுது 'கண்டம்' என்றுஏற்படுகிறது. உன்னுடைய 'அகண்டத்துவம்' சமாதியில் அநுபவபூர்வமாக அறியப்படுகிறவரையில் கண்டத்துவத்துடனே அந்யோந்ய சம்பந்தப்பட்டதாம். உள்ளபடியே அதை உன்னால் கருதமுடியாது. ஏனென்றால் அப்படிச் செய்யும்பொழுது உனது சொந்தலட்சணமாகிய அந்நிய பதார்த்தம் ஒன்றினாலே, நீ மேல்பூச்சுப் பூச வேண்டியிருக்கிறது.

485. ஓரிடமானது உயர்ந்த சுவரினாலே சூழப்பட்டிருந்தது. அவ்விடம் எப்பேர்ப்பட்டதென்று வெளியேயுள்ள மனிதருக்குத் தெரியாது. ஒரு சமயத்தில் நான்கு மனிதர்கள் ஒருஏணிமூலமாகச்சுவர்மீதேறி உள்ளேஎன்ன இருக்கிறது என்று கண்டுபிடிக்கத்தீர்மானித்தார்கள். முதலாமவன் சுவர் உச்சியிலேறினவுடனே "ஹாஹா" என்றுசப்தமிட்டுக்கொண்டே உள்ளே குதித்துவிட்டான். இரண்டாமவனும் மேலேறினவுடனே அதுபோன்றே உரக்கச்சிரித்துவிட்டு உள்ளே குதித்துவிட்டான்; மூன்றாமவனும் அப்படியே குதித்துவிட்டான். நான்காமவன் சுவர்மீதேறிப்பார்த்தான்; அங்கே அழகியஒருதோட்டத்தையும், அத்தோட்டத்து விருக்ஷங்களில் அதியற்புத ருசியுள்ள கனிகள் நிறைந்து குலைகுலையாய்த்தொங்குவதையும் கண்டான். அவ்வாறு பார்த்தவுடன் உள்ளேகுதித்து அக்காக்ஷியைக் கண்ணாரக்

கண்டு களித்துப் பழங்களைப் புசித்துச் சந்தோஷிப்பதற்கு அவனுக்கு ஆசையுண்டாயிற்று; ஆனாலும் அவன் அவ்வாசைக்கு ஆளாகாமல், ஏணியின்வழியே கீழேயிறங்கி அவ்வழகிய தோட்டத்தைப்பற்றி வெளியே யுள்ளவர்களுக்கெல்லாம் கூறினான். பிரஹ்மவஸ்து சுவரினால் சூழப்பட்ட அத்தோட்டம் போன்றதாம். அதைப் பார்க்கிறவன் தன்னுடைய இருப்பை மறந்து அதன் அகண்டத்துவத்திலே ஐக்கியமாய்விட வேண்டுமென்று அதனிடத்தே குதித்துவிடுகிறான். உலகத்துப் பரிசுத்தபுருஷர்களும், முக்தாத்மாக்களும் அப்படித்தான்செய்கிறார்கள். ஆனால் மானிடவர்க்கத்துக்கு ரக்ஷகர்களாய் வருகிறவர்கள் ஈசுவரனைத் தரிசித்தும் அந்ததிவ்விய தரிசனத்தினாலுண்டாகும் ஆநந்தத்தைப்பிறருக்கும் பங்கிடக்கருதி, மோட்சமடைவதற்குக்கிடைத்த சந்தர்ப்பத்தை மறுத்துவிட்டு மானிடவர்க்கத்தை அதன்லட்சியத்தினிடத்திலே இட்டுச்செல்வதற்காகப்போதிக்கும்பொருட்டு மறுபடியும் பிறந்து துன்பங்களை மனப்பூர்வமாக அநுபவிக்கிறார்கள்.

486. 'கீதா' என்ற வார்த்தையை அநேகந்தரம்வேகமாக "கீதா-கீதா-கீதா-கீதா" என்று திருப்பித்திருப்பிச்சொல்; அப்போது உண்டாகும் சப்தமானது 'தாகீ தாகீ' அதாவது, "தியாகம்செய் தியாகம் செய்" என்று உண்டாகிறது. ஆதலால் இதையுணர்ந்து ஏ! உலகபந்தத்துக்குட்பட்ட மனிதர்களே! எல்லாவற்றையும் துறந்துவிட்டு ஈசுவரனிடத்

தே உங்கள் ஹிருதயங்களை திறத்துங்கள்; துறந்துவிடுங்கள்.

487. பிரசித்திபெற்றவொரு பிரசங்கி (அவர் பெயரைக் கூற இஷ்டமில்லை) ஒருசமயத்தில் ஒருஹரிசபையிலே பிரசங்கம்செய்துகொண்டிருந்தார். அப்பிரசங்கப் போக்கிலே அவர் "ஈசுவரன் சிறிதும் ரஸம் (இனிமை) அற்றவர்; நமது ஹிருதயத்து இனிமையினாலே அவரைநிரப்பி இனிமையானவ ராக்கவேண்டும்" என்று சொன்னார். ரஸமென்பதினாலே ஆநந்தம், அன்பு முதலிய பலதிவ்ய லட்சணங்களையும் அவர் ஒருவேளை குறிப்பிட்டிருக்கலாம். நான் இதைக் கேட்டபொழுது, 'எனது மாமனுடைய மாட்டுத்தொழுவம் நிரம்ப ஏராளமான குதிரைகள் கட்டப்பட்டிருக்கின்றன'வென்று ஒரு சமயத்தில் கூறிய ஒரு பையனுடைய கதை ஞாபகத்துக்கு வந்தது. மாட்டுத்தொழுவங்கள் குதிரைகள் கட்டப்படும் இடங்களல்லவென்று அறிந்தவர்கள் தெரிந்துகொள்வார்கள். ஆகையால் அப்பையன் ஒரு பொய்சொல்லியிருக்கவேண்டும்—அவனுடைய மாமனுக்குக் குதிரைகளேயில்லை.

இதுபோல ஈசுவரனிடத்திலேரசமில்லையென்பது மூடத்தனம்; பிரசங்கம் செய்தவர் தாம்சொன்னதின்னதென்பதைத்தாமேஅறியாதவரென்பதும்,நித்தியஅன்புக்கும் ஞானத்துக்கும் ஆநந்தத்துக்கும் உற்பத்தி ஸ்தானமாகிய பர

மாத்துமவஸ்துவை ஒருபொழுதும் அநுபவத்தில் அறியாதவரென்பதும் இதனால் விளங்குகின்றன.

488. வேகாதஒருமாவுருண்டையை,கொதிக்கின்ற நெய்யினிடத்திலே போட்டால், அது முதலில் ஒருவித சப்தம் உண்டுபண்ண ஆரம்பிக்கும். ஆனால் அது வேகவேக, சப்தம் குறைந்துவிடுகிறது; முழுதும் வெந்துவிட்டால் சப்தம் அடியோடு அடங்கிவிடுகிறது. இதுபோல ஒருமனிதனுக்கு அறிவுகொஞ்சமாயிருக்குமளவும், அவன் தர்க்கித்துக்கொண்டும், பிரசங்கம்பண்ணிக்கொண்டும், போதித்துக்கொண்டும் செல்கிறான். ஆனால் உண்மைஞானம் பரிபூரணமாகக் கிடைத்துவிட்டால், அவன் இந்தவீண் தர்க்கங்களையெல்லாம் விட்டுவிடுகிறான்.

489. ஞானமானது திடீரென்றுகிடைக்கக்கூடியதன்று.

490. சிலவேளைகளில்தானே நமது ஹிருதயங்களில்சமாதானம் உண்டாகின்றது; ஆனால் ஏன் அதுநெடுநேரம் இருக்கிறதில்லை? எனின்,

மூங்கிலை எரித்தலினால் உண்டாகும் அக்கினி இடைவிடாது ஊதப்பட்டாலொழிய நிற்காது. இதுபோலத்திட வைராக்கிய மில்லாத நம்மிடமுண்டாகும் ஞானக்கினியுமாம். இதனை எப்பொழுதும் வைத்திருப்பதற்கு இடைவிடாத முயற்சி அவசியமாம்.

491. எல்லாவற்றையும் விழுங்கியிருப்பதுமாயையா அல்லது * மேயே யா.

492. உலகுமுழுதும் பாபத்திலே அழுந்தியிருப்பதற்குக் காரணம் ஸ்திரீயும் தனமுமே. நீ ஸ்திரீயைஜகன்மாதாவின் தோற்றமேயென்று கருதுகிறபொழுது, ஸ்திரீயினிடத்துள்ள விஷம் நீக்கப்பட்டுவிடுகிறது.

493. அகங்காரத்துடனே கடுமையாகச்செய்யும் போராட்டமுறைமையினலும், ஆத்மஞானத்தை யடையவேண்டிஊக்கத்துடன் செய்யும் வித்தியாவிசாரணையினலும் சமாதிநிலைமையடையப்படுகிறபொழுது, அகங்காரமானது தனது கூட்டத்துடனே மறைந்துவிடுகிறது. ஆனல் சமாதியடைவது மிகவும்கஷ்டம். அகங்காரம் பிடிவாதகுணமுள்ளது. நாம் இவ்வுலகில் மறுபடியும் மறுபடியும் பிறக்கின்றதற்கு அகங்காரமே காரணம்.

494. கீர்த்தியை நாடுகிறவர்கள் பிரமைக்குட்பட்டவர்கள். எல்லாவிஷயங்களுக்கும் மகாகர்த்தாவாகிய பரமாத்மாவினல் எல்லாம் நடைபெறுகின்றனவென்பதையும், எல்லாப்பெருமையும் ஈசுவரனுக்கே உரியது, மற்றெவருக்குமன்று என்பதையும் அவர்கள் மறந்துவிடுகிறார்கள். "ஏ ஈசுவரா! அது நீயே அதுநீயே" என்று எப்பொழுதும்ஞானிகள் கூறுகிறார்கள்; ஆனல் அஞ்ஞானிகளும் பிரமைக்குட்

* மேயே - என்பது வங்காளி பாஷையில் ஸ்திரீ.

பட்டவர்களும் "அதுதானே, அதுதானே," என்று கூறு கிறார்கள்.

495. "நான் ஈசுவரனுக்குப்பணியாளன்" என்று உறுதி யுடன்கூறுகின்ற அகம்(பக்தனுடையஅகம்) அதாவது வித் யா அகம், "பரிபக்குவமடைந்தஅகம்" எனப்படுகிறது.

496. 'துஷ்டத்தனமுள்ள 'நான்' எனப்படுவது எது?

"அவர்கள் என்னை அறியார்களா? எனக்கு எதேஷ் டமாகப்பணம் இருக்கிறது. என்னைப்போன்ற தனவந்தன் எவன்? என்னைப்பார்க்கிலும் மிஞ்சத்துணிகிறவன்எவன்?" என்பதேயாம்.

497. ஸ்ரீ ராமகிருஷ்ணர் பேசவும் முடியாதபடி, ஆகாரம் விழுங்கவும்முடியாதபடி தொண்டையிலே ஒருவியாதியுண் டாகிஅவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்தபொழுது அவர் "நா ன்இப்பொழுதுஎத்தனையோவாய்களின் மூலமாகப் பேசிக் கொண்டும், உண்டுகொண்டும் இருக்கிறேன். எல்லா ஆத் மாக்களினுடையவும் ஆத்மாநானே. எனக்கு எண்ணற்ற வாய்கள் உண்டு. அகண்ட ஆத்மாவாகிய நான் எங்கோ தொண்டையில் ஒருபுண்ணையுடைய மனுஷியத் தோலினால் மூடப்பட்டிருக்கிறேன். சரீரம் வியாதியினால் பிடிக்கப்பட் டால், அந்தவியாதி மனத்தைபாதிக்கின்றது. ஒருவன்வெந் நீரினால்சுடப்பட்டால் அவன் 'இந்த தண்ணீர் என்னைச்சுட் டுவிட்டது' என்றுசொல்லுகிறான்; ஆனால் உண்மை யாதெ

ணில், உஷ்ணம் சுடுகின்றதேயொழிய, தண்ணீரன்று. துன்பமெல்லாம் சரீரத்தில் இருக்கின்றது, வியாதியெல்லாம் சரீரத்தில் இருக்கின்றது; ஆனால் ஆத்மாவானது துன்பத்துக்கும் வியாதிக்கும் அப்பால் உள்ளது.

498. கோபிகைகளின்நிஷ்டை ஆச்சரியகரமானது! கிருஷ்ணன் மதுராபுரியிலிருந்தபொழுது, கோபிகைகள்போய் வாசல்காப்போரிடத்திலே கெஞ்சிக்கதறிக்கேட்டுக்கொண்டு கொலுமண்டபத்துக்குள்ளே நுழைந்து கிருஷ்ணனைக்கண்டார்கள். அப்பொழுது கிருஷ்ணன் தலையில் கிரீடம் விளங்க ராஜஉடைதரித்து சிம்ஹாசனத்திலேகெம்பீரமாக வீற்றிருந்தார். கோபிகைகள் அவரைப்பார்த்து பிரமித்து தலைகுனிந்து "கிரீடாதிபதியாகிய இவர்யார்? நாம் இவரிடத்திலே பேசினால்கிருஷ்ணனிடத்திலேயுள்ள அன்புக்குக்குறைவு நேரிட்டுவிடும். மஞ்சள் உடைஉடுத்து, மயில்தோகை தரித்து, மங்கையர்களை மயக்குகின்ற எங்கள் அன்பேயுருவாம் ஆத்மநாதனாகிய ஸ்ரீகிருஷ்ணன் எங்கே?" யென்று ஒருவருக்கொருவர் மெல்லிய குரலில் பேசத்தொடங்கினார்கள். ஆ! கோபிகைகளுடைய ஏகநிஷ்டையைப் பார்த்தீர்களா?.

499. ஒரு குரு ஒருகாலத்திலே ஒரு அரசனுக்குப்ரபஞ்சம்முழுதும் பிரஹ்மவஸ்துவேயென்று கூறுகின்ற உத்தமமான அத்வைதக் கொள்கையைப்போதித்தார். இஃது அரசனுக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்தது; அவன் அ

ந்தப்புரம் சென்று தனது ராணியினிடத்திலே "ராணிக்கும் ராணியினுடைய பணிப்பெண்ணுக்கும் வித்தியாசமில்லை. ஆகையால் பணிப்பெண் இனிமேல் எனது ராணியாயிருக்கட்டும்" என்றான். ராணிக்கு அரசனுடைய இந்தப் பைத்தியக்காரப்பேச்சு ஆச்சரியத்தை யளித்தது. அவள் குருவுக்கு ஆள் அனுப்பி அவருடைய பாதங்களிலேவிழுந்து "ஸ்வாமி! உங்கள் போதனைகளினால் உண்டாம் கெடுதலான பலன்களைப்பாருங்கள்." என்று சொல்லி நடந்ததையெல்லாம் கூறினாள். குரு, ராணிக்குஆறுதல்சொல்லி, "இன்றையதினம் அரசனுக்குச் சாப்பாடு போடும்பொழுது, சோற்றுடனே கூட இலையில் சிறிது சாணியையும் பரிமாறு" என்று கூறியனுப்பினார். சாப்பாட்டுநேரமாயிற்று; குருவும் அரசனும் ஒரேபந்தியில் உண்பதற்கு உட்கார்ந்தார்கள். அரசன் தன்னுடைய இலையில் சாணி பரிமாறப்படுவதைப் பார்த்தவுடனே அவனுக்கு எவ்வளவோகோபமுண்டாயிற்று. குருவானவர் அரசனுடைய கோபத்தை அமைதியுடனே பார்த்து "அரசரே! தாம அத்வைதஞான சம்பந்நராய்விட்டீரே; சாணிக்கும் சோற்றுக்கும் வித்தியாசத்தை ஏன் பார்க்கிறீர்?" என்று கேட்க, அரசன் இன்னும் மிகுந்த கோபமுடையவனாகி "அத்வைதி யென்று கர்வம் பாராட்டிக்கொள்கின்ற நீயேஇந்தச்சாணியைத்தின்னு, பார்க்கலாம்" என்றான். குரு "நல்லது" என்று சொல்லி, உடனே ஒரு பன்றியாகமாறி, மிகுந்த சந்தோஷத்துடனே சாணியைத் தின்றுவிட்டு, மறுபடியும் மானிடவடிவம் எடுத்

துக்கொண்டார். அரசனுக்கு அவமானம்மிகுந்துவிட்டது; அவன் தன்னுடைய ராணியினிடத்திலே முன்கூறிய மாதிரி மறுபடியும் கூறவில்லை.

500. ஒருசமயத்தில் ஸ்ரீகிருஷ்ணருடைய பிராணநண்பனாகிய அர்ச்சுனனுடைய ஹிருதயத்திலே கர்வம் நுழைந்துகொண்டது; தனக்கு நண்பரும் நாதருமாகிய ஸ்ரீகிருஷ்ணரிடத்திலே பக்திசெலுத்துபவருள் தன்னை மிஞ்சின மகாபக்தன் எவனுமேயில்லையென்று அவன் நினைத்துக்கொண்டான். சர்வஞ்ஞராகிய ஸ்ரீகிருஷ்ணர் அர்ச்சுனனுடைய மனத்தை யறிந்துகொண்டு, ஒருநாள் உல்லாசமாகஉலாவி வரலாமென்றுகூறி அவனைக்கூட்டிக்கொண்டு வெளியிற்சென்றார். சிறிதுநேரம்செல்வதற்குள்ளாக அர்ச்சுனன் ஒருபிராஹ்மணனைக் கண்டான். அந்தபிராஹ்மணனுடைய இடைக்கச்சையிலே ஒருகூரிய கத்திதொங்கிக்கொண்டிருந்தது; அவன் உலர்ந்தபுல்லைத்தின்றுகொண்டிருந்தான். உடனே அர்ச்சுனன் அவனைவிஷ்ணுபக்தர்களில் ஒருவன் என்று அறிந்துகொண்டான்; எந்தஜீவராசிக்கும் ஹிம்சைசெய்யாதிருப்பதே விஷ்ணுபக்தனுடைய தர்மம்; விஷ்ணுபக்தன் புல்லுக்குக்கூட ஜீவன் உண்டென்றுகருதி, பச்சைப்புல்லைத் தின்னுமல், உலர்ந்த உயிரற்ற புல்லையே தின்று காலம் கழிப்பான். ஆனால் அர்ச்சுனன் அந்த பிராஹ்மணனுடைய இடையிலே கத்திதொங்குவதைக்கண்டு, ஆச்சரியமடைந்து, அதற்குப்பொருள் தெரியாமல் விழித்தான்.

உடனே இதை அறிந்துகொள்ள முடியாத அர்ச்சுனன் கிருஷ்ணனை நோக்கி "இஃது என்ன? வளர்கின்ற புல்லைக்கூட இம்சை செய்யக்கூடாதென்ற கருத்துடனே உலர்ந்த புல்லைத்தின்றுகொண்டிருக்கும் இந்த மனிதன், தன்னுடனே கொல்லும் கருவியாகிய கத்தியைக்கொண்டு செல்வதென்ன? " என்று கேட்டான். "அவனையே கேட்பாய்" என்று சொன்னார் ஸ்ரீகிருஷ்ணர். அப்பொழுது அர்ச்சுனன் அந்த பிராஹ்மணனண்டையில் சென்று "ஐயா! ஸ்வாமீ! தாங்கள் எந்தஜீவராசிக்கும் இம்சைசெய்யாதவராய் உலர்ந்தபுல்லைத்தின்றுஉயிர்வாழ்கிறீரே. அப்படியிருக்க; இந்தக்கத்தியைஎன்னப்பொழுதும் உம்முடனேயேவைத்துக்கொண்டிருக்கிறீர்" என்று கேட்க, அந்த பிராஹ்மணன் "நான்குபெயர்களை நான் தண்டிக்க விரும்புகிறேன் அவர்களைக் காணும்படியான சந்தர்ப்பம் கிடைக்கவில்லை." என்றான். அர்ச்சுனன், "அவர்கள்யார்?" என்றான். பிராஹ்மணன் "முதலாமவன் அந்தக்கிழோனாகிய நாரதனும்" எனவே, அர்ச்சுனன் "ஏன்? அவர்என்ன தீமைசெய்தார்?" என்றுகேட்டான். அந்த பிராஹ்மணன் "ஏனென்றுகேட்கிறாய்? அவனுடையபோக்கிரித்தனத்தைப்பார், எப்பொழுதும் பாட்டுப்பாடி வீணைவாசித்து பஜனைசெய்து என் பிரபுவை அரைக்கணமேனும் தூங்கவிடாமல் தொந்தரவுசெய்கிறான். எம்பெருமானுடைய சௌக்கியத்தைப்பற்றிச் சிறிதும்கவனிப்பதில்லை. இரவும்பகலும், வேண்டும்பொழுதும்வேண்டாதபொழுதும் அவன் தன்னுடைய பாட்டுக்களினாலும்பஜனை

களிலும் ஈசுவரனைக் கலக்கப்படுத்திக்கொண்டேயிருக்கிறான்." என்று சொன்னான். அதன்மேல் அர்ச்சுனன் "இரண்டாவதுபெயர் யார்?" என்று கேட்க, பிராஹ்மணன் "திரௌபதை" யென்றான். அர்ச்சுனன், "அவள் செய்த குற்றமென்ன?" என்றான். பிராஹ்மணன், "அந்த ஸ்திரீயினுடைய போக்கிரித்தனத்தைப்பார்: எனது ஆத்மநாதன் அன்னமுண்ணச்சென்ற சமயத்தில் கூப்பிட்டாள்; அவர் சாப்பாட்டைவிட்டு எழுந்திருந்து, துருவாசருடைய சாபத்தினின்றும் பாண்டவர்களை ரட்சிப்பதற்காககாமியவனம் செல்லநேர்ந்தது; அதுமாத்திரமா? என்னுடையபிரபுவுக்கு அவள்தான் உண்ட சேஷத்தைக் கொடுத்த மகாகர்வி" என்றான். பின்னர் அர்ச்சுனன் "மூன்றாமவர்யார்?" என்றான். பிராஹ்மணன்: "ஈவிரக்கமற்ற பிரஹ்லாதன். அவனுக்காக எனது பிரபு கொதிக்கின்ற எண்ணெய்க்கொப்பறைக்குள்ளே நுழையநேர்ந்தது; யானையின் கால்களிலே மிதிபடல் வேண்டியிருந்தது; ஒரு வைரத்தூணினுள்ளேயிருந்து பிளந்துகொண்டு வெளியேவரல்வேண்டியிருந்தது." என்றான். பிறகு "நான்காமவர்யார்?" என்று அர்ச்சுனன் கேட்டான். அதற்குபிராமணன்:"அந்த இழிந்தோனாகிய அர்ச்சுனனே" என்ன, "அர்ச்சுனன்: "ஏன்? அவன் என்ன குற்றம் செய்தான்" என்றான்." பிராஹ்மணன் "அவனுடைய துஷ்டத்தனம்தெரியுமா? அவன் என்னுடைய பிரபுவைகுருக்ஷேத்திரமகாயுத்தத்திலேதன்னுடைய ரதத்திலே சாரதியாயிருக்கும்படிசெய்தான்." என்றான். அந்த எளிய பிராஹ்மணனு

டையபக்தியும் சிரத்தையும் அர்ச்சுனனுக்குஆச்சரியத்தை உண்டாக்கின. அந்தநிமிஷமுதல் அர்ச்சுனன் தனதுகர்வத்தையெல்லாம்விட்டுவிட்டு ஈசுவரனிடத்திலே உண்மைப்பக்தனானன்.

501. ஒருசமயத்திலே ஒருசாது தமது சிஷ்யனுக்கு 'நான்யார்?' என்பதைப்பற்றியுள்ள ஞானத்தை யுபதேசிக்கக் கருதி அவனையொரு பெரிய அழகியதோட்டத்திலேவிட்டுவிட்டுச்சென்று, சின்னாட்கள் கழித்துத்திரும்பிவந்து அவனைநோக்கி, "புத்திரா! உனக்கு ஏதேனும்தேவையா?" என்று கேட்டார். சிஷியன் 'ஆம்' என்று கூறவே, அவர் அவனிடத்திலே கல்யாணி யென்ற பெயருடைய ஒரு ஸ்திரியை விட்டுவிட்டு, மச்சமாம்சாதிகளைத் தாராளமாக உண்ணும்படி போதித்துச்சென்றார். பின்னர் நெடுநாட்கள் கழித்து அவர் மறுபடியும் வந்து முன்கேட்ட கேள்வியையே அவனிடம் கேட்டார். இந்தத் தடவை, சிஷ்யன் "அநேக வந்தனம்; எனக்கு ஒன்றும் தேவையில்லை" யென்றான். அப்பொழுது அந்தச்சாது அவனையும் ஸ்திரீயையும் தம்மிடம் கூப்பிட்டு, கலியாணியினுடையகைகளை அவனுக்குக் காட்டி "இவையென்ன? இவற்றின் விவரத்தை உன்னால் சொல்லக்கூடுமா?" என்று சிஷ்யனைக்கேட்க, அவன் "கலியாணியினுடைய கைகள்" என்றான்.

இப்படியே அவர் ஒவ்வொரு அவயவத்தையும்கேட்டுக்கொண்டுபோனார். சிஷியன் ஒவ்வொன்றையும் சொல்லிக்

கொண்டே போனன். அப்போது உடனே சிஷியனுடைய மனத்திலே ஒரு கருத்து உண்டாயிற்று. அதாவது: "நான் கலியாணியினுடையகாது, கலியாணியினுடைய மூக்குஎன்று எல்லாவற்றையும்பற்றிச்சொல்லிக்கொண்டிருக்கிறேன். அப்படியாயின் இந்தக்கலியாணி எங்கே?" என்பதே. இவ்வாறுகவேபிரமித்துப்போய் அவன் தனது குருவைநோக்கி "இந்தக்கண்கள் காதுகள் முதலியவற்றுக்குச் சொந்தக்காரியானகலியாணி என்பவள்யார்?" என்று ஒரு கேள்வி கேட்டான்.

சாது:—"இந்தக் கலியாணியென்பது யார்? என்றுநீ அறியவிரும்பினல், என்னுடன்வா: நானுனக்கு உபதேசிக்கிறேன்" என்று கூறிக் கடைசியாக அவனுக்கு இரகசியத்தை வெளிப்படுத்தினர்.

502. முன்னாட்களிலே, ஐயபுரத்துக்கோவிந்தஸ்வாமிக்ஷேத்திரத்துக் குருக்கள்மார்களஒருபொழுதும் விவாகம் செய்துகொள்வதில்லை. அவர்கள் மகா ஆத்மீகபலம்வாய்ந்தவர்களாயிருந்தார்கள். ஒருசமயத்திலேஅரசன் அவர்களையிட்டுவரும்படி ஆளனுப்பினன்; ஆனலவர்கள் போகாமல் "அரசனை எங்களிடம்வரச்சொல்" என்று அந்தஆளிடம்சொல்லிவிட்டார்கள். பின்னர் அவர்களுக்குவிவாகமாயிற்று. அதன் மேலவர்களை யிட்டுவரும்படி ஆளனுப்பவேண்டியஅவசியமேஅரசனுக்கு ஏற்படவில்லை. அவர்கள் தாங்களாகவேஅரசனிடம்சென்று "மகாராஜரே! நாங்கள்உங்களுக்கு ஆசிகூற

வந்திருக்கிறோம். இதோ, க்ஷேத்திரத்திலிருந்து பிரசாதங்கள்கொண்டுவந்திருக்கிறோம்; தயவுசெய்து இவற்றை ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று மற்றும் சிலவார்த்தைகளும் கூற ஆரம்பித்தார்கள். அவர்களுக்கு வேறுவழியில்லை. ஐயோபாபம்! என்னசெய்வார்கள்! வீடுகட்டவேண்டிவந்தது; அன்னப்பிராசனச்சடங்கு நடத்தவேண்டிவந்தது; தங்கள் பெண்களை விவாகம்செய்துகொடுக்கவேண்டிவந்தது. இவற்றிற்கெல்லாம் பணம்வேண்டுமே; என்னசெய்வார்கள்? இக்காரணங்களாலேயே அவர்கள் இவ்வாறு கூறினார்கள்.

503. ஒருஏழை, வேலை கிடைக்காதுகஷ்டப்பட்டுக்கொண்டிருந்தான். இவன் ஒரு தொழிற்சாலைக் காரியஸ்தரிடம் தனக்கு ஒருவேலைகொடுக்கும்படி அவரை வேண்டிக்கொண்டு தினந்தோறும் சென்று வெகுநேரங் காத்துக்கொண்டிருந்துவந்தான்; தினந்தோறும் அந்தக் காரியஸ்தர் "நீ நாளைக்குவா" "அடிக்கடிவந்துஎன்னைக்கண்டுகொண்டிரு" என்றும்மற்றுஞ்சிலவிதமாகவும் பதில்சொல்லி யனுப்பிவந்தார். இவ்விதமாக அனேகநாட்கள்சென்றன. ஒருநாள் அவ்வேழைதனது நண்பர்களுள் ஒருவனிடத்தில் தன்னுடைய விதியைநொந்து வருத்தப்பட்டுக்கொண்டிருந்தான். அந்த நண்பனுடனே "நீ என்னபுத்தியற்றவனாயிருக்கிறாய்! நீ ஏன்வீணாக அவன்வீட்டுக்குநடந்துநடந்து காலைப்புண்ணாக்கிக்கொண்டாய். சுந்தரியினிடத்திலேஓடிப்போய்அவளைக் கெஞ்சிக் கேட்டுக்கொள். கட்டாயம் உனக்கு வேலைகிடை

க்கும்'' என்றான். அவ்வெளியவன் ஆச்சரியமடைந்து 'அப்படியானால் இதோ ஓடுகிறேன்' என்றுசொன்னான். சுந்தரியென்பவள் அந்தக் காரியஸ்தருடைய ஆசைநாயகி. அந்த ஏழை அவளிடம் சென்று, "அம்மா தாயே! நான் வறுமையினால் பீடிக்கப்பட்டு மிகவும் கஷ்டப்படுகிறேன்; நீதான் என்னைக் காப்பாற்றவேண்டும். நான் பிராஹ்மணன்; எனக்குப்பிழைப்புக்குவழியில்லை. தாயே! நெடுங்காலமாக நான் ஒரு வேலையுமில்லாமலிருக்கிறேன். எனதுமனைவியும் மக்களும் பட்டினி கிடக்கிறார்கள். நீ ஒருவார்த்தை சொன்னால் எனக்குவேலைகிடைக்கும்'' என்றான். அப்பொழுது, சுந்தரி மிகுந்த பரிதாபமுடையவளாகி, "ஐயோ! பாபம். பிராஹ்மணன் இந்தக்கஷ்டஸ்திதியிலிருக்கிறானே'' என்று கருதி "நான் எவரிடத்தில் கூறினால் உனக்குவேலை கிடைக்கு''மென்று அவனைக்கேட்டாள். "எனக்காகத்தாங்கள்தொழிற்சாலைகாரியஸ்தரிடம்சொன்னால், எனக்கு ஏதேனும்வேலைகிடைப்பதுநிச்சயம்'' என்றான்பிராஹ்மணன். அன்றிரவேகாரியஸ்தரிடத்தில்சிபார்சை செய்வதாகச் சுந்தரி பிராஹ்மணனிடத்தில்வாக்குஅளித்தாள். ஆ!விடிந்தது, பிராமணனுக்குஆள்வந்துவிட்டது அன்றுமுதல் அந்தபிராஹ்மணன் ஆபீசுக்குவரவேண்டுமென்ற உத்தரவுடன். அந்தக் காரியஸ்தர் நமது தலைமை யுத்தியோகஸ்தனுக்கு "ஐயா! இவர்உயர்ந்த யோக்கியதைகளுள்ளவர்; இவரைவேலைக்கு வைத்துக்கொண்டால், நமது ஆபீசுக்கு நன்மைவிளையுமென்றுகருதி, நான் இங்கே இவருக்கு ஒருவேலைகொடுத்திரு

க்கிறேன்'' என்று எழுதி பிராஹ்மணனுக்குகிபார்சைசெய் தார். ஸ்திரீமயக்கம் இத்தகையது. உலகுமுழுதும் காமினி யிடத்தும் காஞ்சனத்திடத்தும் பைத்தியம் பிடித்திருக் கிறது.

504. ஒரு சமயத்திலே ஒரு தனவந்தனுடையவேலைக்கா ரன் தனது எஜமானனுடைய வீட்டுக்குவந்து மிகுந்த பய பக்தியுடனும் வணக்க ஒடுக்கத்துடனும் ஒரு மூலையில் நின் றான். அவனுடைய கையிலே துணிகொண்டு மூடிய ஏதோ இருந்தது. எஜமானன், அவனைநோக்கி "நல்லது;உனது கை யிலேஎன்னஇருக்கிறது?" என்றுகேட்டான்.வேலைக்காரன் துணியைத்திறந்து ஒரு அழகியஆப்பிள்பழத்தையெடுத்துமி குந்த தாழ்மையோடு தனது எஜமானன் முன்வைத்தான்; எஜமானன் அதைத் தின்னவேண்டுமென்பதே அவனுக்கு உள்ளேயுள்ள ஆசை. வேலைக்காரன் கொண்டுவந்தது மிக வும் அற்பவஸ்துவேயாயினும், எஜமானன் வேலைக்காரனு டைய அன்பைக்கண்டு ஆநந்தித்து, மிகுந்த சந்தோஷத்து டனே, "ஆ! என்ன நேர்த்தியான பழம் இது! இதைநீ எங் கே வாங்கினாய்?" என்றுஉபசாரவார்த்தைகள்கூறினான். இப் படியே ஈசுவரனும் பக்தனுடைய ஹிருதயத்துக்குள்ளே நு ழைந்து பாக்கிறார். அவருடையமகிமைகள் அநந்தம்; ஆயி னும் அவர்பக்திக்கும் விஸ்வாசத்துக்கும் கட்டுப்படுகிறார்.

505. எல்லோரும் கர்மம் செய்யவேண்டியிருக்கிறது. சிலரே துறக்கக்கூடும். அம்மாதிரி பரிசுத்த சத்துவகுணம்

மிகவும் சிலரிடத்திலேயே காணப்படுகிறது. ஒருவன் உத்தேசமற்ற கர்மம் செய்துகொண்டே வருவானுனுல் ரஜஸ் கலந்த அவனுடைய சத்துவகுணமானது கடைசியாக ராஜஸத்தன்மைநீங்கப்பெற்றுப்பரிசுத்தசத்துவம்ஆய்விடுகிறது. இந்தப்பரிசுத்த சத்துவம் அடைகிறஹிறுலேயொருவன் ஈசுவரனை யநுபவத்திலறிகின்றுன். சாதாரண மனிதர்களால் இந்தப் பரிசுத்த சத்துவ குணத்தன்மையை அறிதல்முடியாது.

506. உனது சிற்றின்ப உணர்ச்சியைமுழுதும் அடக்கிவிட முயற்சிசெய். ஒருவன் அதிலே ஜயமடைந்தால், மேதையென்னும் பெயரிஞல் அறியப்படுகின்ற ஒருநாடி உண்டாகி, அவனதுசரீரத்திலே சரீர தர்மத்திலும் மாறுதல் ஏற்படுகிறது(தாழ்ந்தசக்திகளை ஞானசக்திகளாகமாற்றுவதே இந்த மேதா நாடியின் தொழில்). ஆத்மஞானமானது இந்த மேதாநாடி யுண்டானபிறகேயடையப்படுகிறது.

507. இவ்வொருவனைக்கொல்வதற்குநமக்குச்சக்திகளும் மற்ற ஆயுதங்களும் வேண்டியிருக்கின்றன; ஆனுல் ஒருவன் ஒரு குண்டூசியிஞல் கூட சுலபமாகத் தன்னைத்தானே கொன்றுகொள்ளலாம். இதுபோலபிறருக்குப் போதிப்பதற்கு ஒருவன்அநேகசாஸ்திரங்கள் படிக்கவேண்டியிருக்கின்றன; ஆனுல் ஆத்மஞானத்தைப்போதிப்பதற்கு,ஒரேதிவ்யக்கொள்கையினிடத்து வைக்கப்படும் திடமான நம்பிக்கையே போதும்.

508. ஒரு அரசன், ஒரு பிராஹ்மணனைக்கொன்றுவிட்டு அப்பாபத்திலின்றும் நிவிர்த்தியடைதற்கு என்ன பிராயச்

சித்தம் செய்துகொள்ளலாம்? என்று அறிந்துகொள்ளுதற்கு ஒரு மகாத்மாவினுடைய ஆசிரமம் சென்றான். ஆசிரமத்திலே மகாத்மா இல்லை; ஆனால் அவருடைய புத்திரன் இருந்தான். அந்தப்புத்திரன் அரசன் வந்தவிசேஷ சமாச்சாரத்தைக்கேட்டுஅவனிடம்"ஈசுவரநாமத்தைமூன்றுதரம்சொல்; உன்னுடைய பாபங்கள் பறந்துவிடு" மென்றுசொன்னான். பின்னர் மகாத்மா வந்து, தமது புத்திரன்கூறியபிராயச்சித்தத்தையறிந்துகொண்டு அவனை நோக்கி "ஈசுவரநாமத்தை ஒருதரம்சொல்வதினாலேயே, எத்தனையோலட்சக் கணக்கான-ஜன்மங்களில் செய்யப்பட்டபாபங்களெல்லாம்அந்த நிமிஷத்திலேயேபறந்துவிடுகின்றன. ஏமூடா! நீ அந்தஈசுவரநாமத்தைமூன்று தரம் சொல்லும்படியாகச்சொன்னாயே!உனக்கு ஈசுவரனிடத்திலே நம்பிக்கை எவ்வளவு குறைவாயிருக்கின்றது; இந்த நம்பிக்கைக் குறைவுக்காக நீசென்று சண்டாளஜன்மமடைவாய்" என்று கூறினார். புத்திரன் ராமாயணத்திலே கூறப்பட்ட குகன் ஆனான்.

509. ஒருவன் தனது வாழ்நாட்களை எப்படிக்கழிக்கவேண்டும்? அடுப்பிலேயிருக்கும் நெருப்பு நன்றாய் எரியும்பொருட்டும் அணைந்துவிடாமலிருக்கும் பொருட்டும் ஒருகோல் கொண்டு கிளறி விடப்படுவதுபோல, மனமும் அடிக்கடி சாதுக்களுடைய சங்கத்தினாலே பலப்படுத்தப்பட வேண்டும்.

510. தயிரிலிருந்து வெண்ணெய்எடுக்கப்பட்டுவிட்டால், அந்த வெண்ணெயைத்தயிருடனேகூட அதேபாத்திரத்தில்

வைத்திருக்கக்கூடாது; ஏனென்றால் அது தனது இனிமையிலே சிறிது இழந்துவிடும். அதுபோலவே, உலகிலேயே இருந்துகொண்டு பரிபூரணத்துவத்தை நோக்கிச் செல்கிறவன் உலகினருடனே கலந்துகொண்டு, உலகத்தூண்டுதல்களினிடையே வசித்துக்கொண்டிருப்பானாயின், அவன் அநேகமாக அழுக்குப் படிந்துவிடலாம்; ஆனால் அப்பேர்ப்பட்டவன்உலகுக்கு வெளியேசென்றுவிட்டால்தான்(துறந்துவிட்டால்தான்) பரிசுத்தனாயிருக்கமுடியும்.

511. ஒரு ஆழ்ந்த கிணற்றின் ஓரத்திலேநிற்கும் ஒருவன் தான் அதற்குள் விழுந்து விடாமலிருக்கும் பொருட்டு எப்பொழுதும் ஜாக்கிரதையாயிருந்துகொண்டிருக்கவேண்டும். அதுபோல உலகில் வசிக்கும் ஒருவன் தூண்டுதல்களில் அகப்படாமல் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். தூண்டுதல்கள்நிறைந்த உலகமாகியகிணற்றுக்குள்ளே ஒருதரம் விழுந்துவிட்டவன் காயப்படாமலும் அழுக்குப்படியாமலும்வெளியேவரமுடியாது.

512. உண்மையாய், உண்மையாய், நான் உன்னிடம் கூறுகிறேன்; அவரை விரும்புகிறவன்அவரைக்காண்பான். உன்னுடைய ஜீவிதத்திலேயே அதைச்சரிபார்த்துக்கொள்; மூன்றுநாட்களுக்கு முயற்சிசெய்; உண்மையான ஆத்திரத்துடனே முயற்சிசெய்; நீ ஜயமடைவது நிச்சயம்.

513. "ஸ்வாமி! நாம் ஏன் பந்தத்துக்குட்பட்டிருக்கிறோ

ம்? நாம் ஏன் ஈசுவரனைப் பார்க்கமுடிகிறதில்லை?" என்று ஸ்ரீராமகிருஷ்ணரிடம் ஒரு கேள்வி கேட்கப்பட்டது.

இதற்கு ஸ்ரீராமகிருஷ்ணர் மறுமொழி கூறியதாவது:— "அகங்காரமே ஜீவனுக்கு மாயையாம். அறிவை மறைப்பது அகங்காரமேயாம். 'நான்' என்பது மரிக்கும்பொழுது, தொந்தரவெல்லாம் தீர்ந்துவிடுகிறது. ஈசுவர கிருபையினாலே "நான் அகர்த்தா" என்ற எண்ணம் ஹிருதயத்திலே உறுதிப்பட்டுவிட்டால், மனிதன் இந்த ஜன்மத்திலேயே முக்தனாய் விடுகிறான்; அதற்கப்புறம் அவனுக்கு பயமேயில்லை" என்பதே.

514. அகங்காரம், ஈசுவரனை நமது பார்வையினின்றும் மறைத்திருக்கும் ஒரு மேகம்போன்றதாம். சற்குரு கிருபையினால் அகங்காரம் போய்விட்டால், ஈசுவரன் அவருடைய பரிபூரணமகிமையிலே தரிசிக்கப்படுகிறார். திருஷ்டாந்தமாக ஈசுவரனேயாயுள்ள ஸ்ரீராமசந்திரர் லட்சுமண (ஜீவ)னுக்கு இரண்டுமூன்று அடி தூரத்திலேயே யிருப்பதாகவும், ஆனால் ஸீதை (மாயை) இருவருக்கும் நடுவிலே வந்து லட்சுமணன் ராமரைப் பார்க்கவொட்டாதபடி தடுப்பதாயும் நீ படத்திலே பார்க்கிறாய்.

515. பாம்புகள் விஷஜந்துக்கள் ஆகியவற்றைப்பிடிக்கச் சென்றால் அவை கடிப்பது நிச்சயம். ஆனால்காந்தத் தூளினாலே சர்ப்பவசியம் கற்றமனிதனுக்கு அவற்றைப்பி

டிப்பது ஒருகஷ்டமான காரியமன்று. அவன் ஏழுபாம்புகளைக் கூடப்பிடித்துத் தனது கழுத்தைச் சுற்றிப்போட்டுக் கொண்டு விளையாடக்கூடும்.

516. பணத்திலேகர்வமடைதற்கு ஒன்றுமில்லை. நீ பணக்காரனென்று கூறிக்கொண்டால், உன்னிலும் பணக்காரருண்டு; அவருடன் உன்னை யொப்பிட்டுப்பார்த்தால், நீ வெறும் பிச்சைக்காரனேயாய்விடுவாய். அந்திப்பொழுதிலே மின்மினிப்பூச்சிகள் தோன்றுகிறபொழுது, அவை "நாம் உலகுக்கு ஒளிகொடுத்துக்கொண்டிருக்கிறோம்" என்று நினைத்துக்கொள்கின்றன. ஆனால் நக்ஷத்திரங்கள் பிரகாசிக்க ஆரம்பிக்கும்பொழுது, மின்மினிப்பூச்சிகளின்கர்வம் அடங்கிவிடுகிறது. பின்னர் நக்ஷத்திரங்கள் "நாம் பிரபஞ்சத்துக்கு ஒளிகொடுத்துக்கொண்டிருக்கிறோம்" என்று நினைக்க ஆரம்பிக்கின்றன. ஆனால்சிறிதுநேரத்துக்குப்பின் சந்திரன் கிளம்பிவிடுகிறது; நக்ஷத்திரங்களினுடையபிரகாசம்மங்கிவிடுகிறது. பின்னர் சந்திரன், தான்உலகுக்கு ஒளிகொடுத்துக் கொண்டிருப்பதாக நினைத்துக்கர்வமடைகிறது. அருணோதயமாகிறது; கிழக்குத்திக்கிலே சூரியன்கிளம்புகிறான். இப்பொழுது சந்திரனுடைய பிரகாசம் எங்கேயோ போய்விடுகிறது.

517. தண்ணீர் ஒரு பாலத்தின்கீழ் ஓடிக்கொண்டிருக்கிறது; ஆனால் தங்குகிறதில்லை. இதுபோல் பணமானது தாராளமானவர்களுடைய கைகளின் மூலமாகச் சென்றுவிடுகிற

து; ஆனால் அவர்களால் ஒருபொழுதும் சேர்க்கப்படுகிற தில்லை.

518. உன்னுடைய "நான்" என்னும் தன்மைமறைந்து உனது ஜீவாத்மா பரமாத்மாவினிடத்திலே லயமாகும் பொழுதுதான் முக்தியுண்டாகும்.

519. தென்னமரத்திலிருந்து ஒருமட்டைவிழுந்தால் அந்தமட்டை ஒரு சமயத்தில் அங்கு இருந்தது என்பதற்கு அடையாளமாக, மரத்திலே ஒரு குறி ஏற்படுகிறது. அப்படியேசுவரனை யடைந்தவனுக்கு அகங்காரக்குறி—(காமக் குரோத குணங்களின் குறிகள்) இருக்கும். அவனுடைய லட்சணம் ஒருகுழந்தையினுடையதுபோன்றதாம்; அவனிடத்திலே சத்துவம், ரஜஸ்,தமஸ்என்ற குணங்கள் ஒரேபாடாயில்லாததினாலே, அவன் எவ்வளவு சீக்கிரத்திலே ஒன்றைப்பற்றிக்கொள்கிறானோ அவ்வளவு சீக்கிரத்திலேஅதை விட்டுவிடவும் அவனால்முடியும். தம்பிடிவிலைபெறும்படியான ஒரு விளையாட்டுப் பொம்மைக்குப் பதிலாக ஐந்துரூபாபெறும்படியான ஒருவேஷ்டியை அவன்உனக்குக் கொடுத்துவிடும்படிநீ செய்யக்கூடும். முதலில்அப்பையன்வேண்டுமென்றே"இல்லை. நான் உனக்குக் கொடுக்கமாட்டேன்; என் தகப்பனார் எனக்காக அதை வாங்கியிருக்கிறார்" என்று கூறுவான். பையனுக்கு எல்லாரும்ஒன்றே; அவனுக்கு உயர்வுதாழ்வு என்ற வித்தியாசம் இல்லை; அதனாலே ஜாதி பேதமுமில்லை. தாயார் "இன்னார்உனதுசகோதரன்" என்று

சொல்கிருள்; அப்படிச்சொல்லப்பட்டவன் தச்சன் மகனுயி ருந்தாலும் அவனுடனே ஒரேஇலையில் அவன் சாப்பிடுவா ன். அவனுக்குப் பகையுமில்லை, சுசி அசுசியென்ற எண்ண முமில்லை.

520. ஒருசமயத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணர் தம்முடையஒரு சிஷ்யனைப்பார்த்து விளையாட்டாக "எனக்கு அபிமானமி ருப்பதாக உனக்குத் தோன்றுகிறதா? எனக்கு அபிமான மிருக்கிறதா?" என்று கேட்டார்.

சிஷ்யன்:—"ஆம்; ஒரு சிறிது இருக்கிறது; ஆனால் அது பின்வரும் விஷயங்களுக்காக வைக்கப்பட்டிருக்கிற து; அவற்றுள் முதலாவது—சரீரரக்ஷை; இரண்டாவது— ஈசுவரனிடத்திலே பக்தியநுஷ்டானம்; மூன்றுவது—பக்த கோடிகளுடனேசேர்வதற்குள்ளஇச்சை; நான்காவது—பி றருக்குப் போதிக்கவேண்டுமென்றஆசை. ஆனால், எவ்வள வோ பிரார்த்தனைகளின் பின்னர்தான் தாங்களிதை வைத் துக்கொண்டிருக்கிறீர்களென்றுசொல்லவேண்டும். தங்களு டையஆத்மாவின் இயற்கைத்தன்மை சமாதியென்னும் வா ர்த்தையினுலேயே விவரிக்கப்படத்தக்கதென்று நான்கூறு கிறேன். ஆகையால்தங்களிடமுள்ள அபிமானமானது பிர த்தியேகமாக இதற்கென்று செய்யப்பட்ட தங்கள்பிரார்த் தனையின்பலனும்." என்று கூறினன்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர்:—"ஆம்! இந்த அகத்தை வைத்து க்கொண்டிருப்பவன் நான்அல்லன்; வைத்திருப்பவள் என

ஜகன்மாதாவேயாவள். பிரார்த்தித்ததைக் கொடுப்பது ஜகன்மாதாவினுடைய இஷ்டமே.'' என்றார்.

521. கண்களைமூடிவிட்டாலொழிய, பழக்கமற்றகுதிரைகள் ஒருஅடியேனும் எடுத்துவைக்கா. இதுபோலகாமக்குரோதாதி குணங்கள் அடக்கப்பட்டாலொழிய, ஈசுவரனை யநுபவத்தில் அறிதல்சாத்தியமாகாது?

ஆனால் ஈசுவரனிடத்துக்கு இட்டுச்செல்கின்ற ஞானமார்க்கத்தில் அதுவுண்மையாம். வித்துவான், "மனிதன் ஈசுவரனைத்தரிசிக்கவிரும்பினால் முதலில்பரிசுத்தமாயிருக்கவேண்டும். தனது அவாக்களையெல்லாம் முதலில் அடக்கிவிடவேண்டும். முதலாவது தற்பரிற்சி, பின்னர் ஈசுவரஞானம்'' என்று கூறுகிறான்.

522. ஈசுவரபக்தி இரண்டுவிதமாம்:. முதலாவது—சாஸ்திரங்களிலே கூறப்பட்டுள்ள பக்தி. நாம் இவ்விதமாக ஈசுவரனை உபாசிக்கவேண்டும், அல்லது ஈசுவரநாமத்தை இப்படி இத்தனை தடவை சொல்லவேண்டும் என்பவைகளெல்லாம் வைதிகபக்தியென்று கூறப்படுவதில் சேர்ந்தவை; அது, பிரஹ்மஞானத்துக்கு (சமாதியிலே அகண்டஞானத்துக்கு) இட்டுச்செல்லும். ஜீவாத்மா இனிமேல் ஒருபொழுதும் திரும்பிவராதபடி பரமாத்மாவினிடத்திலே லயமடைந்துவிடுகிறது. இதுதான் சாதாரணபக்தர்களின் சங்கதி.

ஆனால் அவதார புருஷர்களுடையவும் ஈசுவரனுக்கு இஷ்டமானபக்தர்களுடையவும் விஷயம் மிகவும் வேறானதே. ஈசுவரனிடத்தே அவர்களுக்குள்ள அன்புவீண்சாஸ்திரக்கோட்பாட்டினாலானதன்று. பக்தி உள்ளேயிருந்து உற்பவிக்கின்றது; அது ஆத்மாவிலிருந்து ஊறித்ததும்புகின்றது. (சைதந்யர்போன்ற) அவதாரபுருஷர்களும் ஈசுவரனுக்கு மிகவும் சமீபத்திலே யிருக்கிறவர்களும் சமாதியிலே அடையக்கூடிய அகண்டஞானத்தைத் தங்கள் கைக்குள்ளே உடைத்தானவர்களாயிருக்கிறார்கள்; ஆனால் அதேகாலத்தில் தங்கள் அகத்தை வைத்துக்கொண்டுஈசுவரனைபிதாவென்றும் மாதாவென்றும் மற்றும் பலவிதமாகவும் கருதி பக்திசெலுத்திக்கொண்டு அம்மேல் உயரத்திலிருந்து கீழேயிறங்கிவருகிறார்கள். "இது அன்று இதுஅன்று" என்று சொல்லிக்கொண்டு அவர்கள் ஒன்றன்பின் ஒன்றாகப் படிகளையெல்லாம் கடந்துகடைசியில் உச்சியை அடைகிறார்கள். அவர்கள்அங்குச்சென்றவுடனே "அதுஇதுதான்" என்று சொல்லிவிடுகிறார்கள். ஆனால் சீக்கிரத்தில் மாடிகட்டப்பட்டுள்ள செங்கல் சுண்ணாம்பு முதலிய பொருள்களினாலேயே மேல்மாடியும் கட்டப்பட்டிருக்கிறது என்று கண்டுகொண்டு மேலும் கீழுமாக நடக்கிறார்கள். சிலசமயங்களில் மேல்மாடியிலே உட்காருகிறார்கள்; சிலசமயங்களில் படிக்கட்டுகளிலேயே உட்கார்ந்துகொள்கிறார்கள்.

இந்திரிய உலகத்திலேஉழலும் "நான்" என்பதையழித்துவிடுகின்ற சமாதியில் உண்டாகும் அகண்டாநுபூதியே

மேல்மாடியாம். படிக்கட்டு காட்சியிலே தோன்றுகின்ற உலகமாம்; அதாவது: நாமரூபங்களாலாய உலகமாம். மேல்மாடி சென்றவுடனே உலகமானது மனுஷிய அறிவுக்கு அகண்டத்துவத்தின் வெளித்தோற்றமாக அநுபவத்தில் அறியப்படுகிறது.

523. இளங்காற்று வீசாதபோது, நாம் உஷ்ணத்தைத் தணித்துக்கொள்வதற்காக விசிறிக்கொள்கிறோம்; ஆனால் இளங்காற்று தனவந்தர், தரித்திரர் ஆகிய எல்லாருக்கும் வீச ஆரம்பிக்கும்பொழுது நாம் விசிறுவதை நிறுத்திவிடுகிறோம். இதுபோல் நமக்குமேலேயிருந்து உதவிவரும் வரையில் நமதுகடைசி லட்சியத்தை யடைவதற்கு நாம் இடைவிடாமுயற்சிசெய்யவேண்டும்; ஆனால் அதிருஷ்டவசமாக அந்த உதவி எவருக்கேனும் உண்டாய்விட்டால், அவர்வேலைசெய்வதையும், விடாமல் முயற்சிப்பதையும் நிறுத்திவிடலாம்; இல்லையேல் நிறுத்தக்கூடாது.

524. வாற்பேத்தையினுடைய வால் விழுந்துவிட்டால், அது ஜலத்திலும் நிலத்திலும் வசிக்கமுடியும். அதுபோல் அஞ்ஞானமாகியவால், மனிதனிடமிருந்து விழுந்துவிட்டால், அவன்முக்தனாய்விடுகிறான். அப்பொழுது அவன் ஈசுவரன், உலகுஆகிய இரண்டிலும் சரிசமமாக வசிக்கமுடியும்.

525. ஒருசமயம் கிருஷ்ணகிஷோரர்என்பவர் என்னைநோக்கி "தாங்கள் என் பூணூலை எறிந்துவிட்டீர்கள்?" என்று

கேட்டார். இந்த மாறுதல் என்னிடத்திலேஉண்டானபொழுது அசுவினி வருஷத்திலே யுண்டான பெருங்காற்றில் அடித்துக்கொண்டு போகப்பட்டதுபோல, எல்லாம் அடித்துக்கொண்டு போகப்பட்டது; பழயநிலக்குறிகளெல்லாம் அடித்துக்கொண்டு போகப்பட்டன. பகிர்முகப் பிரக்ஞையேகிடையாது; பூஜையைப்பற்றியாவது அல்லது நான் வழக்கமாகத் தரித்துக்கொள்ளும் வஸ்திரத்தைப்பற்றியாவது கவலையெடுத்துக்கொள்வதற்கு எவர் இருந்தார்? நான் ஈசுவரானுபூதியில் அழுந்தியிருந்ததினாலே பெரும்பான்மையும் நிர்வாணமா யிருந்தேனென்பதுகூட எனக்குத் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஆகையால் கிருஷ்ணகிஷோர் என்பவர் நான் பூணூலை எறிந்துவிட்டதற்காக என்னைக் கண்டித்தபொழுது, நான் "ஈசுவரவிஷயமாக எனக்கு இப்பொழுது உண்டாயிருக்கும் பைத்தியம் உமக்கு உண்டாகும்பொழுது, நீர்தாமாகவே எல்லாவற்றையும்அநுபவத்தில் அறிந்துகொள்வீர்." என்றுமாத்திரம் சொன்னேன்.

526. (ஸ்ரீராமகிருஷ்ணர் வியாதியுற்றிருந்த கேசவச்சந்திரசேனரை நோக்கி, "தாங்கள் அவஸ்தைப்படுகிறீர்கள்; ஆனால் உங்கள் வியாதிக்கு ஆழ்ந்த அர்த்தம் ஒன்று உண்டு. தாங்கள் இச்சரீரத்தை வகித்து ஆத்மீக அபிவிருத்தியிலே பற்பல படிகளைக் கடந்திருக்கிறீர்கள்; சரீரமானது இப்பொழுது எதிர்ச்செய்கையினாலே அவஸ்தைபட்டுக் கொண்டிருக்கிறது. ஆத்மீக அலைகள் கிளம்பும்பொழுது

சரீரபிரக்ஞை மறைந்துவிடுகிறது; ஆனால் அது முடிவில் சரீரத்தைப் பாதிக்கின்றது. ஒரு பெருங்கப்பல் கங்கையிலே செல்லும்பொழுது, கொஞ்சநேரம் வரையிலும் அலைகள் கரைக்கு எதிராக மோதுகின்றன; படகு எவ்வளவுக்கெவ்வளவு பெரிதாயிருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு அலைகளும் பலமுள்ளனவாயிருக்கின்றன; சிலவேளைகளில் அவை கரைகளைக்கூட உடைத்தெறிந்து விடுகின்றன. ஒரு யானையானது ஒரு சிறிய குடிசைக்குள்ளே நுழைந்தால், அது அக்குடிசையை அசைத்து ஆட்டித் தகர்த்துவிடுகிறது. அப்படியே ஆத்மாநந்தாநுபூதியும் பக்தனுடைய சரீரத்தை அசைக்கின்றது; சிலவேளைகளில் தகர்த்தும் விடுகிறது. பின்னர் என்னநேரிடுகிறதென்று உங்களுக்குத் தெரியாதா? வீட்டிலே நெருப்புபிடித்தால் அது அநேக வஸ்துக்களை யெரித்துவிடுகிறது. அதுபோன்றே திவ்ய ஞானமாகிய அக்கினியானது காமக்குரோதாதி குணங்களாகிய சத்துருக்களை யெரித்து, கடைசியில் 'நான்' 'எனது' என்னும்நினைப்பையும்அழித்துவிடுகிறது. சரீரமானது பின்னர் நெரிக்கப்பட்டுத் தகர்ந்துவிடுகிறது. எல்லாம் ஆய்விட்டதென்று நீங்கள் நினைக்கலாம்; ஆனால் 'நான்' என்பது அணுவளவேனும் உள்ளவரையில் ஈசுவரன் உங்களை முக்தராக்கமாட்டார். நீங்கள் ஒரு ஆஸ்பத்திரியிலே வியாதியஸ்தராகப் படுத்துக்கொண்டால், முழுதும் சொஸ்தமடைவதற்குமுன் நீங்கள் வெளியே வரமுடியாது" என்று சொன்னார்.

527. ஸ்திரீகள், பரிசுத்த குணங்களுடனே பிறந்திருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும்சரி, பதிவிரதைகளாயினும் சரி, வியபிசாரிக ளாயினும் சரி, ஆநந்தமாதாவின் சாயைகளாகவே எப்பொழுதும் கருதப்படவேண்டும்.

528. ஈசுவர கிருபை, குருகடாக்ஷம், நல்ல பக்தனுடைய கிருபைஆகிய இவ்வளவும் இருந்தபொழுதிலும், ஜீவன்ஒன்றின்கிருபையில்லாக்குறையினலே மனிதன் அழிவை யடைகிறான். ஒருவன்மேற்கூறப்பட்டுள்ள மூன்றுவிதகிருபைகளும் கிடைக்கும்படியான பாக்கியம் பெற்றிருக்கலாம்; ஆயினும் ஒருவனுடைய ஹிருதயம்தனக்குத்தானே கிருபைகாட்டிக்கொள்ளாவிடில் (தன்னைத்தானே ரக்ஷித்துக்கொள்வதற்கு அதற்கு ஆசையில்லாவிட்டால்) அவை பிரயோசனமில்லை.

529. சிவத்தின் சக்தியுடனே ஒருவன்பிறந்தால், அவன் ஞானியாகிறான். அவனுடைய இடைவிடா வாசனையானது "ஜகன்மித்தியாபிரமைவ சத்தியம்" என்ற அறிவுமுகமாக இருக்கிறது. ஆனல் ஒருவன் விஷ்ணுசக்தியுடனே பிறந்தால், அவனிடத்தில் பக்தியும் விசுவாசமும் தவறுகிறதில்லை. யுக்தி அல்லது விசாரணைஞானம்பெருகிச் சிறிதுகாலத்திற்கு பக்தியும் விசுவாசமும் குறைவுபட்டபொழுதிலும், காலநிறைவிலே அவை யாதவகுலத்துக்கு நாசமுண்டாக்கிய மூஷலம்போல ஏராளமாகவும் தாராளமாகவும் பெருகிவிடும்.

530. புராணங்களின் பிரகாரம் பக்தன் ஈசுவரனிடத்தி லிருந்து வேறுயிருக்கிருன்; நான் ஒரு வஸ்து; நீ வேறென் று; இச்சரீரமானது ஒரு பாத்திரம் போன்றது; மனமும் புத்தியும் அகங்காரமும் அதிலேயுள்ள தண்ணீர் போன்ற வை; பிரஹ்மவஸ்து சூரியன்போன்றது. அஃது அந்த ஜல த்திலே பிரதிபலிக்கப்படுகிறது. ஆகையால் பக்தர்கள் பல விதமான ஈசுவரத்தோற்றங்களைப் பார்க்கிருர்கள்.

531. வேதாந்தத்தின் பிரகாரம், பிரஹ்மவஸ்துவே உண்மைப்பொருள்; மற்றெல்லாம் மாயையே, சொப்ப னங்கள்போல உண்மையல்லாதவையே. பிரஹ்மமாகிய சமுத்திரத்தின் மேல்மட்டத்திலே 'நான்' என்ற இந்தக்குச் சியானது விழுந்து கிடக்கிறது. நீ குச்சியை யெடுத்தால் ஒ ரே ஜலப்பரப்பு பகுக்கப்படாமல் இருக்கிறது; ஆனுல் அந் தக்குச்சிஇருக்கும்பொழுது, அது தண்ணீரைப்பக்கத்துக்கு ஒன்றுகும்படி இரண்டுபாகங்களாகப்பிரித்துவிடுகிறது. மனி தன் சமாதிநிஷ்டை யடைந்தவுடனே, பிரஹ்மஞானம் உத யமாகிறது. அப்பொழுது அகங்காரமானது அழிக்கப்பட்டு விடுகிறது. வேதாந்தத்தின்பிரகாரம், ஜாக்கிராவஸ்தையும் உண்மையன்று.

532. உண்மையான மகான்களுடைய மனத்தில் முக்கால் பாகம் ஈசுவரனுக்கு அளிக்கப்படுகிறது; மிச்சமுள்ள கால் பாகம்தான் அவன் உலகத்தினிடத்தே வைக்கிருன். பக்தன் தெய்வீகமான விஷயங்களிலே அதிக ஜாக்கிரதையுள்ளவஞ

யிருக்கிறான். பாம்பின்வால் நசுக்கப்பட்டால், பாம்பு ஆக்குரோஷத்தினால்கிளம்புகிறது; வேறெந்தபாகத்தையும்விட வாலிலேதான் அதற்கு உணர்ச்சி யதிகம்போலும்!

533. ஒரு சமயத்திலே தற்கால நாகரீக வித்தியாப்பியசம்பெற்ற ஒருவர் ஸ்ரீ ராமகிருஷ்ணருடனே தர்க்கித்துக்கொண்டிருந்தபொழுதுகிரகஸ்தர்கள் லௌகீகத்தன்மையினாலே கறைப்படுத்தப்படாமலிருக்க முடியுமென்றுகூறினார். அவரைப்பார்த்து ஸ்ரீ ராமகிருஷ்ணர்:—"தற்காலத்திலேகறைப்படுத்தப்படாதவர்கள் என்று தாங்கள் கூறுகின்றவர்கள் எத்தன்மையவர்கள் என்பது தங்களுக்குத்தெரியுமா? ஒரு ஏழைவந்து பிச்சை கேட்டால், வீட்டுஎஜமானன் கறைப்படுத்தப்படாதவனாயிருப்பதினாலும் பணவிஷயங்களிலே சம்பந்தமற்றிருப்பதினாலும் அவனுடையமனைவியே வீட்டுக்காரியங்களெல்லாவற்றையும் மேல்பார்ப்பதினாலும், அவன் பிச்சையெடுக்க வந்திருக்கும் பிராஹ்மணனைப்பார்த்து 'ஐயா! நான் பணத்தைத்தொடுவதேயில்லை. என்னிடத்திலே பிச்சைகேட்டுஏன்காலத்தை வீணாகக்கழிக்கிறீர்கள்?' என்றுசொல்கிறான். பிராஹ்மணன்விடாத கண்டனாயிருந்தால், தங்களுடைய கறைப்படுத்தப்படாத கிரகஸ்தன் அப்பிராஹ்மணனுடைய வேண்டுகோள்களினால் மனம் சலித்து, அவனுக்கு ஏதேனும் கொடுக்கவேண்டுமென்று தனக்குள்தானே நினைத்துக்கொண்டு 'ஐயா! நாளைவாருங்கள்; நான் ஏதேனும் செய்யக்கூடுமாவென்று பார்க்கிறேன்'' என்று கூறுகிறான். இந்தமாதிரிகிரகஸ்தன்வீட்டுக்குள்ளேசென்று

தனது மனைவியிடம் "பிராணநாயகி! இதோ பார்! ஒரு ஏழைப் பிராஹ்மணன் வறுமையினால் மிகவும் கஷ்டப்படுகிறான். நாம் அவனுக்கு ஒரு ரூபாய் கொடுப்போம்" என்று கூறுகிறான். 'ரூபாய்' என்ற வார்த்தை காதில்பட்டவுடனே மனைவியானவள் கோபத்தினால் சீறிக்குதித்து 'என்ன தர்மப்பிரபுதாங்கள்! தங்கள் ரூபாக்கள் எவ்வித யோசனையுமில்லாமல் எறியப்படவேண்டிய கற்களும், சருகுகளும், போன்றிருக்கின்றன, என்று கூறுகிறாள். கறைப்படுத்தப்படாத கிரகஸ்தன் ஒருவித மன்னிப்புக் குரலுடனே 'பிராஹ்மணன் மிகவும் ஏழை; ஒரு ரூபாவுக்குக் குறைந்து நாம் ஒன்றும் கொடுக்கக்கூடாது' என்று சொல்கிறான். 'முடியாது, நான் அவ்வளவு கொடுக்கமுடியாது. இதோ இரண்டு அணா இருக்கிறது. உனக்கு இஷ்டமிருந்தால் இதை யவனுக்குக் கொடுக்கலாம்' என்று மனைவி கூறுகிறாள். ஆனால் அவன் தான் கறைப்படுத்தப்படாத மனிதனாயிருக்கின்றானே என்ன செய்வான்? மனைவி கொடுத்ததைத் தான் எடுத்துக்கொள்ளவேண்டும். மறுநாள் அந்தப் பிராஹ்மணனுக்கு இரண்டு அணா தான் கிடைக்கிறது. கறைப்படுத்தப்படாத மனிதர்கள் என்று தாங்கள் கூறுபவர்கள் எப்பொழுதும் பெண்ஜாதிகளினால் ஆட்டப்படுபவர்களே. ஏனென்றால் அவர்கள் குடும்ப விஷயங்களைக் கவனிக்கிறதேயில்லை; தாங்கள் மிகவும் நல்லவர்களென்றும், பரிசுத்த புருஷர்களென்றும், அவர்கள் நினைத்துக்கொள்கிறார்கள். ஆனால் உண்மையில் அவர்கள் நேர் எதிரிடையான குணங்கள், வாய்ந்தவர்களே" என்று கூறினார்.

534. ஒரு மகாத்மா பாதைப்பக்கத்திலே சமாதிதற்பர ராய்ப் படுத்திருந்தார். அவ்வழியே சென்ற ஒரு திருடன் அவரைக்கண்டு "இங்குப்படுத்திருக்கின்ற இவன்ஒருதிருடனும்; நேற்றிரவு இவன் சில வீடுகளில் நுழைந்து திருடியிருக்கவேண்டும்; இப்பொழுது களைத்துத் தூங்குகிறன்போலும்! இவனைப் பிடிப்பதற்குப் போலீசார் சீக்கிரம் இங்கு வந்து விடுவார்கள்; நான் சீக்கிரம் ஓடிப்போய் விடுகிறேன்" என்று தனக்குள்தானே நினைத்துக்கொண்டு ஓடிவிட்டான். உடனே அவ்வழியேவந்த ஒரு குடியன்அவரைநோக்கி "ஆ! ஆ! ஒருகுடுவையதிகம் குடித்துவிட்டுப் பள்ளத்தில் விழுந்துவிட்டாய் ஏ! நான் அவ்வளவுகுடிக்கவில்லை; நான் தடுமாறி விழவும் மாட்டேன்" என்று சொல்லிவிட்டுச் சென்றன். கடைசியாக ஒரு மகாத்மாவந்து, அங்குப்படுத்திருப்பவர் சமாதி கூடியிருக்கும் ஒருமகான் என்று அறிந்துகொண்டு, அவரருகே யுட்கார்ந்து, அவரைஸ்பரிசித்து அவருடைய பாதங்களை மெல்ல வருடத்தொடங்கினர்.

535. ஒரு சமயத்தில் தக்ஷிணேசுவரத்துக்கு இருவர்—பிதாவும் புத்திரனும்—வந்தார்கள். அவர்கள் சாதுக்கள். புத்திரன் சத்தியஞானம் அடைந்திருந்தான்; ஆனல் பிதா அடையவில்லை. இருவரும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் இருந்த அறையிலே உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். இதன் மத்தியிலே ஒரு இளம் சர்ப்பமானது ஒரு எலி வளையிலிருந்து வெளியேவந்து புத்திரனைக்கடித்தது. பிதா அதைப்பார்த்து பயந்து நடுநடுங்கிச் சுற்றிலுமுள்ள எல்லாஜனங்களையுங்கூப்

பிட ஆரம்பித்தான். ஆனல் புத்திரன் அமைதியாய் உட்கார்ந்திருந்தான்; அது பிதாவுக்கு இன்னும் அதிக கலக்கத்தை யுண்டுபண்ணிற்று. அவ்வளவு அமைதியாயிருப்பது ஏன்? என்று புத்திரனை பிதாகேட்க, புத்திரன் நகைத்து "சர்ப்பம் எது? அது கடித்தது எவரை?" என்று கூறினன். அவன் ஏகத்துவத்தை யநுபவத்தில் அறிந்தவன்; ஆகையால் மனிதனுக்கும் சர்ப்பத்துக்குமுள்ள வித்தியாசத்தை அவனல் உண்டுபண்ண முடியவில்லை.

536. ஒரு சமயத்தில் ஒரு சாது ஆச்சரியமான சித்திகள் செய்யவல்லவரானர்; அதனல் அவருக்கு வீண் கர்வம் அதிகமாயிற்று. ஆனல் அந்த சாது மிகவும் நல்லவர், கடுந் தவம் புரிந்திருந்தார். ஆதலால் அவரைத்திருத்துவதற்காக ஈசுவரன் அவர் முன்னே ஒரு சந்நியாசவடிவத்துடனே தோன்றி "தாங்கள் அதியாச்சரியமான சித்திகளையடைந் திருக்கிறீர்கள் என்று கேள்விப்படுகிறேன்" என்றார். சாது அவருக்கு வேண்டிய உபசரணைகள் புரிந்து அவரை யங்கே கீழேயுட்காரும்படி கேட்டுக்கொண்டார். அப்பொழுது அவ்வழியாக ஒரு யானைபோய்க்கொண்டிருந்தது; சந்நியாசி அந்த சாதுவைப்பார்த்து "தாங்கள் இஷ்டப்பட்டால், தங்களால் இந்த யானையைக் கொல்ல முடியுமா?" என்று கேட்க, சாது "முடியும்" என்று சொல்லி விட்டு, கீழேஇருந்து ஒருபிடி மண்ணை எடுத்து ஏதோ ஒரு மந்திரத்தைஉச்சரித்து அந்தயானையின் சரீரத்தின்மீது எறிந்தார். உடனே யானை கீழேவிழுந்துமரணவாதனைப்பட்டு

மாய்ந்தது. சந்நியாசி அவரைநோக்கி, "ஆ! தங்களுடையசக்திமிக ஆச்சரியகரமானதே! எவ்வளவுசுலபத்தில் தாங்கள் அந்த யானையைக்கொன்றுவிட்டீர்கள்!" என்றார். சாதுவுக்குக் கிடைத்தபுகழினாலே புன்னகைபொங்கிற்று. சந்நியாசிமறுபடியும்சாதுவைநோக்கி "ஐயா! நல்லது; அந்தயானைக்குத்திரும்பவும்உயிர்கொடுத்தெழுப்பவும்தங்களால் ஆகுமோ"? என்றார். சாது "ஆம்! அதுவும் என்னால் முடியும்." என்று சொல்லிவிட்டு, மறுபடியும் ஒருபிடிமண்ணை எடுத்து அந்த யானைப்பிணத்தின்மீதுஎறிந்தார். உடனே அது மறுபடியும் உயிர்பெற்று எழுந்தது. அப்பொழுது சந்நியாசிசாதுவைப் பார்த்து "உண்மையில் தங்களுடைய சக்தி ஆச்சரியமானதே" என்றுகூறிவிட்டுமேலும் "ஆனால் நான் தங்களையொருகேள்வி கேட்க விரும்புகிறேன். இப்பொழுது தாங்கள் யானையைக்கொன்று அதற்கு மறுபடியும் உயிர் கொடுத்து அதனையெழுப்பினீர்கள். அதனால் தங்களுக்குக்கிடைத்தலாபமென்ன? அது தங்களுக்கு ஈசுவரனையடையும் விஷயத்திலே அநுகூலமாயிருந்ததா?" என்று சொல்லி, மறைந்துவிட்டார்.

537. ஆத்மவிசாரணையிலே மனமானது பரிபூரணசாந்திநிலைமையை அடைகின்றபொழுது பரப்பிரஹ்மம் வியக்தமாகிறது.

ஒருகாலத்தில் ஒருவன் அரசனைப்பார்க்கவிரும்பினான். அவ்வரசனைக்காணவேண்டுமென்றால் அரண்மனையிலேஏழு

வாசல்களையும் கடந்துசெல்லவேண்டும். அவன் அரண்மனைக்குவந்து முதலாவது வாசலிலே ஒருவன் பரிவாரங்கள் சூழ உட்கார்ந்திருப்பதைக்கண்டான். அவ்வாறு கண்டதும் அவனைப்பார்த்து "அவன் தானா அரசன்?" என்று தன்னுடைய தோழனிடம் கேட்டான். தோழன் புன்னகையுடன் "இல்லை" யென்றான். பின்னர் அவன் இரண்டாவது வாசலுக்கு வந்தான்; பின்னர் மூன்றாவது, நான்காவது, வாசல்களுக்கும்போய் இப்படியே மேலுள்ள ஒவ்வொருவாசலுக்கும் சென்றான்; ஒவ்வொரு வாசலிலும் மேன்மேலும் ஆடம்பரத்துடனே மனிதர் உட்கார்ந்திருந்ததைக்கண்டான். எவ்வளவுக்கெவ்வளவு உள்ளே சென்றானோ, அவ்வளவுக்கவ்வளவு ஆடம்பரமும் டாம்பீகமும் அதிகமாயிருந்தன. ஒவ்வொரு வாசலிலும் இருந்தவரைநோக்கிஅவன் தன்னுடைய அரசனையே பார்த்ததாகவெண்ணித்து'இவன்தான் அரசனோ, இவன்தான் அரசனோ' என்று தனது நண்பனிடக்கேட்டான். ஆனால் ஏழாவது வாசலைக் கடந்து உள்ளேசென்று அரசனைநேருக்கு நேராகக்கண்டபொழுது அவன்தானா அரசன் என்று கேட்கவேண்டிய அவசியமே அவனுக்கு ஏற்படவில்லை; அரசனுடைய அநந்தமான ஆடம்பரத்தைக்கண்டு அப்படியே பிரமித்து, அரசன் முன்னே தான், தான் நிற்பதாக நிச்சயமாகத் தானே அறிந்துகொண்டான்.

538. மண்டோதரி தனது புருஷனாகிய ராவணனைப் பார்த்து "சீதையை உனது மனைவியாக அடையவேண்டு

மென்று உனக்கு அவ்வளவு ஆசையுண்டானால், ஏன் நீ உனது மாயாசக்தியினால் அவளுடைய புருஷனாகிய ராமனுடைய வடிவெடுத்து அவளைஏமாற்றக்கூடாது?" என்று கேட்டாள்.

அதற்குராவணன் மறுமொழிகூறியதாவது:—"சீச்சீ! ராமனுடைய பரிசுத்தவடிவத்தை யெடுத்துவிட்டு, நான்சிற்றின்பங்களிலே விருப்பம்வைக்கமுடியுமா? ராமனுடைய உருவத்தைப்பற்றியநினைப்பே எனதுஹிருதயத்திலே சொல்லொணாச் சுகத்தையும் ஆநந்தத்தையும் அளித்து, பிரஹ்மலோகத்தையும் எனக்குத் திரணமாக்கிவிடுகிறது." என்பதே.

539. சரீரமும் ஆத்மாவும்:—சரீரம் உண்டாயிருக்கிறது; அதனால் இது மறுபடியும் கரைந்து போகத்தான் வேண்டிவரும். ஆனால்ஆத்மாவுக்கு அழிவில்லை! பழுத்தபாக்கிலே, பாக்கு ஓட்டிலிருந்தும்மேல்மூடியிலிருந்தும்வேறாய்விடுகிறது; பாக்குபச்சையாயிருக்கும்பொழுது அவற்றைப்பிரிப்பது மிகவும் கஷ்டம். ஈசுவரன்அடையப்பட்டுவிட்டால்—அவர் அநுபவத்திலே அறியப்பட்டுவிட்டால்—ஆத்மாசரீரத்தினின்றும் வேறானது என்றுள்ள ஞானம் உதயமாகிறது.

540. ஒருகாலத்தில் ஈசுவரப்பித்துப்பிடித்த சாது ஒருவர், ராணிரஸமணியம்மாளால் கட்டப்பெற்றதும் ஸ்ரீராமகிருஷ்ணர் வசித்ததுமான காளிக்ஷேத்திரத்துக்கு வந்தார்.

ஒருநாள் அந்த மகாத்மாவுக்கு ஆகாரம் ஒன்றும் கிடைக்க வில்லை; அவருக்கு மிகுந்த பசியெடுத்த பொழுதிலும் அவர் அதற்காகஎவரையும் ஆகாரம் கேட்கவில்லை; ஆனால் ஒருநா யானதுஒருமூலையில் எறியப்பட்டிருந்தஎச்சிலிலைகளில்இரு ந்தவற்றைப்புசித்துக்கொண்டிருந்ததைப்பார்த்து அவர்அ ங்குச்சென்றுநாயைக்கட்டிக்கொண்டு—"சகோதரா!எனக் குஒருபங்கு கொடுக்காமல் நீமாத்திரம் தனியேயிருந்து உ ண்பதென்ன?" என்று சொல்லிக்கொண்டே,நாயுடன்கூட தாமும் அவ்வெச்சிலையுண்ணஆரம்பித்தார். அந்தமகாத்மா இந்த விநோதமான பந்தியிலே போஜனம் உண்டு விட்டு, காளி க்ஷேத்திரத்துக்குள்ளே நுழைந்து, அங்கோரிடத் தில் உட்கார்ந்து ஐம்பொறிகளையும் அடக்கிஆத்மநிஷ்டா தற்பரராய் அமர்ந்துவிட்டார்.பின்னர்அவர் நிஷ்டைகலைந் து எழுந்திருந்துபோனபொழுது ஸ்ரீராமகிருஷ்ணர் ஹிரு தய முக்கர்ஜீயென்பவரைக்கூப்பிட்டு அந்த மகாத்மாவைப் பின்தொடர்ந்து சென்று அவர் கூறுவதைத் தம்மிடம் வந்து சொல்லும்படி ஆக்ஞாபித்து அனுப்பினார். ஹிரு தயர் அந்த மகாத்மாவைச் சிறிதுதூரம் பின்தொடர்ந்து செல்ல, அவர் திரும்பிப்பார்த்து ஹிருதயரை நோக்கி "ஏன் என்னைப் பின்தொடர்கிறாய்" என்று கேட்டார். ஹிருதயர் "ஸ்வாமி! எனக்குஏதேனும் உபதேசிக்கவேண் டு" மென்றார். அந்த மகாத்மா "இந்தச்சாக்கடைத்தண்ணீ ரும் அதோபரிசுத்தமாகச் செல்கின்ற கங்காநதியின் தண் ணீரும் உன்னுடைய திருஷ்டியில் ஒன்றாகத்தோன்றும்

பொழுது, வீணாநாதமும் அந்தக் கூட்டத்தின் கூச்சலும் உன்து செவியிலே வித்தியாசத்தைக் கிளப்பாதபொழுது நீ உண்மைஞான நிலைமையை அடைவாய்'' என்று கூறினார். ஹிருதயர் திரும்பிவந்து ராமகிருஷ்ணரிடத்திலே இதைக்கூறியபொழுது அவர் "அப்புருஷரே ஆநந்தத்தினுடையவும் அறிவினுடையவும் உண்மை நிலையை அடைந்துள்ளவர். சித்தர்கள், பேயர்பித்தர்பாலர்போன்றும் மற்றும் பற்பலவேறு வேடங்கள் தரித்தும்உலாவுகிறார்கள்'' என்று சொன்னார்.

541. ஒரு அரசன் தன்னுடைய வேலைக்காரனுடைய வீட்டுக்குச்சென்றால், தன்னை அந்த வேலைக்காரன் கௌரதையுடனே வரவேற்கும்படி, வேண்டிய நாற்காலிகளும், ஆடையாபரணங்களும்,ஆகாரப்பொருள்களும், மற்றவைகளும் தன்னுடைய அரண்மனையிலிருந்தே அனுப்புகிறான். இதுபோல்ஈசுவரன் வருவதற்குமுன்னால்அவர் அன்பு,பக்தி, விசுவாசம் முதலியவற்றை பக்தனுடைய முமூட்சு ஹிருதயத்துக்குள்ளே அனுப்புகிறார்.

542. வைதீகபக்தி (சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ளபடி பக்திசெய்தல்) என்று ஒருவித பக்தியுண்டு. இத்தனை தடவை ஈசுவரநாமத்தை ஜபம்செய்தல், இன்னின்ன சமயங்களிலே உபவாசமிருத்தல், இன்னின்னக்ஷேத்திரங்களுக்கு யாத்திரைசெல்லுதல், இன்னின்ன வஸ்துக்களினாலேபூசை செய்தல் என்றநியமத்துடன்செய்வதே வைதீகபத்தியாம்.

நெடுங்காலம்இப்பக்தியையனுஷ்டித்துவந்தால்இது ராகபக்தியெனப்படும் ஈசுவரபக்தியின்உயர்ந்ததன்மைகளுக்குஇட்டுச்செல்லும். அவசியமாகவேண்டியது அன்புஒன்றே. லௌகிகஎண்ணங்கள் அடியோடுபோய்விடவேண்டும்; மனமானது அவரிடத்தில் அப்படியே வைத்துவிடப்படவேண்டும்; அப்பொழுது தான்நீஅவரை யடைவாய். ராகபக்தியில்லாவிட்டால் மனிதன் அவரை யடையமுடியாது.

543. இந்த ராகபக்தி இயற்கையாகவே, ஒருவேளை குழந்தைப்பருவத்திலிருந்துகூட தங்களிடம் உள்ளவர்கள் சிலரே; அவர்கள் பிரஹலாதனைப்போல் குழந்தைப்பருவத்திலிருந்தே ஈசுவரனிடத்தே பிரேமை பாராட்டுகிறார்கள். அவர்கள் நித்தியசித்தர்கள் என்னும் வகுப்பைச் சேர்ந்தவர்கள்.

544. அகங்காரமானது ஒருபொழுதும்நசித்துவிடாதா? தாமரை யிதழ்கள் விழவேண்டிய காலத்திலே விழுந்துவிடுகின்றன; ஆனால் அவைதம்முடைய அடையாளத்தை வைத்துவிட்டுப்போகின்றன. அப்படியேமனிதனுடைய அகங்காரமும் போனாலும் முழுதும்போகிறதில்லை; போனபின்பும் அதுமுன்னே யிருந்தது என்பதற்குள்ள அறிகுறிகள் இருக்கின்றன. ஆயினும் அவை தீமை செய்யும் சுறுசுறுப்புடையனவல்ல.

545. மனமானது நீகிரோவனுடைய சுருண்ட மயிர் போன்றதாம். உனக்கு இஷ்டமுள்ளவரையில் நீ அதைநே

ரே நீட்டிவைக்கலாம். ஆனால் நீ அதைவிட்டதுதான் தாமதம், அது மறுபடியும் சுருண்டுகொள்கிறது. அப்படியே மனமானது நேராயும் உறுதியாயும் பலவந்தத்தினாலேவைக்கப்பட்டுள்ளவரையில், அது நன்றாய் வேலைசெய்கிறது; அதனால் நன்மையே. ஆனால் நீ உனது ஜாக்கிரதையைக் கொஞ்சம் குறைத்துவிட்டால், நேர்மார்க்கத்தினின்றும் அது தவறிவிடுகிறது.

546. பத்மா! மாம்பழம் தின்னு என்று நான்கூறுகிறேன்; தோட்டத்திலே எத்தனை மரங்களுள்ளனவென்றும், மரத்துக்கு எத்தனை கிளைகள் உண்டென்றும், அவற்றில் எத்தனை இலைகள் உண்டென்றும், மற்றும் பலவிதமாகவும் எண்ணுவதினால் யாதுபயன்? நீ இங்கு மாம்பழம் தின்னவந்திருக்கிறாய். மாம்பழம் தின்றுவிட்டுப்போ. நீசாதனங்கள் செய்து ஈசுவரனை யடையவேண்டுமென்ற நோக்கத்துடனே மனுஷ்யராசியாக இவ்வுலகிலே வந்திருக்கிறாய். உன் கடமை பக்தியை யடைவதற்கு உன்னாலானமட்டும் முயற்சிப்பதேயாம். அநாவசியமான தர்க்கங்களினாலே ஏன் உன்னை நீயே துன்புறுத்திக்கொள்கிறாய்? தத்துவஞான தர்க்கங்கள் உனது வாழ்க்கையை மாற்றிவிடுமா? நான்கு அவுன்சு சாராயம் உனக்கு மயக்கத்தை உண்டுபண்ணப் போதுமானதாயிருக்கும்போது அதைப் பருகுவதைவிட்டுச் சாராயக்கடையிலெத்தனை பீப்பாய்களிலே சாராயம் இருக்கின்றது என்று நீகணக்குப்பார்ப்பதினால் யாதுபயன்? உனக்குத் தெரியவில்லையா?

547. சுடுகாட்டிலே பிணமானது அமைதியாய் விழுந்து கிடக்கின்றது. ஆனால் நூற்றுக்கணக்கான கழுகுகளும்காக்கைகளும் தாமே அங்குவந்து கூடுகின்றன. அவற்றை அழைப்பதற்கு எவரும் செல்கிறதில்லை.

548. வீட்டின் கூரையின்மேலேவிழுகின்ற மழைஜலமானது புலியின் தலைபோன்று உருவாக்கப்பட்டிருக்கும்குழாய்களின் மூலமாகவிழுந்து, புலியின் வாயிலிருந்துவிழுவது போன்று தோன்றுகிறதுபோல, தெய்விகத்தன்மை வாய்ந்த மனிதர்களுடைய வாயிலிருந்து வருகின்ற பரிசுத்தவசனங்களும் அவர்களிடத்திலிருந்தே வெளிவருவனவாகத் தோன்றியபொழுதிலும், உண்மையில் ஈசுவரனுடைய சிம்ஹாசனத்திலிருந்து புறப்படுகின்றவையாம்.

549. உண்மைஞான ஒளியினால் ஒளிர்கின்றவரே உண்மையான குருவாவர்.

550. சிஷியன் தனது குருவை ஒருபொழுதும் குறைகூறலாகாது. அவன் குருவார்த்தைக்கு எதிர் பேசாமல் கீழ்ப்படிந்துவிடவேண்டும். "என்னுடைய குரு சாராயக்கடைக்குச் செல்பவராயினும் என்னுடைய குரு என்றும் பரிசுத்தநித்தியாநந்தரே" யென்றுவங்காளிபாஷையில் ஒரு பழமொழியுண்டு.

551. ஒருஞானி தமது பந்துக்களால் கௌரவப்படுத்தப்படாததற்குக் காரணமென்ன? ஒருசெப்படிவித்தைக்கா

ரனுடைய பந்துக்கள் அவனுடைய வித்தைகளைப் பார்ப்பதற்கு அவனைச்சுற்றிக்கூடுவதில்லை; ஆனால் அந்நியர்கள் அவனுடைய அற்புதமான வார்த்தைகளைக்கண்டு விழித்தது விழித்தபடியே பிரமித்துநிற்கிறார்கள்.

552. பிரஹ்மவஸ்துவைப் பற்றியுள்ள கற்பனைதான் என்ன? அது வார்த்தைகளினாலே விவரிக்கப்படமுடியாதது. சமுத்திரத்தை யொருபொழுதும் பார்த்திராத ஒருவனுக்கு இன்னொருவன் சமுத்திரம் இப்படியிருக்குமென்று சொல்லவேண்டிவந்தால், "அது ஒருபெரிய நீர்ப்பரப்பு, எங்குப்பார்த்தாலும் தண்ணீராயுள்ளது" என்றுதான் கூற முடியும்.

553. பேதரகித ஆத்மவஸ்து ஜீவனாகத்தன்னைப் பேதத்துக்குட்படுத்திக்கொண்ட பிரமை எப்படி வந்தது?

தத்துவஞானியாகிய அத்வைதிவேற்றுதவியை நாடாததனது யுக்தியை மாத்திரம் நம்பிக்கொண்டிருக்கிற வரையில் "எனக்குத்தெரியாது" என்று இந்தக்கேள்விக்குபதில் சொல்லிவிடுகிறான். அநுபூதியினாலுண்டாகும் மறுமொழியேமுடிவானது. "எனக்குத்தெரியும்" அல்லது "எனக்குத்தெரியாது" என்று நீ சொல்கிறவரையில், நீ உன்னை ஒரு தனி மனிதனாகக்கருதிக்கொண்டிருக்கிறாய். ஆகையால் இந் தவித்தியாசங்களையெல்லாம் நீ உண்மையாகவேதான் எடுத்துக்கொள்ளவேண்டும்; இவை பிரமையல்ல. வியஷ்டித்

தன்மையெல்லாம் அழிக்கப்பட்டால், மனிதன் சமாதியி லே அகண்டஞானத்தை அநுபவபூர்வமாக அறிகிறான். அப்பொழுதுதான்பிரமையைப்பற்றியும்,அப்பிரமையைப் பற்றியும், உண்மையைப்பற்றியும், பொய்ம்மையைப்பற்றி யும்நிகழும்கேள்விகளெல்லாம் அடங்கிவிடுகின்றன.

554. உயர்ந்த பொருளிலே ஞானம் என்றால் என்ன? இதற்கு ஞானிகூறுவதாவது:"ஏ ஈசுவரா! இப்பிரபஞ்சத்தி லே நீ ஒருவனே நடிப்பவன். நான்உனதுகைகளிலுள்ள ஒரு ஆயுதம்மாத்திரமேயாவன். இன்னும்என்னுடையதொன்று மேயில்லை.

எல்லாம்உன்னுடையதே; நானும் எனதுகுடும்பமும், எனது ஐசுவரியங்களும், எனது புண்ணியங்களும், ஆகிய எல்லாம் உன்னுடையவையே எனநினைத்தலாம்" என்பதே.

555. இந்த ஜீவிதத்திலேயே மரித்துவிட்டவன், அதா வது, பிணத்தினிடத்திலே அவாக்களும் ஆசைகளும் இல்லா ததுபோல எவனிடத்தே ஆசைகளும் அவாக்களும் அழிக் கப்பட்டு விட்டனவோ அவனே உண்மையில் ஆத்மஞானி யாவான்.

556. அகண்டவஸ்து எல்லாலட்சணங்கட்கும் அதீத மானது—மாயையுடன் சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் கடந்து

557. ஒரு பக்ஷியின் கூண்டு அழிக்கப்பட்டு விட்டால், அஃது ஆகாயத்திலே பறந்துவிடுகிறது. அது போன்றே மனத்தினிடமிருந்து சரீரப்பிரக்ஞையும் வெளியுலகப்பிரக்ஞையும் அழிக்கப்பட்டுவிட்டால், ஜீவாத்மாவானது பரமாத்மாவாகிற ஆகாயத்திலேபறந்து சமாதியிலே லயமாய் விடுகிறது.

558. அஹம் அழிக்கப்பட்டுவிட்டால், ஜீவன்மரித்து விடுகிறது, சமாதியிலே பிரஹ்மாநுபூதி யுண்டாகிறது. அப்பொழுது பிரஹ்மத்தை யநுபவத்தில்அறிவது பிரஹ்மமே, ஜீவனன்று.

559. ஒன்றை யறிந்துவிட்டால் எல்லாவற்றையும் அறிவாய். ஒன்று என்னும் எண்ணுக்குப் பின்னால் வைக்கப்பட்ட பூச்யங்கள் லட்சங்களாகின்றன. ஆனால் ஒன்று என்னும் எண்ணையழித்துவிட்டால், ஒன்றுமே மிச்சமில்லை. ஒன்று இருக்கிறதினாலேயே அநேகத்துக்கு மதிப்பிருக்கிறது. முதலாவதுஒன்று, பின்னர் அநேகம். இதுபோல் முதலில்ஈசுவரன், பின்னர்ஜீவனும் ஜகத்தும்.

560. நான் பார்க்கிறதை நீ அறிகிறாயா? நான் அவரை எல்லாமாகப்பார்க்கிறேன்! மனிதனும் மற்றப்பிராணிகளும் தலையை யாட்டிக்கொண்டும் கைகால்களை யசைத்துக்கொண்டுமிருக்கும் தோல் மூடியுருவங்களே யாம்; ஆனால் ஈசுவரன் உள்ளே யிருக்கிறார்.

561. ஒருசமயத்தில் எனக்கு ஒருதரிசனமுண்டாயிற்று: அதாவது:—ஒரேவஸ்து மெழுக்கினால் செய்யப்பட்ட ஒரு வீடுபோல மனிதர், மிருகங்கள், தோட்டங்கள், சாலைகள் ஆகியவற்றுடனும் எல்லாப் பிராணிகளுடனும் பிரபஞ்சத்தை யெடுத்துக்கொண்டது—எல்லாம் மெழுக்கினால் செய்யப்பட்டதே, மெழுக்கைத்தவிர ஒன்றுமே யில்லையென்று உணர்ந்தேன்.

562. சத்தை அறிவதற்குச்சித்தையடைந்துகொள்.

563. லீலையின்மூலமாக நித்தியத்துவத்தை யறியமுயற்சிசெய்.

564. உலகம் மாயையென்று கூறுவது சுலபமான விஷயம்; ஆனால் உண்மையில் அதன்பொருள் என்னவென்று உனக்குத் தெரியுமா? மிச்சம் ஒன்றுமேயில்லாமல் எரிகின்ற கற்பூரம் போன்றதாம். சாம்பலை வைத்துவிட்டுச் செல்கின்ற விறகு எரிவதுபோன்றுகூட அன்று. விவேகம் முடிவடைகிறபொழுது மிகவும் சிரேஷ்டமான சமாதியுண்டாகிறது. அப்பொழுது "நான்" என்பதைப்பற்றியும் "நீ" யென்பதைப்பற்றியும் பிரபஞ்சத்தைப்பற்றியும் அறிவே கிடையாது.

565. ஒருவன் அர்த்தராத்திரியிலே எழுந்திருந்து சுருட்டுப்பிடிக்கவிரும்பினான். அவனுக்கு ஒருவிளக்குவேண்டியிருந்தது; ஆகையால்அவன் அண்டைவீட்டுக்குச் சென்று

கதவைத்தட்டினன். ஒருவன் கதவைத்திறந்து என்னவேண்டுமென்று கேட்டான். "நான் சுருட்டுப்பிடிக்கவிரும்புகிறேன். எனக்கு ஒருவிளக்குக்கொடுப்பாயா?" என்றுவந்தவன்கேட்க, அண்டைவீட்டுக்காரன் "என்னசங்கதி? உன்னுடைய கையிலேயே கொளுத்தின லாந்தர் ஒன்றைவைத்துக்கொண்டு நீ இந்த அர்த்தராத்திரியிலே இவ்வளவு கஷ்டமெடுத்து என்னை எழுப்பினுயே" என்று சொன்னன். இதுபோல ஒருவன்வேண்டுவதுமுன்னமேயே அவனுள்ளிருக்கிறது; ஆனல், அவனதை நாடி இங்குமங்குமலைகிருன்.

566. நிபந்தனைக்குட்பட்ட மனமானது ஈசுவரனையநுபவத்தில் அறியமுடியாது என்பது உண்மையே. ஆனல் பரிசுத்த மனத்தினலே அவர் அறியப்படக்கூடும்; பரிசுத்தமனம் தான் பரிசுத்தயுக்தி; பரிசுத்த யுக்திதான் நிபந்தனைக்குட்படாத ஆத்மா. அவர் முடிவுள்ளயுக்தியினலேஅல்லது முடிவுள்ள அந்நியோந்நிய சம்பந்தமான, நிபந்தனைக்குட்பட்டமனத்தினலே உண்மையில் உணரப்படமுடியாதவரே அந்தமனத்துக்குச் சிற்றின்ப போகத்தன்மையுண்டு; அது "பெண்ணினிடத்தும் பொன்னிடத்தும்" பற்றுதலினலே குறிக்கப்பட்டிருக்கிறது. மனமானது அதன் சிற்றின்பத்தன்மையைநீக்கிக்கொள்ளலாம்; பயிற்சியினலேபரிசுத்தப்படுத்தப்படலாம்;இன்ஞெருமுறை உலகவாசனைகளெல்லாவற்றினின்றும் நிவிருத்தியடைந்திருக்கலாம்; ஆசைகளிலிருந்தும், பற்றுதல்களிலிருந்தும் நிவிருத்தியடையலாம்;இவ்

விதமாக, நிபந்தனைக்குட்படாத ஆத்மாவுடனே ஒன்றாக லாம். இவ்விதமாகவல்லவா பூர்வீகமகரிஷிகள் ஈசுவரனைத்த ரிசித்தார்கள்? அவர்கள்பரிசுத்தம்பண்ணப்பட்டமனத்தின லேநிபந்தனைக்குட்படாத ஆத்மாவை, 'ஈசுவரனைத்' தரிசித் தார்கள்; பரிசுத்தம்பண்ணப்பட்ட மனமேஆத்மாவெனக் கண்டார்கள்.

567. அறிவு வடிவங்கள், அஞ்ஞானவடிவங்கள் ஆகிய இரண்டும் எறியப்பட்டுவிட்டால் மிச்சமுள்ளது என்ன?

வேதங்களிலே நித்திய-சுத்த-போதரூபம் என்றுசொ ல்லப்பட்ட அகண்டவஸ்துவே மிச்சமிருக்கிறது.

568. ஈசுவரானுபூதி இருவிதமாம்: ஒன்று ஜீவாத்மபர மாத்ம ஐக்கியம்; மற்றது அவரை அவருடைய சகுணவடி வத்திலே தரிசிப்பது. முந்தியது ஞானமெனப்படுகிறது, பி ந்தியது பக்தியெனப்படுகிறது.

569. ஒருமணியடிக்கும்பொழுது திரும்பத்திரும்பஅடி க்கும் டிங்-டாங் என்ற சப்தமானது சப்தபேதத்தால் ஒவ் வொன்றுக்கும்உருவமுள்ளதுபோலே வெவ்வேறாக வித்தி யாசப்படுத்தப்படலாம்; ஆனால் அடிப்பதை நிறுத்திவிட் டால்,சிறிதுகாலத்திற்குக்கேட்டு மெல்லமெல்ல அழிந்துவி டுகின்ற வித்தியாசமற்ற சப்தமானது வடிவற்றதாகத்தோ ன்றுகின்றது. இவ்வாறு மணியின் சப்தங்களைப்போல, ஈசு வரன் ரூபத்துடனும் ரூபமின்றியும் இருக்கிறார்.

570. பிரஹ்மத்தினுடைய லக்ஷணம் என்ன? பிரஹ்மம் லக்ஷணங்களற்றது, சலனமற்றது, அசைக்கமுடியாதது, ஆட்டமுடியாதது, மேருபர்வதத்தைப்போன்று உறுதியானது.

571. பாசத்தினாலும் புற்களினாலும் மூடப்பட்டுள்ள ஒரு சிறுகுளத்திலே விளையாடும் மீன்கள் வெளியிலிருந்து பார்க்கப்படமுடியாததுபோல, ஈசுவரனும் மனுஷ்ய பார்வையினின்றும் மாயையினால் மறைக்கப்பட்டுப் பார்வைக்குத்தெரியாமல் மனிதனுடைய ஹிருதயத்திலே விளையாடுகிறார்.

572. ஈசுவரனே அகண்டமாய், நித்தியமாயுள்ள பிரஹ்மவஸ்துவும், பிரபஞ்சத்துக்குப்பிதாவுமாவர். ஆனால், சுத்தசச்சிதாநந்த சொரூபியாகிய அகண்ட பிரஹ்மவஸ்துஎல்லையில்லாக் கரையற்ற ஒருபெரிய சமுத்திரம்போன்று அறியமுடியாததாயிருக்கிறது.

573. தண்ணீர் இறுகினால் பனிக்கட்டியாவதுபோல, ஈசுவரனுடைய பிரத்தியட்சவடிவமும் சர்வவியாபகமான, ரூபரகிதமான பிரஹ்மவஸ்துவினுடைய ஸ்தூலமாக்கப்பட்ட தோற்றமாம். அஃது உண்மையில் தடிப்பேறப்பெற்றசச்சிதாநந்தமேயெனப்படலாம். பனிக்கட்டியானது தண்ணீரில் ஒரு பாகமாயிருப்பதுபோலவும் தண்ணீரிலேயே யிருந்து தண்ணீரிலேயே உருகிவிடுகிறதுபோலவும், ரூபமுள்ள ஈசுவரனும், ரூபமற்ற வஸ்துவினுடைய பாகமேயாம்.

அவர் உற்பத்தியாகி அங்கேயேயிருந்து ரூபமற்றதிலிருந்து கடைசியாக அதிலேயே லயமாகி மறைந்துவிடுகிறார்.

574. பிரஹ்மசாகரத்திலிருந்து வீசுகின்ற இளங்காற்றானது, அது அடிக்கின்ற ஒவ்வொரு ஹிருதயத்தையும்பாதிக்கின்றது. சநக சநந்தனாதி பூர்வீகமகாத்மாக்கள் இக்காற்றினாலே சுகமடைந்தார்கள். ஈசுவரப்பித்துப்பிடித்த நாரதர் தூரத்திலிருந்து அந்த ஈசுவரசமுத்திரத்தை ஒருதரம் பார்த்தார்போலும்! அதனாலே அவர் மெய்ம்மறந்து உலகத்திலே பித்தனைப்போன்று திரிந்துகொண்டிருக்கிறார்; ஆயினும், அவர் எப்பொழுதும் ஹரிசங்கீர்த்தனங்களையே பாடிக்கொண்டிருக்கிறார். பிறவித்துறவியாகிய சுகதேவர் அந்தச்சமுத்திரத்தின் தண்ணீரைத்தமதுகையினால்மூன்று தரம்தான் தொட்டார்; அதுமுதல் அவர் ஆநந்தமிகுதியால் ஒரு குழந்தையைப்போன்று உருண்டுகொண்டிருக்கிறார். ஜகத்குருவாகிய மகாதேவர் அத்தண்ணீரில் மூன்றுகையளவு குடித்துவிட்டு அதுமுதல் பிரஹ்மாநந்த வெறியினாலேபிணம்போன்று அசைவற்றுவிழுந்துகிடக்கிறார். இந்தச் சமுத்திரத்தின் அதிரகஸ்யசக்தியை அறியவல்லவர் அல்லது ஆழத்தைக்கண்டுபிடிக்கவல்லவர் எவர்?

575. கடல்தண்ணீர் தூரத்திலிருந்துபார்த்தால் இருண்டநீலநிறமாகத் தோன்றுகிறது; ஆனால் நீ அதில்ஒருசிறிது கையிலெடுத்தால், அதெல்லாம் சுத்தமாகவும் தெளிவாகவும் இருக்கிறது. அதுபோலவே ஸ்ரீகிருஷ்ணன் வடிவம்

தூரத்திலிருந்து நீலநிறமாகத் தோன்றுகிறது. ஆனால் அவர் உண்மையில் அப்படியல்ல. அவர் அழுக்கற்றவர், நிறமற்றவர், அகண்டமானவர்.

576. ஈசுவரன்கூறுகிறார்:—"கடிக்கின்ற பாம்பும்நானே; சொஸ்தப்படுத்துகின்ற மந்திரவாதியும் நானே; தண்டிக்கின்ற நியாயாதிபதியும் நானே; தண்டனைசெய்கின்ற வேலைக்காரனும் நானே."

577. பக்தனானவன் தனது பக்திமார்க்கத்தின் ஒருநிலைமையில்ஈசுவரனை, சகுணமாகக்கண்டு திருப்தியடைகிறான்; இன்னொரு நிலைமையில் நிர்க்குணமாகக் கண்டு திருப்தியடைகிறான்.

578. ஒரு பழத்தினுடைய தோல், சதை, விதையெல்லாம் மரத்தினுடைய ஒரு ஆதிவிதையிலிருந்து உற்பத்தியாவதுபோல, ஒரே ஈசுவரனிடமிருந்துஉயிருள்ளவையும்உயிரற்றவையும் ஆத்மீகமானவையும் ஜடமானவையும் அடங்கியுள்ள பிரபஞ்சமுழுதும் உற்பத்தியாகின்றது.

579. ஒருகுருதமது சிஷ்யனுக்குச்செய்தஉபதேசங்களிலே முதலில்இரண்டுவிரல்களைத் தூக்கிக்காட்டினார்; இதனால் பிரஹ்மம் மாயை யென்று துவைதத்தைக் காட்டினார்; பின்னர் அவர் ஒரு விரலைக்கீழே தாழ்த்தி மாயை மறைகின்றபொழுது அகண்ட பிரஹ்மவஸ்துவைத்தவிர, பிரபஞ்

சத்திலே ஒன்றுமேயிருக்கிறதில்லையென்று அவனுக்கு உப தேசித்தார்.

580. ஒரு சந்நியாசி பூமியிலுள்ள ஜகந்நாத க்ஷேத்திரத் துக்குச் சென்றார். ஈசுவரன் ரூபமுள்ளவரா? அல்லது ரூப மில்லாதவரா? என்று அவருக்குச் சந்தேகங்கள் இருந்த ன. அதனால்அவர் பரிசுத்த விக்கிரகத்தைப்பார்த்தவுடனே பரீக்ஷிக்க விரும்பினார். அவர் அந்த விக்கிரகத்தை இட துபக்கமிருந்து வலதுபக்கமாகத் தமது தண்டைக்கொண்டு தொட்டுப்பார்த்தார். சிறிது நேரத்துக்கு அவர் எதையும் பார்க்கவுமில்லை, தண்டினால் உணரவுமில்லை. ஆகையால் அ வர் ஈசுவரன் வடிவமற்றவர் என்று தீர்மானித்துக்கொண் டார். அதன்மேல்அவர் வலதுபக்கத்திலிருந்து இடதுபக்க மாகத் தடியைச்செலுத்த ஆரம்பித்தபொழுது, அது விக்கி ரகத்தைத்தொட்டது. அப்போது சந்நியாசி! ஈசுவரன் வடி வுடன்உள்ளவர், வடிவமற்றவர் ஆகிய இரண்டு விதங்களையு டையவரேயென்று தீர்மானித்துக்கொண்டார்.

581. ஒருவன் ஈசுவரனைத் தரிசித்தாலொழிய, அவன் இதையெல்லாம் அநுபவத்தில் அறிய வல்லவனாகான். ஈசு வரனிடத்திலே பக்திசெய்கின்றவர்களின்பொருட்டு அவர் பலவிதங்களிலும் பலவடிவங்களிலும் தம்மைத்தாமே வெ ளிப்படுத்திக் கொள்கிறார்.

582. ஒரு சாயக்காரன் துணிகளுக்குச் சாயம்போடுவ தற்குப் பிரத்தியேகமாக ஒரு வழி யறிந்திருந்தான். எவ

னேனும் தன்னிடத்தில் சாயமேற்றுவதற்குத்துணிகொண்டுவந்து கொடுத்தால் அவனிடம் "உன்னுடைய துணியை என்னநிறத்திலே சாயமேற்ற விரும்புகிறாய்" என்று அவன் கேட்பான். அவன் 'சிவப்பு' என்று சொன்னால், சாயக்காரன் துணியைத் தொட்டியிலே நனைத்து, "இதோ உன்னுடைய துணி சிவப்புநிற மேற்றப்பட்டது" என்று கொண்டுவந்து அவனிடம்கொடுப்பான். இன்னொருவன் தனது துணிக்கு மஞ்சட்சாயமேற்றவேண்டுமென்றால், சாயக்காரன் அதேதொட்டியில் அதையும் நனைப்பான்; அதை வெளியிலெடுத்தபொழுது அது மஞ்சள்நிறமாயிருக்கும். அதே மாதிரி வேறுபல நிறங்களை (நீலம், ரோஜா, ஊதா, பச்சை முதலியவற்றைப் பலர்வேண்டி வஸ்திரங்களைக்கொண்டுவந்தாலும் அதேதொட்டியில்தான் அத்துணிகள் நனைக்கப்பட்டுவெவ்வேறு நிறங்களுடன் அவருக்குக்கொடுக்கப்படும்.

இவற்றையெல்லாம் கவனித்துக்கொண்டிருந்த ஒருவன் அவனிடத்தில் 'எனது நண்ப! எந்த நிறத்தினிடத்தும் எனக்குப்பிரியமில்லை. உனக்கு எது பிரியமோ அந்த நிறத்திலே சாயமேற்றிக்கொடுக்கும்படி விரும்புகிறேன்,' என்றால் சாயக்காரன் அவ்வாறே செய்வான். இதுபோல ஈசுவரன் வடிவத்துடனும் வடிவமின்றியும் பக்தனுடைய ஆவஸ்யகத்தின் பிரகாரம் வெளிப்படுகிறார். வியக்தமான தோற்றம், அந்யோந்ய சம்பந்த விஷயமாய், அதாவது, வெவ்வேறு நிலைமைகளிலும் வெவ்வேறு சுற்றங்களிலும் வைக்கப்பட்ட வெவ்வேறு மனிதர்களின் சம்பந்தமா

க உண்மையே. தெய்வீகச் சாயக்காரன் என்னநிறத்திலே தனக்குச் சாயமேற்றிக்கொண்டிருக்கிறனென்பது அவனுக்கே தான்தெரியும். உண்மையில் அவர் வெளிப்பாட்டு விஷயத்திலாவது அல்லது எதிர்மறையிலாவது எவ்வித எல்லையினாலும் கட்டுப்பட்டவரல்லர்.

583. நீ ஒரு தனிமனிதனாயிருக்கிற வரையில், உன்னுடைய "அகண்டத்தவ"த்துக்கு "அந்யோந்ய சம்பந்தம்" ஏற்படவேண்டும்; உன்னுடைய 'நித்ய' மானது ஒருலீலையைக் குறிக்கவேண்டும்; உன்னுடைய பொருளுக்கு குணங்கள் இருக்கவேண்டும்; உன்னுடைய 'நிர்க்குணம்' ஒரு சகுணத்தைக் குறிக்க வேண்டும்; உன்னுடைய 'ஏகம்' அநேகத்தைக்குறிக்கவேண்டும்.

584. சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் போன்ற செய்கையுள்ள விடத்திலே, சக்தி அல்லது வித்யாசக்தியுண்டு. தண்ணீர் தெளிந்திருந்தாலும், கலங்கியிருந்தாலும் தண்ணீர் தண்ணீரே. அந்த அகண்ட சச்சிதானந்த சொரூபியே பிரபஞ்சத்தை சிருஷ்டி ஸ்திதி சம்ஹாரம் செய்கின்ற நித்தியவித்யாசக்தி.

585. சமாதியிலே அகண்டத்தவத்தை யநுபவத்தில் அறிந்தவர்கள்கூட ஐம்புல அறிவாகிய தாழ்ந்த மண்டலத்துக்குவந்து வடிவமுள்ள கடவுளைக்கண்டு ஆநந்திக்கும்படி அவரிடத்தேபோதுமான அகங்காரம் இருக்கிறது

586. அத்வைதி "எனதுநிலைமைதான்சரியானது, நியாயமானது, என்றுமிருக்கக்கூடியது; ரூபமுள்ள ஈசுவரனை நம்புகிறவர்கள் தப்பிதமான அபிப்பிராயமுடையவர்கள்" என்று சொல்லக்கூடாது; ஈசுவரனுடைய சகுணத்தோற்றங்கள் உண்மையில் குறைந்தவையல்ல. சரீரத்தை அல்லது மனத்தை அல்லதுபகிர்முக உலகத்தைவிட அதிகஉண்மையானவையே.

587. அகண்ட நிர்க்குணப் பிரஹ்மவஸ்து சமாதியிலேயே அநுபவத்தில் அறியப்படுகிறது; பின்னர் எல்லாம் மௌனம்; ஜீவன், ஜகத், வித்தை, அவித்தை இவற்றைப்பற்றியபேச்சுக்களெல்லாம் அடக்கப்பட்டுவிடுகின்றன. பின்னர் சத் என்பதேயுள்ளது,வேறொன்றுமேயில்லை. உண்மையாக உப்புப்பொம்மை அகண்டசமுத்திரத்துடன் ஒன்றும்பொழுது, ஒன்றும் இருக்கிறதில்லை. இதுதான் பிரஹ்ம ஞானம் என்பது.

588. பிரஹ்மத்துக்கும் சக்திக்கும் உள்ள சம்பந்தமாவது அக்கினிக்கும் அதன் எரிக்கும் தன்மைக்கும் உள்ளசம்பந்தம் போன்றதாம்.

589. பிரஹ்மவஸ்துவை வெளியே தோற்றுவிப்பது மாயையே. மாயையில்லாவிட்டால், பிரஹ்மவஸ்துவை எவரால் அறியக்கூடும்? சக்தி அல்லது ஈசுவரனுடைய வியக்தமாக்கப்பட்ட சக்தியை அறியாமல், ஈசுவரனை யறிவதற்கு உபாயமில்லை.

590. ஒரு மகான் இரவும்பகலும் திரிபுசக்கண்ணுடியை ப்பார்த்து நகைப்பது வழக்கம். அவர் அப்படிச்செய்ததற்குக் காரணம் அவர் அக்கண்ணுடியின் மூலமாகச் சிவப்பு, மஞ்சள், நீலம் முதலிய பலநிறங்களைக் கண்டாரென்பதே. இந்நிறங்கள் பொய்யென்று அறிந்து, உலகமும் இதுபோல் பொய்யேயென்று புன்னகையுடன் அநுபவத்தில் தெரிந்துகொண்டார்.

591. பாம்பு தன்னுடைய நச்சுப்பைகளிலுள்ள விஷத்தினுலேகொல்லப்படுகிறதில்லை; ஆனுல்அஃதுஇன்னெருவனைக்கடித்தால் அதன்விஷம் கொன்றுவிடுகிறது. அப்படியே ஈசுவரனிடத்தில் மாயை இருக்கிறது. ஆனுல் அது அவரை பாதிக்கிறதில்லை; அதே மாயைதான் பிரபஞ்சம் முழுதும் மயங்கியிருப்பதற்குக்காரணம்.

592. அகண்ட சச்சிதானந்தமாகிற விருக்ஷத்திலே ராமர்கள், கிருஷ்ணர்கள், புத்தர்கள், கிறிஸ்துக்கள் முதலிய எண்ணற்றவர்கள்கிளைகளாகத்தொங்குகின்றனர்.அவர்களுள் ஒன்று அல்லது இரண்டுபேர்அடிக்கடி உலகத்துக்குவந்து பெருத்த மாறுதல்களையும் குழப்பங்களையும்உண்டுபண்ணுகிருர்கள்.

593. பகவான் ராமச்சந்திரர் இவ்வுலகத்தில் அவதரித்தபொழுது அவர் ஈசுவராவதாரமென்று ஏழுரிஷிகளே அறிந்துகொண்டார்கள்; ஆகையால் ஈசுவரன் இவ்வுலகில் அவ

தரிக்கும் பொழுது, சிலரே அவருடையதெய்வீகத்தன்மையை அறிந்து கொள்ளக்கூடும்.

594. ஒரு தீபத்தினடியிலே எப்பொழுதும் நிழலுண்டு; அதன் வெளிச்சம் சுற்றிலுமுள்ள வஸ்துக்களை ஒளிரச்செய்கிறது. அந்தநிழல்மாத்திரம் வெளிச்சத்தையடைவதில்லை. இதுபோல் ஒரு ஞானியிருக்கும் இடத்துக்குச்சமீபத்திலேயுள்ள மனிதர்கள் அவரையறிந்துகொள்கிறதில்லை. தூரத்திலுள்ளவர்களே அவருடைய ஆத்மப்பிரகாசத்தினாலும் அசாதாரண சக்தியினாலும் வசீகரிக்கப்படுகிறார்கள்.

595. யானைக்குவெளித்தந்தங்களும் உட்பற்களும் ஆகிய இருவிதப்பற்கள் இருக்கின்றன. இதுபோல ஸ்ரீகிருஷ்ணர் முதலியவர்களைப் போன்ற தெய்வீகபுருஷர்களுக்கு உள்தோற்றத்தோடு வெளித்தோற்றமொன்றுண்டு; இதிலே அவர்கள் எல்லோர் பார்வைக்கும் சாதாரணமனிதர்களைப் போல ஒழுகுவார்கள்; அவர்களுடையஉள்தோற்றமாகிய ஆத்மாக்கள் கர்மபூமியைக்கடந்து வெகு தூரத்திலே உபசாந்தி பெற்றிருக்கும்.

596. சாதாரண காலங்களிலே தண்ணீர் மிகவும் ஆழ்ந்த கிணறுகளிலிருந்து பெருங்கஷ்டத்துடனேஎடுக்கப்படவேண்டியிருக்கிறது; ஆனால் மழைக்காலத்திலேதேசம்எங்கும் வெள்ளம்பெருகும்பொழுது,எங்கும் சுலபமாகத் தண்ணீர் கிடைக்கும்.இதுபோல, சாதாரணகாலத்தில் ஈசுவரன்ஜபங்

களின் மூலமாகவும் தவங்களின் மூலமாகவும் பெருங்கஷ்டத்துடனே அடையப்படுகிறார். ஆனால் உலகிலே அவதாரவெள்ளம் இறங்குகிறபொழுது அந்த ஈசுவரன் எங்கும் எல்லாவிடத்தும் காணப்படுகிறார். காந்தம் இரும்புடன் சம்பந்தப்படுவதுபோல, ஈசுவரன் மனிதனுடன் சம்பந்தப்படுகிறார். அப்படியாயின் ஏன் ஈசுவரன் மனிதனை ஆகருஷிக்கிறதில்லை? எனின், மண்ணிலே கனமாக மூடப்பட்ட இரும்பானது காந்தத்தினுடைய ஆகருஷணத்தினாலே அசைக்கப்படாததுபோல, மாயையினாலே கனமாக மூடப்பட்டுள்ள மனிதனும் ஈசுவரனுடைய ஆகருஷணத்தை யுணர்கிறதில்லை. ஆனால் மண் தண்ணீரினால் கழுவப்பட்டுவிட்டால், இரும்புகாந்தத்தால் தாராளமாய் அசைகிறது. அப்படியே ஆத்மாவானது இடைவிடா ஜபத்தினாலும் தபத்தினாலும் மாயையாகிற மண்ணைக்கழுவி விடுகிறபொழுது அது ஈசுவரனால் ஆகருஷிக்கப்படுகிறது.

597. மனிதனுடையஜீவன் ஈசுவரனுடனே அகண்டமான ஐக்கிய நிலைமையை அடைதல் சாத்தியம்; அப்பொழுதுதான் அவன் "அவர் என்னைப்போன்று நானாகவேயிருக்கிறார்" என்று உணர்ந்து கூறுவான். வீட்டிலேயுள்ள பழய வேலைக்காரன் ஒருவன் கெட்டிக்காரனாயிருந்தால் அவனுடைய வேலையைப்பார்த்து எஜமானன் மிகச் சந்தோஷித்துத் தான் உட்காரும் ஆசனத்திலேயே அவனை உட்காரவைத்துத் தன்னைச்சுற்றிலுமுள்ளஎல்லாரிடத்திலும் "இன்றுமுதல் எனக்கும் இந்த வேலைக்காரனுக்கும் வித்தியாசம்

ஒன்றுமில்லை; இவனும் நானும் ஒன்றே; என்னுடைய உத்தரவுகட்குக் கீழ்ப்படிகிறது போலவே இவனுடைய உத்தரவுகட்கும் கீழ்ப்படியுங்கள்; அப்படிக் கீழ்ப்படியாதவர்கள் தண்டிக்கப்படுவார்கள்" என்று கூறுவான். வேலைக்காரன் தனக்குக் கிடைத்த புதிய கௌரவத்தை வெளியே காட்டிக்கொள்வதற்குச் சிறிது யோசிப்பானாயினும், எஜமானன் அவனை பலாத்காரமாக கௌரவபதவிக்கு உயர்த்திவிடுவான். இதுபோல ஒருவன் நீண்டகாலம் ஈசுவர ஸேவை செய்ததின் பலனாக ஈசுவரனுடன் உள்ள ஏகத்துவ நிலைமையை அடைதல் கூடும்; அதனை அறு பூதியில் அறிகிறவர்களுடைய நிலைமை அத்தகையது. அவர் தமது கிருபா விசேஷத்தினாலே அவர்களுக்குத் தமது மகிமையையும் லட்சணங்களெல்லாவற்றையும் அளித்து பிரபஞ்ச ராஜாங்கத்துக்குத் தலைமை வகிக்கும் தமது சொந்த சிம்ஹாசனத்துக்கு அவர்களை உயர்த்திவிடுகிறார்.

598. ஈசுவரபக்தன் தனது ஈசுவரனை மாதாவென்று விளிப்பதிலே ஏன் அத்தியாநந்தமடைகிறான்? என்றால், குழந்தை வேறெவரைப்பார்க்கிலும் தாயாரிடத்தில் தான் மிகவும் தாராளமாயிருக்கிறது; அதனாலே அவள் அதற்குவேறெல்லாவற்றைப்பார்க்கிலும் மிகவும் அருமையானவளாயிருக்கிறாள்.

599. தன்னுடைய குருவைச் சாதாரண மனிதர்என்று கருதுகிறவன், தன்னுடைய ஜபங்களினாலும் தவங்களி

ஞானும் யாதுபலனடையக்கூடும்.? நாம் நமது குருக்களைச் சாதாரண மனிதர்களென்று கருதக்கூடாது. சிஷ்யன் ஈசுவரனைப் பார்ப்பதற்கு முன்னால் தனக்குண்டாகும் திவ்ய ஜோதியின் முதல்படியிலே குருவைத் தரிசிக்கிறான்; குரு தான் பின்னர் ஈசுவரனை அவனுக்குக் காண்பிக்கின்றார். தானே ஈசுவர வடிவமாக அதியாச்சரியமாக மாற்றுருப்பெற்றுவிடுகிறார். அப்பொழுது சிஷ்யன் குருவையும் ஈசுவரனையும் ஒன்றாகவேபார்க்கிறான். சிஷ்யன் எந்தவரம் கேட்டாலும், ஈசுவரனுக்கப்பட்ட குரு அவனுக்கு எல்லாவற்றையும் அளிக்கிறார்; குரு அவனை மிகவும் சிரேஷ்டமான நிர்வாணபதவிக்குக் கூடக்கொண்டு செல்கிறார். இன்னும்அந்தமனிதன் ஈசுவரனுடனேஎஜமானன், வேலைக்காரன் என்னும் துவைத பாவத்தை வைத்துக்கொள்ள இச்சிக்கலாம். அவன் கேட்பதெல்லாம், அவனுடைய குரு அவனுக்கு அளிக்கிறார்.

600. "நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் குருக்கள் கிடைக்கலாம்; ஆனால் சிஷ்யன் ஒருவனும் கிடைக்கமாட்டான்" என்பது ஒரு பழமொழி. அதன் பொருள் யாதெனில், நற்புத்தியளிப்பவர்கள் அநேகர்உண்டு, ஆனால் அதைப்பின்பற்றுபவர்கள் சிலரே என்பதாம்.

601. ஒருவன் தன்னுடைய குருவின் நடத்தையைக்குறித்துத்தர்க்கித்துக்கொண்டிருந்தான்; அப்பொழுது அவனை நோக்கி ஸ்ரீ ராமகிருஷ்ணர், "இந்த உபயோகமற்ற தர்க்கத்

திலே ஏன் உனதுகாலத்தைக் கழிக்கிறாய்? முத்தையெடுத்துக்கொண்டு, சிப்பியை எறிந்துவிடு; குருவினால் உனக்கு அளிக்கப்பட்டமந்திரத்தை தியானம்செய்; குருவினுடைய மனுஷ்ய ஸ்வபாவத் தளர்ச்சிகளையெல்லாம் கவனியாதே'' என்றார்.

602. குரு, ஜனங்கள் மலம் குப்பை கூளங்கள் ஆகிய எல்லாவற்றையும் எறிகின்றபிரமாண்டமானகங்காநதிபோன்றவர்; எவ்வளவு குப்பைகளைப் போட்டபோதிலும் நதி தன் பரிசுத்தத்தன்மை குறைந்துவிடுகிறதில்லை. அப்படியே தான் குருவும் சிறுநிந்தனைகள், கண்டனங்கள் ஆகிய எல்லாவற்றுக்கும் மேற்பட்டவராயிருக்கிறார்.

603. உன்னுடைய குருவை எவரேனும் கண்டனம் செய்தால் நீ அதைச் செவிகொடுத்துக்கேட்காதே. அவர் உன்னுடைய பிதாவினும் மாதாவினும் பெரியவர். உன் எதிரிலேயே உன்னுடைய பிதாவும் மாதாவும் அவமானப்படுத்தப்பட்டால், நீ சும்மாவிருப்பாயா? அவசியமானால் சண்டையிட்டு, உன்னுடைய குருவினுடைய கௌரவத்தைக் காப்பாற்று.

604. மனுஷ்யகுருபரிசுத்தமந்திரத்தைச்செவியிலேசொல்கிறார்; ஈசுவரகுருஆத்மாவுக்குள் சக்தியைப்புகுத்துகிறார்.

605. குரு வித்துவானாகத்தோன்றாவிடினும், சாஸ்திரங்களிலும் இதரபுத்தகங்களிலும் போதிக்கப்பட்டுள்ள உண்

மைகளில் கரைகண்டவராகத் தோன்றுவிடினும் நீபயப்ப டாதே. அவர் ஒரு பண்டிதரல்லரேயென்ற காரணத்தினு லே பயப்படாதே. ஜீவிதத்தைப்பற்றிய ஞானத்திலே அவர் ஒருபொழுதும் குறைந்தவரல்லர். அவரிடத்தி லே பிரஹ்மஞானமானது என்றும் அக்ஷயமாகப் பொங் கித் ததும்பிக்கொண்டிருக்கிறது; இந்தபிரஹ்மஞானம்புத் தகங்களில் போதிக்கப்பட்டுள்ள எல்லாஞானத்தினும் மே ற்பட்டதாம்.

606. சதுரங்கஆட்டத்திலே விளையாடுபவர்களைப் பார்க் கிலும்வேடிக்கைபார்ப்பவர்களே, 'இந்தக்காயைஇங்குவை க்கவேண்டுமென்று காய்களை வைக்கவேண்டிய விதத்தை ச் சரியாகக்கூறுபவர்களாவார்கள். உலகத்துஜனங்கள் தா ங்கள் மிகவும் சாமர்த்தியசாலிகளென்று நினைத்துக்கொள் கிறார்கள்; ஆனாலவர்கள் இவ்வுலகவஸ்துக்களிடத்தே (தன ம், கௌரவங்கள், இந்திரியபோகங்கள்முதலியவைகளிடத் தே)பற்றுதலுள்ளவர்களாயிருக்கிறார்கள். இவ்வாறு அவர் கள் விளையாட்டிலே சம்பந்தப்பட்டவர்களாயிருக்கிறதினு லேசரியானவழியில்செல்வது அவர்களுக்குக் கஷ்டமாயிரு க்கிறது. உலகைவிட்டுவிட்ட பரிசுத்தபுருஷர்கள்அதனிடத் துப் பற்றுடையவாகளாயில்லை. அவாகள் சதுரங்க ஆட்ட த்திலே வேடிக்கைபார்ப்பவர்கள் போன்றவர்கள். அவர் கள் விஷயங்களை உண்மையில் கண்டு உலகத்து மனிதர்க ளைப்பார்க்கிலும் நன்றாய ஆய்ந்து தீர்மானித்துக்கொள்ள

முடியும. ஆகையால், உண்மையாய்ப்பரிசுத்தவாழ்க்கைவாழ்வதிலே மனிதன் ஈசுவரனைமாத்திரம் தியானித்து ஈசுவரனைத்தரிசித்திருக்கிறவர்களுடைய வார்த்தைகளிலேநம்பிக்கை வைக்கவேண்டும். உனக்குச் சட்டநியாயம் தெரியவேண்டியிருந்தால், அந்தத் தொழிலிலேயுள்ள வக்கீல்களிடம் நீ யோசனைசெய்வதில்லையா? நிச்சயமாய்த் தெருவில்செல்லும் மனிதனுடைய யோசனையை நீ கேட்கமாட்டாய்.

.607 சாஸ்திரமானதுநிபந்தனைக்குட்பட்ட அறிவைமாத்திரமே விவரிக்கிறது என்பதை ஜனங்கள் பார்க்கிறதில்லை. நிபந்தனையற்ற பூமியிலிருந்து அஃது எவ்வித சமாச்சாரமும் கொண்டுவருகிறதில்லை. பழயகாலத்து ரிஷிகளைப்போன்று, ஈசுவரனைத் தரிசித்து அநுபவத்தில் அறிந்தபரிசுத்த புருஷர்களால் அத்தகைய சமாச்சாரம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. "ஈசுவரன் இத்தன்மையவர்" என்று கூறுதற்கு அவர்களேதகுதியான வர்கள்.

608. ஏ போதகரே! அதிகாரப்பட்டயம் தங்களுக்கு இருக்கிறதா? அரசனுடைய அதிகாரப்பில்லையைத்தரித்துக்கொண்டிருக்கும் மிகவும் தாழ்ந்தவன்பேசுகிற வார்த்தையும் மரியாதையுடனும், பயத்துடனும் ஜனங்களால் கேட்கப்படுகிறதுபோல, (தனது அதிகாரத்தைக் காண்பித்தலினால்மாத்திரம் அவன்ஒருகலகத்தையடக்கமுடிவதுபோல) ஏ! போதகரே! நீர்ஜயம்பெறக் கருதினல், முதலாவது ஈசுவரனிடத்திலிருந்து அருட்பட்டயத்தைப் பெற்றுக்கொள்

ளும். உமக்கு இந்த அருட்சக்தியுண்டாகாதவரையில், நீர் உமது ஜீவிதகாலமெல்லாம் பிரசங்கம் செய்தாலும், அது வீண்மூச்சுச்செலவேயன்றி வேறொன்றுமன்று.

609. ஒரு பணக்காரவியாபாரியினுடைய களஞ்சியத்திலிருந்து தானியமானது விலைக்குவாங்குபவனுக்கு அளந்து போடப்படும்பொழுது, அளப்பவன் இடைவிடாமல் அளந்து கொண்டேபோகிறான்; அவனுடைய வேலைக்காரர்கள் பின்னே யிருந்துகொண்டு இடைவிடாமல எடுத்துக்கொடுத்துக்கொண்டேயிருக்கிறார்கள். ஆனால் ஒரு சிறுவியாபாரியினுடைய கடையிலுள்ளசரக்கு சீக்கிரம் செலவழிந்துவிடுகிறது. அதுபோன்றே பக்தர்களுடைய ஹிருதயங்களுக்குள்ளே எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் இடைவிடாமல் கிளப்புகிறவர் ஈசுவரனேயாவார், பக்தர்களுக்குப்புதியவையும் அறிவுமிகுந்தவையுமானஎண்ணங்களிலும் உணர்ச்சிகளிலும் ஒருபொழுதும் குறைவேயில்லை. புத்தகப்படிப்பாளிகள் சிறுவியாபாரிகள் மாதிரி சீக்கிரத்திலே நினைப்புக்களையும் எண்ணங்களையும் செலவழித்துவிட்டு, வெறும் மனத்தினராய் விடுகிறார்கள்.

610. ஒருவன்எவ்வளவுகாலம் "ஏ! ஈசுவரா! ஏஈசுவரா" என்று சத்தமிட்டுக்கத்திக்கொண்டிருக்கிறானோ, அதுவரையில் அவன் ஈசுவரனைக்காணவில்லையென்று நீ நிச்சயமாக அறிந்துகொள்ளலாம்; ஏனென்றால் அவரைத்தரிசித்தவன் அமைதியும் சாந்தியும் அடைந்துவிடுகிறான்.

611. இரண்டு நண்பர்கள் ஒரு தோட்டத்துக்குள்ளே போனார்கள். லௌகிகஞானமுடைய நண்பன் உடனே மாமரங்கள் எத்தனையென்றும், ஒவ்வொரு மரத்திலும் எத்தனை மாங்காய்கள் இருக்கின்றனவென்றும் எண்ணி அத்தோட்டத்தின் விலை இவ்வளவு இருக்குமென்று மதிப்பிடவும் ஆரம்பித்தான். அவனுடைய தோழன் சொந்தக்காரனிடம் போய், அவனுடன் நட்புச்செய்துகொண்டு மெதுவாக ஒரு மாமரத்தடியில் சென்று சொந்தக்காரனுடைய சம்மதத்தின்பேரில் சில பழங்களைப் பறித்துத்தின்ன ஆரம்பித்தான். இருவரிலே அறிவு மிகுந்தவர் எவர் என்று நீ எனக்குக் கூறுவாய். உனது பசியை ஆற்றவல்ல மாம்பழங்களைத் தின்னு. மரங்களையும் இலைகளையும் எண்ணுவதினாலும், உனது வீண்கணக்குகளெல்லாவற்றினாலும் பயன் யாது? புத்தியில் கர்வமுள்ளவன், சிருஷ்டிக்கு "இது ஏன் உண்டாயிற்று" என்றும், "எங்கிருந்து உண்டாயிற்று" என்றும் காரணம் கண்டுபிடிப்பதிலே வீணே சுறுசுறுப்பாயிருக்கிறான்; ஆனால் ஞானமும் விநயமுமுள்ள மனிதன் சிருஷ்டிகர்த்தாவுடனே நட்புச் செய்துகொண்டு அவருடைய கொடையாகிய பரமாநந்தத்தை யநுபவிக்கிறான்.

612. சாஸ்திரங்களைப் படித்துவிட்டுமாத்திரம் ஈசுவரனைப்பற்றி விவகரிப்பது காசிமாநகரத்தைப்படத்திலேபார்த்துவிட்டுமாத்திரம் அந்நகரத்தை இன்னொருவனுக்கு விவரிப்பதுபோலவாம்.

613. ஒருவன் சந்தைக்கு வெகு தூரத்திலே யிருக்கிற வரையில் ஹோ! ஹோ!! என்ற சப்தம்போன்று தெளிவற்ற உரத்த கூச்சலைமாத்திரம் கேட்கிறான். ஆனால் அவன் சந்தைக்குள்ளே நுழைந்துவிட்டால், அக்கூச்சலைக் கேட்கிறதில்லை; அங்கே ஒருவன் உருளைக்கிழங்கையும், இன்னொருவன் கத்தரிக்காயையும், மற்றவர்கள்இப்படியே ஒவ்வொன்றையும் விற்று வியாபாரம் செய்கிறார்களென்றுதெளிவா யறிந்துகொள்கிறான். இதுபோல் ஒருவன் ஈசுவரனுக்கு நெடுந்தூரத்திலிருக்கிற வரையில் யுக்தியும் நியாயமும் தர்க்கமுமாகிய கூச்சலினிடையிலும் குழப்பத்தினிடையிலும் தான் இருந்துதீரவேண்டும்; ஆனால் அத்தகைய ஒருவன் ஈசுவரனை யணுகிவிட்டால், அப்பொழுது யுக்தியும் நியாயமும் தர்க்கமும் ஆகிய எல்லாம் நின்றுவிடுகின்றன; அவன் தெளிந்த தீர்க்கமான பார்வையிலே திவ்யரகசியங்கள் அனைத்தையும் அறிந்துகொள்கிறான்.

614. கிளியானது நெடுநேரம் "ராதா-கிருஷ்ணா" என்றநாமத்தைத்திரும்பத்திரும்பக்கூறுகின்றது; ஆனால் அஃது ஒரு பூனையினால் பிடிக்கப்பட்டவுடனே, 'கா, கா'வென்று கத்தித்தன்னுடைய இயற்கையான பாஷையைவெளியிட்டுவிடுகிறது. இதுபோலஉலகஅறிவிலே மிகுந்த ஜனங்கள்சில சமயங்களில் ஹரிநாமத்தைஜபித்துக்கொண்டு,உலகத்திலே பிரதிபலன்களைக்கருதிப்பற்பல பரிசுத்தமான தருமச்செயல்களைச் செய்கிறார்கள். ஆனால் துரதிர்ஷ்டம், துக்கம், வறுமை, மரணம் ஆகிய இவை அவர்களை நெருங்கும்பொழுது

அவர்கள் அவரையும் அத்தகையதருமச்செய்கைகளெல்லா வற்றையும் மறந்துவிடுகிறார்கள்.

615. கஞ்சாவென்ற வார்த்தையை ஆயிரம்தரம் கூறினாலும், கஞ்சாவெறி யுண்டாகாது. கஞ்சாவைவாங்கிஅதைத் தண்ணீர் விட்டு அரைத்துத் தண்ணீரில் கரைத்துக் குடித்தால் அப்பொழுது உங்களுக்கு வெறியுண்டாகும்; இதுபோல் "ஏ ஈசுவரா!ஏ ஈசுவரா" வென்றுஉரக்கக்கூவுவதினால்யாதுபயன்? உங்களுடையபக்தியநுஷ்டானங்களை ஒழுங்காகநடத்துங்கள்;உண்மையில் நீங்கள் ஈசுவரனைத் தரிசிப்பீர்கள்.

616. சாதாரண மனிதர் பைபையாக மதம்பேசுகிறார்கள்; ஒரு அணுவளவுகூட அதனை அப்பியசிப்பதில்லை. ஆனால் ஞானியானவன் தனது ஜீவிதம் முழுதும் தன்மதத்தை அப்பியசித்தாலும் அவ்வாறு அப்பியசிக்கப்பட்ட அதைப்பற்றிச் சிறிதே பேசுகிறான்.

617. எனது திவ்யமாதாவாகிய ஞானாம்பாளிடமிருந்து உண்டாகும் ஒளியின் ஒருகிரணத்துக்கு, பண்டிதர்களில் மிகவும் பெரியோரும் சுருங்கிய பூப்புழு (மண்ணுளிப்பாம்பு)போல அவ்வளவு இழிவாகத்தோன்றும்படி செய்து அவர்களைத் தலைகுனியவைக்கவல்ல சக்தியுண்டு.

618. நாம் ஈசுவரனை யறியும் வித்தை பராவித்தை யெனப்படும்.மற்றவையெல்லாம் (வெறும்சாஸ்திரங்களும்' தத்துவஞானமும், தர்க்கமும்,இலக்கணம் முதலியவையும்) மன

த்திற்குச் சுமையாகி அதனைக் குழப்பிவிடக்கூடியவைகள். கிரந்தங்களே கிரந்திகள்போலும்! அவை மிகவும் சிரேஷ்டமான வித்தைக்கு இட்டுச்சென்றால்தான் நல்லனவாம்.

619. நம்மால் பண்டிதர் எனப்படுவோர் பெரும்பேச்சுப்பேசுவார்கள்: அவர்கள் பிரஹ்மத்தைப்பற்றியும், அகண்டமான ஈசுவரனைப்பற்றியும், ஞானயோகத்தைப்பற்றியும், தத்துவஞானத்தைப் பற்றியும் இன்னும் இவைபோன்ற மற்றஎல்லாவற்றைப்பற்றியும் உங்களிடம் கூறுவார்கள். ஆனால் தாங்கள் பேசுகின்றவிஷயங்களையநுபவத்தில் அறிந்துள்ளவர்கள்மிகச்சிலரே. அவர்கள் வறண்டும், கடினமாயும், ஒன்றுக்கும் உபயோகமில்லாமலும் இருக்கிறார்கள்.

620. நான் வஸ்துவைமிகவும் உண்மையாக எனதுகண்களாலேயே பார்க்கிறேன்! அப்படியாயின் நான் என்நியாயம் பேசவேண்டும்? அகண்டவஸ்துவே நம்மைச் சுற்றிலுமுள்ள எல்லாவஸ்துக்களுமாக இருக்கிறதென்பதை நான் பிரத்தியட்சத்தில் பார்க்கிறேன்; அழிவுள்ள ஜீவனாகவும், காட்சி மாத்திரமாயுள்ள உலகமாகவும் தோன்றுகின்றது அதுவே! இவ்வுண்மையைப் பார்ப்பதற்கு உள்ளே சக்தி எழுப்பப்பட்டிருக்கவேண்டும். மனிதன் அவரைஒரேஉண்மையாகப்பார்ப்பதற்கு முடியாமலிருக்கும்வரையில்அவன் "இது அன்று, இது அன்று" என்று சொல்லிக்கொண்டு விசாரணை செய்யவேண்டும்; அல்லது ஆராய்ந்தறியவேண்டும். "நான் சிறிதும் சந்தேகமின்றி அவரே எல்லாமாயிருக்கிறாரென்று கண்டுவிட்டேன்" என்றுசொன்னால் மாத்

திரம் போதாது. வெறும் சொல்மாத்திரம் போதாது; ஈசுவர கிருபையினாலே சக்தி எழுப்பப்படவேண்டும். ஞான விழிப்பு சமாதியினால் பின் தொடரப்படுகிறது. இந்த அவஸ்தையிலே ஒருவன் தனக்குச் சரீரம் இருக்கிறது என்பதை மறந்துவிடுகிறான்; உலகவஸ்துக்களிடத்தேயுள்ள (பெண்ணினிடத்தும் பொன்னினிடத்தும் உள்ள) பற்றுதல் எல்லாவற்றையும் இழந்துவிடுகிறான்; ஈசுவர சம்பந்தமான வார்த்தைகளைத் தவிர, வேறுவார்த்தைகளை விரும்புகிறதில்லை; உலக விஷயங்களைக் கவனிக்கும்படி சொன்னால், பெருத்த துன்பமடைகிறான். உள்ளேயுள்ள சக்தி எழுப்பப்பட்டவுடன், அடுத்தபடி சமஷ்டி சத்தியின் அநுபூதியே. ஆத்மாவாலேயே ஆத்மாவை யறியமுடியும்.

621. ஒரு வீட்டிலே ஒருவிருந்துக்கு ஒருபெருங்கூட்டம் அழைக்கப்பட்டால், அவர்களால் உண்டு பண்ணப்படும் அபாரக்கூச்சலையும், வேறு சத்தத்தையுந்தான் நீங்கள்முதலில் கேட்கிறீர்கள்; ஆனால் அவர்கள் சாப்பிட உட்காருகிறவரையில்தான் அந்த சப்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது போஜனம்பரிமாறப்பட்டு,விருந்தாளிகள்பந்திகளில் உட்கார்ந்து விட்டால், அந்தச் சத்தத்திலே முக்கால்பங்கு நின்றுவிடுகிறது. பின்னர் சர்க்கரைப்பண்டங்கள்வழங்கப்படுகின்றன; எவ்வளவுக்கெவ்வளவு அவை அதிகமாக வழங்கப்படுகின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு சப்தமும் அடங்கிவிடுகின்றது. கடைசியாகத் தயிர் பரிமாறும்பொழுது

"ஸ-ஒப் - ஸ-ஒப்" என்ற ஒரே சப்தந்தான் கேட்கப்படு கிறது. விருந்துமுடிந்துவிட்டால், விருந்தாளிகள் செய்யும் அடுத்த விஷயம் உறங்கச்செல்வதே!

இதுபோல நீ எவ்வளவுக்கெவ்வளவு ஈசுவரனுக்குச்சமீ பத்தில்வருகிருயோ, அவ்வளவுக்கவ்வளவு கேள்விகேட்கு ம் தன்மையும், நியாயம்பேசுந்தன்மையும் உன்னிடத்திலே குறைந்துவிடுகிறது. நீ அவரிடத்திலே வந்துவிட்டால், நீ அவரை உண்மைவஸ்துவாகப்பார்த்துவிட்டால், அப்பொ ழுது சப்தமெல்லாம் (தர்க்கங்களெல்லாம்) முடிவடைந்து விடுகின்றன. பின்னர் உறங்குவதற்கு அதாவது, சமாதியில் உண்டாகின்ற ஆநந்தத்தை அநுபவிப்பதற்குக் காலம்வரு கின்றது.

622. இரும்புச்சட்டியிலே போட்டு வறுக்கப்படுகின்ற நெல்தானியங்களுக்குள்ளே, சட்டியைவிட்டு வெளியேகுதி த்து வெடிக்கின்ற சிலவே, இளம் வறுவலென்றுசொல்ல முடியாதபடி, மிகவும்நன்ருக வறுக்கப்பட்டனவாம்; சட் டியிலே யிருந்து வறுக்கப்பட்ட தான்யங்களிலே ஒவ்வொ ன்றினிடத்தும் சிறிது சுடுபட்டதற்கும், சிறிது சுடுபடாத தற்கும் அடையாளமாக ஒரு சிறுகரிக்குறியிருப்பது நிச்ச யம். அப்படியேநல்லபக்தர்கள் எல்லாரிலும், உலகைமுழு தும் விட்டுவிட்டு அதற்கு வெளியே செல்கின்றசிலரே எவ் விதக் கறையுமின்றிப் பரிபூரணர்களாவர்; உலகிலே யிருக் கும் பக்தர்களிலே மிகவும் சிறந்தவர்களுக்கும் தங்கள்நடத்

தையிலே பரிபூரண மின்மைக்கு அறிகுறியாக ஏதேனும் சிறிய கறையிருக்கத்தான் செய்யும்.

623. மாயையின் பந்தங்களிலிருந்து நாம் விடுபட்டு முக்தியடைதற்கு என்ன உபாயங்களை யநுசரிக்கவேண்டும்? அதன் பந்தங்களிலிருந்துநீங்கி வீடுபெற விரும்புகிறவனுக்கு மார்க்கமானது ஈசுவரனாலேயே காண்பிக்கப்படுகிறது; இடைவிடா அவாதான் அதற்கு அவசியமானது.

624. மிகவும் உண்மையாக, நான் உன்னிடம் கூறுகிறேன்; அவரை விரும்புகிறவன் அவரைக் காண்கிறான். நீ போய் உனது சொந்த ஜீவிதத்திலேயே அதுசரிதானு என்று பார்த்துக்கொள்; மூன்று நாட்கள் முயற்சிசெய்; உண்மையான அவாவுடனே முயற்சிசெய்; நீ ஜயமடைவது நிச்சயம்.

625. ஏ! ஹிருதயமே! உனதுசர்வசக்தியுள்ள மாதாவை உண்மையாகக்கூப்பிடு; அவள் உன்னிடத்துக்கு எப்படி வேகமாய் வருகிறாளென்பதை நீ பார்ப்பாய். ஒருவன் ஈசுவரனைத் தனதுமுழுஹிருதயத்துடனும்கூப்பிடும்பொழுது, அவர் அசையாமல் இருக்கமுடியாது.

626. ஒரு தாய்க்கு அநேக குழந்தைகள் உண்டு. அவற்றுள் ஒன்றுக்கு அவள் ஒரு பவளத்துண்டைக் கொடுத்து இன்னொன்றுக்கு ஒருபொம்மையைக் கொடுத்திருக்கிறாள்;

இன்னொன்றுக்குக் கொஞ்சம்மிட்டாய்கொடுத்திருக்கிறாள்; இவ்விதமாக அவை கொடுக்கப்படவே அக்குழந்தைகள் எல்லாம் தங்கள் தாயாரை மறந்துவிட்டுத் தங்கள் விளையாட்டு வஸ்துக்களிலேயே லயமாயிருக்கின்றன; இதன் நடுவே அவள் தனது வீட்டுவேலையைப் பார்க்கிறாள். ஆனால் அக்குழந்தைகளுக்குள்ளே எது கையிலுள்ளதை எறிந்துவிட்டு, "அம்மா! அம்மா" என்று அழுதுகொண்டு தாயாரை நோக்கிக் கூச்சலிடுகின்றதோ, அந்தக் குழந்தையினிடத்துக்குத்தான் அவள் வேகமாகச்சென்று அதனைக் கொஞ்சுகிறாள். அப்படியே, ஏ மனிதா! நீ உலகத்து வீண் காரியங்களிலே லயமாகி உனது திவ்யமாதாவை மறந்துவிட்டாய்; நீ அவற்றை எறிந்துவிட்டு அவளை நோக்கி யழும்பொழுது, அவள் உடனே வந்து தன்னுடைய கைகளிலே உன்னை யெடுத்துக்கொள்வாள்.

627. ஒருபொழுதும் தவறாத அன்பையும், அசைக்கப்பட முடியாத வைரம்போன்ற அந்த நம்பிக்கையையும் உனக்கு அளிக்கும்படி திவ்யமாதாவினிடத்திலே நீபிரார்த்தனைசெய்.

628. நான் இந்த ஜீவிதத்திலேயே ஈசுவரனை யடைய வேண்டும்; ஆம்,? மூன்று நாட்களில் நான் அவரைக்காண வேண்டும். அன்று, அவருடைய நாமத்தை ஒருதரம் உச்சரித்த மாத்திரத்திலே நான் நிச்சயமாக அவரை என்னிடம் இழுத்துக் கொள்ளுவேன். அத்தகைய ஆத்தி

ரம் · மிகுந்த அன்பினுலே ஈசுவரன் ஆக்ருஷிக்கப்படு கிருர். சீக்கிரத்தில் அநுபவ பூர்வமாக அறியப்படுகிருர். ஆனுல், வெளிவேஷம்போடும் பக்தர்கள், அவரை ஒரு வேளை கண்டு பிடித்தாலும்,அவ்வாறு கண்டுபிடிப்பதற்கு எத்தனையோ யுகங்கள் வேண்டும்.

629. தண்ணீரில் அமிழ்கின்ற மனிதன் மூச்சுவேண்டித் திக்குமுக்காடுவதுபோல, ஈசுவரனைத் தரிசிப்பதற்கு முன்னர், அவனுடைய ஹிருதயமானது அவரிடத்தேயே ஆசையுடையதாகவேண்டும்.

630. முழூட்சுவுக்குப் பலம் எங்கேயிருக்கிறது? அவன் ஈசுவரனுடைய புத்திரன்; ஆதலின் அவரைநோக்கி அழும் கண்ணீரே அவனுக்குப்பெரிய பலமாம். கெஞ்சிக் கெஞ்சி அழுகின்ற குழந்தையினுடைய ஆசைகளை நிறைவேற்றும் தாய்போல, ஈசுவரனும் தம்முடைய அழுகின்ற புத்திரனுக்கு அவன் எவற்றிற்காகவெல்லாம் அழுகின்ருனே அவற்றையெல்லாம் கொடுக்கிருர்.

631. "ஏ ஜகன்மாதாவே! மனிதர்களிடமிருந்து நான் கௌரவத்தை விரும்பவில்லை; நான் எவ்வித மாம்ச சுகத்தையும் விரும்பவில்லை; கங்கையும் யமுனையும்என்றும் ஒன்றுசேர்ந்துகொண்டிருப்பதுபோல, எனது ஆத்மா உனக்குள்ளேஓடிக்கொண்டேயிருக்கட்டும். தாயே! நான்பக்தியில்லாதவன்,யோகமில்லாதவன், ஏழை,ஸ்நேகிதரற்றவன்;எவருடைய புகழும் எனக்கு வேண்டாம்; எனது மனமானது

எப்பொழுதும் உனது பாதாரவிந்தங்களிலே வசித்துக் கொண்டிருக்கட்டும்; அவ்வளவுதான் நான் வேண்டுவது"

632. ஒருமனிதன் பின் வருமாறுகூறினான். அதாவது:— நான் பதினான்கு வருஷங்களாக ஈசுவரனைத்தேடுவதையே தொழிலாகக் கொண்டிருக்கிறேன்; ஒவ்வொருவருடைய போதனையையும் பின்தொடர்ந்திருக்கிறேன்; பரிசுத்தஸ்தலங்களுக்கெல்லாம்யாத்திரைசெய்திருக்கிறேன்; அனேகமகாத்துமாக்களையும், சாதுக்களையும் பார்த்திருக்கிறேன்; இப்பொழுது எனக்கு அதிகம் வயது ஆகிறது; ஆனால் நான் ஒன்றையும் அடையவில்லை" என்பதே. இதைக்கேட்டுவிட்டு ஸ்ரீ ராமகிருஷ்ணர் "உண்மையாகநான்கூறுகிறேன்; அவரையடையவிரும்புகிறவன் அவரைத் தரிசிக்கின்றான்; என்னைப் பார்த்துத் தைரியங்கொள்" என்றுமறுமொழியளித்தார்.

633. தான் ஒரு ஜீவனென்று நினைக்கிறவன் உண்மையில் ஒரு ஜீவனாகவேயிருந்துவிடுகிறான்; ஆனால், தன்னை ஈசுவரனாகக் கருதிக்கொள்கிறவன் உண்மையில் ஈசுவரனாய் விடுகிறான்; ஒவ்வொருவனும் அவனவன் நினைக்கின்றபடியே ஆகிறான்.

634. ஆசையென்னும் அழுக்கு அணுவளவேனும்உள்ளவரையில் ஈசுவரனைப் பார்க்கமுடியாது; ஆகையால் உனது சிறுஆசைகளைத் திருப்திசெய்துகொண்டு, பெரிய ஆசைகளைச்சரியான விசாரணையினாலும் விவேகத்தினாலும்தியஜித்துவிடு.

635. மனிதன் எப்பொழுதும் உண்மை பேசினாலொழிய, உண்மைக்கு உறைவிடமாயுள்ள ஈசுவரனைக் காணமுடியாது.

636. உன்னுடைய சொந்த உணர்ச்சிகளையும்நம்பிக்கைகளையும் உனக்கே வைத்துக்கொள். அவற்றைப்பற்றி வெளியே பேசாதே. வெளியே பேசினால் உனக்கு நஷ்டமுண்டாகும்.

637. உனது நினைப்புக்களுக்கு நீ துரோகம்செய்யாதே: உண்மையாயிரு; உனது நினைப்புக்களின்படியேநட; நீ நிச்சயமாய் ஜயமடைவாய். உண்மையான கபடற்றஹிருதயத்துடனே ஈசுவரனிடம் பிரார்த்தனைசெய்; உனது பிரார்த்தனைகள் கேட்கப்படும்.

638. இச்சரீரம் உபயோகமற்றதும், இன்று இருந்து நாளையிறப்பதுமானால், பரிசுத்தபுருஷர்களும் பக்தர்களும் ஏன் இதைப்பற்றிக் கவலையெடுத்துக்கொள்கிறார்கள்? ஒரு வெறும் பெட்டியை ஜாக்கிரதையாகப் பார்ப்பவர் எவரும் இல்லை. விலையுயர்ந்த ஆபரணங்களும் பொன்னும் நிறைந்துள்ள ஒரு பெட்டியை எல்லோரும் ஜாக்கிரதையுடனே கவனித்துக்கொள்வார்கள். இதுபோல ஈசுவரன்வசிக்கின்ற சரீரத்தைப்பரிசுத்தாத்மா கவனிக்காம லிருக்கமுடியாது; நமதுசரீரங்களெல்லாம்ஈசுவரனுடையபொக்கிஷாலயமாம்.

639. ஒரு ஆழமில்லாத சிறு குளத்திலிருந்து சுத்தஜலம் குடிக்கவேண்டுமானால், மனிதன் தண்ணீரைச் சிறிதும்

கலக்காமல் மேல்மட்டத்திலிருந்து மெதுவாக எடுக்கவேண்டும். கலக்கப்பட்டால், அழுக்குக்கள் அ கிளம்பித் தண்ணீர்முழுவதையும்சேறாக்கிவிடுகின்றன போல நீ பரிசுத்தமாயிருக்க விரும்பினால், திடநம்பிக்கையுடையவனாயிரு; உன்னுடைய பக்தி யநுஷ்டானங்களுடனே மெல்லமெல்லமேலேசெல்; ஆனால்உபயோகமற்ற சாஸ்திரத் தர்க்கங்களிலும் நியாயங்களிலும் உனது சக்தியை வீண்செலவு செய்யாதே. அவ்வாறு செய்வாயேல், உனது சிறிய மூளையில் அழுக்கு மிகுந்து விடும்.

640. ஸ்ரீ ராமகிருஷ்ணா பின்வருமாறு கூறுவது வழக்கம்; அதாவது—உங்களுக்கு அளிக்கின்ற ஆக்ஞைகளுக்கு நீங்கள் பரிபூரணமாகக் கீழ்ப்படிய முடியுமா? நான்உங்களுக்குக்கூறுபவற்றில் பதினாறில்ஒருபங்கேனும் நீங்கள் அநுபவத்தில் கொண்டுவந்தால் மோட்சமடைவது நிச்சயமென்று நான்கூறுகிறேன், இஃது உண்மை" என்பதே.

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருடைய

சரித்திரமும் உபதேசங்களும்

முற்றுப்பெற்றன.